

# வெகுசன ஊடகம்

## பற்றிய

## இஸ்லாமிய நெறிமுறைகள்

ஸுஹைப் ஜமால் அல் பர்ஸின்ஜி

# வெகுசன ஊடகம் பற்றிய இஸ்லாமிய நெறிமுறைகள்

**ஸுஹைப் ஜமால் அல் பர்ஸின்ஜி**

தமிழில்:
நவ்ஷாத் மொஹிதீன்

சீரமைப்பும் செம்மையாக்கமும்:
கலாநிதி P.M.M. இர்பான் (நளீமி)

**Veghu Sana Uodaham**
**Patriya Islamia Neri Muraigal**

Tamil edition of
**Working Principles for an Islamic Model**
**In Mass Media Communication**
By
Suhaib Jamal al-Barzinji

Tamil translation by
Naushad Mohideen

Revised and Edited by
Dr. PMM Irfan (Naleemi)

English edition published by
The International Institute of Islamic Thought
P.O. Box 669. Herndon,VA 20172, USA
www.iiit.org

London Office
P.O. Box126, Richmond, Surrey TW92UD, UK
www.iiituk.com

ISBN 978 955 8398 52 4

Published by
Fuzin Texts
23/3, Market Road, Dharga Town-12090, Sri Lanka
Layout & Cover design by Azar Wazeer
Printed by Millennium Graphics, Maharagama
©Abd-al-Jabbar Muhammad Zaneer -2018

# பதிப்புரை

*சமகால ஊடகச் செல்வாக்கு சர்வ வியாபகமாகக் கிளை பரப்பி எல்லாத் துறைகளிலும் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தியுள்ளது. அதன் இஸ்லாமியப் பரிமாணம் குறித்து சீரியதோர் ஆய்வை நிகழ்த்தியுள்ளார் ஸுஹைப் ஜமால் அல்-பர்ஸின்ஜி. அமெரிக்கா வின் மேரிலேன்ட் பல்கலைக்கழகத்தில் தனது முதுமானிப் பட்டத்துக்காக அவர் செய்த ஆய்வின் நூல் வடிவமே 'வெகுசன ஊடகம் பற்றிய இஸ்லாமிய நெறிமுறைகள்' எனும் தலைப்பி லான எமது பிரசுரம்.*

*புதியதொரு துறை குறித்த இந்நூலை வெளியிடுவதில் நாம் அளவிறந்த மகிழ்ச்சி அடைகின்றோம்.*

*ஆங்கில மூல நூலினைத் தமிழாக்கம் செய்தவர் பிரபல ஊடகவியலாளர் சகோதரர் நவ்ஷாத் மொஹிதீன். அதனைச் சீர்செய்து, செம்மைப்படுத்தித் தரும் சிரமம் மிக்க பணியை செவ்வனே ஆற்றித் தந்தவர் கலாநிதி P.M.M. இர்பான் (நளீமி).*

*இருவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.*

நவம்பர் 2018 பூஸின் டெக்ஸ்ட்ஸ்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| *1.* | ஆய்வு அறிமுகம் | *01* |
| *2.* | முஸ்லிம் உலகில் வெகுசன ஊடகம் | *14* |
| *3.* | இஸ்லாமிய உலகக் கண்ணோட்டமும் தற்கால வெகுசன ஊடக எண்ணக்கருக்களும் | *51* |
| *4.* | வெகுசன ஊடக தொடர்பாடலில் இஸ்லாமிய மாதிரி ஒன்றனுக்கான செயற் கொள்கைகள் | *93* |
| *5.* | முடிவுரையும் மேலதிக ஆய்வுக்கான பரிந்துரைகளும் | *145* |
| *6.* | பிற்சேர்க்கை | *154* |

## *வாசகர் கடன்*

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் குறிப்பிடப்படும் போதெல்லாம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் (அல்லாஹ் வின் சாந்தியும் சமாதானமும் அவர் மீது அருளப்படுவதாக) எனவும், அண்ணலாரின் தோழர்கள் யாரும் குறிப்பிடப்படும் போது ரழியல்லாஹு அன்ஹு (அன்ஹா, அன்ஹும்) (அல்லாஹ் அவர்கள் மீது கருணை காட்டுவானாக) எனவும் முஹம்மத் (ஸல்) அவர்கள் தவிர்ந்த ஏனைய நபிமார்கள் குறிப்பிடப்படும் போது அலைஹிஸ்ஸலாம் (அவர் மீது அல்லாஹ் நல்லருள் பாலிப்பானாக) எனவும் கூற வேண்டுவது.

## அத்தியாயம் ஒன்று:

# ஆய்வு அறிமுகம்

*1960களின் ஆரம்பம் முதல் உலகம் முழுவதும் ஒரு வகையான புரட்சி இடம்பெற்று வருகின்றது. இந்த புரட்சியின் தாக்கமானது அடுத்த நூற்றாண்டு வரை எதிர்வலைகளை உண்டாக்கும் சாத்தியம் காணப்படுகின்றது. ஒரு காலத்தில் பசுபிக் பிராந்தியத்தின் பின் தங்கிய பகுதிகளிலும், ஆபிரிக்காவின் உப சஹாரா பிராந்தியத்திலும்,தென் அமெரிக்காவின் மலை உச்சிகளிலும் தனிமைப் படுத்தப்பட்டிருந்த கலாசாரங்கள் இன்று உலகின் முக்கிய பெரு நகரப் பகுதிகளில் வாழும் மக்களின் அன்றாட விவகாரங்களாகி விட்டன. முன்னர் இவர்கள் அவ்வப்போது கூறப்படும் வழிப் போக்கர்களின் பழங் கதைகளில்தான் இவற்றை கேள்விப்பட்டிருப்பர். ஆனால் இன்றைய வானலைகள் நமது அறிவுக்குட்பட்ட எல்லா மொழிகளிலும் ஆயிரக்கணக்கான குரல்களால் நிரம்பி வழிகின்றன. நமது கற்பனைக்கெட்டிய ஏதோ ஒரு கலாசாரத்துக்கும் கருத்தியலுக்கும் அரசியல் தூண்டலுக்கும் அவை உட்பட்டிருக்கின்றன. மக்கள் மத்தியில் சுழலும் பருவகால சஞ்சிகைகளின் எண்ணிக்கையும் அபிரிமிதமாகப் பெருகி வருகின்றது. இன்று ஒவ்வொரு கருத்துக்கும் ஒரு மேடை உள்ளது.*

ஒவ்வொருவருக்கும் ஓய்வு நேரத்தை கடத்த ஒரு சஞ்சிகை உள்ளது. ஒவ்வொரு தொழில்துறைக்கும் ஒரு வெளியீடு உள்ளது. நம்மைக் கடந்து செல்லும் ஒவ்வொரு மணி நேரமும் தொழில் நுட்பம் பரிணமிக்கும் வேகத்தில் நம்ப முடியாத தகவல்களும் வேகமாக நம்மை கடந்து செல்கின்றன.

இந்த 'வெகுசன ஊடக வெடிப்பு' நமது அன்றாட வாழ்வில் தொட்டுச் செல்லாத அம்சங்களே இல்லை. நம்மை நாம் உணரும் விதம், நமது யதார்த்தம், நாம் வாழும் இந்த உலகம் என எல் லாமே விவாதத்துக்குரிய வகையில் ஊடகங்களால் செதுக்கப் பட்டு வடிவமைக்கப்பட்டு நமக்குத்தரப்படுகின்றன. எமது அச்சங் கள், கனவுகள், ஏற்றுக்கொள்ளத் தக்கவை அல்லது நிராகரிக்கத் தக்கவை பற்றிய எமது உணர்வு நிலை, கலைகளிலும் உணவு களிலும் நடப்பு வழக்குகளிலும் எமக்கிருக்க வேண்டிய சுவை முதலிய அனைத்தும் எம்மீது திணிக்கப்படுகின்றன. நாம் அன் றாடம் வாசிக்கின்ற, கேட்கின்ற, பார்க்கின்ற ஊடகங்கள் வாயிலாக இது நடந்தேறி வருகிறது. போகின்ற போக்கில் வெகுசன ஊடகம் என்பது குடும்பம், வழிபாட்டுத்தலம், பாடசாலை போன்ற பாரம் பரிய நிறுவனங்களை இளைஞர்களை சமூகமயமாக்குவதற்கான முதல்நிலைக் கட்டமைப்பாக மாற்றிவிடுமோ என்ற நிலை தோன்றியுள்ளது.

எமது சமூக அமைப்பை போன்ற சுதந்திர சமூக அமைப்பில், குறைந்தபட்சம் ஒவ்வொரு நம்பிக்கைக்கும் ஓர் எதிர் நம்பிக் கையை அறிமுகம் செய்யலாம் என்ற நிலை காணப்படுகின்றது. அந்த நம்பிக்கைகள் வளர்ச்சியடைந்து செழுமை அடையும் வாய்ப் பும் உள்ளது. நம் விருப்பப்படி தெரிவு செய்துகொள்ளக் கூடிய பல்வேறு தெரிவுகளும் மாற்றீடுகளும் கூட குறிப்பிடத் தக்களவு நம்மிடையே காணப்படுகின்றன. வெகுமக்களில் பெரும்பான்மை யினர் போதியளவு படித்தவர்களாக இருப்பதே இதற்குக் காரணம். செய்திப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் உள்ளிட்ட அச்சு ஊடகம் இன்று பரவலாக கிடைக்கின்ற ஒன்றாகி விட்டது. ஏனைய ஊடகங்களும் அப்படித்தான். இவ்வாறு பல்வேறு

வகையான தெரிவுகள் உள்ளமையானது ஒரு குறிப்பிட்ட ஊடகம் தன்னைப் பரிசீலித்து பிறவற்றுடன் சமநிலைப்படுத்திக் கொள்ள வழியமைக்கின்றது. இதனால் தனிநபர்கள் தமக்குக்கிடைப்ப வற்றை ஒப்பீடு செய்து வடிகட்டியெடுக்க வாய்ப்புக் கிடைக் கிறது. மட்டுமன்றி, தரவுகளுக்கும் அபிப்பிராயங்களுக்கும் இடை யிலான வித்தியாசம், உண்மைக்கும் போலிக்கும் இடையிலான வித்தியாசம், பிரசாரத்துக்கும் யதார்த்தத்துக்கும் இடையிலான வித்தியாசம் என்பனவற்றை புரிந்து கொள்ளவும் அவர்களுக்கு உதவுகிறது. ஒருவர் ஒரு கருத்தை ஏற்றுக் கொள்ளவோ ஒரு வாழ்வு முறையை தழுவிக் கொள்ளவோ முன்னர் அதை அலசி ஆராய்ந்து மதிப்பீடு செய்து கொள்ளவும் கூட இதனால் முடியுமாகின்றது.

மேலைத்தேச சமூகங்களில் வெகுசன தொடர்பாடல் முறைமை களின் துரித வளர்ச்சி காரணமாக உலகளாவிய தொழில்துறையின் தரத்தை அவை எட்டியுள்ளன. மேலைத்தேச ஊடகங்களின் பல தொழில்சார் நிபுணர்களும் கோட்பாட்டாளர்களும் தங்களது ஸ்தா பிக்கப்பட்ட முறைமைகள் சிறிதும் பாரபட்சம் அற்றவை என்றும், சார்பியங்களால் கட்டுப்படுத்தப் படாதவை என்றும் வாதிக்கின் றனர். எனினும் இதற்கு எதிரான வாதங்களும் திடமாக முன் வைக்கப்பட்டுள்ளன. ஏனெனில் இந்த முறைமைகளுள் பல ஓர் உள்ளார்ந்த பெறுமான ஒழுங்கினால் தாக்கமடைபவை. அந்த ஒழுங்கோ உலகளாவிய மதச்சார்பின்மைக் கண்ணோட்ட மொன்றிலிருந்து ஊற்றெடுக்கிறது. அந்த உலகக் கண்ணோட்டம் கலைகள் பற்றியும் சமூகத்திற்கு அதன் பங்களிப்பு பற்றியும் சில முன் அனுமானங்களைக் கொண்டது. அழகு, பொழுதுபோக்கு, செய்தி, தகவல் என்பவை பற்றி சில எண்ணக்கருக்களை அது கொண்டிருக்கிறது. இந்த அனுமானங்களும் எண்ணக்கருக்களுமே மேற்கினால் உருவாக்கப்படும் ஊடகங்களிலும் பிரதிபலிக்கப்படு கின்றன.

இம்மேலைத்தேச மதச்சார்பற்ற முறைமைகளும் எண்ணக்கருக் களும் வெகுசன ஊடகங்களில் பிரதி செய்யப்பட்டு, மேலைத் தேசம் அல்லாத கலாசாரங்களில் -அவற்றின் உள்ளூர் விழுமியங்

களையும் பாரம்பரியங்களையும் பொருட்படுத்தாமல் - அமுல் செய்யப்படுகின்ற போது ஒரு மோதல் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகின்றது.

இந்த மோதலின் தாக்கம் மூன்றாம் உலக சமூகங்களைப் பொறுத்தமட்டில் மிகப் பெரிய அளவில் உள்ளது. இந்தப் பிராந்தியங்களில் மில்லியன் கணக்கான எழுத்தறிவற்ற, படிப்பறிவில்லாத மக்கள் தினசரி அரச வானொலியிலும் தொலைக்காட்சியிலும் பல மணிநேரத்தை செலவிடுகின்றனர். இதற்கு காரணம் அவர்களுக்கு மாற்று ஊடகத்துக்கான வழியொன்று இல்லை. தமக்கு கிடைக்கும் பல்வேறு தகவல்களை சுய மதிப்பீடு செய்து கொள்ளும் அளவுக்கு அவர்களிடம் கல்வி அறிவும் இல்லை. அதற்குத் தேவையான கருவிகளும் போதியளவு இல்லை. இவர்களால் பிரசாரங்களையும், கலாசாரத்துக்குப் பொருந்தக் கூடிய வகையில் விழுமிய ரீதியாக மீள் உறுதி செய்யப்பட்ட தகவல்களையும் பிரித்துப் பார்க்க முடிவதில்லை. இவர்கள் ஒன்றில் கலாசார ரீதியாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் அல்லது எதிர்மறையான அல்லது விரும்பத்தகாத செல்வாக்கிற்கு உட்பட்டுள்ளனர். பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகள் சர்வாதிகார அரசுகளின் ஆட்சிக்கு உட்பட்டவை. இங்கு அரசாங்கங்கள்தான் ஊடகக் கொள்கையை வடிவமைத்து கையாண்டு வருகின்றன. நவீனமயப்படுத்தலை நோக்கிய அவர்களின் பணியில், மேலைத்தேச நாடுகள் இந்த நாடுகள் எதைப் பின்பற்ற வேண்டும் என்று எதிர்ப்பார்க்கின்றனவோ அதே ஊடகக் கொள்கைகளை ஒட்டுமொத்தமாகவும் அச்சொட்டாகவும் பின்பற்றி வருகின்றனர். இந்நிலையில் மொத்த கலாசாரம், பெறுமான முறைமைகள், தேசிய அடையாளங்கள் என்பன முற்றாக திரிபு படுத்தப்படுகின்றன. ஆளும் அதிகாரத் தரப்பின் அரசியல் இலக்குகளையும் அபிலாஷைகளையும் அடைந்து கொள்ள அவை முழுமையாக பயன்படுத்தப்படுகின்றன.

உலக முஸ்லிம் சனத் தொகையில் பெரும்பாலானவர்கள் இந்த வகைப்படுத்தலின் கீழ்தான் வருகின்றனர். அவர்களின் கலாசார

சமய தனித்துவம், விழுமிய முறைமைகள், சுய எண்ணக்கரு, நம்பிக்கைகள் முதலிய எல்லாமே முற்றிலும் சம்பந்தம் இல்லாத உலகக் கண்ணோட்டமொன்றின் ஊடக செல்வாக்கினால் அடித்துச் செல்லப்படுகின்றன. புரட்சிக்கு முந்திய ஈரானில் லொஸ் ஏன்ஜல் ஸில் இருந்தும் லண்டனில் இருந்தும் வரவழைக்கப்பட்ட அறி விப்பாளர்கள் ஒலிபரப்பு ஊடகங்களை நடாத்தினர். தொலைக் காட்சிகள் பெரும்பாலும் அமெரிக்க, இத்தாலிய, பிரெஞ்சு மற்றும் ஆங்கில நிகழ்வுகளை ஒளிபரப்பின. உள்ளூர் தயாரிப்புக்கள் தேசிய-மதச்சார்பற்ற மற்றும் இஸ்லாத்துக்கு முன்னைய விவகா ரங்களையே உள்ளடக்கி இருந்தன. பாரம்பரிய சமய மற்றும் கலா சார விழுமியங்களைக் கொண்டவையாக அவை ஒரு போதும் இருக்கவில்லை. இது மிகப் பெரிய அளவில் ஒதுக்கி வைக்கப் பட்ட நிலையை ஏற்படுத்தியது. 1979ன் புரட்சி விரைவுபடுத்தப்பட பிரதான காரணமாகவும் இதுவே அமைந்தது.

இறைவன் மனிதனைப் படைத்தான்; மனிதன் வாழ்வதற்கு சரியான வாழ்க்கை நெறிகளையும் அவனே வகுத்துக் கொடுத்தான் என்பதுதான் அடிப்படை இஸ்லாமியக் கொள்கை. அந்த வாழ்க்கை நெறிதான் இஸ்லாம். இஸ்லாம் என்பது அந்த வார்த்தையின் பாரம்பரியம் மற்றும் வரையறை என்பனவற்றின் அடிப்படையில் 'மதம்' என்று சொல்லப்பட்டாலும், உண்மையில் அது அதை விட விரிவான அர்த்தமுடையது. இஸ்லாம் ஒரு மனிதனின் தனிப் பட்ட வாழ்க்கையோடு மட்டும் தனது பரப்பை மட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. அது மனித குலத்தின் இருப்போடு தொடர்பு டைய எல்லா அம்சங்களிலும் பரந்து விரிந்து தொடர்புபட்டுள்ளது. தனிப்பட்ட, சமூக, உலகாயத விடயங்கள், ஒழுக்கம், பொருளா தாரம், அரசியல், சட்டம், கலாசாரம்,தேசியம், சர்வதேசம் என எல்லா மட்டங்களிலும் அது வழிகாட்டுதல்களை வழங்குகின்றது. ஆகவே முஸ்லிம் சமூகத்தை நோக்கிப் பேசும் எந்த ஊடக முறைமையும் இஸ்லாமிய விழுமியங்களின் அடிப்படையிலான தாக இருக்க வேண்டியது அவசியமாகின்றது. இஸ்லாத்தின் முழுமையான வாழ்க்கை முறையைப் பேணி, முரண்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ள இது இன்றியமையாததாகும்.

இறக்குமதி செய்யப்பட்ட ஊடக மாதிரிகள் முஸ்லிம் சமூகத் தின் பல்வேறு கூறுகளின் மீது ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றி இந்த ஆய்வு கவனம் செலுத்தும். அக்கூறுகள் எந்தளவு அச்சுறுத்தலுக்கு உட்பட்டுள்ளன அல்லது உட்படவில்லை என்பது பற்றியும் இது ஆராயும். அதன் தொடராக, பாதகமான தாக்கங்களை எதிர் கொள்ளவும் இல்லாதொழிக்கவும் கூடிய வழிகாட்டுதல்கள் இங்கு முன்வைக்கப்படும். மாற்று ஊடக மாதிரி ஒன்றுக்கான அடிப் படைக் கொள்கைகளையும் கூட இதில் நான் வகுக்கவுள்ளேன். அவை இஸ்லாமிய உலகக் கண்ணோட்டத்திலிருந்து பிறந்த கோட் பாடுகளையும் கருதுகோள்களையும் அடிப்படையாகக் கொண்டி ருக்கும். முதல் மூன்று அத்தியாயங்களிலும் பின்வரும் அடிப் படைக் கேள்விகளும் கருதுகோள்களும் பரிசீலிக்கப்படும்:

***அத்தியாயாம்-1:*** தற்போது முஸ்லிம்வெகுமக்களுக்கு சேவை யாற்றிக் கொண்டிருக்கும் வெகுசன ஊடக மாதிரிகளும் அவற்றின் நிகழ்ச்சித் திட்டமும் அம்மக்கள் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம் என்ன? இக்கலந்துரையாடலின் போது, முஸ்லிம் சமூகங்களில் நடைமுறையில் உள்ள ஊடக மாதிரிகள் குறித்தும், தமது வாசகர் களது அடையாளத்திலும் உணர்விலும் அவைகொண்டுள்ள செல் வாக்கு குறித்தும் விஷேட கவனம் செலுத்தப்படும்.

முஸ்லிம் உலகில் தற்போது உள்ள வெகுசன ஊடகங்களின் நிலை பற்றிய ஒரு விரிவான கண்ணோட்டத்துடன் இதனை நாம் தொடங்குவோம். காலனித்துவம் என்பது முஸ்லிம் நாடுகளின் மொழிகள், ஊடகம், சமூக அரசியல் நிறுவனங்கள் என்பனவற்றில் நிரந்தர செல்வாக்குச் செலுத்தி உள்ளதை நாம் காண முடிகின்றது. சுதந்திரத்துக்குப் பிந்திய முஸ்லிம் நாடுகளில் அறிமுகம் செய்யப் பட்ட வெகுசன ஊடக வடிவங்கள் அங்கு ஏற்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார காரணிகளின் அடிப்படையில் நாட்டுக்கு நாடு வேறுபட்டு அமைந்தன. அந்த வகையில் மூன்று முக்கிய மான ஆட்சி முறைகளின் கீழ் வெகுசன ஊடகங்களின் இன்றைய நிலை பற்றிய ஒரு மதிப்பீடு மேற்கொள்ளப் பட்டுள்ளது. எதேச் சதிகார சோஷலிஸம், எதேச்சதிகார முதலாளித்துவம், ஜனநாயக

முதலாளித்துவம் என்பனவே அந்த ஆட்சி முறைகள். முஸ்லிம் உலகில் தற்போது நடைமுறையில் உள்ள வெகுசன ஊடக சட்டக மும் கட்டமைப்பும் இக்கலந்துரையாடலில் கோடிட்டுக் காட்டப் படுவதோடு, தற்போது நடைமுறையில் உள்ள ஊடக முறை களினால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றியும் கவனம் செலுத்தப் படும். உள்ளூர் நம்பிக்கைகள், விழுமியங்கள், கலாசாரம் என்பன வற்றில் அவை ஏற்படுத்தியுள்ள தாக்கம் பற்றியும் கலந்துரை யாடப்படும். இந்தப் பிரச்சினைகள் நான்கு பிரதான வகைப் படுத்தல்களின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. அவையாவன: வர்த்தக ஊடக மாதிரிக்கு உரியவை, ஊடக தொழில்சார் சித்தாந் தத்துக்கு உரியவை, தொலைக்காட்சி மற்றும் வானொலி தொழில் துறைக்கு உரியவை, செய்தியோட்டத்துக்கு உரியவை. இறக்கு மதி செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் உள்ளூர் கலாசாரத்தில் ஏற்படுத்தி யுள்ள தாக்கங்கள், அந்நியப் பெறுமானங்கள், நுகர்வுப் பயன்பாடு, மேட்டுக்குடி சார்பு நிலை என்பனவும் இங்கு பரிசீலிக்கப்படும்.

***அத்தியாயாம் -2:*** 'இஸ்லாமிய உலகக் கண்ணோட்டம்' மற்றும் 'இஸ்லாமிய கலாசாரம்' என்பதன் பொருள் யாவை? அவை கோடிட்டுக் காட்டும் முக்கிய தத்துவார்த்த மற்றும் சித் தாந்தக் கொள்கைகள் எவை? ஊடகம் தொடர்பான இஸ்லாமிய கருத்தாக்கங்கள் என்ன? அவற்றின் பயன்பாடுகளும் முறைமை களும் எவை?

ஆய்வின் இந்தக் கட்டத்தைப் பொறுத்தவரை, இஸ்லாமிய வெகுசன ஊடக மாதிரி ஒன்றுக்கான அடித்தளத்தையும் சித்தாந்த வழிகாட்டல்களையும் நான் விருத்தி செய்துள்ளேன். பாரம்பரிய இஸ்லாமிய அறிவு மூலங்களில் இருந்து வெகுசன ஊடகத்துக் கான எண்ணக்கருக்கள் இங்கு பெறப்பட்டுள்ளன. மட்டுமன்றி, ஒட்டுமொத்த இஸ்லாமியக் கண்ணோட்டத்துடன் அவை தொடர்பு படுத்தப்பட்டுள்ளன. அடிப்படையில் இவை உலக முஸ்லிம் களுக்கான தெய்வீக வழிகாட்டி நூலான அல்-குர்ஆனையும், முஹம்மத் (ஸல்) அவர்களது பொன்மொழிகளையும் செயற் பாடுகளையும் உள்ளடக்கியவை. இந்த அறிவு மூலங்களை

ஆராய்வதன் மூலம் சமூகத்தில் மனிதனின் பங்களிப்பு பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம் எதுவென்பதைப் பற்றிய ஒரு தெளிவான விளக்கத்தை பெற்றுக் கொள்ள முடியும். அதேபோல் ஊடகத்தினதும் தொடர்பாடலினதும் முக்கிய நோக்கம், இந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான வழிமுறைகள் என்பன வற்றையும் புரிந்து கொள்ள முடியும். இதனை மேலும் ஆராய் வதன் மூலம் இஸ்லாமிய ஊடக மாதிரிக்கு உரிய முறைமை ஒன்றையும்,விழுமியக் கோவை ஒன்றையும் நான் வரைய உள்ளேன்.

ஊடகம், அதன் பாவனை, உள்ளடக்கம், நோக்கம், கருவிகள், தத்துவம், முறைமைகள் என்பன பற்றிய இஸ்லாமிய உலகக் கண்ணோட்டம் இவ்வாறு தெளிவு படுத்தப்பட்டால்தான், அதற்கு அடுத்த அத்தியாயத்தில் முஸ்லிம் வெகுமக்களுக்குப் பொருத்த மான ஊடகத் தயாரிப்புக்குரிய வழிகாட்டல்களையும் அளவுகோல் களையும் அடையாளப்படுத்தமுடியும்.

***அத்தியாயாம்-3:*** முன்னைய அத்தியாயத்தில் கூறப்பட்ட எண் ணக்கருக்கள் இன்றைய ஊடகத் தேவைகளுக்கு ஏற்ப எவ்வாறு பிரயோகிக்கப்பட முடியும் அல்லது தகவமைக்கப்பட முடியும்? வெகுசன ஊடக தயாரிப்புக்களின் போது பகுப்பாய்வுக்கு உட் படுத்தப்பட வேண்டிய சர்ச்சைக்குரிய கூறுகள் எவை? அவற்றுள் இஸ்லாமிய கண்னோட்டத்தில் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டியவை எவை? அக்கூறுகள் தொடர்பான இஸ்லாமிய முறைமைகள் எவை? என்பனவற்றை உள்ளடக்கியதாக இந்த அத்தியாயம் அமையும்.

வெகுசன ஊடகத்தின் மாற்று இஸ்லாமிய மாதிரி ஒன்றுக்கான செயற் கொள்கைகளை இவ்வத்தியாயத்தில் நான் வடிவமைக்க வுள்ளேன். இறக்குமதி செய்யப்பட்ட ஊடக மாதிரிகளால் ஏற் படும் பிரச்சினைகளைத் தவிர்த்து, முஸ்லிம் வெகுமக்களுக்குப் பொருத்தமான ஊடக மாதிரியாக அது அமையும். பாரம்பரிய இஸ்லாமிய அறிவு மூலங்களில் இருந்து ஏலவே வடித்தெடுக்கப் பட்ட வெகுசன ஊடகக் கோட்பாடுகள் ஒன்றோடொன்று

பிணைக்கப்பட்டு இஸ்லாமிய வெகுசன ஊடகம் ஒன்றுக்கான வடிவம் நிர்ணயம் செய்யப்படும். பின்வரும் வெகுசன ஊடகக் கூறுகள் இஸ்லாமியக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் விஷேடமாகக் கலந்துரையாடப்படும்: அழகியல், பேச்சு சுதந் திரம், ஊடக தொழில்சார் நிபுணர், ஊடக ரசிகர்கள், ஊடக மாதிரி ஒன்றில் தொடர்புபட்டுள்ள செயற்பாட்டு மற்றும் கட்டமைப்புக் கூறுகள்.

பொழுது போக்கு மற்றும் செய்தி நிகழ்ச்சிகள் என்பனவும் இஸ்லாமிய நோக்கில் ஆராயப்படும். அதேபோல் ஊடக விதி முறைகள், பொருளாதாரம், உரிமைத்துவம் என்பனவும் இணைத் துக் கொள்ளப்படும்.

இந்த மதிப்பீடுகள் மூலம் அடைந்து கொள்ளப்படும் முடிவுகள் வெகுசன ஊடகத்துக்கான இஸ்லாமிய மாற்றீட்டு மாதிரியின் செயற் கொள்கைகளாக முன்வைக்கப்படும். அக்கொள்கைகள் முழுமையான இஸ்லாமிய ஊடக மாதிரி ஒன்றை நிர்மாணிக்கத் தேவையான மேலதிக ஆய்வுக்குரிய வழிகாட்டல்களாக அமை யும் என நம்புகிறோம்.

தற்போது தயார் நிலையில் கிடைக்கப் பெறுவது மட்டுமன்றி, அனேக மூன்றாம் உலக மக்களில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்து கின்ற தொலைக்காட்சி மற்றும் வானொலி போன்ற வெகுசன ஊடகக் கூறுகளோடு மட்டுப்படுத்தப்பட்டதாகவே இந்த ஆய்வு அமையும். சினிமா, ஒலிப்பதிவு, அச்சு வெளியீடு என்பவற்றை இக்கலந்துரையாடலில் இருந்து விலக்கியுள்ளேன். அவை தொடர் பான விடயங்கள் தேவைக்கு ஏற்ப கையாளப்படும். அதேபோல், உத்தேச ஊடக மாதிரி தொடர்பான இரசிகர்கள் பக்க பிரதிபலிப்பு பற்றிய அனுமானங்களும் இங்கு தவிர்க்கப்பட்டுள்ளன. முஸ்லிம் இரசிகர்கள் தமது கலாசாரத்திலும் அன்றாட வாழ்விலும் இஸ்லாம் பற்றிய வேறுபட்ட வியாக்கியானங்களைக் கொண்டிருப்பதால், அவர்களது கருத்துக்களை மதிப்பிட அல்லது அனுமானிக்க மேலதிக ஆய்வும் களப்பணியும் நிச்சயம் தேவைப்படும்.

இந்த ஆய்வு, அடிப்படையில் முஸ்லிம் சமூகத்தை நோக்கிப் பேசுவதால் உலக சனத்தொகையில் முஸ்லிம்களின் அளவு சுமார் ஒரு பில்லியன் என்ற தரவையும் நாம் சிந்தனையில் கொண்டிருக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். இந்த எண்ணிக்கையில் 26 வீதமானவர்கள் இந்திய உப கண்டத்திலும், 17 வீதமானவர்கள் ஆபிரிக்காவின் உப சஹாரா கண்டத்திலும் வாழுகின்றனர். 18 வீதம் தென்கிழக்கு ஆசியாவிலும், 18 வீதம் அரபுலகிலும், மேலும் பத்து வீதமானவர்கள் மத்திய ஆசியாவிலும் சீனாவிலும், இன்னும் பத்து வீதமானவர்கள் அரபு அல்லாத மத்திய கிழக்கிலும் (துருக்கி, ஈரான், ஆப்கானிஸ்தான்) வாழுகின்றனர். இலத்தீன் அமெரிக்கா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா ஆகிய பகுதிகளிலும் கணிசமான தொகையினர் வாழுகின்றனர். அமெரிக்காவின் முஸ்லிம் சனத் தொகை (1989 இஸ்லாமிய டெக்ஸ்ட் சொசயிட்டி தகவலின் படி) கிட்டத்தட்ட ஐந்து மில்லியனுக்கும் ஏழு மில்லியனுக்கும் இடைப் பட்டதாகும். இந்த ஆய்வில் முஸ்லிம் உலகம் எனக் குறிப்பிடப் பட்டிருப்பது முஸ்லிம்கள் பெரும்பான்மையாக (50 வீதத்துக்கும் அதிகம்) வாழும் நாடுகளை உள்ளடக்கியதாகும். இது சுமார் ஐம்பது சுதந்திர நாடுகளைக் கொண்டுள்ளது. இதன் ஒட்டுமொத்த முஸ்லிம் சனத்தொகை சுமார் 750 மில்லியன்களாகும். வடக்கு, மத்திய ஆபிரிக்கா, மத்திய கிழக்கு, தென் கிழக்கு ஐரோப்பா, தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா ஆகிய பிராந்தியங்களில் இந்த சனத்தொகை வியாபித்துக் காணப்படுகின்றது. இங்கு முஸ்லிம் உலகம் என எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள எல்லா நாடு களும் அபிவிருத்தி அடைந்து வரும் அல்லது மூன்றாம் மண்டல நாடுகளாகும். இன்னொரு விதமாக இதைக் கூறுவதாயின், இந்த நாடுகள் எல்லாமே விவசாயப் பொருளாதாரத்தில் இருந்து கைத் தொழில் பொருளாதாரத்தை நோக்கி நகரும் நிலையில் உள்ள நாடுகளாகும்.

ஊடகம் என்பது சமய அடிப்படையிலிருந்தும் செயற்பட முடியும் என்ற அடிப்படை உண்மையோடு ஐயுறவுவாதிகள் சில போது இணங்காமல் போகலாம். சமயச் சார்பற்ற சமூகங்களில்

இருப்பதைப் போல், சமயம் என்பது ஒருவரது தனிப்பட்ட அல்லது குடும்ப வாழ்வோடு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில் இந்த இணங்காமை நியாயப்படுத்தத் தக்கதுதான். ஆனால் எமது சமூகம் போன்றதொரு சமூக அமைப்பில் அன்றாட வாழ்வை நியமப்படுத்துகின்ற உள்ளார்ந்த பெறுமான ஒழுங்கொன்று இன்னமும் இருக்கத்தான் செய்கிறது.

மேலைத்தேச பெறுமானங்கள் வெளிப்டையாக 'மதம்' ஒன்றிலிருந்து பெறப்படாவிட்டாலும், அவை வலுவான கிறிஸ்தவ மதக் கூறுகளுடன் கூடிய மதச் சார்பற்ற மனித நலக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டவை. எது எவ்வாறிருப்பினும், இஸ்லாமிய விசுவாசத்தில் சமயம் என்பது மேலைத்தேசத்தில் அது வகிக்கின்ற மட்டுப்படுத்தப்பட்ட பங்களிப்பைக் கொண்டதல்ல. இஸ்லாம் என்பது ஒரு முழுமையான வாழ்க்கை முறை. தனிநபர், சமூகம், அரசியல், பொருளாதாரம் மற்றும் வாழ்க்கையின் எல்லா துறைகளிலும் பேணப்பட வேண்டிய ஒழுங்கு முறைகள் பற்றி அது தெளிவான விளக்கத்தைக் கொண்டுள்ளது. இந்த ஆய்வின் மூலம் நாம் சிபார்சு செய்ய முனையும் விடயம் கூட மதச்சார்பற்ற மானுட பெறுமானங்களுக்கு பதிலாக முஸ்லிம்களை நோக்கி குரல் கொடுக்கக் கூடிய இஸ்லாமியப் பெறுமானங்களைக் கொண்ட ஓர் ஊடகமே ஆகும்.

இவ்வாறான சிபார்சுகள் 'இஸ்லாமிய அடிப்படைவாதம்' பற்றிய ஒரு சர்ச்சையை ஏற்படுத்தலாம். அல்லது ஒரு சமய விசுவாசத்தின் கொள்கைகளை வெறித்தனமாக அல்லது தீவிரமாகப் பின்பற்றுவதாக கூறப்படலாம். முஸ்லிம் சமூகத்தின் மீது பிரயோகிக்கப்படுகின்ற அடிப்படைவாதம் என்பது ஒரு தப்பான சொல்வழக்காகும். அது நவீனத்துவத்துக்கு விரோதமானதோ அல்லது தீவிர பாரம்பரியம் கொண்ட ஒரு நடவடிக்கையோ அல்ல. சில கிறிஸ்தவ பிரிவுகள் இதற்கு தவறான விளக்கங்களை அளித்துள்ளன. ஆனால் உண்மையில் இது முஸ்லிம் உலகம் தான் சார்ந்த விடயங்களை ஓர் ஒழுங்கமைப்பின் கீழ் வைத்துக் கொள்வதற்கான செயற்பாடாகும். சமூக நிறுவனங்களை காலத்தால்

பின்னோக்கி நகர்த்தாத சில கொள்கைகளையும் கருத்தாக்கங் களையும் புத்துணர்வடையச் செய்வதையும் மீள உறுதிப்படுத்து வதையுமே இது குறித்து நிற்கின்றது. ஒரு சமூகம் தனது அடை யாளத்தை மீண்டும் ஸ்தாபித்துக் கொள்ளவும் அதற்கு புத்துயிர் அளிக்கவும் எடுக்கப்படுகின்ற நடவடிக்கை இது.

இச்செயற்பாட்டினை ஆதரிப்போரது வாதப்படி, இந்த 'அடை யாளம்' காலனித்துவத்துக்குப் பிந்தியதோ, அல்லது நவ முதலா ளித்துவம் அல்லது மதச்சார்பற்ற மானுடம் அல்லது பிற கொள் கைகள் என்பவற்றுக்குப் பிந்தியதோ அல்ல. மாறாக இது முஸ்லி மாக இருத்தல் என்ற மூல வேருடன் தொடர்பு பட்ட அம்சம். ஊடகங்களில் காட்டப்படும் மேலைத் தேசத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களின் படங்களில் சமயத் தலைவர்கள் 'பெரிய சாத் தானுக்கு' எதிராக சாபமிட மக்களை அணி திரட்டுவதும், அப்பாவி மக்கள் மீது இஸ்லாமிய நம்பிக்கைகளைத் திணிப்பதற்காக பயங்கரவாத முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக சித்தரிக்கப் படுவதும் தவறான காட்சிகளாகும். இஸ்லாத்துக்கு உள்ளே புத்துயிர் அளிக்க எடுக்கப்படும் முயற்சிகளுக்கே இவ்வாறு தவறான அர்த்தங்கள் கற்பிக்கப்படுகின்றன. அது மட்டுமன்றி இந்த நடவடிக்கைகளுக்கு கடுமையான எதிர்ப்புக்களை வெளி யிடும் வகையில் பிரசாரங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

புத்துயிர் அளிக்கும் செயற்பாடுகள் அன்றாட வாழ்வில் மக் களை சமயத்தோடு ஒருங்கிணைக்க அடிமட்டத்தில் எடுக்கப் படும் முயற்சிகளைக் கொண்டவை. சிறுவர்களை அசல் அரபு மொழியில் குர்ஆனை வாசிக்கத் தூண்டுவதும், அவர்களுக்கு அவர்களது தாய் மொழியில் அர்த்தத்தை புரிய வைக்க முயல் வதும் இதற்கு மிகவும் பொருத்தமான உதாரணமாகும். அவர்கள் தமது தனிப்பட்ட வாழ்வில் இந்தப் போதனைகளை உணர்ந்து அமுல் செய்வதற்கு இதன் மூலம் வாய்ப்புக் கிட்டுகிறது. இப்புத்துயிர்ப்பு இயக்கம் சார்ந்த கல்விமான்கள் இறையியல் தத்துவார்த்த விடயங்கள் குறித்தும் திறந்த விவாதங்களை நடாத்தி வருகின்றனர். சாத்தியமான இஸ்லாமிய அரசொன்று உருவாவ

தற்கான கலந்துரையாடல்களும் இன்றியமையாதனவாக கருதப் படுகின்றன. இவ்வாறு சமூகத்தின் ஒவ்வொரு கூறும் மொத்த வடிவத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக் கொள்ளப்பட முன் ஒரு கண் காணிப்புக்கும் கலந்துரையாடலுக்கும் உட்படுத்தப்படுகின்றன.

இச்செயற்பாட்டின் கீழ் ஓர் இஸ்லாமிய ஊடக மாதிரி தனது இலக்குகள் அனைத்தையும் தனியாகவோ சுயாதீனமாகவோ அடைந்து கொள்ள முடியாது. அது மொத்தமாக ஓர் இஸ்லாமிய அரசின் கீழ் செயற்பட வேண்டியது கட்டாயமானது. அதாவது 'உம்மா'வின் அரசியல், பொருளாதார, சமூகத் தேவைகளை உள்ளடக்கிய எல்லா நிறுவனங்களும் இஸ்லாமிய மயப்படுத்தப் பட வேண்டும். அப்போதுதான் முழுமையான, ஒத்திசைவு கொண்ட இஸ்லாமிய முறைமை ஒன்றை நடைமுறையில் கொண்டு வர முடியும். அப்போது மட்டுமே ஊடக மாதிரியையும் நாம் செயற்படுத்த முடியும். இந்த நிலையில்தான் ஆக்கபூர்வமான விதத்தில் அது தனது பங்களிப்பை வழங்கவும் முடியும். தற்போது பெரும்பாலான முஸ்லிம் உலக நிறுவனங்கள் சமயச் சார்பற்ற வையாகவே காணப்படுகின்றன. ஆகவே உத்தேச இஸ்லாமிய ஊடக மாதிரி என்பது, அதற்குத் தேவையான சரியான முன் நிபந்தனைகள் அமுலுக்கு வரும் வரை ஒரு தத்துவார்த்த நிலை யிலேயே இருக்க முடியும்.

## அத்தியாயம் இரண்டு:

# முஸ்லிம் உலகில் வெகுசன ஊடகம்

### முஸ்லிம் உலகில் வெகுசன ஊடகத்தின் கட்டமைப்பும் வடிவமும்

மூன்றாம் உலக நாடுகளில் ஏனைய எல்லா அபிவிருத்தி துறைகளையும் போலவே வெகுசன ஊடகத் துறையும் ஒட்டு மொத்தமாக பொருளாதாரத்திலேயே கவனம் செலுத்தி வந்துள் ளது. அபிவிருத்தி அடைந்து வரும் பல நாடுகள் துரித நவீன மயப்படுத்தலை அடைந்து கொள்ள முனைப்பு கொண்டவை. இந்த முயற்சியில் அவை மிக முன்னேற்றகரமான தொழிநுட்பத் தையும் சிக்கலான பொருளாதார முறைமைகளையும் தமது வெகு சன ஊடகத்தினுள் புகுத்தியுள்ளன. அளவில் மிகப் பெரியதாக இருத்தல், உயர் இலாப நோக்கு, கைத்தொழில் நாடுகளின் ஊடக மாதிரிகளை பின்பற்றுதல், அபிவிருத்தியின் இடைநிலையான படித்தரங்களை அனுசரிக்காது செல்லல் என்பன இத்தோற்றப் பாட்டின் பண்புகளாகும். வறிய, சிறிய, புதிய வளர்முக நாடுகள் தாம் நவீனமடைவதற்கான வாகனமாக பாரிய வெகுசன ஊட

கத்தை எடுத்துக் கொண்ட போது அவற்றினால் ஊடக நிறுவனங் களை சுதந்திரமாக நடாத்துவதற்கு முடியாதுபோனது. இதன் நீண்ட கால தாக்க விளைவுகள் பற்றி அவற்றுக்குத் தெரிய வில்லை; அல்லது அவற்றை அவை பொருட்படுத்தவில்லை.

இதன் விளைவாக, மேற்கிலும் கிழக்கிலும் மிகப் பாரிய வர்த்தக நோக்குடன் உருவாக்கப்பட்ட அச்சு மற்றும் ஒலி-ஒளி பரப்பு ஊடகங்களின் அச்சொட்டான பிரதிகள் மூன்றாம் மண்டல நாடுகளில் உருவாக்கப்பட்டன. மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட சமூகங்களுக்காக உருவாக்கப்பட்ட ஊடகங்களின் பிரதிகளும் இங்கு உருவாக்கப்பட்டன. மூன்றாம் மண்டல முஸ்லிம் நாடு களில் இதை நாம் மிக வெளிப்படையாகவே காணலாம். இது இப்பிராந்தியங்கள் அனுபவித்த காலனித்துவத்தின் மறைமுக தாக்கமும் கூட.

## காலனித்துவ மரபு

இன்றைய நவீன முஸ்லிம் உலகின் பெரும்பாலான நாடுகள் முதலாம் உலக மகா யுத்தத்தின் பிறகுகாலனித்துவ ஆதிக்கத்தின் கீழ் இருந்தவை. இவற்றுள் பெரும்பாலான நாடுகள் ஒன்றில் பிரிட்டனால் (நைஜீரியா, எகிப்து, ஈராக், ஈரான், மலேஷியா) அல்லது பிரான்ஸால் (டுனீஷியா, அல்ஜீரியா) ஆட்சி செய்யப் பட்டவை. லிபியா இத்தாலியின் ஆட்சியின் கீழும், இந்தோ னேஷியா நெதர்லாந்தின் ஆட்சியின் கீழும் இருந்தன. 1950கள் அல்லது 1960கள் வரைக்கும் இந்த நாடுகள் சுதந்திரம் அடைய வில்லை.

இந்த முஸ்லிம் நாடுகள் சுதந்திரம் அடைந்த பிறகும் கூட அங்கு எஞ்சியுள்ள காலனியத்தின் குறிப்பிடத்தக்க செல்வாக்கு அவற்றின் அரசியல் முறைமைகளில் உள்வாங்கப்பட்டுள்ள நிறு வனங்கள் மூலம் வெளிப்படையாகத் தெரிகின்றது. இந்த நாடு களுள் பல, மதச்சார்பற்ற அரசியல் யாப்பை அமுலுக்கு கொண்டு வந்தன. இது அரசாங்க நிறுவனங்களை முற்றாக சமயத்தில் இருந்து வேறுபடுத்தியது. அதுபோலவே கல்வி, நீதித்துறை,

பொருளாதாரம், வெகுசன ஊடகம் என்பவற்றிலும் முன்னைய ஆக்கிரமிப்பாளர்களின் மாதிரிகளைத் தழுவி நிறுவனங்கள் உரு வாக்கப்பட்டன. தமது முன்னாள் எஜமானர்களின் மாதிரிகளைத் தழுவிய ஊடக முறைகள் காரணமாக மிக விரைவாக நவீனத் துவத்தை அடைந்து விட முடியும் என இந்த அரசுகள் நம்பின. ஆனால் பல நாடுகளில் இந்த மாதிரிகள் யாருக்காக வடிவமைக் கப்பட்டனவோ அவர்களுக்குப் பொருத்தமற்றவையாக மாறின.

காலனித்துவ யுகத்தில் பல அடக்குமுறைச் சட்டங்களும் விதிமுறைகளும் காணப்பட்டன. ஊடகங்களின் உரிமைத்துவம், வெளியீடுகள், அவற்றின் விநியோகம் என எல்லாத் துறைகளிலும் காலனித்துவ ஆட்சியாளர்களின் கட்டுப்பாட்டை வலியுறுத்தும் வகையில் இந்த சட்டங்கள் பிரயோகிக்கப்பட்டன. இவற்றுள் பல சுதந்திரத்தின் பின்னரும் நீண்ட நாட்கள் நடைமுறையிலிருந்தன. சுதந்திரம் கிடைத்த ஆரம்ப நாட்களில் இயல்பு நிலையைப் பேணுவதற்காக இச்சட்டங்கள் தேவைப்படுகின்றன என்று கூறித் தான் ஆரம்பத்தில் இவை அமுல் செய்யப்பட்டன. வெகு விரை வில் முழு அளவிலான ஊடக சுதந்திரம் வழங்கப்படும் எனவும் உறுதி அளிக்கப்பட்டது. ஆனால் காலம் செல்லச் செல்ல இந்தக் கட்டுப்பாடுகளையும் வரையறைகளையும் அமுலில் வைத்திருப் பது தமக்கு நன்மை அளிக்கும் என்பதையும், தமது அரசியல் திட்டங்களை நிர்ப்பந்திக்க இவை வழியமைக்கும் என்பதையும் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசுகள் உணர்ந்து கொண்டன.

காலனியம் விட்டுச் சென்ற இன்னொரு பிரதான மரபு அதன் மொழியாகும். அந்த மொழி அந்நாட்டின் பொதுவான மொழி யாகக் காணப்பட்டது. நைஜீரியா, மலேஷியா போன்ற நாடுகளில் சற்று வித்தியாசத்தை அவதானிக்க முடிகின்றது. இவை பல இனக் குழுக்கள் பல மொழிகளைப் பேசும் நாடுகளாகும். இங்கு காலனித்துவ மொழி உத்தியோகபூர்வ மொழி அல்ல. ஆயினும் படித்த மற்றும் செல்வம் படைத்த சமூகங்கள் மத்தியில் பரவலாகப் பேசப்படும் மொழியாக அது காணப்படுகின்றது.

பிரிட்டன் தனது ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்த நாடுகளில் ஒலிபரப்பு மற்றும் செய்திப் பத்திரிகை வெளியீடு என்பனவற்றை வெவ்வேறு மாநிலங்களில் உள்ளவர்களின் தாய்மொழிகளில் மேற்கொள்வதற்கான அதிகாரப் பகிர்வை வழங்கியிருந்தது. மறு புறத்தில் பிரான்ஸ் ஆதிக்கம் செலுத்திய நாடுகளில் வெளியீடு களும் நிகழ்ச்சி ஒலிபரப்புக்களும் பிரெஞ்சு மொழியில் மட்டுமே இடம்பெற்றன. செய்திப் பத்திரிகை வெளியீடுகளும் ஒலிபரப்பு களும் பிரெஞ்சு மொழியில்தான் இருக்க வேண்டும் என்ற பாரம்பரியத்தை பிரான்ஸ் கட்டாயமாக வலியுறுத்தியது.

## காலனியத்துக்கு பிந்திய யுகம்:

ஒவ்வொரு நாடும் சுதந்திரம் பெற்ற பிறகு அந்த நாடுகளில் வெகுசன ஊடகக் கட்டமைப்பையும் வடிவமைப்பையும் பொது வான முக்கிய மூன்று காரணிகள் தீர்மானித்தன. இவைதான் பின்னர் விருத்தி செய்யப்பட்டன.

### 1. அந்நாடுகளில் இருந்த அரசு முறையும் பொருளாதாரமும்.

சுதந்திரத்துக்குப் பின் சில நாடுகள் சோசலிசப் பொருளாதாரத் தோடு பெருமளவான எதேச்சாதிகார(ஒற்றைக் கட்சி சர்வாதி காரம்) போக்கிற்கு மாறின. அல்ஜீரியா, யெமன் என்பனவற்றை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். ஏனைய நாடுகள் சுதந்திர சந்தைப் பொருளாதாரத்தோடு சர்வாதிகாரப் போக்கிற்கு மாறின (வழமையாக முடியாட்சி). கட்டாரையும் ஏனைய நாடுகளையும் இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். பாகிஸ்தான் போன்ற நாடுகள் கணிசமான சுதந்திர சந்தையோடு ஜனநாயக நாடுகள் ஆகின.

### 2. வெகு மக்களது கலாசார வடிவங்கள்.

முன்னாள் காலனிகள் பல பல்லினப் பண்பு கொண்டவை. பல மொழிகள் அங்கு பேசப்பட்டன (உதாரணம் மலேஷியா நைஜீரியா என்பன). பஹ்ரேன் போன்ற நாடுகள் ஒரே இனப் பின்னணியைக் கொண்ட சுதேச மக்களைக் கொண்டிருந்தன. ஒரு மொழியே அங்கு பேசப்பட்டது.

### 3. நாட்டில் காணப்பட்ட செல்வம்.

பெரும்பாலான முன்னாள் காலனிகள் வளப் பற்றாக்குறை கொண்ட வறிய நாடுகள். இங்கு மொத்த தேசிய உற்பத்தி மற்றும் தலாவீத வருமானம் என்பன மிகக் குறைவு. ஆயினும் ஐக்கிய அரபு இராச்சியம் போன்ற வளைகுடா நாடுகள் செல்வம் கொழிக்கும் நாடுகள். அவை வருடாந்தம் தமது தேசியப் பொருளாதாரத்தில் பெரிய அளவிலான மிகையைக் கொண்டுள்ளன.

## எதேச்சாதிகார சோசலிச நாடுகளில் வெகுசன ஊடகம்:

எதேச்சாதிகார சோசலிச நாடுகளில் (உதாரணம் ஈராக், லிபியா, சிரியா) சோசலிச ஊடக மாதிரி அமுல் செய்யப்பட்டது. வெகுசன ஊடகம் திட்டமிடப்பட்ட முறையில் கட்சியினதும் அரசினதும் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டதோடு அவற்றுக்கு சொந்தமானதாகவும் காணப்பட்டது. அவற்றின் அரசியல் போக்கிற்கு ஏற்ப பிரசார மையப்படுத்தப்பட்டதாகவும் காணப்பட்டது.

இங்கு அரசாங்கம் அனேகமாக ஒன்று அல்லது இரண்டு தொலைக்காட்சி நிலையங்களைக் கொண்டிருக்கும். சுமார் நான்கு முதல் ஏழு வரையான வானொலி நிலையங்கள் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும். இந்த ஊடக நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவரும் அரசின் நலன்களைப் பேண வேண்டும் என எதிர்ப்பார்க்கப்படுவர். இந்த நிறுவனங்களில் உள்ள மேல் மட்ட நிர்வாகிகள் அதிகாரத்தில் இருக்கும் கட்சியின் உயர் மட்டத்தில் உள்ளவர்களாக இருப்பர். அரச உரிமையின் கீழ் அரசாங்கத்தின் கொள்கைகளை பரப்புவதற்கும் அமுல் செய்வதற்குமான வாகனமாகவும் இந்த ஊடக நிறுவனங்கள் பயன்படுத்தப்படும். இந்த ஊடகங்கள் ஒன்றை வெளியிட அல்லது ஒலி/ஒளிபரப்ப முன் அதில் அரசாங்க கட்டுப்பாடு பிரயோகிக்கப்படும். இந் நிறுவனங்களில் அதிகாரத்தில் இருப்பவர்கள் தொடர்ந்து மிகக் கடுமையாக நிகழ்ச்சிகளையும் வெளியீடுகளையும் மீள் பரிசீலனை செய்பவர்களாக இருப்பர். இவற்றின் விளைவாக, அரச பிரசாரமும் பக்கச் சார்பான செய்திகளும் தகவல்களுமே இவற்றின் பிரதான அம்சங்களாக இருக்கும்.

இந்த எதேச்சாதிகார சோசலிச முஸ்லிம் நாடுகளில் வெகுசன ஊடக செயற்பாடு என்பது இலாபம் ஈட்டும் சாத்தியம் கொண்டதாக அமைவதில்லை. அரச முகவராண்மைகள் மூலம் இதற்கு தேவையான மானியங்கள் வழங்கப்படும். வர்த்தக ரீதியான விளம்பரங்கள் இதற்கு கிடைப்பதில்லை. தேசிய அரசின் உற்பத்திகள் மற்றும் அவற்றோடு சம்பந்தப்பட்ட விளம்பரங்கள் கிடைப்பது மட்டுமே சாத்தியம். இத்தகைய விளம்பரங்களால் பெரிய அளவில் தேவையான நிதியை திரட்ட முடியாது. காரணம் இவற்றுள் பெரும்பாலானவை ஏனைய அரச முகவராண்மைகளுக்காக இலவசமாகச் செய்யப்படும் விளம்பரங்களாகும். இதனிடையே எல்லைகளைக் கடந்து செல்லக் கூடிய ஏதோ ஒரு வகையிலான மாற்று ஒலிபரப்பு ஊடகம் ஒன்று இருக்குமானால் அதுவும் வழமையாக இடை மறிக்கப்படும். பொதுவாக இதற்கு கூறப்படும் காரணம் 'தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்' என்பதாகும்.

எல்லா ஒலிபரப்பு உபகரணங்களும் இங்கு இறக்குமதி செய்யப்பட்டதாகவே இருக்கும். அதேபோல் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் சுமார் 30 வீதம் இறக்குமதி செய்யப்பட்டவை. காரணம் உள்ளூரில் தயாரிப்பதை விட இவை மிகவும் மலிவாகக் கிடைப்பவை. இவை அரசியல் கலப்பு எதுவும் இன்றி, பாதிப்பற்ற பொழுதுபோக்கை அடிப்படையாகக் கொண்டவை. உள்ளூர் தயாரிப்புக்கள் பெரும்பாலும் மிக மலிவான தயாரிப்புக்களாகவே இருக்கும். பிரதான விளையாட்டுப் போட்டிகள், தேசிய கொண்டாட்டங்கள், அண்டை நாடுகளின் இணை அனுசரணையை அல்லது நிதி உதவிகளை அல்லது பங்குடைமையை பெற்ற நாடகங்கள் என்பன இவற்றுள் அடங்கும்.

அரசாங்கம் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கு கணிசமான ஒரு தொகையை வருடாந்தம் செலவிட்டாலும், இறுதியில் அவை மிக மலிவாகவே தொலைக்காட்சி நிலையங்களுக்கும் வானொலி நிலையங்களுக்கும் போதிய வர்த்தக விளம்பர வருமானங்கள் இன்றி வழங்கப்படுகின்றன. அப்போதுதான் சமூகத்தின் எல்லா பிரிவினரும் அவற்றைப் பார்க்கும் வாய்ப்பை உருவாக்க முடியும்.

இங்கு ஒலிபரப்பு உபகரணங்கள் பொதுவாகவே அதி நவீன மானவையாக இருக்கும். உள்ளூர் தயாரிப்புக்களின் தரமும் நன் றாகவே அமையும். அவை வழக்கமானவையாகவும் எல்லோரும் பார்க்க அல்லது கேட்கக் கூடியவையாகவும் இருக்கும். விநி யோகப் பொறிமுறை மிகச் சிறப்பாகவும் ஆற்றல் மிக்க வகை யிலும் பேணப்படும். எவ்வாறாயினும் இத்தகைய அரச ஆதரவு ஊடகங்களில் மாற்று அரசியல் கருத்துக்களுக்கு அல்லது ஏனைய அரசியல் கட்சிகளுக்கு இடமே இல்லை. அரசியல் ரீதியாக செல் வாக்கு பெற்ற மொழிகளும் கலாசாரங்களும் மட்டுமே இங்கு பிரதிநிதித்துவம் செய்யப்படும். குறிப்பாக சிறுபான்மையினருக் கும் (ஈராக்கில் குர்திஷ் இன மக்கள்) அவர்கள் கருத்துக்கும் இடமே இல்லை. தனிநபர்கள் கட்சி அதிகாரிகளாக இல்லாத பட்சத்தில் அவர்களுக்கும் இடமே இல்லை. இவற்றில் ஒலிபரப் பாகும் நிகழ்ச்சிகள் பற்றிய கருத்துக்களைக் கூட பதிவு செய்ய முடியாது.

## சர்வாதிகார முதலாளித்துவ நாடுகளில் வெகுசன ஊடகம்:

சர்வாதிகார முதலாளித்துவ முறை உள்ள நாடுகளில் (உதாரணம்: குவைத், பஹ்ரேன், ஐக்கிய அரபு இராச்சியம், கத்தார்) ஒலிபரப்புக் கட்டுப்பாடுகளை பெரும்பாலும் அரசுகளே கொண் டுள்ளன. தேசிய பாதுகாப்பு மற்றும் செலவு கூடிய செயற்பாடுகள் என்பன இதற்கான காரணங்களாக முன்வைக்கப் படுகின்றன.

ஒலிபரப்பு செயற்பாடுகளுக்கு அரசாங்கமே நிதி உதவி அளிப்ப தால் மிகச் சில வர்த்தக விளம்பரங்களே இவற்றில் காணப்படு கின்றன. அவற்றினால் குறிப்பிடத்தக்க வருமானம் கிடைப்ப தில்லை. அந்த விளம்பரங்களும் மொத்தமாக ஐந்து தொடக்கம் பத்து நிமிடங்களுக்குள் ஒலி, ஒளிபரப்புச் செய்யப்படுகின்றன. பாரிய உள்ளூர் மற்றும் பல்தேசிய கூட்டுத்தாபனங்களால் மட் டுமே இத்தகைய விளம்பரங்களை வழங்க முடியும். ஒவ்வொரு மாலை வேளையிலும் இத்தகைய இரண்டு முதல் நான்கு

வரையான விளம்பர நேரங்கள் ஒதுக்கப்படுகின்றன. இந்த விளம்பர நேரங்கள் ஆரம்பிக்கும் போது பெருமளவு மக்கள் தமது கவனத்தை வேறு பக்கம் திருப்பிக் கொள்வதால், இவ்விளம்பர மூலோபாயம் பொருளாதார இலக்கு கொண்டதாகவோ இலாப நோக்கு கொண்டதாகவோ இருப்பதில்லை. பொதுவாக இத்தகைய ஒன்று அல்லது இரண்டு உள்ளூர் தொலைக்காட்சி நிலையங்களும், மூன்று முதல் ஐந்து வரையான வானொலி நிலையங்களும் காணப்படும். எனினும் அனேக சந்தர்ப்பங்களில் போட்டித் தன்மை கொண்ட வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்களின் நிகழ்ச்சிகளை அண்டை நாடுகளில் இருந்தும் பார்க்க அல்லது கேட்கக் கூடியதாக இருப்பதுண்டு.

இங்குள்ள ஒலிபரப்புக் கருவிகள் அதி நவீனமானவை; இறக்குமதி செய்யப்பட்டவை. இவை ஐம்பது வீதமான தயாரிப்புக்களை உள்ளடக்கியவை. உள்ளூர் தயாரிப்புக்களை விட இவை மலிவானவை. உள்ளூர் தயாரிப்புக்களில் குறைந்த செலவு கொண்ட பிரதான விளையாட்டுப் போட்டிகள், தேசிய கொண்டாட்ட நிகழ்ச்சிகள், அண்டை நாடுகளின் இணை அனுசரணையை அல்லது நிதி உதவியை அல்லது பங்குடைமையைப் பெற்ற நாடகங்கள் என்பன அடங்கும். இத்தகைய உள்ளூர் தயாரிப்புக்களை ஒரு சிறு தொகையானவர்களே பார்வை இடுகின்றனர். எனினும் கல்வி மற்றும் கலாசார முக்கியத்துவம் கருதி இவை தயாரிக்கப்படுகின்றன.

பெரும்பாலான ஒலிபரப்புக்கள் அரசாங்கப் பிரசாரத்தை உள்ளடக்கி இருந்த போதிலும், சிறுபான்மைக் கலாசாரம், மொழி, அரசியல் கண்ணோட்டம் என்பனவற்றுக்கு -எதேச்சாதிகார சோசலிச நாடுகளில் உள்ளதை விட- கணிசமான இடம் இங்கு உண்டு. இவற்றின் நிகழ்ச்சித் தரம், ஒலிபரப்பு, விநியோகம் என்பனவும் வழமையாக மிகச் சிறந்தவை. ஒழுங்காகவும் ஆற்றல் மிக்கனவாகவும் நகரப் பகுதி மக்கள் அனைவரும் பார்வை இடக் கூடியனவாகவும் இவை இருக்கும். எவ்வாறேனும், இந்நாடுகளில் தொலைக்காட்சிகள் இன்னமும் கிராமப்புற பெரும்பான்மை

மக்களின் தேவைகளை அலட்சியம் செய்தே வருகின்றன. பெரு நகர பிரதேசங்களுக்கு வெளியே வாழும் ஏழை மற்றும் கல்வி அறிவற்ற மக்களுக்கு உகந்தவையாக இவை அமைவதில்லை.

## ஜனநாயக முதலாளித்துவ நாடுகளில் வெகுசன ஊடகம்:

இந்த ஜனநாயக நாடுகளில்தான் வெகுசன ஊடகம் மிகவும் விருத்தி அடைந்து போட்டி மிக்க நிலையில் காணப்படுகின்றது. மாறுபட்ட தன்மைகள் மற்றும் சுதந்திரம் என்பனவும் இங்கு உள்ளன. மலேஷியா, பாகிஸ்தான், நைஜீரியா ஆகிய நாடுகளை இங்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

செல்வந்த ஜனநாயக நாடுகளில் (உ-ம்: மலேஷியா) ஒலிபரப்பு ஊடகம் வழமையாக ஏகபோகம் கொண்டுள்ளதை காண முடிகின்றது. ஏனெனில் இச்செல்வந்த நாடுகளில் இலாபம் ஈட்டும் வகையில் இதை நடத்திச் செல்லலாம் என முதலீட்டாளர்கள் கருதுகின்றனர். ஆனால், ஏழை நாடுகளில் தொலைக்காட்சியும், அநேகமான வானொலிகளும் அரசாங்கத்தினாலேயே நடாத்தப் படுகின்றன (உ-ம்: பாகிஸ்தான், நைஜீரியா). முதலீட்டாளர்களுக்கு இவை பொருளாதார ரீதியாக சாதகமாக இல்லாமையே இதற்குக் காரணம். அநேகமாக ஒலிபரப்புக் கம்பனிகள் உள்ளூர் கம்பனிகளுக்கும் வெளிநாட்டுக் கம்பனிகளுக்கும் அல்லது முன்னைய காலனித்துவ அரசுகளுக்கும் இடையிலான கூட்டு முயற்சியாகவே ஆரம்பிக்கப்படுகின்றன. இங்கும் கூட பெரும்பாலான நிகழ்ச்சிகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. காரணம் அவை உள்ளூரில் தயாரிப்பதை விட மலிவான நடவடிக்கையாகும். உள்ளூர் நிகழ்ச்சிகள் பெரும்பாலும் செய்தி, விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் தேசிய நிகழ்வுகளை உள்ளடக்கியவை. உலகக் கிண்ணம் போன்ற பிரதான சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளுக்கு பல்தேசிய நிறுவனங்கள் அனுசரணை வழங்குகின்றன. இவை செய்மதிகளின் உதவியோடு நேரடியாக ஒலிபரப்புச் செய்யப்படுகின்றன. இந்த ஒளிபரப்புகளின் போது அனுசரணையாளர்களது பல வர்த்தக விளம்பரங்களுக்கும் இடமளிக்கப் படுகின்றது.

பல தொலைக்காட்சி, வானொலி விளம்பரங்கள் பல்தேசிய கம்பனிகளின் பெயரால் மேற்கொள்ளப்படுகின்றன. இவை வெளிநாட்டு இறக்குமதிகளின் நுகர்வுக்கு உற்சாகம் அளிக்கின் றன. பல்தேசியக் கம்பனிகளால் மட்டுமே இவ்வாறான விளம் பரங்களை வழங்குவது சாத்தியமாகும். இல்லையேல் அவற்றை உள்ளூர் நிறுவனங்கள் வழங்க வேண்டி இருக்கும். அண்டை நாடுகளின் கூட்டு முயற்சியோடு சில உள்ளூர் தயாரிப்புக்களும் இடம்பெறுகின்றன. அதேபோல் சில சர்வதேச தயாரிப்புக் கம்பனி களுக்கும் ஏனைய முகவராண்மைகளுக்கும் சில வேளைகளில் உள்ளூர் கலையகங்கள் வாடகைக்கும் விடப்படுகின்றன. வருமா னத்தை அதிகரிக்கும் நோக்கில் இவை செய்யப்படுகின்றன.

நைஜீரியா போன்ற பெரிய நாடுகளில் தொலைக்காட்சி அல் லது வானொலிச் சேவைகள் நாடு முழுவதும் கிடைக்கக் கூடிய தாக இல்லை. குறிப்பாக மிகவும் தூரப் பிரதேசங்களில் உள்ள கிராமங்களுக்கு மின்சார வசதி இன்மையால் அங்கு இந்த சேவை களும் முழுமையாக இல்லை. பொதுவாக அரசாங்கம் ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒரு நிலையத்தை வழங்க முயற்சிக்கின்றது. சில பின்தங்கிய இடங்களின் நகர்ப் புறங்களில் சிற்றுண்டிச்சாலை கள் போன்ற பொது இடங்கள் சிலவற்றில் இந்த ஒலி-ஒளிபரப் புக்களை பெற்றுக் கொள்ளும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் குறிப்பிட்ட நேரத்தில் மக்கள் அந்த இடங்களில் கூடுவதும் வழமையாக உள்ளது. பலவீனமான சமிக்ஞை காரணமாக ஒலி மற்றும் ஒளிபரப்பு தரம் மிகவும் குறைவாகவே இங்கு உள்ளன. ஆனால் வித்தியாசமான நிலையங்களில் கணிசமான அளவு வெவ் வேறு நிகழ்ச்சிகள் உள்ளன. பல குழுக்களுக்கு வானொலியில் உரிய இடம் அளிக்கப்படுகின்றது. ஆனால் தொலைக்காட்சிகளில் இது குறைவாகவே காணப்படுகின்றது.

முஸ்லிம் உலகின் ஒவ்வொரு பிராந்தியத்திலும், பெரிய அள விலான நிகழ்ச்சித் தயாரிப்பில் ஈடுபடும் சில நாடுகள் காணப் படுகின்றன. மத்திய கிழக்கில் லெபனானும் எகிப்தும் முக்கிய தொலைக்காட்சி நிலையங்களைக் கொண்ட நாடுகளாகும்.

இந்நாடுகள் தமது வானொலி அலைவரிசைகளையும் சினிமாத் தயாரிப்பையும் பிராந்தியத்தின் ஏனைய அண்டை நாடுகள் பெற்றுக் கொள்ள முன்னரே பெற்று விட்டன. தங்களது தொலைக் காட்சி நிலையங்களையும் அவை துரிதமாக அபிவிருத்தி செய்து கொண்டன.

லெபனானிலும் எகிப்திலும் சினிமாத் துறையோடு தொடர்புடைய 'டப்பிங்' அல்லது குரல் சேர்க்கை வசதிகள் இருந்ததால், தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பில் பிராந்திய மட்டத்தில் அவற்றினால் முக்கிய பங்காற்ற முடிந்தது. மேலும் மேலைத்தேச தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கான மத்திய கிழக்கின் பிரதான விநியோக நுழைவாயிலாகவும் அவற்றினால் செயற்பட முடிந்தது.

## முஸ்லிம் உலகில் தற்போதுள்ள வெகுசன ஊடகத்தின் பிரச்சினைகள்:

**வர்த்தக மாதிரி:**

வர்த்தக அல்லது மேலைத்தேச ஊடக மாதிரியை தமது நவீன மயப்படுத்தலுக்கான வாகனமாக தெரிவு செய்து கொண்ட புதிய சுதந்திர முஸ்லிம் நாடுகள் பாரியளவு இரசிகப் பெருமக்களில் தங்கியிருக்கும் ஒழுங்கொன்றை பின்பற்றின. அனுசரணை வழங்குபவர்களிடமிருந்து விளம்பர வருமானங்களைப் பெறும் வகையிலான தரமான நடைமுறைகளும் நுகர்வோர் அமைப்புக்களும் அங்கு உருவாக்கப்பட்டன. ஆனால் மேலைத்தேசங்களில் பின் பற்றப்படும் மூலதனச் செறிவாக்க முறைமைகளை அடிப்படையாகக் கொண்ட நீண்டகால, அமைதியான அபிவிருத்திச் செயற்பாட்டை இவை கவனத்தில் கொள்ளவில்லை. அத்தகைய அதி நவீன ஊடகம் ஒன்றை உருவாக்குவதற்கான அல்லது நுகர்வதற்கான ஆற்றல் அவற்றிடம்இருக்கவுமில்லை. இதனால் வெளி நாட்டு நிதி அனுசரணையில் தங்கி இருக்க வேண்டும் என்ற நிர்ப்பந்த நிலைக்கு அவற்றின் ஊடகங்கள் தள்ளப்பட்டன. இதன் ஓர் அங்கமாக நிகழ்ச்சித் தயாரிப்பு, பயிற்சி, உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளல் என்பனவற்றிலும் அவை வெளிநாடுகளில்

தங்கியிருக்கும் நிலை உருவானது. இந்த ஊடகங்களில் சுதேச நிலை பேணப்பட வேண்டும் என்ற கட்டாயம் ஏற்படும் போது அவற்றுக்குத் தேவையான அனுசரணையை உள்ளூர் அரசாங்கங் களும் அரசியல் கட்சிகளும் மட்டுமே வழங்கக் கூடிய நிலை இருந்தது. அவ்வாறான நிலைமைகளில் ஊடகங்களை அரசுகளும் கட்சிகளும் தமது நலன் சார்ந்த விடயங்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டன. பொருளாதார ரீதியான நெருக்கடிகள் மேலும் அதி கரித்த போது ஊடகங்கள் தவிர்க்க முடியாத வகையில் தேக்க நிலைக்கும் இரண்டாம் தர நிலைக்கும் தள்ளப்பட்டன.

பெரும்பாலான முஸ்லிம் நாடுகளில் வேறு முட்டுக்கட்டை களும் இருக்கின்றன. இவை முழு அளவிலான சந்தை மயப் படுத்தப்பட்ட வெகுசன ஊடகங்களின் உருவாக்கத்துக்கு பிரதான தடையாக உள்ளன. இந்த நாடுகளில் பல ஊடகங்கள் இருந்த போதும் அவற்றின் மத்தியில் தரவரிசைகள் எதுவும் கிடையாது. அந்த நிலையங்களின் பார்வையாளர்களது அல்லது இரசிகர்களது எண்ணிக்கை பற்றி எதுவித தகவல்களும் இல்லை. ஊடக நிறு வனங்கள் இது பற்றிய சில தகவல்களைத் தந்த போதும், அவை ஊர்ஜிதம் செய்ய முடியாதவை; மிகைப்படுத்தப்பட்டவை. தர மான எந்த ஒரு முறையிலும் ஒரு தொலைக்காட்சி நிலையத்துக்கு எந்தளவு இரசிகர்கள் உள்ளனர் என்பதை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

இன்னும் சில நாடுகளில் தொலைக்காட்சி பார்ப்பது என்பது இனரீதியான ஒரு அனுபவமாக உள்ளது. ஒவ்வொரு இடங்களி லும் நூற்றுக் கணக்கானவர்கள் கூட்டமாக இருந்து பார்ப்பதை அவதானிக்கலாம். இரசிகர்களின் குடிப்பரம்பல் அனுமானத் துக்கு உரியதாகவே அங்கு ஒலிபரப்பும் உள்ளது. பெரும்பாலும் இந்த மக்கள் தொகை 20 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப் பட்டதாக இருப்பதையும் காண முடிகின்றது.

மற்றொரு தடை விளம்பரங்கள் தொடர்பானது. விளம்பரத்துக் கான கட்டணங்கள் ஏடாகூடமான விதத்தில் அமைந்துள்ளன. விஷேடமாக அரசுக்குச் சொந்தமான ஊடகங்களில் இந்நிலை

காணப்படுகின்றது. அரசாங்கங்கள் தமது ஒலி, ஒளிபரப்பு நிலையங்களிலோ அல்லது அச்சு ஊடகங்களிலோ விளம்பரங்களை ஊக்குவிப்பதில்லை. இதனால் சிறிய அளவிலான கம்பனிகளுக்கு இந்த ஊடகங்களில் விளம்பரம் செய்ய முடிவதில்லை.

அரசுக்குச் சொந்தமற்ற ஊடகங்களில் போட்டித்தன்மை அடிப் படையில் விளம்பரக் கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்படு கின்றன. சில சந்தர்ப்பங்களில் வெளியீட்டாளர்களுக்கு இது நட்டமாக அமைந்தாலும், கட்டணங்கள் போட்டித் தன்மை அடிப்படையிலேயே தீர்மானிக்கப் படுகின்றன.

விளம்பரங்கள் தொடர்பான மனப்பான்மைகள் பெரும்பாலும் மிகவும் பாரம்பரியமானவையாகவே உள்ளன. வளர்ச்சிகண்டு வரும் சந்தை முறைக்கு இது பெரும் தடையாகும். பிராங்க் ஜெப்கின்ஸ் என்பவரின் கருத்துப்படி, மூன்றாம் உலக நாடுகளின் வர்த்தகர்கள் விளம்பரங்கள் செய்ய தயங்குகின்றனர். காரணம் அவர்கள் அதை உற்பத்திக்கான செலவின் ஒரு அங்கமாகப் பார்க்காமல் தமது இலாபத்தில் இருந்து செல்லும் ஒரு தொகை யாகப் பார்க்கின்றனர். அவர்களது உலகில் ‘விரைவான விற்பனை விரைவான இலாபம்’ என்பதுதான் நியதியாக உள்ளது. சந்தை அல்லது பஸார் என்பது பாரம்பரியமான ஒரு விற்பனை இட மாவே கருதப்படுகின்றது. எனவே விற்பனைக்கு விளம்பரத்தை மிகவும் அந்நியமான ஒன்றாகவே அவர்கள் காணுகின்றனர். விளம்பரத்துக்கு முன்னேற்றகரமான சிந்தனையும் திட்டமிடலும் அவசியம். விற்பனைக்கான எதிர்வு கூறல், மூலதனத்துக்கான எதிர்கால வருமானம் என்பன முறையாகக் கணிப்பிடப்பட வேண்டும். ஆனால் இவை எல்லாம் வெறுமனே ஒரு பாரம்பரிய மான வர்த்தகருக்கு மிகவும் கஷ்டமான விடயங்கள்.

முஸ்லிம் உலகில் உள்ள பல வாசகர்களுக்கும் பார்வையாளர் களுக்கும் விளம்பரம் என்பது சந்தேகத்தைத் தூண்டும் ஒன் றாகவே உள்ளது. அது பொருட்களை விற்பதற்கான ஒரு வெளி நாட்டு முறையாகவும், பாரம்பரியம் கடந்த ஒன்றாகவும், பரவலாக

நம்ப முடியாத விடயங்களைப் பரப்புகின்ற ஒன்றாகவுமே நோக் கப்படுகின்றது. அபிவிருத்தி அடைந்து வரும் முஸ்லிம் நாடுகளில் பொதுவாக விளம்பரம் என்பது மிகச் சுருக்கமானதாக அல்லது சாதாரணமானதாக உள்ளது. மறுபுறத்தில், அளவு கடந்த உணர்வுக் கோஷங்களால் வழங்கப்படும் உத்தரவாதங்களும் இங்குள்ள விளம்பரங்களில் அவதானிக்கப் படுகின்றன. விளம்பரங்களின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தும் எந்த விதமான சட்டங் களும் அமுலில் இல்லை. எனவே எல்லா விளம்பரங்களினதும் நம்பகத்தன்மை விரைவில் சந்தேகத்துக்கு ஆளாகின்றது. உண்மை யானதாக இருக்க முனையும் விளம்பரங்களுக்கு கூட இதே நிலைதான்.

பெரும்பாலும் அநேக வெகுமக்களின் வசதிக்குள் அடங்காத விடயங்களே பாரிய அளவில் விளம்பரம் செய்யவும் படுகின்றன. உலகளாவிய பொருளாதாரப் பின்னடைவு நிலவிய காலத்தில் இந்தோனேஷியாவில் சில வருடங்கள் தொலைக்காட்சி விளம் பரங்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. அவை மக்களது எதிர்ப் பார்ப்புகளை யதார்த்தத்துக்கு அப்பாற்பட்ட விதத்தில் அதிகரிப்ப தாக இதற்கு காரணம் கூறப்பட்டது. கடைசியில், 'நாம் பார்ப்பது என்ன?' 'நம்மால் வாங்க முடியுமானது என்ன?' என்பனவற் றுக்கு இடையிலான வேறுபாடுதான் ஏழை மக்களை விளம் பரங்களை கோபத்துடன் பார்க்க வைக்கின்றது. பெரிய மனிதர் களாலும் செல்வம் கொழிக்கும் கம்பனிகளாலும் மேற்கொள்ளப் படும் தேவையற்ற ஒரு செயற்பாடு என்ற ரீதியிலேயே அவர்கள் விளம்பரங்களைப் பார்க்கின்றனர்.

## தொழில்சார் சித்தாந்தம்:

முஸ்லிம் சமூகத்துக்குள் வெகுசன ஊடகத்தை விஸ்தரிக்கும் எதிர்பார்ப்புடன் மேலைத்தேச தொழில்சார் நியதிகளும், அளவீடு களும், ஊடகச் செயல்முறைகளும் உள்வாங்கப்பட்டன. முஸ்லிம் ஊடக தொழில்சார் நிபுணர்களுக்கு ஊடகப் பயிற்சி, கல்வி, ஆராய்ச்சி என்பன அபிவிருத்தி அடைந்த நாடுகளிலேயே

வழங்கப்பட்டன. அல்லது முஸ்லிம் நாடுகளுக்கு மேலைத்தேச நிபுணர்கள் வருகை தந்து இவற்றை வழங்கினர். மேலைத்தேசத் தில் புகட்டப்பட்ட அதே பாடத்திட்டமே இங்கும் பின்பற்றப் பட்டது. பெரும்பாலும் இவை அபிவிருத்தி அடைந்த நாடுகளின் சட்டகத்துக்குள்ளேயே அமைந்திருந்தன. சுதேச கலாசார சுபாவங் கள், தேவைகள், பிரச்சினைகள் என எதுவுமே இங்கு கவனத்தில் கொள்ளப்படவில்லை.

இதன் விளைவாக முஸ்லிம் உலகில் உருவான ஊடகத் தயாரிப்புகள், பத்திரிகைக் கட்டுரைகள், தொலைக்காட்சி நாடகங் கள், ஆவணத் தயாரிப்புக்கள், நகைச்சுவைகள் என எல்லாமே மேலை நாடுகளின் தயாரிப்புகளை அடியொற்றியே அமைந்தன. இவற்றில் பின்பற்றப்பட்ட பாணிகள், வலியுறுத்தப்பட்ட விழு மியங்கள், வெளிப்படுத்தப்பட்ட தொனிப் பொருள்கள் ஆகிய அனைத்தும் மேலைத்தேச எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன. இந்த இறக்குமதி செய்யப்பட்ட ஊடக நியதி களின் இணக்கமற்ற நிலை காரணமாக முஸ்லிம் சமூகத்தின் அரசியல், பொருளாதார, கலாசார யதார்த்தங்களோடு முரண்பாடு கள் உருவாகின. பாரம்பரிய நடைமுறைகளுக்கும் பெறுமானங் களுக்கும் தொழில் ரீதியான நியமங்களின் தேவைக்கும் இடையில் ஏற்பட்ட இந்த முரண்பாடுகள் மூன்றாம் உலக ஊடக நிறுவ னங்களின் தொழில்சார் தரத்தை உயர்த்தும் அவசியப்பாட்டை ஏற்படுத்தின.

பொதுவான மேலைத்தேச சமூகத்தை விட மேலைத்தேச ஊடக கலாசாரம் சமயத்தையும் அதனோடு இணைந்த உலகளா விய விழுமியங்களையும் அதிகளவு அலட்சியம் செய்கிறது அல்லது அவற்றுக்கு எதிராக உள்ளது. முரண்பாடு தோன்றும் கோணங்களில் இதுவும் ஒன்றாகும். மேலைத்தேச ஊடக தொழில் சார் நிபுணர்கள் பெரும்பாலும் சமயச்சார்பற்றவர்களாகவே உள்ள னர். அமெரிக்காவின் எல்லா ஊடகவியலாளர்களிலும் ஐம்பது வீதமானவர்கள் எந்த வகையிலும் சமயத்தோடு இணையாதவர் கள். மத விரோத இயல்பு கொண்ட ஊடகவியலாளர்கள் சமயம்

சார்ந்த செய்திகளைக் கண்டு கொள்வதே இல்லை. பொதுத் துறைகளோடு தொடர்பு படும் போது மட்டுமே அவற்றை அவர்கள் கணக்கிலெடுப்பர்.

காலனித்துவ சக்திகளின் செல்வாக்கின் கீழ் முஸ்லிம் உலகம் ஊடகங்களைத் தொடங்கிய போது, ஏற்கனவே பிரதான கலாசாரத்தில் இருந்து அந்நியப்பட்டுக் காணப்பட்ட உள்ளூர்வாசிகளையே அவை முதலில் கவர்ந்திழுத்தன. இதன் விளைவாகவும், மதச்சார்பற்ற தொழில்சார் சித்தாந்தத்தை அமுல் செய்ததாலும் இன்றைய முஸ்லிம் உலக ஊடகவியலாளர்கள் -தமது மேலைத்தேச சகாக்களை விட அதிகமாக -பிரதான சமய நிறுவனங்களுக்கு எதிர்ப்போக்குடையவர்களாக மாறியுள்ளனர். சமயக் கண்ணோட்டத்தில் இருந்து பார்க்க வேண்டிய சில விடயங்களைக் கூட இவர்கள் கண்டிப்பான மேலைத்தேச சமயச்சார்பற்ற கண்ணோட்டத்திலேயே நோக்குகின்றனர். இவ்வாறான அணுகுமுறைகள் கலாசார முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிடுகின்றன. முஸ்லிம் சமூகத்தில் சமயத்துக்கு இருக்கின்ற முக்கியமான பங்களிப்பையும் அவை மலினப்படுத்துகின்றன. முக்கியமான விடயங்களைக் கூட எதிரான அல்லது அந்நியமான கண்ணோட்டங்களில் இருந்து விளக்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன.

முஸ்லிம் உலக ஊடகவியலாளர்களுக்குப் போதிக்கப்பட்ட பல வழிமுறைகளும் நுட்பங்களும் -முஸ்லிம் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கின்ற போது- பொருத்தமற்றவையாகவே தெரிகின்றன. அவதூறான செய்திகளை வெளியிடல், பரப்புதல், உண்மைக்குப் புறம்பான தகவல்களைத் தருதல், தனிநபர்களது கௌரவத்தையும் உணர்வையும் பாதிக்கின்ற விடயங்களை வெளியிடல் என்பவற்றை இஸ்லாம் தடை செய்துள்ளது.

மேலைத்தேச ஊடகத்தின் ஒட்டு மொத்த கருத்தாக்கமே பொது மக்களுக்கு 'அறிந்து கொள்ளும் உரிமை' உள்ளது என்பதும், 'எதுவுமே புனிதமானதல்ல' என்பதுமாகும். இப்போக்கு தனிநபர்களது தனிப்பட்ட விடயங்களில் ஊடுருவுவதையும், தேவையற்ற

விதத்தில் தலையிடுவதையும் சரி காண்கிறது. இறையாண்மை கொண்ட பொது மக்கள் அபிப்பிராயத்தை நோக்கி அழைப்பு விடுப்பதையும் நியாயப்படுத்துகின்றது. தனிநபர்களின் தீமை களை மூடி மறைப்பதற்குப் பதிலாக அவற்றை தூபமிட்டு பகிரங் கப்படுத்துவதும் இந்த வகை சார்ந்ததே. இவை எல்லாம் முஸ் லிம் வாழ்வியலோடு வேரூன்றி உள்ள விசுவாசங்களுக்கும் விழு மியங்களுக்கும் முற்றிலும் முரண்பாடானவை.

இன்னொரு முக்கிய விடயம் வெகுசன ஊடக ஆய்வு முறை யாகும். மேலைத்தேச ஊடகங்களில் ஆதிக்கம் செலுத்தும் பிர யோக ஆய்வு முறைகள் சில சந்தர்ப்பங்களில் முஸ்லிம் சமூகத் துக்கு பயனற்றவை. அநேகமான சந்தர்ப்பங்களில் தனிப்பட்ட முறையில் நேர்காணல்களை நடாத்துவது சாத்தியமற்றதாகின்றது. துல்லியமான தகவல்கள், இரசிகர்களின் கருத்துக்கள் என்பன வற்றையும் அடைந்து கொள்ள முடியாத நிலை உள்ளது. மூட நம்பிக்கைகளும், அநாமதேயப் பண்பு குறித்த புரிதலை மக்க ளிடம் ஏற்படுத்துவதில் உள்ள சிரமமுமே இதற்கு காரணமாகும். மக்களிடம் இருந்து கருத்துக்களை ஒலிப்பதிவு செய்தோ அல்லது செய்யாமலோ பெற்றுக் கொள்ளல் என்ற எண்ணக்கருவை மக்க ளுக்கு புரிய வைப்பது இங்கு மிகவும் சிரமமான விடயமாகும். இந்த மக்கள் பல தலைமுறைகளாக தமது சிந்தனை மூலம் பேசும் சுதந்திரத்தை இழந்திருந்தனர் என்பதே இதற்குக் காரணம்.

முஸ்லிம் உலக ஊடக விநியோகஸ்தர்களும் தமது மேலைத் தேச சகாக்களின் செல்வாக்கில் பாரிய அளவில் கட்டுண்டுள்ள னர். இவர்கள் கலாசார விளைவுகளில் அக்கறை செலுத்துவதிலும் பார்க்க அதிகமாக சந்தைச் சக்திகளால் தூண்டப்பட்டவர்களாக காணப்படுகின்றனர். எண்பதுகளின் ஆரம்பத்தில் நடாத்தப்பட்ட ஓர் ஆய்வின் படி, உலகம் முழுவதும் பொழுது போக்கு ஊடகத் தின் வர்த்தக விநியோகப் பிரிவில் பணிபுரிபவர்கள் ஒரே வகை யான சித்தாந்தத்தையே கொண்டிருந்தனர். தமது போட்டியாளரை விட அதிக பிரபலமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை விற்பனை செய்ய வேண்டும் அல்லது ஒளிபரப்ப வேண்டும் என்பதுதான் அந்த சித்தாந்தம்.

## மேட்டுக்குடி உயர் மட்டதத்தினருக்கான நோக்கு நிலை:

சில முஸ்லிம் நாடுகளில் ஒளிபரப்பு ஊடகம் ஆரம்பத்தில் கல்வி மேம்பாட்டுக்கான ஒரு வாகனமாவே திட்டமிடப்பட்டது. ஆனால் அது இப்போது நகர்ப்புற உயர் வர்க்கத்தினருக்கான கேளிக்கையாக மாறிவிட்டது. லிபியாவிலும் ஈராக்கிலும் அற்ப மான சில காரணங்களை முன்வைத்து செலவு கூடிய ஊடகம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டமையை இதற்கு எடுத்துக்காட்டாக கூறலாம். (உதாரணம்: இங்குள்ள சர்வாதிகார ஆட்சியாளர்களின் சொந்த ஊரில் இடம்பெறும் அவர்களது பிறந்த தினக் கொண் டாட்டங்கள் போன்றவற்றைப் பார்வையிட செய்மதி செய்தி சேகரிப்பு வாகனம் ஒன்றைபிரத்தியேகமாக கொள்வனவு செய்தல்).

இவ்வாறான நிகழ்வுகள் அந்த நாடுகளின் பெரும்பான்மை யான கிராமப்புற மக்களின் தேவைகளை முற்றாக அலட்சியம் செய்கின்றன. இறக்குமதி செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாமே உயர் குடியினரின் வாழ்வியலோடு தொடர்புபட்டவை. அடிப் படையில் அவர்களது வாழ்வு மட்டத்தை பிரதிநிதித்துவம் செய் பவை. குறிப்பாக, வார இறுதி நாட்களின் பிரதான நேரங்களில் இவ்வாறான நிகழ்ச்சிகள்தான் ஒளிபரப்புச் செய்யப்படுகின்றன. உள்ளூரில் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகள் பெரும்பாலும் கிராமப் புற மக்கள் மத்தியிலேயே அதிகளவான தேவையைக் கொண் டவை. இவற்றுக்கு உரிய இடம் மிகவும் குறைவாகவே வழங் கப்படுகிறது. இதற்கு காரணம் நகர்ப்புற மேட்டுக்குடி மக்களிடம் கொள்வனவுச் சக்தி அதிகம் இருப்பதாகும். சமூகத்தின் ஏனைய பிரிவினரை விட இவர்களே அரசியல் செல்வாக்கு கொண்ட வர்களாகவும் காணப்படுகின்றனர்.

## இறக்குமதி செய்யப்பட்ட நிகழ்ச்சி நிரலாக்கம்:

அநேகமான முஸ்லிம் நாடுகளில் பாரிய அளவிலான மூலதனச் செலவு காரணமாக வழமையான தொலைக்காட்சி சேவை யொன்றை ஆரம்பித்து நடாத்தக் கூடிய நிலையில் அரசாங்கங்கள்

மட்டுமே உள்ளன. தேவையான மேலதிக காப்பு உபகரணங் களையும் சேவைகளையும் வழங்குவதற்கும் பெரிய அளவிலான நிதி அவசியம். அதற்கான மூலதன தட்டுப்பாட்டின் காரணமாக பல அரசுகள் தமது ஒளிபரப்பு நேரத்தை நிரப்புவதற்காக டப்பா வில் அடைக்கப்பட்டு வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் நிகழ்ச்சிகளிலேயே தங்கியுள்ளன. பயிற்றப்பட்ட தொழில்நுட்பவியலாளர்கள், பிரதி எழுதுபவர்கள், நடிகர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், தயாரிப்பாளர்கள், முறையான வளங்கள், தனிநபர் தொடர்புகள் என எல்லா பிரிவிலும் தட்டுப்பாடு உள்ள தால், தகுதியான உள்ளூர் தயாரிப்புக்களை மேற்கொள்ளவும் விநியோக முறைகளை விருத்தி செய்யவும் முயற்சி மேற்கொள் ளப்படுவதில்லை.

இங்கு பெரும்பாலும் பெரிய ஏற்றுமதியாளர்களிடம் இருந்து ஒருவழிப்பாதை வழியாக முஸ்லிம் உலகுக்கு அனுப்பப்படுகின்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள்தான் உள்ளன. அமெரிக்காதான் அவர்களுள் மிகப் பெரிய நிகழ்ச்சி ஏற்றுமதியாளர். பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளும் அந்த வரிசையில் இடம்பிடிக்கின் றன. அதேநேரம் அமெரிக்காவில் பார்க்கப்படும் நிகழ்ச்சிகளில் இரண்டு வீதத்துக்கும் குறைவான நிகழ்ச்சிகளே இறக்குமதி செய் யப்பட்டவையாக உள்ளன. பிரான்ஸில் இது ஒன்பது வீதமாக உள்ளது. ஆனால் குவைத், டுனீஷியா போன்ற நாடுகளை எடுத்துக் கொண்டால் அங்குள்ள மக்கள் பார்க்கும் நிகழ்ச்சிகளில் ஐம்பது வீதத்துக்கும் அதிகமானவை இறக்குமதி செய்யப்பட்டவை. சஊதி அரேபியாவில் இந்நிலை மிகவும் மோசமானது. அங்கு நூறு வீதமான நிகழ்ச்சிகளும் இறக்குமதி செய்யப்பட்டவையாகவே உள்ளன.

நிகழ்ச்சிகள் தொடர்பான பல ஒப்பந்தங்கள் முஸ்லிம் நாடு களை சர்வதேச நிகழ்ச்சி நிரலுடன் பிணைத்து விடுகின்றன. விநியோக உடன்படிக்கைகள் நீண்ட கால உடன்படிக்கைகளா கவே உள்ளன. ஒரு நாடு தனது தேசிய ஊடகக் கொள்கையை மாற்ற விரும்பினால், கடுமையான தண்டப் பணங்களைச் செலுத் தாமல் அதைச் செய்ய முடியாது என்ற நிலை உள்ளது.

## ஒரு மாற்று யதார்த்தம்

முஸ்லிம் உலக சனத்தொகையில் கணிசமான தொகையினர் கிராமப்புற மக்களாகவும் படிப்பறிவு இல்லாதவர்களாகவும் உள்ளதால், பாரம்பரிய செய்தி ஊடகமான அச்சு ஊடகங்களுக்கு அந்த மக்கள் மத்தியில் போதிய இடம் இல்லை. ஒலி-ஒளிபரப்பு ஊடகங்கள்தான் அங்கு பிரதான இடத்தை பிடித்துள்ளன. தங்க ளைப் பற்றிய தகவல்களையும், வெளி உலகம் பற்றிய தகவல் களையும் பெற்றுக் கொள்ள அந்த மக்கள் மத்தியில் மிகவும் பிரபலமான இடத்தை பிடித்திருப்பவை இவைதான். இந்த ஒலி-ஒளிபரப்புக்களின் பெரும்பாலான நேரத்தை பொழுது போக்கு அம்சங்களே எடுத்துக் கொள்கின்றன. அதனால் உண்மையான உலகம் பற்றிய திரிபுபடுத்தப்பட்ட தகவல்களே முஸ்லிம் பார்வை யாளர்களைச் சென்றடைகின்றன. அவையே யதார்த்தம் என அவர் களில் பலர் ஏற்றுக் கொள்ளும் நிலையும் காணப்படுகின்றது.

இவற்றுள் தொலைக்காட்சி மூலமாகக் காட்டப்படுகின்ற வன் முறை மிக்க காட்சிகள் தாங்கள் வாழும் உலகம் வன்முறையும் ஆபத்தும் மிக்க ஒன்று என்ற மாயத் தோற்றத்தை இந்த மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. உண்மையான உலகம் அவர்களிடம் இருந்து மறைக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு காட்டப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் ஆண் கதாபாத்திரங்களின் ஆதிக்கமே அதிகம். மூன்றுக்கு ஒன்று என்ற ரீதியிலேயே பெண் கதாபாத்திரங்களின் பங்களிப்பு அமைந்துள்ளது. முதியவர்களின் பிரதிநிதித்துவம் பெரும்பாலும் இவற்றில் இல்லை. சிறுபான் மையினர் தொடர்பான விடயங்கள் வெறும் கண்துடைப்பாகவே உள்ளன. இவற்றுக்கு அப்பால் இறக்குமதி செய்யப்பட்ட நிகழ்ச்சி களில் முஸ்லிம் சமூகம் மற்றும் கலாசாரம் பற்றிய விடயங்கள் பேசப்படும் போது மூன்று மையக் கருத்துக்களின் ஆதிக்கத்தை அவதானிக்க முடிகின்றது என ஹமீத் மௌலானா குறிப்பிடு கின்றார். சமூக ஒழுங்கீனம், குற்றம் குறைகள் நிறைந்த அபி விருத்தி, பழமைவாதம் என்பனவே அந்த விடயங்கள்.

இவை முஸ்லிம் உலகில் பாரிய ஒழுங்கீனங்களும் அர்த்தமற்ற வன்முறைகளும் அதிகரிப்பதற்கான காரணங்களாகக் கற்பிக்கப் படுகின்றன. மேற்குலகம் என்பது பகுத்தறிவுக்கு குரல் கொடுக் கும் இடம்... மந்திர தந்திரத்தை விட அங்கு விஞ்ஞானத்துக்கே இடமுண்டு... இயற்கையை விட மனிதன் மேலானவன்... என் றெல்லாம் மேற்குலகம் பற்றிய மாயைகள் இந்த நிகழ்ச்சிகள் மூலம் ஏற்படுத்தப்படுகின்றன.

## வேற்றுக் கலாசார பெறுமானங்கள்:

முஸ்லிம் இரசிகர்களுக்கிடையிலான முரண்பாட்டுக்கான இன் னொரு மூல காரணம் இந்த வேற்றுக் கலாசார பெறுமானங்க ளாகும். இறக்குமதி செய்யப்பட்ட நிகழ்ச்சிகளுக்குள் மிக நுணுக்கமாகவும் கவர்ச்சியாகவும் இவை திணிக்கப்படுகின்றன.

இஸ்லாத்தின் பிரதானமான பெறுமானங்கள் அல்லது விழு மியங்கள் பழமையானவை என்றும் அதிகம் பாரம்பரியம் சார்ந் தவை என்றும் அவற்றில் காட்டப்படுகின்றன. அதேவேளை, மேலைத்தேச பெறுமானங்கள் அல்லது விழுமியங்கள் தாராளத் தன்மை கொண்டவையும் முன்னேற்றமானவையும் என்ற நிலைப் பாடு முன்வைக்கப்படுகின்றது.

மலேஷியாவின் தொலைக்காட்சித் துறை பற்றி 1991 இல் நடாத்தப்பட்ட ஒரு ஆய்வில் அமெரிக்காவில் இருந்து தருவிக்கப் பட்ட நிகழ்ச்சிகள் உள்ளூர் நம்பிக்கைகளுக்கு முற்றிலும் முர ணான செய்திகளையும் விழுமியங்களையும் தொடர்ந்து வழங்கி வருவதாகத் தெரிய வந்துள்ளது. பின்வரும் சில உதாரணங்கள் இந்த ஆய்வில் தரப்பட்டுள்ளன:

'றேக்ஸ் டு றிச்சஸ்' (Rags to Riches) என்ற நிகழ்ச்சியில் பிள்ளை கள் தமது தந்தையை பெயர் கூறி அழைக்கின்றனர். மேலும் அவர்கள் தமது பெற்றோருடன் அடிக்கடி வாக்குவாதத்தில் ஈடுபடு கின்றனர். வளர்ந்தவர்கள் தமது பிள்ளைகள் முன்னிலையில் முத்த மிடுவதோடு பாலியலைத் தூண்டும் ஏனைய செய்கைகளிலும்

ஈடுபடுகின்றனர். பெண் பிள்ளைகள் பாலியல் உணர்வைத் தூண்டும் வகையில் இறுக்கமான ஆடைகளை அணிந்து அதிகளவான ஒப்பனைகளோடு காட்சி தருகின்றனர். பெற்றோர் இதற்கு எந்த எதிர்ப்பும் தெரிவிப்பதில்லை. பெற்றோர் இரவு வேளைகளில் திருட்டுத்தனமாக வீடுகளில் இருந்து வெளியேறி வேண்டத்தகாத உறவுகளில் ஈடுபடுகின்றனர்.

'புறொன்க்ஸ் ஸூ' (Bronx Zoo) என்ற தொடரில் ஆசிரியர்கள் தமக்கிடையில் பாலியல் உறவுகளில் ஈடுபடுகின்றனர். கருத்தடை சாதனங்களை இலவசமாகப் பெற்றுக் கொள்ள சண்டை இடுகின்றனர். ஓரினச் சேர்க்கை உறவுகளுக்கு அனுமதி அளிக்கப்படுகின்றது. சமய விழுமியங்களும் அன்றாட வாழ்வும் ஒன்றோடு ஒன்று கலக்கக் கூடாது என்ற கருத்து வலியுறுத்தப்படுகின்றது. பருவ வயது பள்ளி மாணவர்கள் ஒருவரை ஒருவர் முத்தம் இடுகின்றனர். பாலியல் தொடர்பான விடயங்களை மாணவர்கள் தமக்கிடையில் பகிரங்கமாகப் பேசிக் கொள்கின்றனர்.

'21 ஜம்ப் ஸ்ட்ரீட்' (21 Jump Street) என்ற நிகழ்ச்சியில் மக்கள் தொடர்ச்சியாக சுவிங்கம் பாவிக்கின்றனர். பருவ வயது பிள்ளைகள் மத்தியில் போதைப் பழக்கம் பரவலாகக் காணப்படுகின்றது. பாலியல் தொடர்பான காட்சிகள் பரவலாக உள்ளதோடு இளவயதினர் பாலியல் திரைப்படங்களை தயாரிப்பது, அவற்றில் நடிப்பது போன்ற காட்சிகளும் உள்ளன. குண்டர்களது கும்பலுக்கு மத்தியில் ஒரு தலைமையின் கீழ் நெருக்கமான சகோதரத்துவம் நிலவுகின்றது. வன்முறைகள், மனமுரண்டான கீழ்படியாமை, பொலிஸார் இவற்றை எல்லாம் கண்டுகொள்ளாமை, குண்டர்கள் பொலிஸாரை மதிக்காமை போன்ற காட்சிகளும் தாராளமாக உள்ளன.

'பெமிலி டைஸ்' (Family Ties) என்ற தொடரில் நண்பர்களோடு டேடிங் வைத்துக் கொள்ள பெற்றோர்களே பிள்ளைகளைத் தூண்டுகின்றனர். பிள்ளைகளுக்கும் அவர்களது காதலர்களுக்கும் இடையில் தீங்கற்ற விதத்தில் சில விடயங்களைப் பரிமாறிக்

கொள்ளவும் அனுமதிக்கின்றனர். 'டிஃபரன்ட் ஸ்ட்ரோக்ஸ்' (Different Strokes) என்ற தொடரில் பிள்ளைகள் தமது பெற்றோர் களுக்கு டேடிங் ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கின்றனர். 'டலாஸ்' (Dallas) என்ற தொடர் எல்லா நிலைகளிலும் மிதமிஞ் சிய மதுப் பாவனையை ஊக்குவிக்கின்றது.

'L.A. லோ' (L.A. Law) என்ற தொடர் சட்டத்தரணிகள் தமது கட்சிக்காரர்களுடனும் திருமணமான நீதிபதிகளுடனும் பாலியல் உறவு வைத்துக் கொள்வது போல் காட்டப்படுகின்றது. வளர்ப்புத் தாயுடன் கூட பாலியல் உறவு வைத்திருப்பது போல் காட்சிகள் அமைந்துள்ளன. இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் அநேக மான நிகழ்ச்சிகளில் உள்ளூர் பாரம்பரியம், மரபுகள் மற்றும் நம்பிக்கைகளுக்கு பாதகமான பல விடயங்கள் அமைந்துள்ளன.

சிலவேளைகளில் உள்ளூரில் தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகள் கூட பெரும்பாலும் இந்த மேலைத்தேச எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளன. ஹொலிவூட் பாணியில் வெற்றிகளைக் குவிக்க வேண்டும் என்ற நோக்கில் உள்ளூர் தயாரிப்பாளர்களும் இயக்குனர்களும் இவ்வாறான காரி யங்களில் ஈடுபடுகின்றனர். இத்தகைய தயாரிப்புக்கள் உள்ளூர் நிலைமைகளுக்கு எந்தளவு பொருத்தமாக இருக்கும் என்பதில் அவர்கள் கவனம் செலுத்த தவறிவிட்டனர். எகிப்திய நிகழ்ச்சித் தயாரிப்புக்களிலும் இவ்வாறான உலகக் கண்ணோட்டமே பிரதிபலிக்கின்றது.

சில எகிப்திய திரைப்படங்களிலும் தொலைக்காட்சித் தொடர் களிலும் திருமணம் மற்றும் குடும்பக் கட்டமைப்பு போன்ற விடயங்களின் புனிதத் தன்மை கேள்விக்கு உள்ளாக்கப்படுகின் றது. ஒரு பெண் தாயாக இருப்பதும், வீட்டு வேலைகளைச் செய்வதும் இங்கே கேலி செய்யப்படுகின்றது. குடும்ப விஸ் தரிப்பின் முக்கியத்துவம் ஓரம் கட்டப்படுகின்றது. பெண் என்ப வள் வெற்றிகொள்ளப்பட வேண்டிய ஒரு காமப் பொருளாகவே சித்தரிக்கப்படுகிறாள். அவள் பலவீனமானவளாகவும் ஆண்

ஆதிக்கம் மிக்க சமூகத்துக்குள் ஒரு புற நிலை வஸ்துவாகவுமே காட்டப்படுகிறாள். தனிநபர்களின் சுய பெறுமதியும் விழுமிய மும் அவர்களின் பாலியல் விருப்பத்தின் அடிப்படையிலேயே அளவிடப்படுகின்றது. இறைவன், ஆன்மீகம், சமயம், விசுவாசம் என எல்லாமே காலம் கடந்த, பழித்துப் பேசப்படும் விடயங் களாகவும், ஊழல் மிக்கவையாகவும், முன்னேற்றத்துக்கு விரோத மானவையாகவும் சித்தரிக்கப்படுகின்றன. அல்லது இவை வெறு மனே சம்பிரதாயபூர்வமான விடயங்களுக்குள் அடக்கப்பட்ட வையாக காட்டப்படுகின்றன. மனிதனுடைய தோற்றம், நோக்கம், விதி என்பன உலகளாவிய விடயங்களாகவும், இயல்பான சந்தர்ப் பங்களோடு சம்பந்தப்பட்டவையாகவும் உள்ளன. மகிழ்ச்சிக்கு செல்வமும் அதிகாரமும் அத்தியாவசியம் என்ற நிலைப்பாடு காட்டப்படுகின்றது. எந்த நிபந்தனையும் இன்றி அவற்றை அடைய வேண்டும் என்று போதிக்கப்படுகின்றது. மற்றவர்களுக்கு எதிரான தந்திரங்கள், ஆக்கிரமிப்புக்கள், மற்றவர்களைத் தமக்கு வேண்டிய படி கையாளும் ஆற்றல் என்பன வெகுமதிக்குரிய சாகசங்களாகக் காட்டப்படுகின்றன. அதேநேரம் கருணையும் சுயநலன் அற்ற நிலையும் பலவீனமானவையென சித்தரிக்கப்பட்டுள்ளன. பல நிகழ்ச்சிகளில் மேலைத்தேச கருப்பொருளான தனிநபர் முக்கி யத்துவம் மிகப் பிரதான விடயமாக ஆக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் உணர்வுகளில் மேலானதாக மதிக்கப்படும் பன்மைத்துவப் பார்வைக்கு இது முற்றிலும் முரணானது.

சில நிகழ்ச்சிகளில் இனத்துவம் மற்றும் வகுப்புவாதம் தொடர்பான தனித்துவமான விளக்கவுரைகளும் புகுத்தப்படுகின் றன. இந்த விளக்கவுரைகள் ஊடகத்தில் வழக்கத்தில் இல்லாத சமத்துவமற்ற 'உயர்சாதி', 'கீழ்சாதி' ஆகிய சொற்றொடர்களையும் முன்வைக்கின்றன. இது மக்கள் மத்தியில் வகுப்புவாதத்துக்கும் வர்க்க முரண்பாட்டுக்கும் வழிவகுக்கின்றன. இதனால் தனிநபர் கள் தம்மை ஏதோ ஒரு குறிப்பிட்ட குழுவின் கீழ் அல்லது வர்க்கத்தின் கீழ் அடையாளம் காட்டிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இந்த அந்நிய சிந்தனைக்கு மக்கள் தொடர்ச்சியாக உட்படுத் தப்பட்டதால் முஸ்லிம் சமூகத்தில் முரண்பாடான பெறுமானங் கள் பாரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன. குறிப்பாக இளைய தலைமுறையினர் மத்தியில் இதை அவதானிக்க முடி கின்றது. முஸ்லிம் சமூகத்தை ஒன்றாகப் பிணைத்து வைத்திருக் கும் பாரம்பரிய சமயகலாசார தனித்துவமும் அடையாளமும் இன்று அரித்துச் செல்லப்பட்டு, விகாரமான அந்நிய விழுமியங் கள் அங்கு இடம் பிடிக்கும் நிலை உருவாகியுள்ளது. முஸ்லிம் கள் அந்த விழுமியங்களை தழுவிக் கொள்வதனூடாக மேலைத் தேச நாகரிகத்தின் மேலோட்டமான பண்புகளை அடைந்து கொள்ள முயற்சிக்கின்றனர். வரலாற்று, அரசியல், பொருளாதார, கலாசார வித்தியாசங்களைப் பற்றி இங்கு அவர்கள் அலட்டிக் கொள்ளவில்லை. இந்த நிலை குடும்பம், சமூகம் போன்ற பெறு மதி மிக்க நிறுவனங்களைத் தகர்த்து வருவதாக நிஸார் சுபேரி குறிப்பிடுகின்றார். இதனால் தனித்துவமும் அடையாளமும் இழக்கப்படுவதாகவும், சுய மதிப்பு அழிந்து போவதாகவும் அவர் கூறுகின்றார்.

இந்த நிகழ்ச்சிகளின் உள்ளடக்கம் உள்ளூர் விழுமியங்களை அல்லது பெறுமானங்களைத் தாக்குவதோடு நின்று விடாது, நுகர்வு மனப்பாங்கொன்றை ஏற்படுத்துவதிலும் பங்களிப்புச் செய்கிறது. இந்த நிகழ்ச்சிகளில் காட்டப்படும் கதாபாத்திரங்களில் தோன்றுபவர்கள் தமது சொந்த நாடுகளில் நட்சத்திர அந்தஸ் தோடு வாழ்பவர்கள். இவர்கள் மேலும் கவர்ச்சியாகவும் ஆடம்பரவாழ்வு முறையோடும் நிகழ்ச்சிகளில் காட்டப்படுவதால் அதைப் பார்க்கும் மக்கள் மத்தியிலும் அதேபோன்ற ஆடம்பர வாழ்க்கை முறை மீதும் வெளிநாட்டு உற்பத்திப் பொருள்கள் மீதுமான மோகம் அதிகரிக்கின்றது. மேலைத்தேச உடை, வாகனம், அலங்காரப் பொருள்கள், வீட்டுப் பாவனை உபகரணங்கள், சிகரட்டுகள், மதுபானம் (இஸ்லாத்தில் முற்றாகத் தடுக்கப்பட்டது) என்பனவற்றின் மீதான மோகமும் அதிகரிக்கின்றது. அது மட்டு மன்றி தொலைக்காட்சிகளில் தாங்கள் காணும் கதாபாத்திரங்கள்

போன்று கவர்ச்சியாக உடையணிந்து கவர்ச்சியாக தோற்றமளிக்க வேண்டும் என்ற எண்ணமும் வெகுமக்கள் மத்தியில் ஏற்படு கின்றது. இதனால் அவர்களது சிந்தனையில் உண்மையிலேயே அவசியமற்ற பல தேவைகள் ஏற்படுத்தப்படுகின்றன. பெரும் பாலும் படிப்பறிவில்லாத இந்த அப்பாவி மக்களின் சிந்தனை களில் பெரும்குழப்ப நிலை இதனால் உருவாகின்றது. தனிநபர் கள் தமது வருமானத்தின் பெரும்பகுதியை தேவையற்ற விட யங்களில் செலவிட்டு இழக்கும் நிலையும் ஏற்படுகின்றது. தமது உண்மையான சமூக பொருளாதார அந்தஸ்தை விருத்தி செய்வ தற்குப் பதிலாக அவர்கள் இத்தகைய மாயைகளால் அலைக் கழிக்கப் படுகின்றனர். அவர்களில்ஒரு பெரும் பகுதியினர் கவர்ச்சி கரமான வாழ்வு முறையை அடையும் முயற்சியில் விரக்தி நிலைக்கே இறுதியில் தள்ளப்படுகின்றனர். ஏமாற்றமும் கோப உணர்வும்தான் அவர்களுக்கு உண்டாகின்றது.

## தயாரிப்பு மரபுகள்:

வெளிநாட்டு நிகழ்ச்சிகளில் அல்லது வெளிநாட்டு நிகழ்ச்சி களை மாதிரியாகக் கொண்ட உள்நாட்டுத் தயாரிப்புகளில் பயன் படுத்தப்படும் காட்சிக் குறியீடுகள், படங்கள், விவரண முறை, உருவகங்கள், ஏனைய தயாரிப்பு மரபுகள் என்பனவும் முரண்பாடு தோன்ற காரணமாக அமைகின்றன. மேலைத்தேச நிகழ்ச்சிகளின் எண்ணக்கருக்கள் அங்குள்ள பார்வையாளர்களுக்கு உகந்தவை யாகவும் அவர்களால் புரிந்து கொள்ளக் கூடியவையாகவும் இருக் கலாம். ஆனால் பன்முக கலாசாரத் தன்மையதான முஸ்லிம் உலகுக்கு அவை எப்போதும் உகந்தவையாக இருப்பதில்லை. பார்வையாளர்கள் மத்தியில் அவை ஒரு வகை ஏமாற்றத்தை அல்லது விரக்தியை ஏற்படுத்தி விடுகின்றன. ஏனெனில், தாம் என்ன பார்க்கிறோம் என்பதையோ ஏன் பார்க்கிறோம் என்ப தையோ அவர்களால் புரிந்துகொள்ள முடிவதில்லை. காலப் போக்கில் சுதேச தொடர்பாடல் மற்றும் கருத்து வெளிப்பாட்டு மரபுகள் தேய்வடைந்து அந்நிய தர அளவீடுகள் இடம்பிடித்து விடும் அபாயமும் தோன்றுகிறது.

மேலைத்தேச தயாரிப்புக்களில் கட்டுப்பாட்டு உணர்வை வெளிப்படுத்துவதற்கு பொதுவாக பயன்படுத்தப்படும் நுட்பங்களுள் ஒன்று கட்டிடங்களின் கூரைகளும் சுவர்களும் தூண்களும் காண்பிக்கப் படுவதாகும். இது பார்வையாளர்களிடம் குழப்ப நிலையை ஏற்படுத்துகிறது. எல்லா செயற்பாடுகளும் அங்கு பௌதிக, உலோகாயத கட்டமைப்புடன் பிணைக்கப்பட்டுள்ளமையை இது விளக்குகின்றது. ஆனால் இஸ்லாமிய உணர்வு நிலையானது, சுயாதீன அசைவியக்கம் கொண்டது. கட்டற்ற உணர்வு நிலை என்பது அங்கு திடமான காட்சிப் பொருட்களின் பிரசன்னம் இன்றியே முன்வைக்கப்பட முடியும். பிரயோக நோக்கமற்ற அலங்காரப் பொருட்களுக்கோ படங்களுக்கோ அங்கு அவசியமிருக்காது. சடப்பொருளை மிகைத்த ஆன்மீகத்தை வற்புறுத்தும் மனநிலையே உருவாக்கப்படும். அனைத்துமறிந்த ஒரு படைப்பாளனுடன் தடையின்றி தொடர்பாடுவதற்கான சுதந்திரத்தையும் இயலுமையையும் அங்கு ஒருவர் பெற்றிருப்பார்.

இஸ்லாம் அல்லாத ஊடகத்தின் பிரதான நோக்குநிலை வழமையாக செங்குத்தாகத்தான் இருக்கும். ஆனால் இஸ்லாத்தில் அது கிடை நிலையாக அல்லது 'புவி தழுவியதாக' இருக்கும். 'செட்'கள், மேடைகள், சட்டகங்கள், பிற காட்சிக் கூறுகள் அனைத்தும் இந்த கிடைநிலை நோக்கிலேயே அமைந்திருக்கும். செங்குத்து நிலையானது விண்ணகத்தை நோக்கிச் சென்று தெய்வீக உலகுக்கு சவால் விடுவதான உணர்வை ஏற்படுத்தக் கூடியது என்பதால் அதற்கு முக்கியத்துவம் அளிக்கப் படுவதில்லை.

மேலைத்தேச தயாரிப்புக்களில் அசைவுகளும் பரிமாணங்களும் இடமிருந்து வலமான திசையில் அமைந்திருக்கும். (உதாரணமாக, கதாநாயகன் எப்போதும் திரையின் இடப்புறம் இருந்தே காட்சிக்குள் நுழைவார்.) ஆனால் பெரும்பாலான இஸ்லாமிய கலாசாரங்களில் அவை வழக்கமாக வலமிருந்து இடம் நோக்கி அமைந்திருக்கும். (அல்-குர்ஆனின் மொழியாகிய) அரபு மொழி வலமிருந்து இடமாக வாசிக்கப்படுவதே இதற்கான அடிப்படைக் காரணமாகும்.

இஸ்லாமியப் பார்வையில் நகர்வுகள் அல்லது செயற்பாடுகள் தெளிவான நோக்கம் கொண்டவை. ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஒரு தெய்வீக திட்டத்தின் அடிப்படையில் அனைத்தும் அவற்றின் இறுதி இலக்கை அல்லது விதியை நோக்கி நகருகின்றன என்பது இஸ்லாமியக் கோட்பாடாகும். ஏடாகூடமான அல்லது குறிக் கோள் அற்ற நகர்வுகள் பிரபஞ்ச ஒருமைப்பாட்டில் ஏற்படும் குறைபாட்டையே காண்பிக்கும்.

இஸ்லாம் தனது நோக்கு நிலையில் பன்மைவாத இயல்பு கொண்டதே அன்றி தனிநபர் சார்ந்ததன்று. ஒட்டு மொத்த குழு முயற்சியின் ஊடாகத்தான் வெற்றி ஈட்டப்படும் என்ற நோக்கை அது முற்படுத்துகிறது. தனிநபர் 'ஹீரோ'க்களுக்கு அல்லது நட்சத் திரங்களுக்கு அங்கு அவ்வளவு முக்கியத்துவம் இல்லை. அந்த வகையில், பொருட்களும் கதாபாத்திரங்களும் நீண்ட காட்சிகளி லும் (Long Shot), நடுத்தரக் காட்சிகளிலும் (Medium Shot) காட்டப்பட வேண்டும். ஒவ்வொரு கூறும் அதற்குரிய தெளிவான பாத்திரத்தை வகிக்க வழிவிட வேண்டும். அப்போதுதான் பார் வையாளர்கள் ஆழ்ந்த ஈடுபாட்டையும் முழுமைத்துவ உணர் வையும் அடைவர். மிக அருகிலானகாட்சியமைப்புகளுக்கு (close-ups) இங்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை. ஏனெனில் அவை தனிநபர்களிலும் அவர்களது தனிப்பட்ட குண வியல்புகளிலுமே கவனம் செலுத்தும்.

காட்சிகளைத் தெரிவு செய்யும் போதோ அல்லது அவற்றை சீராக்கம் செய்யும் போதோ அல்லது காட்சிகளுக்கான இயக்கத் தின் போதோ இயக்குனர் பார்வையாளரை மிகக் குறைந்த அளவே வழிநடாத்துவார். காட்சிகளை காண்பதற்கான சாளரம் ஒன்றை திறந்து விடும் பணிக்காகவே இயக்குனர் அங்கே இருப்பார். நிகழ்வுகளின் போக்கில் அவற்றுக்கு வியாக்கியானம் வழங்குவது பார்வையாளர்களுக்கு உரியதாகும்.

## *நிகழ்ச்சி நிரலில் நுட்பங்கள்:*

மேலைத்தேச நிகழ்ச்சி நிரல் நுட்பங்கள் அப்படியே பிரதி செய்யப்பட்டு உள்ளூர் தயாரிப்புக்களில் அமுல் செய்யப்படு கின்றன. ஒரு நிகழ்ச்சியை தொடர்ந்து தக்க வைக்கவும், இரசிகர் களை அதில் கட்டுண்டு கிடக்கச் செய்யவும் இது மேற்கொள்ளப் படுகிறது. விளம்பர அனுசரணைகளைப் பெற்ற சில நிகழ்ச்சி களும் தொலைக்காட்சித் தொடர்களும் பல வாரங்களாகவும் மாதங்களாகவும் முடிவின்றி நீள்கின்றன. உள்ளூர் தொலைக் காட்சி மற்றும் திரைப்பட நடிகர்கள் அளவுக்கு அதிகமான கவர்ச்சியுடன் பிரபல்யப்படுத்தப்படுகின்றனர். பார்வையாளர்கள் மத்தியில் அவர்களுக்கும் அவர்கள் தோன்றும் நிகழ்ச்சிகளுக்கும் ஒருவகை மோகமும் ஈர்ப்பும் ஏற்படும் அளவுக்கு இது மேற் கொள்ளப்படுகிறது. பொறுப்புகளிலிருந்து தப்பிச் செல்லும் மனப் பாங்குக்கு வடிகாலாக தொலைக்காட்சியைப் பயன்படுத்த இந்த நுட்பங்கள் பெரிதும் பங்களிக்கின்றன. இதனால் தனிநபர்கள் தமது சமூகங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து அவற்றைக் கையாள முயலாமல் வேறொரு உலகை நோக்கி திசை திருப்பப்படுகின்றனர்.

முஸ்லிம் நாடுகளின் தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரலை எடுத் துப் பார்க்கின்ற போது அவை பெரும்பாலும் இறக்குமதி செய் யப்பட்ட பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் தங்கியிருப்பதை அவ தானிக்க முடிகின்றது. தொலைக்காட்சிகளின் முறையற்ற நிர லிடல் பார்வையாளர்கள் மீது எவ்வாறான தாக்கங்களை ஏற் படுத்தும் என்பதை எவரும் எண்ணிப்பார்ப்பதில்லை. நிகழ்ச்சி களின் இடையே சில ஆன்மீக விடயங்களும் திணிக்கப்படு கின்றன. கேலிச் சித்திர நிகழ்ச்சிகளின் நடுவே தொழுகைக்கான அழைப்பு ஒளிபரப்பப்படுவதை இங்கு எடுத்துக் காட்டாக கூற லாம். ஒரு தொடர்ச்சியற்ற நிலையை இது ஏற்படுத்துகின்றது. இத்தொடர்பறுந்த நிலையானது நிகழ்ச்சி நிரலிடலில் மட்டு மன்றி பார்வையாளர்களின் அன்றாட வாழ்விலும் ஒரு பகுதியாக மாறி விடுகிறது. நிகழ்ச்சியை பார்வையிடும் சிறுவர்களைப்

பொறுத்தவரை ‘தொழுகை அழைப்பு’ என்பது குறித்த பொழுது போக்கு நிகழ்ச்சியின் அடுத்த பகுதி தொடங்கப்படும் வரைக்குமான கவனச் சிதறலாகவே அமைகிறது. அழைப்பு முடிந்த பிறகு மீண்டும் பழைய நிலைக்கு அவர்கள் திரும்புகின்றனர்.

## செய்தி ஓட்டமும் பிரதான நான்கு நிறுவனங்களும் (The Big Four):

வரலாற்று ரீதியாகப் பார்க்கின்ற போது சர்வதேச ரீதியில் நான்கு பிரதான செய்தி முகவராண்மை நிறுவனங்களே மேலைத்தேச நாடுகளில் செய்தித் துறையில் முக்கிய இடம் பிடித்துள்ளன. இவற்றை The Big Four என்று அழைக்கின்றனர். அவையாவன: அஸோஸியேட்டட் பிரஸ் (Associated Press - AP) அமெரிக்காவின் நியுயோர்க் நகரில் தலைமையகத்தைக் கொண்டது. யுனைடட் பிரஸ் இன்டர்நேஷனல் (United Press Internatonal-UPI) அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் தலைமையகத்தைக் கொண்டது. ராய்ட்டர்ஸ் (Reuters) பிரிட்டனில் தலைமையகத்தைக் கொண்டது. ஏஜன்ஸி பிரான்ஸ் பிரஸ் (Agency France Presse - AFP) பாரிஸ் நகரில் தலைமையகத்தைக் கொண்டது. இந்த நிறுவனங்களே சர்வதேச ரீதியாக தகவல்களைச் சேகரித்து உலகம் முழுவதும் உள்ள அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கு வழங்கும் சேவையில் ஈடுபட்டுள்ளன. எல்லா விதமான செய்திகளும் செய்திக் கட்டுரைகளும் இவற்றில் அடங்கும்.

1980களின் நடுப்பகுதி முதல் இந்த Big Four மூலம் உலகம் முழுவதும் ஒருநாளைக்கு சுமார் 33 மில்லியன் சொற்கள் செய்திகளாக வழங்கப்பட்டு வந்துள்ளன. இவற்றுக்கு அடுத்தபடியாக இடம்பிடித்துள்ள ஐந்து பெரிய நிறுவனங்கள் சேர்ந்து வழங்கிய சொற்களின் எண்ணிக்கை சுமார் பத்து லட்சமாகவே காணப்பட்டது. முஸ்லிம் உலகில் 90 வீதமான வெளிநாட்டுச் செய்திகள் Big Four மூலமாகத்தான் வருகின்றன. முஸ்லிம் நாடுகளின் தொலைக்காட்சிகளுக்கு இவைதான் செய்திகளையும் அவற்றோடு தொடர்புடைய காட்சிகளையும் வழங்கி வருகின்றன.

அண்மைக் காலத்தில் இந்த நிறுவனங்களுடன் போட்டியிடும் பாரிய நிறுவனமாக கேபிள் நியுஸ் நெட்வேர்க் Cable News Net work (CNN) மாறியுள்ளது. இதன் செய்மதிச் சேவை வழியாக உலகம் முழுவதும் இருந்து மிகப் பிந்திய தகவல்களைக் கூட பெற்றுக் கொள்ள முடிகின்றது.

இந்த Big Four வின் ஆதிக்க ரீதியான பங்களிப்பும் ஏனைய செய்தி நிறுவனங்களின் பங்களிப்பும் அபிவிருத்தி அடைந்த நாடு களில் இருந்து முஸ்லிம் நாடுகளை நோக்கி அனுப்பப்பட்ட வண்ணம் உள்ளன. இது மேலே வடக்கில் இருந்து கீழே தெற்கு நோக்கிய நகர்வாக உள்ளது. அதே நேரம், கீழே தெற்கில் இருந்து மேலே வடக்கை நோக்கிச் செல்லுகின்ற செய்திகளின் அளவைப் பார்த்தால் அது மிகவும் குறைவாகவே உள்ளது. தெற்கில் இருந்து வடக்கைச் சேர்ந்த நிருபர்களால் சேகரிக்கப்படும் செய்திகள் அங்கு அனுப்பப்பட்டு சீராக்கம் செய்யப்பட்ட பின்னரே தெற் கில் ஒளிபரப்புக்காக அனுப்பப்படுகின்றன. சர்வதேச வானொலி நிலையங்கள் கூட இதே பாணியைத்தான் பின்பற்றுகின்றன.

முஸ்லிம் உலகில் உள்ள எல்லா தேசிய செய்தி முகவராண் மைகளும் கிட்டத்தட்ட அந்தந்த அரசுகளின் கட்டுப்பாட்டின் கீழேயே உள்ளன. அவற்றுள் பல இந்த Big Fourவில் ஏதோ ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றுக்கு சந்தா செலுத்தி செய்திகளைப் பெற்று வருகின்றன. பின்னர் அவை அச்செய்தி களை தேவையான அளவு தமது நிலையங்களில் சீராக்கம் செய்து, தமது சொந்த செய்திகளைப் போல் பயன்படுத்துகின்றன. அவை அப்படியே இன்னும் நூற்றுக்கணக்கான உள்ளூர் சேவைகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. இந்த உள்ளூர் செய்தி நிறுவனங்கள் வெளிநாட்டுச் செய்திகளுக்காக மட்டுமன்றி, தமது பிராந்தியத் தைச் சேர்ந்த வேறு பல விடயங்களை பெற்றுக் கொள்ளவும் இந்த Big Fourவில் தங்கியிருக்கும் நிலை காணப்படுகின்றது.

முஸ்லிம் உலகில் தேசிய செய்தி முகவராண்மைகளின் செய்தி சேகரிப்பையும் விநியோக ஆற்றலையும் தீர்மானிக்கும்

முக்கிய காரணியாக பொருளாதாரம் அமைந்துள்ளது. செய்தி களின் தரம், அளவு, கிடைக்கப் பெறும் நிலை, விநியோகம், விநியோக வழிமுறைகள் என எல்லாவற்றிலும் தாக்கம் செலுத் தும் ஒன்றாக பொருளாதார நிலை காணப்படுகின்றது. வெளி நாட்டு செய்தி நிருபர்களை சேவைக்கு அமர்த்துதல், செய்தி சேகரிப்புக்கும் பரிமாற்றத்துக்குமான உயர் தொழிநுட்ப உட்கட்ட மைப்பு ஆற்றல்களை ஸ்தாபித்தல், கடல் கடந்த நாடுகளில் விநியோகிக்கக் கூடிய தரத்திலான செய்தி வடிவ உற்பத்திகளை தயாரித்தல், செய்தித் தரம், செய்தியாளர் நட்டஈடுகள், தொலைத் தொடர்பு வரிகள், ஏனைய நிறுவனங்கள் செய்தித் தயாரிப்புக் களை வாங்கும்படி செய்தல் என எல்லா விடயங்களிலும் தாக்கம் செலுத்தும் பிரதான காரணியாக பொருளாதாரமே உள்ளது.

செய்தியின் உள்ளடக்கம் மற்றும் அதன் சீரான ஓட்டம் என்பன வற்றில் தாக்கம் செலுத்தும் அடுத்த காரணியாக அரசியல் அமைந் துள்ளது. இதனால் உள்ளூர் மற்றும் தேசிய நிகழ்வுகள் பலவும், அவற்றோடு தொடர்புடைய செய்தி அறிக்கைகளும் அரசியல் மயப்படுத்தப்பட்டனவாகவும் பக்கச் சார்பானவையாகவும் மாறி யுள்ளன.

சமூக கலாசார வித்தியாசங்களும் செய்தி ஓட்டத்தில் வரை யறைகளை ஏற்படுத்துகின்றன. கல்வித் தரம், சனத்தொகை அளவு, வர்த்தகம் என்பனவும் செய்தி ஓட்டத்திலும் தரத்திலும் தாக்கம் விளைவிக்கும் காரணிகளாக உள்ளன.

ஆய்வுகளின் படி, பல சர்வதேச செய்திகள் மேலைத்தேச மயப் படுத்தப் பட்டவையாக உள்ளன. Big Four நிறுவனங்கள் உள்ளூ ரில் தமது மக்களுக்கு சுவாரஸ்யம் மிக்கவை அல்லது அவசிய மானவை எனக் கருதும் செய்திகளையே சேகரிக்கின்றன. இது அந்த மக்களின் செல்வம், மேட்டுக்குடி இயல்பு, அரசியல் ஆற் றல் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஏற்படும் மோதல்களின் மீதே இச் செய்திச் சேவை நிறுவனங்கள் கூடிய கவனம் செலுத்துகின்றன.

முஸ்லிம் உலகம் பற்றிய இன்றைய செய்திகள் எதிர்மறையான அல்லது மோசமான விடயங்களையே கொண்டுள்ளன. அபிவிருத்தியிலும் கல்வித் துறை சார்ந்த விடயங்களிலும் கவனம் செலுத்துவதை விட வன்முறைகள் மற்றும் ஊழல் என்பன வற்றிலேயே கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது. சர்வதேச செய்திகள் மக்களையும் அவர்களது தேசங்களையும் பாதிக்கும் மோதல்கள் பற்றிய தகவல்களை துல்லியமாக வழங்குவதில்லை. அரசுகளுக்கும் அரசியல் நிலைமைகளுக்கும் சார்பான போக்கிலேயே அவை தரப்படுகின்றன. சர்வதேச செய்திகள் உயர் வகுப்பினரை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றனவே தவிர பொதுமக்களை அடிப்படையாகக் கொள்ளவில்லை என்ற பரவலான குற்றச்சாட்டும் உள்ளது. மேட்டுக்குடியினர் சம்பந்தப்பட்ட விடயங்களும் நிகழ்வுகளும் -அவற்றின் கலாசார பாதிப்புகள் கூட கவனத்தில் கொள்ளப்படாமல்- முக்கியத்துவம் பெற்று வருகின்றமையே இதற்குக் காரணமாகும்.

1982 இல் நடாத்தப்பட்ட ஆய்வொன்றின் படி, மேலைத்தேச செய்தி சேகரிப்பில் பிரதான இடம் பிடித்துள்ள 'எதிர்மறை விடயங்களில் கவனம் செலுத்துதல்' என்ற இயல்பானது மூன்றாம் உலக நாடுகள் தொடர்பான செய்தி சேகரிப்பிலும் அதேபோன்ற விடயங்களிலேயே கவனம் செலுத்தும் மனோபாவத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிய வந்துள்ளது. வடக்கில் ஆதிக்கம் செலுத்தும் செய்தியோட்டம் முஸ்லிம் உலகின் கலாசார, பொருளாதார, அரசியல் நிலைமைகள் பற்றிய தகவல்களை திரிபுபடுத்திக் கூறும் பண்பையே கொண்டுள்ளது. வெறும் நுகர்வோர் கலாசாரத்துக்கு வழியமைத்துள்ள இப்போக்கினால் தேசிய தனித்துவமும் இறைமையும் அரித்துச் செல்லப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போதிருக்கும் சமூக அரசியல் நிலையை (அதாவது உலகை உயர் மட்ட தேசங்கள் என்றும் கீழ் மட்ட தேசங்கள் என்றும் பாகுபடுத்தி நோக்கும் நிலையை) தக்கவைத்துக் கொண்டு, உலகை அதன் உண்மை நிலையை விட மோதல்கள் நிறைந்த ஒன்றாக காட்ட செய்தி ஊடகங்கள் பெருமுயற்சி செய்து

வருகின்றன. அவற்றுக்கான தீர்வுகள் சமாதான வழிமுறையிலன்றி பலப் பிரயோகத்தின் வழியாக எட்டப்படுவதை வலியுறுத்து வதற்காகவே இவ்வாறு அவை முயல்வதாக பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மேலைத்தேச செய்தி மூலங்கள் தமது கலாசாரத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும் பெறுமானங்களைப் பிரதிபலிக்கின்ற உரு வகங்கள், விவரணங்கள், நியாயங்கள் என்பவற்றை முற்படுத்த முயல்கின்றன. பொது விவகாரங்களை ஏதோ ஒரு வழியில் சட்ட கப்படுத்துவதனூடாக குறித்த சில சமூக பொருளாதார நியமங் களை மீள வலியுறுத்த அவை முனைகின்றன. உதாரணமாக, மேலைத்தேச ஊடகம் முதலாளித்துவப் பொருளாதரத்தை வர் ணிக்க 'நோயும் ஆரோக்கியமும்' என்பது போன்ற கருத்தாக்கங் களை உருவகமாக பாவிக்கிறது.

இத்தகைய அவயவம் சார்ந்த பார்வையானது (Organic Image) பொருளாதாரத்தின் இணைச்சார்புக் கோட்பாட்டுக்கு (Interde pendence) சட்டபூர்வத் தன்மையை வழங்குகின்றன. பொருளா தாரப் பிரச்சினைகள் இங்கு உள்பரவிய செயலிழப்பு (Systemic Malfunction) என்ற வகையில் வியாக்கியானம் செய்யப்படுகின் றன. சுற்றோட்டத்திலும் விநியோக முறையிலும் ஏற்படும் தடை கள் நீக்கப்படுமானால் பொருளாதாரம் என்ற தேகம் ஆரோக்கிய மானதாகவும் வளர்ச்சிப் போக்குள்ளதாகவும் அமையும் என்கிறது இக்கோட்பாடு. பொருள்களின் தடையற்ற ஓட்டத்தை வலியுறுத் தும் இச்சிந்தனை தாராண்மைவாத பொருளாதார சித்தாந்தத் துக்கு இயைபானது. இந்தவகையில், உலக பொருளாதார கட்ட மைப்பு என்னும்இக்கோட்பாடு உணர்வு சார்ந்தவலுவான அடை யாளமொன்றை வெளிக்கொண்டு வருகிறது. மறுபுறத்தில் சோச லிச செய்தி மூலங்கள் பொருளாதாரத்தை உறுதியற்ற அடித்தளம் கொண்ட தளம்பல் நிலையிலான கட்டமைப்பாக வர்ணிக்கின் றன. பொருளாதாரப் பிரச்சினைகள் அடிப்படையில் கட்டமைப்பு சார்ந்தவையே தவிர அவயவம் சார்ந்தவை அல்ல என அவை கூறுகின்றன.

ஊடகங்கள் சில உருவகங்களையும் பாணிகளையும் மீண்டும் மீண்டும் கையாள்வதானது பொருத்தமான செயற்பாடு தொடர் பான கண்ணோட்டத்திலும் புரிதலிலும் எண்ணக்கருவிலும் ஓர் ஒத்திசைவை உருவாக்குகிறது. குறித்ததொரு செய்தி மூலத்தின் சித்தாந்த ரீதியான திரிபு என்பது பல்வேறு தெரிவுகள் காணப் படுகின்ற நிலையில் குறைந்தளவு முக்கியத்துவம் உடையதாக இருக்கலாம். ஆனால் -முஸ்லிம் உலகத்தில் காணப்படுவது போன்று- மாற்றீடுகள் வரையறுக்கப்பட்ட அல்லது மாற்றீடுகள் அறவே இல்லாத அல்லது அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படு கின்ற அதேநேரம், பெருமளவு வெளிநாட்டுச் செய்திகள் Big Four விடமிருந்து வருகின்ற ஒரு சூழமைவில் ஒருவகை நுட்பமான சித்தாந்த ஆக்கிரமிப்பே இடம்பெறுகின்றது. முஸ்லிம் நாடு களில் வித்தியாசமான கண்ணோட்டங்கள் பிரதிபலிப்பதற்கான சந்தர்ப்பங்கள் மிகக் குறைவு. முஸ்லிம் உலகில் உருவாகும் செய்திகள் கூட மேற்குலக மையங்களில் சீராக்கம் செய்யப்பட்ட பிறகே உரிய பிராந்தியங்களில் விநியோகிக்கப்படுகின்றன.

செய்தி மீதான இந்த தொடர் செயற்பாடு உள்ளூர் விழுமியங் களுக்கும் இஸ்லாமிய நம்பிக்கைகளுக்கும் வழக்காறுகளுக்கும் எதிரானதானது; கருத்தியல் முரண்பாடுடையது; பக்கச்சார்பானது. சமூகத்தைப் பாரம்பரியமாக ஒருங்கிணைத்துக் கொண்டிருந்த நிறுவனங்கள் தவிர்க்க முடியாத படி சரிவதற்கும் சிதைவதற்கும் இது காரணமாகிறது. இத்தகைய சரிவும் சிதைவும் முஸ்லிம் சமூகங்களின் சுய கௌரவத்தை அழித்து விடுகிறது. மேற்குலகை நோக்கிய தாழ்வு மனப்பான்மையையும் அச்சமூகங்களில் ஏற் படுத்தி விடுகிறது. மேலைத்தேசத்தில் உருவாக்கப்படும் பக்கச் சார்பான சர்வதேச செய்திகளும், மேற்குலகில் பயிற்றுவிக்கப் பட்ட சுதேச ஊடகவியலாளர்கள் அவற்றை அப்படியே உள்ளூர் செய்திகளுக்குள் ஈர்த்துக் கொள்வதும் முஸ்லிம் வெகுமக்களை பெரும் இக்கட்டான நிலைக்கு தள்ளி விடுகின்றன. இதனால், தம்மையும் தாம் எதிர்நோக்கும் நிலைமைகளையும் பற்றிய யதார்த்தமானதும் ஒத்திசைவானதுமான மதிப்பீடொன்றைப் பெற முடியாத நிலை அவர்களுக்கு ஏற்படுகிறது. தங்கள் வாழ்வையும்

நலனையும் நேரடியாகப் பாதிக்கும் விடயங்களைக் கூட அவர் களால் சரியாகப் புரிந்து கொள்ள முடியாது போகிறது.

## சர்வதேச வானொலி ஒலிபரப்பு:

திடமாக அதிகரித்து வரும் சர்வதேச ஒலிபரப்புக்களை வானொலிக்கே உரிய பிரத்தியேகமான பிரச்சினையாகக் குறிப் பிடலாம். செய்மதி ஒலிபரப்புச் சேவைகள், இடையூறு செய்யப் பட முடியாத அதி தரம் வாய்ந்த வானலை பரிமாற்ற சேவைகள், ஏனைய அலைவரிசைகளின் அறிமுகம் என்பன இந்த சர்வதேச ஒலிபரப்பின் கீழ் அடங்கும். அமெரிக்க அரசால் நடத்தப்படும் ஒரு சேவையான வொய்ஸ் ஒப் அமெரிக்கா (VOA) மற்றும் பிரிட்டிஷ் புரோட்காஸ்டிங் கோப்பரேஷன் (BBC) ஆகிய இரண் டும் முழு முஸ்லிம் உலகையும் ஆக்கிரமித்துள்ளன. இவற்றின் சேவைகள் பல மொழிகளிலும் கிடைக்கின்றன. தினசரி இலட்சக் கணக்கான மக்கள் இவற்றை செவிமடுக்கின்றனர். பிரசாரம் மற்றும் பொது மக்கள் இராஜதந்திரம் என்பனவே இவற்றின் பிரதான குறிக்கோள்கள். யுத்தங்களின் போதும் முரண்பாடுகளின் போதும் அந்நாடுகள் தமக்கு பாதகமான சில அரசுகளுக்கு எதிராக உளவியல் யுத்தத்தை மேற்கொள்ள இவற்றை பயன்படுத்து கின்றன. வளைகுடா யுத்தத்தின் போது ஈராக் குர்திஷ் இனத்த வர்களும் ஷீஆக்களும் தமது அரசுகளை கவிழ்க்குமாறு இவற் றின் ஊடாக தொடராகத் தூண்டப்பட்டு வந்தனர். வேறு சில சர்வதேச ஒலிபரப்புக்கள் சமயம் சார்ந்தவையாகவும், கிறிஸ்தவப் பண்பு கொண்டனவாகவும் உள்ளன. வத்திக்கான் வானொலி போன்ற ஒலிபரப்புச் சேவைகள் 30 மொழிகளில் ஒலிபரப்புச் சேவைகளை கொண்டுள்ளன. கடல் கடந்த ரீதியில் 70 மொழி களிலும் இவற்றின் ஒலிபரப்புக்கள் உள்ளன.

பெரும்பாலான வறிய முஸ்லிம் நாடுகள் இத்தகைய வானொலி சேவைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவோ மாற்றுச் சேவைகளை நடாத்தவோ தொழில்நுட்ப ரீதியாக சக்தியற்றவை. மிகவும் உறுதியான நவீன வசதிகளைக் கொண்ட இந்த ஒலிபரப் புச் சேவைகளை குறுக்கீடு செய்யவோ தடை செய்யவோ கூட

அவற்றால் முடியாது. இந்த ஒலிபரப்புக்கள் முஸ்லிம் நாடுகள் உள்ளூர் மட்டத்தில் தமது கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் ஊக்குவிக்க எடுத்து வரும் நடவடிக்கைகளை மழுங்கடித்துள்ளன. சிறுபான்மைக் கலாசாரம், சிறுபான்மை மொழிகள் என்பனவற்றுக் கான ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் மிகக் கணிசமான அளவுக்கு குறைந் துள்ளதையும் அவதானிக்க முடிகின்றது. சர்வதேச ஒலிபரப்புக்க ளுக்கு செவிமடுக்கும் உள்ளூர்வாசிகள் அவற்றை தமது சுதேச ஒலிபரப்புக்களை விட நம்பத் தகுந்தவை என எண்ணுவது நிலை மையை மேலும் சிக்கலாக்கியுள்ளது. கலாசாரம், மொழி என்பன வற்றின் சுதேசத் தன்மையை மீள நிலைநிறுத்துவதில் பாரிய கவ னம் செலுத்த வேண்டிய அவசியத்தை இது வலியுறுத்துகின்றது.

## முடிவுரை:

இறக்குமதி செய்யப்பட்ட மேலைத்தேச விழுமியங்களும் சித் தாந்தங்களும் அற்ற மாற்று ஊடக மாதிரி ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை மூன்றாம் உலக சமூகங்களில் ஏற்பட்டுள்ளது என்பது பொதுவாக ஊடகக் கல்விமான்கள் முன்வைத்துள்ள ஒரு கருத்தாகும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் உன்னத மான தொடர்பாடல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு கலாசார ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட மேலைத்தேச மாதிரி யிலான அல்லது சோசலிசப் பாணியிலான ஊடகக் கட்டமைப்பு போதுமானதல்ல. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தமக்கே உரிய தேசிய தொடர்பாடல் கொள்கைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். அதன் சகல பிரிவுகளையும் அவர்கள் தமது கட்டுப் பாட்டின் கீழ் வைத்திருக்க வேண்டும். அதற்கான மேலதிக அபி விருத்தி இலக்குகளை அவர்கள் வகுத்துக் கொள்ள வேண்டும். தமது கலாசார இறைமை, கலாசாரப் பாரம்பரியம் என்பன வற்றை அவர்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இந்த ஆய்வின் எஞ்சிய பகுதி சில அடிப்படைக் கொள்கைகளை முன்வைக்கும். முஸ்லிம் கலாசாரத்துக்கும் விழுமியங்களுக்கும் இசைவான ஆக்க பூர்வமான மாற்று ஊடகமொன்றை உருவாக்குவதற்கான அடித் தளமாக இக்கொள்கைகளைப் பயன்படுத்தலாம்.

அத்தியாயம் மூன்று:

# இஸ்லாமிய உலகக் கண்ணோட்டமும் தற்கால வெகுசன ஊடக எண்ணக்கருக்களும்

## இஸ்லாமிய உலகக் கண்ணோட்டம்

### முழுமையான வாழ்க்கை முறை

அரபு மொழியில் இஸ்லாம் என்ற பதம் ஸலாம் என்ற சொல்லில் இருந்து வருகிறது. இதன் அடிப்படைப் பொருள் சாந்தி அல்லது சமாதானம் அல்லது அமைதி என்பதாகும். இஸ்லாத்தை பின்பற்றுபவர்கள் அர்ப்பணத்தின் மூலம் அல்லது இறைவனிடம் முழுமையாக சரண் அடைவதன் மூலம் உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் அமைதி அடைய அது வழிகாட்டுகின்றது. இந்த ஒட்டு மொத்த பிரபஞ்சமும் இறைவனால் படைக்கப்பட்டது என்பதுதான் அடிப்படை இஸ்லாமிய எண்ணக்கருவாகும். அவன் ஒருவனே அதைக் கட்டுப்படுத்துகின்றான். மனிதனைப் படைத்தவன் அவன்தான். அவனுக்கு சரியான வாழ்க்கை வழிகாட்டல்களை வகுத்துக் கொடுத்தவனும் அவன்தான். அதே நேரம் இந்த

வழிகாட்டல்களை ஏற்றுக் கொள்வதா இல்லையா என்று மனிதனுக்கு தெரிவுக்கான சுதந்திரத்தையும் அவன் வழங்கி உள்ளான். இந்த வழிமுறைகள் இஸ்லாத்தை ஒரு பாரம்பரிய சமயம் என்று பார்ப்பதை விட மேலான ஒரு நிலைக்கு கொண்டு செல்கின்றன. முஸ்லிம்களுக்கு இஸ்லாம் என்பது ஒரு பூரணமான வாழ்க்கை முறை. மனிதனுடைய தனிப்பட்ட வாழ்க்கையோடு மட்டும் அது தனது பரப்பை மட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. மனித இருப்பின் எல்லா அம்சங்கள் மீதும் அது தன்னை விஸ்தரித்துள்ளது. எல்லா மட்டங்களிலும் இஸ்லாம் மனிதனுக்கு வழிகாட்டுகின்றது. அது அவனின் தனிப்பட்ட வாழ்வாக இருக்கட்டும்; சமூக மட்டமாக இருக்கட்டும்; அரசியல், பொருளாதார, சட்ட, கலாசார விடயங்களாக இருக்கட்டும்; உள்ளூர் அல்லது சர்வதேச மட்டத்தில் இருக்கட்டும். எல்லாவற்றுக்குமான விழுமியங்களை இஸ்லாம் தன்னகத்தே கொண்டுள்ளது.

இஸ்லாமிய நம்பிக்கையின் மத்திய அங்கமாக இருப்பது ஏகத்துவமாகும். இது இறைவனுக்கும் மனிதனுக்கும் பிரபஞ்சத்தின் எல்லா பாகங்களுக்கும் இடையிலான ஐக்கியம், ஒத்திசைவு, நல்லிணக்கம் என்பனவற்றை வலியுறுத்துகின்றது. எல்லாம் வல்ல படைப்பாளன் ஒருவனே. அவனே பிரபஞ்சத்தையும் அதில் உள்ள ஏனைய எல்லாவற்றையும் திட்டமிடுபவனும் கட்டுப்படுத்துபவனும். நட்சத்திரங்கள், பருவங்கள், இயற்கையின் செயற்பாடுகள் என எல்லாமே அவனது சீரான திட்டமிடலின் கீழ் உள்ளவை. அவை ஒட்டுமொத்த இணக்கத்தோடும் ஒருங்கிணைப்போடும் செயற்படுகின்றன. எல்லா மனிதர்களும் அந்த ஒரே இறைவனால் படைக்கப்பட்டவர்கள். அந்த மனிதர்கள் எல்லோருமே சமமானவர்கள். இந்தக் கோட்பாடு மனித சமூகத்தின் மீதான இறைமையும் பாதுகாப்புக்கான உரிமையும் ஏக இறைவனைத் தவிர வேறு எவருக்கும் இல்லை என உறுதி செய்கின்றது. படைப்பில் ஒரு நோக்கம் இருப்பதாகவும் இந்தக் கோட்பாடு கூறுகின்றது. இறைவனைத் தவிர வேறு எவருக்கும் அல்லது எதற்கும் மனிதன் அடிமை இல்லை எனக் கூறி சகல அடிமைத் தனத்தில் இருந்தும் மனிதனை இந்தக் கோட்பாடு விடுவிக்கின்றது.

இறைவன் தனது வழிகாட்டுதல்களை நபிமார்கள் மூலம் வெளிப்படுத்தி உள்ளான்என்பது இஸ்லாத்தின் இன்னொரு முக்கியமான விடயமாகும். அந்த நபிமார்கள் வரிசையில் இறுதியாக வந்தவர்தான் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள். ஒரு நபியை நம்புவது என்பது அவர் வழங்கிய செய்தியை அல்லது தூதை நம்புவதாகும். அவர் வழங்கிய சட்டங்களை ஏற்றுக் கொண்டு, அவர் போதித்த வாழ்வு முறையைப் பின்பற்றி நடப்பது இதில் பிரதான அம்சமாகும்.

## சமூகத்தில் மனிதனின் வகிபாத்திரம்:

இறைவனே மனிதனைப் படைத்தவன். அவனே இறைமை உள்ளவன். அவனே மனிதனை உன்னத அந்தஸ்துக்கு உயர்த்தி பூமியில் தனது பிரதிநிதியாகவும் (கலீபா) ஆக்கியுள்ளான் என்று இஸ்லாம் போதிக்கின்றது. அந்த வகையில் மனித வாழ்வு ஓர் உயர்ந்த நோக்கம் கொண்டதாக ஆக்கப்பட்டுள்ளது. சமத்துவம், நியாயம், சமாதானம், சுபீட்சம் என்பன மேலோங்கி நிற்கும் ஓர் ஒழுங்கு முறையை ஸ்தாபிப்பது மனித வாழ்வின் மேலான குறிக்கோள் ஆகின்றது.

தனிநபர் தன்மைக்கும் கூட்டுத்தன்மைக்கும் இடையில் இஸ்லாம் ஒரு சமநிலையைப் பேணுகின்றது. அது மனிதனின் தனிப்பட்ட ஆளுமையை நம்புகின்றது. ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் இறைவனிடம் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் என்று கூறுகின்றது. தனிமனிதனுக்கு உரிய அடிப்படை உரிமைகளையும் அது உறுதி செய்கின்றது. அவற்றில் குழறுபடிகள் செய்யப்படுவதை அது சகித்துக் கொள்வதில்லை. தனிமனித ஆளுமையை முறையாகவிருத்தி செய்தல் என்பது அதன் கல்விக் கொள்கையின் பிரதான குறிக்கோள்களுள் ஒன்று. மேற்குலகில் சமயம் என்பது தனிமனிதன் சார்ந்த ஒரு விடயம். ஆனால் இஸ்லாத்தில் சமயம் என்பது பொது விவகாரம். அதேவேளை மனிதன் தனது சமூகத்தில் அல்லது நாட்டில் தனது தனித்துவ இயல்பை இழந்து கரைந்து விட வேண்டும் என்ற கருத்தையும்

இஸ்லாம் ஆதரிக்கவில்லை. இங்கு கூட்டு நிலை என்பது தனி நபர்களை உள்ளடக்கிய சமூகமாகும். அத்தனிநபர்கள் இறைவ னின் பிரதிநிதி என்ற நிலையில் இருந்து மனித குலத்தின் நோக்கத்தை நிறைவேற்றும் ஆற்றலையும் விருப்பத்தையும் கொண்டிருப்பர்.

## ஊடக கோட்பாடும் இஸ்லாமிய பாரம்பரியமும்

இஸ்லாம் அதன் கொள்கைகளையும் நம்பிக்கைகளையும் இரண்டு பிரதான மூலாதாரங்களில் இருந்து பெற்றுக் கொள்கின் றது. ஒன்று அல்-குர்ஆன். இது நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு இறைவனால் வழங்கப்பட்ட வேத வசனங்களைக் கொண்ட நூல். மற்றையது ஸுன்னா ஆகும். இது நபி (ஸல்) அவர்களின் சொல் மற்றும் செயல் சார்ந்த பாரம்பரியத்தை குறிக்கும். இவை இரண் டும் ஒன்றாகவே பாவிக்கப்படுகின்றன. மனித குலத்தை நல் லொழுக்கத்தின் பால் இட்டுச் செல்ல அல்-குர்ஆன் வரலாற்று, ஆன்மீக, உலோகாயத விவாதங்களை முன்வைக்கின்றது. அல்-குர் ஆனின் செயற்பாட்டு வடிவமாக ஸுன்னா அமைந்துள்ளது. இறை வன் அருளியவற்றை நபி (ஸல்) அவர்களின் உதாரணங்களோடு செயல் ரீதியாக அமுல்படுத்தும் பரிமாணமாக ஸுன்னா அமைந் துள்ளது. சமூகத்தின் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார விடயங்கள் எல்லாவற்றுக்குமான வழிகாட்டல் அதில் உள்ளது.

சமூகங்கள் மாற்றங்களுக்கு உள்ளாகின்ற போது அல்லது பல் வேறு விதமான அபிவிருத்திகளுக்கு உள்ளாகின்ற போது அந்த விடயங்கள் பற்றி விவாதிக்கவும் மீள் மதிப்பீடு செய்யவும் முஸ்லிம் அறிஞர்கள் கடமைப்பட்டுள்ளனர். இத்தகைய விவாதங் களும் மதிப்பீடுகளும் அசல் மூலாதாரங்களில் இருந்து விலகிச் செல்லாமல் அவற்றின் அடிப்படையில் நிகழ்கால சமூகத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு அமைய வேண்டும்.

முஸ்லிம் சமூகத்துக்கான முதுகெலும்பு இந்த மூலாதாரங்கள் தான். இதை உணர்ந்து ஊடகங்கள் மற்றும் அவற்றின் அலகுகள் மீது பிரயோகிக்கக் கூடிய வகையில் கலந்துரையாடல்கள் அமைய

வேண்டும். எல்லாத் துறைகளையும் இஸ்லாம் எவ்வாறு நோக்கு கிறது என்ற விசாரணையுடன் இதை தொடங்கலாம். அந்த வகை யில் பின்வரும் விடயங்களில் நாம் கவனம் செலுத்துவோம்:

## அல்லாஹ்வை நினைவுகூரல் என்பது ஒரு நோக்கம்

வாழ்வுக்கான சிறந்த வரைபடமான அல்-குர்ஆனில் முஸ்லிம் சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் என சில அடிப்படைக் குறிக்கோள்கள் வகுக்கப்பட்டுள்ளன. மனிதனுடைய இருப்பின் நோக்கமே இந்த குறிக்கோள்களில்தான் அடங்கி உள்ளது. ஒரு முஸ்லிம் எத்தகைய காரியத்தில் அல்லது தொழிலில் ஈடுபட்டி ருந்தாலும் இந்த அடிப்படைக் குறிக்கோள்கள் மாறாதவை. இவற்றுள் மிக முன்னணி வகிக்கும் குறிக்கோள் படைப்பாளனை நினைவு கூர்வதாகும். அரபியில் இதனை ‘திக்ர்’ என்கிறோம். அல்-குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது:

‘‘மனிதர்களே, நீங்கள் உங்களைப் பாதுகாக்கும் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள்!’’ (4:1)

’’நம்பிக்கை கொண்டிருப்பவர்களது உள்ளங்கள் அல்லாஹ்வின் திருப்பெயரை துதி செய்வதனால் நிம்மதி அடைகின்றன’’. (13:28)

’’(நபியே) கூறும்: அல்லாஹ் ஆகிய அவன் ஏக இறைவன். அல்லாஹ் எவருடைய தேவையும் அற்றவன். அவன் யாரையும் பெறவில்லை;அவனை யாரும் பெறவுமில்லை; அவனுக்கு நிகராகவும் எவரும் இல்லை’’. (112)

படைத்தவனை உணர்வு பூர்வமாக நினைவுகூரச் செய்வதன் மூலம் இஸ்லாம் ஒவ்வொரு தனிநபரிலும், ஒவ்வொரு செயற் பாட்டிலும் பொறுப்புக் கூறும் தன்மையை (Responsibility) வலி யுறுத்துகின்றது. ஒரு பாரிய சக்தியின் இருப்பு குறித்த விழிப்பு ணர்வை அது ஏற்படுத்துகிறது. அந்த வகையில் அல்லாஹ்வை நினைவுகூருதல் என்பது மனித இருப்புக்கும், மனிதனது எல்லா செயற்பாடுகளுக்கும் பின்னாலுள்ள அடிப்படை நோக்கமாகிறது.

சர்ச்சைக்குரிய விதத்தில் வெகுசன ஊடகம் என்பது சமூகத்தின் சிந்தனையிலும் புரிதலிலும் செல்வாக்குச் செலுத்துகின்ற ஆற்றல் மிகுந்த சாதனமாக மாறியுள்ளது. எனவே அதன் நோக்கமும் இலக்குகளும் மிகக் கவனமாகப் பரிசீலிக்கப்பட வேண்டியது அவசியம். எதேச்சாதிகார ஆட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள ஊடகத் தைப் பொறுத்தவரை அதன் ஒரே நோக்கம் மக்களாதரவை பெரு மளவு பெறுவதும் ஆட்சிக்கு விசுவாசமாக இருப்பதும் மட்டுமே. வர்த்தக ரீதியில் ஊடகங்கள் முதலீடுகள் மீதான கணிசமான மீள் வருமானமொன்றை பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவையும் உள்ளது.

ஆனால் இஸ்லாமிய ஏகத்துவ கோட்பாடுகளின் படி ஊடகத் தின் உள்ளடக்கமானது அரசியல், சமூக, பொருளாதார, கலாசார விக்கிரகங்கள் உருவாக காரணமாகி விடக் கூடாது. ஆளுமை வழிபாடுகளை ஊக்குவிப்பதாகவோ அதற்காக பிரசாரம் செய்வ தாகவோ கூட அது அமையக் கூடாது. இஸ்லாத்தின் கீழ் வெகுசன ஊடகம் என்பது எல்லா முஸ்லிம்களும் வாழ்வதற்குத் தேவை யான குறிக்கோளைத் தழுவிச் செயற்பட்டால் மட்டுமே அது சட்ட பூர்வமானதாகும். அந்த வகையில் அதன் பணியானது இறை வனை நினைவுகூர்வதற்கான அல்-குர்ஆனின் வழிகாட்டலைப் பெற்றதாகவும், அதனோடு நேரடித் தொடர்பு கொண்டதாகவும் அமைதல் வேண்டும். செய்திகள், அறிவுசார் விடயங்கள், பொழுது போக்கு என்பன மூலம் இஸ்லாமிய வெகுசன ஊடகம் சமூகத்தை அதன் அடிப்படை நோக்கத்தை நோக்கி தொடர்ச்சியாக நெறிப் படுத்துவதாகவும் அதன் பொறுப்புக் கூறலை நினைவூட்டுவ தாகவும் இருக்க வேண்டும். அதன் இலக்கு மிக உயர்வானதாக இருக்க வேண்டும். சமூகம் முழுவதும் அதன் நன்மைகள் சென்றடைய வேண்டும். அவற்றுள் மிகப் பெரிய நன்மை சமூக உறுப்பினர்களுக்கு அவர்களது படைப்பாளனை நினைவுகூர உதவுவதாகும்.

## • அல்லாஹ்வின் பண்புகளை ஏற்றுக் கொள்ளல்.

முஸ்லிம்கள் அல்லாஹ்வை நினைவுகூரவும், 'திக்ரை' செயல் ரீதியாக நடைமுறைப்படுத்தவும் அவர்களுக்கு காட்டித் தரப்பட்டுள்ள ஒரு வழிமுறை மனித குலத்தை நிலைத்திருக்கச் செய்யும் வகையில் இறைவன் கொண்டுள்ள தனிப் பண்புகளை அறிந்து ஏற்றுக் கொள்வதாகும்.

''அல்லாஹ்வின் அருட்கொடைகளை நினைத்துப் பாருங்கள்; அதனால் நீங்கள் வெற்றி பெறலாம்''. (7:69)

''(மேலும்) உமது இரட்சகனின் அருளை எடுத்துரைத்துக் கொண்டிருப்பீராக''. (93:11)

இஸ்லாமிய ஊடகம் நல்ல செய்திகள், பொருளாதார சுபீட்சம், சமாதான நல்லிணக்கம், குற்றச் செயல்களின் வீழ்ச்சி என்பவற்றை ஒளிபரப்புகின்றபோது, நல்லவை மீதான இறைவனின் கருணையே அங்கு எடுத்துக் காட்டப் படுகிறது. நல்ல விடயங்கள் திரும்பத் திரும்ப ஒலி/ஒளிபரப்பப்படும்போது அது தனிநபர்களை அவர்களது தனிப்பட்ட வாழ்விலும் சமூகங்களிலும் இடம் பெறுகின்ற சாதகமான நிகழ்வுகள் பற்றிப் பேசத் தூண்டுகிறது. எதிர்மறையான விடயங்களை விட நேரிடையான விடயங்களை ஊடகம் அதிகம் வலியுறுத்தும் போது பிறர் மீது ஆக்கபூர்வமான தாக்கம் ஏற்பட வழியேற்படுகிறது. ஊடகமானது அமோகமான விற்பனை நோக்கோடு கொலைகளையும் வன்முறைகளையும் பற்றிய செறிவான தலைப்புச் செய்திகளை வடிவமைப்பதற்குப் பதிலாக, உளவியல் ரீதியாக உற்சாகத்தை அளிக்கக் கூடிய சாதகமான செய்திகளிலும் படங்களிலும் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இஸ்லாமிய ஊடகம் மனிதனுடைய விடாமுயற்சி, மன உறுதி என்பனவற்றுக்கான மாதிரிகளை அதிகம் எடுத்துக் காட்டி சமூகம் பயனடைய வழிகாட்ட வேண்டும்.

அதேபோல், துரதிஷ்டவசமான நிகழ்வுகளுக்கும் அழிவுகளுக்கும் பொருளாதார இழப்புகளுக்கும் முகம் கொடுக்கும் போது

கூட முஸ்லிம்கள் இறைவனை நினைவுகூரவே வழிகாட்டப்படு கிறார்கள்:

''அல்லாஹ்வின் அருளைப் பற்றி ஒருபோதும் நம்பிக்கை இழந்து விடாதீர்கள். நிராகரிப்பாளர்களைத் தவிர வேறெவரும் அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழந்து விட மாட்டார்கள்''. (12:87)

''என்னுடைய அடியார்களுக்குக் கூறுங்கள்: நிச்சயமாக நான் மிக்க மன்னிப்பாளன்; கிருபை உடையவன்''. (15:49)

''நிச்சமாக கஷ்டத்துடனேயே இலகுவும் இருக்கின்றது''. (94:5)

ஒரு முஸ்லிம் தனக்கு நேரும் எந்தக் கஷ்டத்தையும் அது தானாகவே ஏற்பட்ட கஷ்டம் என்றோ, இயற்கையின் பாதகமான செயல் என்றோ நம்புவதில்லை. அது இறைவனால் விதிக்கப் பட்ட ஒன்று என அவன் ஏற்றுக் கொள்கிறான். எல்லாமே இறைவனின் சோதனை என்பது அவனது நம்பிக்கை. இறை வனுடைய கருணையில் தொடர்ந்து நம்பிக்கை வைத்து அதை உறுதியாகப் பேணி வந்தால் வாக்களிக்கப்பட்ட நிவாரணம் நிச்சயம் வந்தடையும் என்பது முஸ்லிம்களின் அடிப்படை நம்பிக் கையாகும். எனவே ஊடகம் என்பது யதார்த்தத்தை அடிப்படை யாகக் கொண்ட நம்பிக்கை மிக்க விவரணங்கள் மூலம் மக்க ளுக்கு இறைவனின் கருணையை நினைவூட்ட வேண்டும். செய்தி அறிக்கைகள் அல்லது ஏனைய ஆக்கபூர்வமான தயாரிப்புக்கள் மூலம் கஷ்டமான சூழ்நிலைகள் தொடர்பான சமகால உதார ணங்களை அது மேற்கோள் காட்டலாம். மக்களின் விடாமுயற்சி, இறைவனது தீர்ப்பின் மீது அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கை என்பன காரணமாக இந்த நிலைமைகள் எவ்வாறு வெற்றி கொள்ளப்பட்டன என்பதை மக்களுக்கு விளக்கலாம்.

சமூக அமைதியீனங்களை ஊடகம் வெறுமனே திகிலூட்டும் செய்திகளாக மட்டும் வழங்கக் கூடாது. நிலைமைகளை அது மிகைப்படுத்தவும் கூடாது. மாறாக இந்த விடயங்களில் தனக்கென ஒரு சுயமான மதிப்பீட்டு அளவுகோலை அது கொண்டிருக்க

வேண்டும். இவ்வாறான சில நிலைமைகளில் ஊடகங்களின் பங்களிப்பு பற்றிய அண்மைக்கால மதிப்பீட்டின் படி, ஊடகங்கள் அநேகமான சந்தர்ப்பங்களில் மக்களின் அச்சத்தைத் தூண்டு வதாகவே செயற்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. 'உண்மைக்கு சேவகம் புரிகின்றோம்' என்ற போர்வையில் பிரபலமான செய்தி வலையமைப்புக்களும் பத்திரிகைகளும் மிகவும் கொடூரமான காட்சிகளையும் படங்களையுமே வெளியிட்டு வந்துள்ளன. இவ் வாறான தகவல்களைப் பார்க்கின்றவர்களும் கேட்கின்றவர்களும் மேலும் குழப்ப நிலைக்கே தள்ளப்படுவர். அவ்வாறான காட்சி களும் படங்களும் மனிதர்கள் மத்தியில் விரக்தி நிலையையே ஏற்படுத்தும். இத்தகைய நிலைமைகளில் இஸ்லாமிய செய்தி ஊடகம் மிக சாதுரியமாகவும் அமைதியாகவும் தனது பங்க ளிப்பை வழங்க முடியும். இவ்வாறான வன்முறைகள் வெடிக்க காரணமாக இருக்கும் பதற்ற நிலைகள் பற்றி தெளிவான, ஆழ மான கலந்துரையாடல்களை அது மேற்கொள்ளலாம். இந்த வன் முறைகளுக்கும் அவற்றுக்கு காரணமான கைக்கூலிகளுக்கும் இடமளிப்பதற்குப் பதிலாக, உண்மையிலேயே அமைதியையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்த பாடுபடும் குழுக்களின் செயற்பாடு களுக்கு அது முக்கியத்துவம் அளிக்கலாம்.

## • அத்தாட்சிகள் பற்றிய ஆழ்ந்த சிந்தனை:

முஸ்லிம் செய்தி ஊடகம் என்பது அழிவின் போது கூட நம்பிக்கை ஊட்டும் நேர்நிலையான அம்சங்களை வழங்குவதற்கு அப்பால், இறைவனை நினைவூட்டும் வழியொன்றாக அவனது சிறப்புகள் குறித்த கவனத்தை மக்களது தனிப்பட்ட அன்றாட வாழ்வில் ஏற்படுத்த வேண்டும். நமக்கு மிகவும் அண்மிய சூழலில் இறைவனது படைப்பியல் அத்தாட்சிகளைப் பற்றி சிந்திப்பதை இது குறிக்கிறது. அல்-குர்ஆன் இதனை இவ்வாறு கூறுகின்றது:

''வானங்களையும் பூமியையும் படைத்திருப்பதிலும், இரவு பகல் மாறி மாறிவருவதிலும் அறிவுடையவர்களுக்கு நிச்சய மாகப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன''. (3:190)

''... வானத்திலும் பூமியிலும் அவனது படைப்புகள் பற்றி சிந்திப்பார்கள்''. (3:191)

''நிச்சயமாக நாம்தான் வானத்தில் பெரும் உடுத் தொகுதிகளை அமைத்து, பார்ப்பவர்களுக்கு அவற்றை அலங்காரமாகவும் ஆக்கி னோம்''. (15:16)

''அவர்கள் தங்களுக்குள்ளாகவே கவனிக்க வேண்டாமா..?!'' (30:8)

சுற்றாடல் தொடர்பான விவரணப் படங்களைத் தயாரித்து வெளியிடுவதன் மூலமாக மக்கள் அது பற்றிச் சிந்திப்பதற்கான வாய்ப்பினை ஊடகங்கள் வழங்கலாம். மிருகங்களின் உலகம், வானிலை தொடர்பான விடயங்கள், இயற்கை விஞ்ஞானத்தின் புதிய கண்டுபிடிப்புக்கள் என்பனவற்றுக்கும் இடமளிக்கலாம். இவற்றுக்கு அடுத்த கட்டமாக நாடகங்கள், உரையாடல்கள், பிற நிகழ்ச்சிகள் என்பவற்றில் சிந்தனைக்கும் கலந்துரையாடலுக்கு மான தொனிப் பொருளாக இயற்கை அத்தாட்சிகளை கொண்டு வரலாம். இத்தகைய அத்தாட்சிகளின் ஊடாக தனிநபர்கள் தம்மு டைய தனிப்பட்ட வாழ்வில் கூட அல்லாஹ்வுக்கு எவ்வளவு பாரிய முக்கியத்துவம் உள்ளது என்பதை இயல்பாகவே புரிந்து கொள்ளும் ஆற்றலைப் பெறுவர்.

### • ''நீங்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளலாம் என்பதற்காக..''

இறைவனின் அருட்கொடைகளையும் அத்தாட்சிகளையும் புரிந்து கொண்ட பின் விசுவாசிகளுக்கு தம்மைச் சுற்றி உள்ளவர் கள் பற்றி சிந்திக்கவும் அவர்களோடு அறிமுகமாகி உறவாடவும் கட்டளைகள் வழங்கப்படுகின்றன. இங்கு இஸ்லாமிய வாழ்வு முறையில் ஒரு முக்கிய எண்ணக்கருவாக 'உம்மா' அல்லது சமூகம் அமைகின்றது. இந்த எண்ணக்கரு தேசிய மற்றும் அரசியல் எல்லைகளையும் நவீன தேச அரசு என்ற கோட்பாட்டையும் தாண்டிச் செல்கின்றது. இஸ்லாத்தில் சமூகம் என்ற எண்ணக்கரு

பொதுச் சமூகத்தையும் தனிநபரையும் வேறுபடுத்தி நோக்குவதில்லை. அந்த வகையில் சமூகத்திடம் பரந்தளவில் வேண்டப்படுவதே ஒவ்வொரு தனிநபரிடமும் வேண்டப்படுகின்றது. குறிப்பாக அல்-குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகின்றது:

''மனிதர்களே! உங்கள் அனைவரையும் நிச்சயமாக நாம் ஒரே ஆணிலிருந்தும் ஒரே பெண்ணில் இருந்தும் படைத்தோம். பின்னர் ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும் வகையில் உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம்''. (49:13)

முஸ்லிம்கள் ஒருவரை ஒருவர் மேலும் புரிந்து கொள்ளும் போதும், ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வேண்டியது தமது கடமை என்பதை புரிந்து கொள்ளும் போதும், தங்களுக்கிடையிலான உறவுகளை மேலும் இணக்கமாகவும் சமாதானமாகவும் வைத்துக் கொள்வர். இது தொடர்பாக அல்-குர்ஆன் ஸுன்னா என்பவற்றில் இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது:

''நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் அனைவரும் சகோதரர்களே! ஆகவே உங்கள் சகோதரர்களுக்கிடையில் ஒழுங்கையும் சமாதானத்தையும் நிலை நிறுத்துங்கள்''. (49:10)

''விடயங்களை இலகுவாக்கி வசதியாக்குங்கள்; அவற்றை கடினமாக்கி இறுக்கமாக்காதீர்கள். வெறுப்புணர்வை ஏற்படுத்தாமல் மகிழ்ச்சியான பிணைப்பை ஏற்படுத்துங்கள்''. (ஹதீஸ்)

''முஸ்லிம்கள் அவர்களுக்கிடையிலான பரஸ்பர அன்பு, இரக்கம், கருணை என்பனவற்றில் ஒரு மனித உடலைப் போன்றவர்கள். அதில் ஒரு பகுதி துன்பத்தால் வேதனைபட்டாலும் முழு உடம்பும் வலி, உறக்கமின்மை, காய்ச்சல் என்பவற்றை உணரும்''. (ஹதீஸ்)

இன்றைய உலகின் பூகோளக் கிராமத்தில் ஊடகம் என்பது இந்த ஆணைகளை நிறைவேற்றுவதில் முக்கியமான பங்கு வகிக்கக் கூடியது.

‘பிறர்’ குறித்த துல்லியமான சித்தரிப்பானது -முதலில்- சுதேச பார்வையாளர்களுக்கு தமது கலாசாரங்களிலிருந்து வேறுபட்ட கலாசார பாரம்பரியங்கள் பற்றிய புரிதலை வழங்கும். இது ‘பிறர்’ பற்றிய மேலோட்டமான பரிச்சயத்தையும் தொடர்பையுமாவது ஏற்படுத்தும். கலாசார பல்வகைத் தன்மையை ஏற்றுக்கொள்ளும் இயல்பையும் மேலோங்கச் செய்யும்.

அடுத்து,ஊடகம் இம்மக்களை ஒட்டு மொத்த வெகுமக்கள் பரப்பின் ஒரு பகுதியாகஎடுத்துக் காட்டுவதன் மூலமாக, படைப் பாளனிடமிருந்தும் அவனது தூதரிடமிருந்தும் வந்த கட்டளை களை புரிந்துகொள்வதற்கான பிணைப்பொன்றையும் உருவாக்க முடியும். பல்வேறு தரப்பு மக்களினது போராட்டங்களுக்கும் வெற்றிகளுக்கும் இடையிலான பொதுத்தன்மை குறித்து கவன யீர்ப்புச் செய்வதனூடாக இந்தப் பிணைப்பு மேலும் பலப்படுத் தப்பட முடியும். அனைத்து சமூகங்களதும் பொதுத்தன்மையை எடுத்துக் காட்டவும் இது உதவும்.

மேற்சொன்ன கட்டளைகளின் படி முஸ்லிம்கள் ஒருவரோடு ஒருவர் சமாதானம் செய்து கொள்ளவும் மற்ற குழுவினரின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளவும் வேண்டப்படுகின்றார்கள். ஆகக் குறைந்தபட்சம் ஊடகம் என்பது நிலைமைகள் பற்றி எல்லா முஸ்லிம்களும் உணர்ந்து கொள்ளச் செய்வதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் தமது கடமைகளை நிறைவேற்றி ஒருவர் மற்றவருக்கு உதவ முன்வர முடியும்.

## • நன்மையை ஏவுதல்:

ஒருவரோடு ஒருவர் பிணைப்பை ஏற்படுத்தல் மற்றும் பல் லினத் தன்மையை ஏற்றுக் கொள்ளல் என்பனவற்றுக்கு அப்பால், இறைவனை நினைவுகூரக் கூடிய மற்றொரு வழிமுறை மனித குலத்தின் நன்மைக்காகத்தான் இறைவனின் சட்டங்கள் பேணப் படுகின்றன என்பதை செயற்பாட்டு ரீதியாக உறுதி செய்து கொள் வதாகும். அந்த வகையில் செயல்வாதம் (Activism) என்பது முஸ் லிம்களது வாழ்வில் முக்கிய பாத்திரத்தை வகிக்கிறது.

ஏற்கனவே இருந்த அதே நிலைகளை தொடர்ந்து பேண வேண்டும் என்பதற்காக செயற்படாமல் இருப்பதை அல்-குர்ஆனும் நபி அவர்களின் பாரம்பரியமும் அனுமதிக்கவில்லை. இஸ்லாம் மாற்றங்களுக்கான அழைப்பை விடுக்கின்றது. ஏதாவது ஒரு பரப்பில் ஏற்கனவே இருந்த நிலை மக்களின் தேவைகளை விட குறைந்த மட்டத்தில் இருக்கும் போது அல்லது அவர்கள் தமது இறைவனை வணங்க முடியாத நிலை இருக்கும் போது இந்த மாற்றத்துக்கான அழைப்பு முன்வைக்கப்படுகின்றது.

''மனிதர்கள் தமக்குள் மாற்றத்தை ஏற்படுத்தாதவரை இறைவன் அவர்களது நிலையை மாற்றுவதில்லை''. (13:11)

''சிறந்ததின் பக்கம் அழைத்து, நன்மையைச் செய்யும் படி ஏவி, பாவமான காரியங்களில் இருந்து விலக்கக் கூடிய ஒரு கூட்டத்தார் உங்களில் இருக்கட்டும்''. (3:104)

''நீங்கள் நன்மையை ஏவி தீமையை தடுக்க வேண்டும்''. (ஹதீஸ்)

''அவர்கள் பேசும் இரகசியங்களில் பெரும்பாலான வற்றில் யாதொரு நன்மையும் இல்லை. ஆயினும் தானம் கொடுப்பதைப் பற்றியோ, நன்மையானதைப் பற்றியோ, மனிதர்களுக்கிடையில் சமாதானம் ஏற்படுத்துவது பற்றியோ பேசுபவதைத் தவிர. எவரேனும் அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தை நாடி இவ்வாறு (இரகசியம் பேசினால்) விரைவில் நாம் அவர்களுக்கு நற்கூலியை வழங்குவோம்''. (4:114)

''நிச்சயம் அல்லாஹ்விடம் கால் நடைகளை விட மிகக் கேவலமானவர்கள் சத்தியத்தை அறிந்து கொள்ள முடியாத செவிடர்களும் ஊமையர்களும்தான்''. (8:22)

''உங்களில் யாராவது ஒரு தவறை அவதானித்தால் அவர் அதை தனது கரங்களால் திருத்த வேண்டும். அவ்வாறு முடியாவிட்டால், தனது நாவால் அதை தடுக்க வேண்டும்''. (ஹதீஸ்).

எனவே இங்கு ஊடகம் என்பது செயலற்றதாகவோ மந்தமா கவோ இருக்க முடியாது. அதற்கு ஒரு தார்மீகக் கடமை உள்ளது. சமூகத்தை மேம்படுத்துவதில் அது செயற்பாட்டு ரீதியான பங் களிப்பை வழங்க வேண்டும். தாக்கம் மிக்க குரல் கொடுக்கும் ஊடகமாக அது அமைய வேண்டும். அநீதி, மோசடி, வீண்விரயம், நெருக்குதல் முதலிய எல்லாமே பொது மக்களது நலன்களைப் பாதிப்பவை. அவற்றை ஊடகம் அவ்வாறே அடையாளப்படுத்த வேண்டும். மது, வட்டி, இனவாதம் முதலிய தார்மீகத் தீமைகள் இஸ்லாமியக் கொள்கைகளுக்கு முற்றிலும் முரணானவை. இவை தெளிவாக எதிர்க்கப்பட வேண்டும். இல்லையேல் சமூகத்தின் அடித்தளத்தையே அவை அழித்து விடும்.

## தூதைப் பகிர்ந்து கொள்ளல்:

கடைசியாக, ஒரு முஸ்லிம் நீதிக்காக குரல் கொடுப்பவனாக மாறி, இறைவனை நினைவுகூர்ந்து, அவனது தூதை முழு மனித வர்க்கத்தோடும் பகிர்ந்துகொள்ள தூண்டப்படுகின்றான்.

''(நம்முடைய) தூதரே! உங்கள் இறைவனிடம் இருந்து உங்க ளுக்கு அருளப்பட்டதை அறிவித்து விடுங்கள். நீங்கள் அவ்வாறு செய்யாவிடில் அவனுடைய தூதை நிறைவேற்றியவராக மாட் டீர்கள்''. (5:67)

''ஆகவே, உங்களுக்கு ஏவப்பட்டதை நீங்கள் அவர்களுக்கு வெளிப்படையாக அறிவித்து விடுங்கள். மேலும் இணைவைத்து வணங்கும் இவர்களைப் புறக்கணித்து விடுங்கள்''. (15:94)

''உங்களுக்கு அறிவிக்கப்பட்ட உங்கள் இறைவனின் வேதத்தை தொடர்ந்து ஓதிக் கொண்டிருங்கள். அவனுடைய கட்டளைகளை எவராலும் மாற்றி விட முடியாது. அவனையன்றி பாதுகாப்பான இடமொன்றையும் நீங்கள் காண மாட்டீர்கள்''. (18:27)

''உங்களுக்கு அறிவிக்கப்பட்ட இந்த வேதத்தை மக்களுக்கு நீங்கள் ஓதிக் காண்பித்து தொழுகையைக் கடைப்பிடித்து வாருங் கள்''. (29:45)

''உங்களில் சிறந்தவர்கள் அல்-குர்ஆனைக் கற்று மற்றவர்களுக் கும் கற்பிப்பவர்களே''. (ஹதீஸ்)

''நீங்கள் நல்லுபதேசம் செய்யுங்கள். நிச்சயமாக நல்லுபதேசம் நம்பிக்கையாளர்களுக்குப் பயன் அளிக்கும்''. (51:55)

''நாம் உங்களை இவ்வுலகில் உள்ள எல்லா மனிதர்களுக்குமே நற்செய்தி கூறுபவராக அனுப்பி வைத்துள்ளோம்''. (34:28)

அல்-குர்ஆனை வாசித்தல், ஓதுதல், ஆராய்தல் என்பன 'திக்ர்' (இறைவனை நினைவுகூர்தல்) என்பதன் பிரிக்க முடியாத கூறுக ளாகும். அந்த வகையில், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளோடு ஒருங் கிணைந்த விதமாக அல்-குர்ஆனிய கருப்பொருள்களை பார்வை யிடும் வாய்ப்பை ஊடகங்கள் இரசிகர்களுக்கு வழங்கலாம். அல்-குர்அனின் தெரிவு செய்யப்பட்ட சில பகுதிகளின் நேரடி மொழி பெயர்ப்பு மற்றும் விவரணம் என்பனவும் இதிலடங்கும்.

இவ்வாறான நிகழ்ச்சிகள் இன்று சில முஸ்லிம் நாடுகளில் -வரையறுக்கப்பட்ட அமைப்பில்- காண்பிக்கப்படுகின்றன. குறிப் பாக முஸ்லிம்களது வார விடுமுறை நாளாகிய வெள்ளிக்கிழமை யில் இந்த வாய்ப்பு வழங்கப்படுகிறது. நிலைமைகளுக்கு ஏற்ப இங்கு பொருத்தமான அல்-குர்ஆன் வசனங்கள் பகுப்பாய்வுக்கும் சிந்தனைக்கும் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் மக் களது அறிவும் ஆர்வமும் உற்சாகமும் அதிகரிக்க வாய்ப்பு ஏற் படுகிறது. அல்-குர்ஆனைப் போதிப்பதற்கான மற்றொரு காரணி தஃவா ஆகும். தஃவா என்பது இஸ்லாத்தைப் பற்றித் தெரியாத வர்களை அந்த வாழ்க்கை முறையைப் பற்றி மேலும் கற்றுக் கொள்ள விடுக்கப்படுகின்ற அழைப்பாகும். இவ்விடயத்தில் அல்-குர்ஆன் தனது கொள்கையை இவ்வாறு முன்வைக்கிறது:

''(இந்த) மார்க்கத்தில் நிர்ப்பந்தமே இல்லை''. (2:256)

இஸ்லாத்தைப் பற்றி அறிந்திராத ஒரு மக்கள் கூட்டத்துக்கு இஸ்லாத்தின் உன்னதமான இயல்புகள் பற்றி எடுத்துரைப்பது மேற்குறித்த எண்ணக்கருவை இஸ்லாமிய ஊடகத்தில் செயலுருப் படுத்துவதற்கான ஓர் எடுத்துக்காட்டாக அமையும்.

கடைசியில், மனிதகுலத்தின் ஒரே நோக்கம் 'திக்ர்' (இறை வனை நினைவுகூர்தல்) என்பதை செயற்படுத்துவதே. அந்த வகையில், எந்தமுஸ்லிம் ஊடகத்தினதும் குறிக்கோள் இந்த அடிப்படையைக் கொண்ட மாதிரியாகத்தான் அமைய வேண் டும். தனது பணியைப் பூர்த்தி செய்வதற்கு அது இக்கருத்தாக்கத் துடன் இணைந்த வகையில் நன்கு கட்டமைக்கப்பட்ட அணுகு முறை ஒன்றை கொண்டிருக்க வேண்டும். முஸ்லிம் ஊடக மாதிரிக்கான முறைமைகள் பற்றிய ஆய்வொன்றுடனேயே எனது கலந்துரையாடலும் தொடர்கிறது.

## முறைமை:

குர்ஆனும் ஸுன்னாவும் இரு கண்ணோட்டங்களில் பார்க்கப் பட முடியும். முதலில், இவை ஒவ்வொன்றும் தெளிவான கொள்கைகளையும் கட்டளைகளையும் உள்ளடக்கிய தொகுப்பு களாகும். அடுத்து, குர்ஆனும் ஸுன்னாவும் தமக்கே உரிய முறைமைகளைக் கொண்டவை. ஒரு வெகுசன ஊடகத்தின் அமைப்பை அம்முறைமைகள் கொண்டிருக்கின்றன.

இங்கு ஒரு விடயம் கவனிக்கப்பட வேண்டும். 1400 வருடங் களாக அல்-குர்ஆன் அதன் அசல் வடிவத்தில் அப்படியே நிலைத்து நிற்கின்றது. அதேபோல் நபி (ஸல்) அவர்களின் பாரம்பரியமும் பொன்மொழிகளும் பல நூல்களாக தொகுக்கப் பட்டு பேணப்பட்டு வருகின்றன. அவை நபி (ஸல்) அவர்கள் மரணம் அடைந்த குறுகிய காலத்துக்குள் தொகுக்கப்பட்டவை. அவற்றில் இடம்பெற்றுள்ள உள்ளடக்கத்துக்கான அங்கீகாரமும் அதிகாரமும் ஒரு சங்கிலித் தொடராக ஊர்ஜிதம் செய்யப்பட்டுள் ளது. இஸ்லாமிய வரலாறு முழுவதும் முஸ்லிம்கள் குர்ஆனை மனனம் செய்து வந்துள்ளனர். தங்களிடம் உள்ள எல்லா வளங் களையும் பயன்படுத்தி பாடசாலை முதல் சமயப் பாடசாலை வகுப்புக்கள் வரை பல்வேறு மட்டங்களில் அதை படித்து வந்துள்ளனர். இஸ்லாமிய கலை மற்றும் இலக்கிய வடிவங்களில் அது பிரதிபலித்தும் வந்துள்ளது. உலகிலுள்ள எழுத்து வடிவம்

கொண்ட -கிட்டத் தட்ட- எல்லா மொழிகளிலும் அது மொழி பெயர்ப்பும் செய்யப்பட்டுள்ளது. இப்போதும் கூட குர்ஆன் மற்றும் ஹதீஸ் பிரதிகள் இலட்சக்கணக்கில் புழக்கத்தில் உள் ளன. முஸ்லிம்கள் வாழும் ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தபட்சம் ஒரு குர்ஆன் பிரதியாவது பாவனையில் இருக்கின்றது. இஸ் லாத்தை பின்பற்றும் ஒவ்வொரு முஸ்லிமாலும் தினசரி ஒரு சில குர்ஆன் வசனங்களாவது ஓதப்படுகின்றன. ஏதோ ஒரு விஷேட காரணத்துக்காக அல்லது உரிய வழிகாட்டலை வேண்டி அல்லது கடமையாக்கப்பட்டுள்ள ஐவேளை தொழுகையில் இவை ஓதப் படுகின்றன.

அல்-குர்ஆனை அதன் வடிவத்திலேயே நாம் ஆராய்ந்து பார்த் தால் அதுவே ஒரு வெகுசன ஊடகமாக இருப்பதைப் புரிந்து கொள்ளலாம். அது செய்தியை முன்வைக்கும் வழிமுறைகளை யும் கட்டமைப்புக்களையும் கூட நாம் உணர முடியும். தற்காலத் தில் ஒரு இஸ்லாமிய வெகுசன ஊடக மாதிரியை கட்டமைப்புச் செய்வதற்கு இதில் கூறப்பட்டுள்ள பல வழிமுறைகள் பிரயோ கிக்கப் படலாம்.

- **''உங்களது சொந்த மொழியில்''.**

ஊடகம் என்பது மக்களால் அணுகக் கூடியதாகவும், சுதேச கலாசாரத்தின் ஒரு பகுதியாகவும் கட்டமைப்பாகவும் இருக்க வேண்டியது மிக இன்றியமையாதது. அப்போதுதான் அது மேற் சொன்ன நோக்கங்களை பூரணப்படுத்த முடியும். அல்-குர்ஆன் இது பற்றிக் கூறுவதாவது:

''இதை நாம் உங்களது மொழியில் (இறக்கி) எளிதாக்கி வைத்துள்ளோம்''. (19:97)

''ஒவ்வொரு தூதரும் தம் மக்களுக்கு தெளிவாக விவரித்து கூறும் பொருட்டு அந்தந்த மக்களின் மொழியைக் கொண்டே நாம் அவர்களை அனுப்பி வைத்தோம்'' (14:4)

*''நபி (ஸல்) அவர்கள் தமது வார்த்தைகளை மூன்று முறை மீட்டிக் கூறுவார்கள், தான் சொல்வதை மக்கள் முற்றாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக''. (ஹதீஸ்)*

*''நபி (ஸல்) அவர்கள் மிகத் தெளிவாகவும் தனித்துவமாகவும் பேசுவார்கள்; கேட்டுக் கொண்டிருப்பவர் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக''. (ஹதீஸ்)*

வரலாறு முழுவதும் அனுப்பப்பட்ட நபிமார்கள் சிறந்த தொடர் பாடலாளர்களாக இருந்துள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரும் தமக்கே உரிய பிரத்தியேகமான வழிமுறைகளை அதற்காக கையாண்டனர். அவர்கள் கடைப்பிடித்த வழிமுறைகளில் மிகவும் முக்கியமானது (அல்-குர்ஆன் உட்பட) உள்ளூர் மக்கள் பாவித்த மொழியைப் பயன்படுத்தியமையாகும். இதனால் அவர்கள் மக்க ளோடு தொடர்புபட்டவர்களாகவும் அந்த மக்கள் மத்தியில் நம்பிக்கைக்கு உரியவர்களாகவும் ஆனார்கள். இங்கு மொழி என்பது ஒரு தொடர்பாடலின் எழுத்து வடிவத்தையும் பேச்சு வடிவத்தையும் மட்டும் குறிக்கவில்லை. குறியீடுகள், சங்கேதங் கள், வழக்காறுகள் மற்றும் சுதேச கலாசாரத்துக்கு விசேடத்துவ மான அம்சங்கள் என்பனவும் அதில் அடங்கும். அந்த வகையில் இஸ்லாமிய வெகுசன ஊடகம் எல்லோராலும் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். எளிமையாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டும். மேட்டுக் குடியினருக்கு மாத்திரம் உரிய தாகவோ, அந்நிய நோக்கு நிலையை அல்லது எண்ணக்கருவை அல்லது வடிவத்தை பிரதிபலிப்பதாகவோ அமைந்து விடக் கூடாது. மக்களால் மக்களுக்கான ஊடகமாக அது இருக்க வேண் டும். அல்-குர்ஆன் இதனை இவ்வாறு விளக்குகிறது:

*''அவர்கள் விளங்கிக் கொள்வதற்காக நாம் நமது வசனங்களை எவ்வாறு பல வகைகளில் தெளிவுபடுத்திக் கூறுகின்றோம் என்று நீங்கள் கவனியுங்கள்''. (6:65)*

*''இந்த குர்ஆனில் நாம் (பற்பல வகைகளில்) விளக்கியுள் ளோம்''. (17:41).*

உள்ளூர் 'மொழி'யில் விடயங்கள் விளக்கப்படுவது மட்டு மல்ல; வித்தியாசமான பல கோணங்களில் இருந்தும் முக்கிய மான அம்சங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. அல்-குர்ஆன் விவகாரங்களை தனிநபர், சமூகம், கதைகள், நீதிக்கதைகள், உவமை -உருவகங்கள், தெளிவான கட்டளைகள் என பல வடி வங்களில் கையாள்கிறது.

அல்-குர்ஆன் முழுவதும் தர்க்கங்களும் நியாயங்களும் முன் வைக்கப்பட்டுள்ளன. நிரூபணங்கள், விளக்கங்கள், விவரிப்பு, தெளிவுபடுத்தல் என பல உத்திகள் அதில் கையாளப்பட்டுள் ளன. விவாதங்களுக்கு இடமளிக்கப்பட்டு முடிவுகள் தர்க்க அடிப்படையில் எட்டப்பட்டுள்ளன.

அல்-குர்ஆன் அதன் தூதை முன்வைக்கும் மற்றொரு பாணியை கீழ்வரும் வசனங்கள் காட்டுகின்றன:

''நல்ல வார்த்தைக்கு அல்லாஹ் எவ்வாறு உதாரணம் தருகிறான் என்பதை நீர் கவனிக்கவில்லையா..?'' (14:24)

''மனிதர்களுக்காகவே இவ்வுதாரணங்களை நாம் கூறுகின் றோம். அறிவு உடையவர்களைத் தவிர மற்ற எவரும் இவற்றை உணர்ந்து கொள்ள மாட்டார்கள்''. (29:43)

அல்-குர்ஆனில் ஒரு குறிப்பிட்ட விடயத்தை முன்வைக்க அல்லது விளக்க நீதிக்கதைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவற் றுக்கான உதாரணங்கள் பல இடங்களில் மழை, மேகம், தானியம், பயிர் போன்ற இயற்கை அம்சங்களில் இருந்து பெறப்படுகின் றன. இவ்வுதாரணங்களில் உள்ளூர் 'மொழி'யே பயன்படுத்தப் பட்டுள்ளது. மனிதர்களால் இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடிய கருப்பொருளும் கூறுகளும் அதில் கையாளப்பட்டுள்ளன. மனித னுடைய அன்றாட வாழ்வுக்கும் அகன்று விரிந்த அகிலத்துக்கும் இடையிலுள்ள தொடர்பையும் நோக்கத்தையும் அல்-குர்ஆன் எடுத்துக் காட்டுகிறது. மனிதனது தினசரி வாழ்வு பரந்த அகிலத் தோடு உள்ளூர தொடர்புபடும் கண்ணோட்டத்தை அது முன்

வைக்கிறது. அனைத்தும் இறைவனின் திட்டமிடலின் படியே நகர்கின்றன என்பதையும் அது வலியுறுத்துகிறது.

இஸ்லாமிய ஊடகத்திலும் ஒரு நாடகத்தின் காட்சியானது பழக்கப்பட்ட படங்களையும் காட்சிகளையும் பிரதிபலிப்பதாகவே இருக்கும். நிகழ்வுகளை கற்பனை மற்றும் குறியீட்டு மாதிரிகள் மூலம் அது முன்வைக்கலாம். ஆனால் அவை இயல்பான அன்றாட வாழ்வு முறைகளோடு தொடர்புபட்டிருக்க வேண்டும். பார்வையாளர்கள் முதலில் இதை பொழுதுபோக்காகவே நோக்குவர். ஆனால் அவர்களது அன்றாட இயல்பு வாழ்வோடு அவை கொண்டுள்ள தொடர்பு அவர்களில் சில ஆக்கபூர்வமான தாக்கங்களை ஏற்படுத்தும். எனவே, அல்-குர்ஆனை முன்னுதாரணமாகக் கொண்ட ஊடகங்கள் தினசரி நிகழ்வுகளோடு தொடர்புபட்ட ஆக்கங்களை வழங்குவது அவசியம். அவை விரிந்த சமூகத்தோடும் ஒட்டு மொத்த படைப்புகளோடும் சம்பந்தப்பட்டவையாக இருக்க வேண்டும்.

## • சகிப்புத் தன்மை.

குர்ஆனிய வழிமுறையின் கீழ் தேவைப்படும் இன்னொரு முக்கிய விடயமும் அணுகுமுறையும் ஏனைய கருத்தியல்கள் மற்றும் கண்ணோட்டங்கள் மீதான சகிப்புத்தன்மையைப் பேணுதலாகும்.

''நற்செய்திகளைக் கூறுபவர்களாகவும் எச்சரிக்கை செய்பவர்களாகவுமே நாம் நபிமார்களை அனுப்பி வைத்தோம்''. *(6:48)*

''அல்லாஹ் அல்லாத எவற்றை அவர்கள் (இறைவன்) என அழைக்கின்றார்களோ அவற்றை நீங்கள் திட்டாதீர்கள். அதனால் அவர்கள் -அறியாமையின் காரணமாக- வரம்பு மீறி அல்லாஹ்வை திட்டுவார்கள்''. *(6:109)*

''(நபியே) கூறுங்கள்: நான் உங்களுக்கு எச்சரிக்கை செய்வதெல்லாம் வஹி மூலம் எனக்கு அருளப்பட்டவைகளே''. *(21:45)*

சில வகையான இறை நிந்தனைகளுக்கு முகம் கொடுக்கின்ற போது அவை தொடர்பாக அர்த்தமற்ற வாக்குவாதங்களில் ஈடு படாமல் அவற்றை புறக்கணிக்குமாறு அல்-குர்ஆன் விசுவாசி களுக்கு நினைவூட்டுகின்றது.

*''நம் வசனங்களைப் பற்றிய விவாதங்களில் மூழ்கிப் போவோ ரைக் கண்டால், அவர்கள் அதனைத் தவிர்த்து வேறு விஷயத்தில் பிரவேசிக்கும் வரை நீங்கள் அவர்களைப் புறக்கணித்து விடுங் கள்''.(6:68)*

தாம் அறிந்து கொண்ட உண்மைகளை மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்வது மட்டும்தான் நபி (ஸல்) அவர்களது பணியாக இருந்தது. ஏனைய கண்ணோட்டங்களை, வாழ்வு முறைகளை அல்லது கருத்தியல்களை கண்டிக்கும் ஆணை நபிக்கு வழங்கப் படவில்லை. அல்-குர்ஆனும் மிக அடிப்படையான விடயங்கள் பற்றி மட்டுமே பேசுவதால், அதன் வசனங்கள் உறுதியாகவும் என்றும் பொருத்தமானவையாகவும் உள்ளன.

இதே விதமானதோர் அணுகுமுறைதான் இஸ்லாமிய ஊடகத் துக்கும் அவசியமாகின்றது. அல்-குர்அனின் வழிகாட்டலுக்கு இசைவாக பதில் சொல்ல வேண்டிய விடயங்களுக்கு அது பதில் சொல்ல வேண்டும். யதார்த்தத்தோடு முரண்படும் விடயங்களை அறிவுபூர்வமாக சமநிலைக் கண்ணோட்டத்தில் விளக்க வேண் டும். ஊடகம் என்பது தன்மீது விதிக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுகின்ற போது, தன்னை மட்டுமே தற்காத்துக் கொள் ளும் ஒன்றாகவோ மற்றவர்களைக் குறை கூறும் ஒன்றாகவோ இருக்கக் கூடாது.

*''அவர்கள் எத்தகையவர்கள் என்றால், பேச்சை செவியுற்று அதில் மிக அழகியதை மட்டும் பின்பற்றி நடப்பார்கள். இவர் களையே அல்லாஹ் நேரான பாதையில் செலுத்துகின்றான். இவர்கள் தாம் உண்மையிலேயே அறிவுடையவர்கள்''. (39:18)*

உண்மையான தகவல்கள் தெளிவான முறையில் முடியுமான வரைக்கும் அப்படியே பார்வையாளர்களுக்கு வழங்கப்பட

வேண்டும். பார்வையாளர்களின் அறிவு விவேகத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். சொல்லப்படுகின்ற விடயங்கள் பற்றி அவர் களின் சொந்தக் கருத்துக்களின் படி முடிவுகளுக்கு விட வேண் டும். சகிப்புத்தன்மை உள்ள ஊடகம் என்பது எல்லா செய்தி களுக்கும் செய்தி அறிக்கைகளுக்கும் இடமளிக்க வேண்டும். விரிவான வியாக்கியானங்களுக்கு இடமில்லை. ஒருவேளை ஊட கத்துக்கு வியாக்கியானம் வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட எல்லா தரப்புக்கள் மீதும் நியாயமான கவனம் செலுத்திய பின்பு அதைச் செய்யலாம். தெரிவு செய்யப்படும் வியாக்கியானம்கூட முன்னர் நாம் குறிப்பிட்ட ஊடகங்களின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதாக அமைய வேண்டும்.

## வகைகூறலும் திறம்படச் செய்து முடித்தலும்:

முஸ்லிம்களுடைய நம்பிக்கையின் முக்கியமான அம்சம் ஒவ் வொரு செயலுக்கும் எண்ணத்துக்குமான பொறுப்புக் கூறலாகும். அல்-குர்ஆன் இந்த விடயத்தை பல வழிகளில் கையாளுகின்றது. ஒவ்வொரு தனிநபரும் தனது செயற்பாடுகளுக்காக கட்டாயம் பொறுப்புக் கூற வேண்டும் என்று அது பிரகடனம் செய்கின்றது.

*''நிச்சயமாக இது உங்களுக்கும் உங்களுடைய சமூகத்தாருக் கும் ஒரு நல்லுபதேசமாகும். பின்னர் நீங்கள் (இதைப் பற்றி) கேள்வி கேட்கப்படுவீர்கள்''.(43:44)*

*''இது முற்றிலும் உண்மையாக இருந்தும் உங்களுடைய மக்கள் இதனை பொய்யாக்குகின்றனர். ஆகவே நீங்கள் கூறுங்கள்: 'நான் உங்களுடைய பொறுப்பை ஏற்றுக் கொள்ள மாட்டேன்''. (6:66)*

இதன்படி எந்தவொரு செயற்பாடும் தக்க காரணங்கள் இன்றி இடம்பெற முடியாது என்ற பொறுப்பு உணர்த்தப்படுகின்றது. அல்-குர்ஆனுடைய எல்லா கண்ணோட்டங்களிலும் இது அடிப் படையாகின்றது. இந்தப் பொறுப்புக் கூறலை முஸ்லிம்கள் உணர்ந்து ஏற்றுக் கொண்டு விட்டால் உண்மையானதும் சரியான தும் எனக் கருதும் செயற்பாடுகளை மட்டுமே மேற்கொள்வர். பல இடங்களில் அல்-குர்ஆன் இது பற்றிக் குறிப்பிடுகின்றது:

''நீங்கள் உண்மையை அறிந்து கொண்டே அதனை மறைத்துப் பொய்யை உண்மையென புரட்டி விட வேண்டாம்''. *(2:42)*

''முற்றிலும் உண்மையைக் கொண்டே இவ்வேதத்தை நாம் இறக்கினோம். அதுவும் உண்மையைக் கொண்டே இறங்கியது''. *(17:105)*

''உண்மையைக் கொண்டு வந்தவராகிய நமது தூதரும், அதனை உண்மையென்றே நம்பியவர்களும்தாம் இறை அச்சம் உடைய வர்கள்''. *(39:33)*

இறுதியாக, உண்மையை நிலைநிறுத்த வேண்டும் என்ற இந்த உச்ச கட்ட ஈடுபாடு ஒரு முஸ்லிமை தான் செய்யும் எல்லா காரியங்களையும் மிகவும் பூரணமாகவும் உன்னிப்பாகவும் கவ னித்துச் செய்ய தூண்டுகின்றது. இன்னோர் இடத்திலும் இது பற்றி அல்-குர்ஆன் பேசுகின்றது:

''புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே. அவன்தான் தனது அடியார் மீது இவ்வேதத்தை இறக்கி வைத்தான். இதில் அவன் எத்தகைய குறைபாட்டையும் கோணலையும் வைக்கவில்லை. நேராகவும் உறுதியாகவும் இது அமைக்கப் பட்டுள்ளது. கடுமை யான தண்டனை குறித்து (நிராகரிப்பாளர்களை) எச்சரிக்கை செய்யவும்...'' *(18: 1-2)*

ஆக, அல்-குர்ஆன் உண்மையை முன்வைப்பது மட்டுமல்ல; அந்த உண்மையைச் சொல்லுவதில் வெளிப்படையாகவும் தெளி வாகவும் அது உள்ளது. புதிர்களில் இருந்தும் தெளிவற்றவற்றில் இருந்தும் அது விடுபட்டுள்ளது. அல்-குர்ஆனில் தரப்பட்டுள்ள உண்மைகளை சரிபார்ப்பது பற்றி அது இவ்வாறு குறிப்பிடுகின்றது:

''நம்பிக்கையாளர்களே! யாராவது ஒரு விஷமி உங்களிடம் ஏதாவது செய்தியைக் கொண்டு வந்தால், தீர்க்கமாக விசாரணை செய்து கொள்ளுங்கள். அவ்வாறன்றி அறியாமையால் ஒரு சமூகத் தாருக்கு நீங்கள் தீங்கிழைத்து விட்டால் பின்னர் அது பற்றி நீங் களே துக்கப் படும்படி நேர்ந்து விடும்''. *(49:6)*

''இதற்கு வேண்டிய நான்கு சாட்சிகளை அவர்கள் கொண்டு வந்திருக்க வேண்டாமா? இதற்குரிய சாட்சிகளை அவர்கள் கொண்டு வராததினால் நிச்சயமாக அவர்கள் பொய்யர்கள்தாம் என்று அல்லாஹ்விடத்தில் நிரூபணமாகி விட்டது''. (24:13)

நம்பகத் தன்மையைப் பேணுவதற்காகவும், துல்லியமான தக வல்களை வழங்குவதற்காகவும் ஊடகம் பெரும்பாலும் -ஏனைய எல்லா துறைகளையும் விட-தனக்குச் சாத்தியமான ஆற்றலி லேயே பெரிதும் தங்கியுள்ளது. அந்தத் தரத்தில் இருந்து அது விலகிச் செல்ல முடியாது. அவ்வாறு விலகிச் சென்றால் தனது இரசிகர்களுக்கு அது வகை கூற வேண்டியிருக்கும். தற்கால சமூ கத்தின் கருத்தியல் மற்றும் ஒழுக்கப் பெறுமானங்கள் மாற்ற மடைந்து வருவதால் ஊடகமும் ஒரு தொகுதி புதிய 'உண்மை களை' எடுத்தாண்டு வருகிறது. புதிய விவகாரங்களுக்காக அது குரல் கொடுக்கிறது. உதாரணமாக, சமூகத்தில் அடிமை முறை ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருந்த காலத்தில் ஊடகம் பொது வாக அதற்கு சார்பான போக்கை கொண்டிருந்தது. அதேபோல், மிக அண்மைக் காலம் வரை ஆண்/பெண் ஒரு பால் சேர்க்கை யாளர்களுக்கான உரிமைகள் என்பது வழக்கத்தில் இருக்கவில்லை. ஆனால் தற்கால ஊடகம் இவற்றை அடிப்படை உரிமைகளாக நோக்கும் மனோபாவத்தையே பொதுவாக கொண்டுள்ளது.

எது எவ்வாறிருப்பினும், இஸ்லாமிய ஊடகம் என்பது -ஏனைய எல்லாவற்றுக்கும் மேலாக- இறைவனுக்கு பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாடு கொண்டது. ஒரு புதிய விடயம் பிரபலம் அடைந்து வருகின்றது என்பதற்காகவோ, சமூக அந்தஸ்து பெற்று வருகின்றது என்பதற்காகவோ இஸ்லாமிய ஊடகம் அதற்கு கண் மூடித் தனமாக ஆதரவு வழங்க முடியாது. ஏனெனில் இரசிகர் களுக்கு எது சித்தரித்துக் காட்டப்படுகின்றது என்பதிலும் அடிப் படையான பொறுப்புக் கூறல் தங்கி உள்ளது.

ஊடகம் என்பது உண்மைகள் மற்றும் தகவல்கள் தொடர்பான தமது ஆய்வில் மிக நுட்பமான கவனம் செலுத்த வேண்டும்.

தவறுகளுக்கோ ஊகங்களுக்கோ இடமளிக்க முடியாது. தீர்க்க மான ஆதாரங்கள் இல்லாத எதையும் சொல்லக் கூடாது. அனு மானங்களை வெளியிடவும் கூடாது. நம்பத் தகுந்த மூலங்களை அல்லது ஆதாரங்களை கண்டுகொள்ள முடியாவிட்டால் அந்த ஆதார மற்ற செய்திகள் அவதூறாகவும் குற்றமாகவும் மாறிவிடும். நம்பத் தகுந்த மூலங்கள் இல்லாதிருப்பது எப்படிப் போனாலும் ஒரு நம்பத் தகுந்த மூலம் இல்லையே என்று கூட தற்கால ஊடகங்கள் சில சமயம் அலட்டிக் கொள்வதில்லை. போதிய ஆதாரங்கள் இன்றி செய்திகளையும் தகவல்களையும் வெளியிடுவது ஊடக நிறுவனங்கள் மீது அவற்றின் இரசிகர்கள் கொண்டுள்ள நம்பிக்கையை தவறாக வழிநடத்துவதற்கு சமமாகும். அத்தோடு அவர்கள் தொடர்பில் நிறுவனத்துக்கு இருக்க வேண்டிய பொறுப்புக் கூறலை மீறுவதாகவும்அது அமையும்.

ஊடகங்கள் பல வழிகளில் பயன்படுத்தப்படுகின்றன. எதிர் காலத்தில் இடம்பெறக் கூடிய நிகழ்வுகள் மற்றும் அபாயங்கள் தொடர்பான எச்சரிக்கைகள் என்பவற்றுக்கும் அவை பயன்படுத் தப்படுகின்றன. அந்த வகையில் ஒரு விடயம் முக்கியமானது என உணரப்பட்டால் அதற்கான கொள்கைகள் வகுக்கப்பட்டே அது செயற்பட வேண்டும். இலாபத்தை மட்டும் நோக்காகக் கொண்டு அரைவாசிப் பொய்களை கலந்து தகவல்களை வெளியிடாமல் உண்மையான சேவையை அடிப்படையாகக் கொண்டு சரியான தகவல்கள் வெளியிடப்பட வேண்டும். ஊடகங்கள் பல நேரங் களில் யதார்த்த வாழ்வுக்குரிய தீர்மானங்களைப் பெறுவதற்கு அவசியமான தகவல்களை வழங்கும் இடமாகவும் இருப்பது வெளிப்படையானது.

## வரலாற்று ரீதியான பாடங்கள்:

சில பாடங்களை கற்பிப்பதற்கு அல்-குர்ஆனும் நபியவர்களும் கையாண்ட இன்னொரு வழிமுறை முன்னைய சமூகங்கள் பற்றிய வரலாற்று ஆய்வாகும். அக்கால சமூகங்களை திருத்தியமைத்த நிகழ்வுகளும் இதிலடங்கும். அல்-குர்ஆன் இப்படிக் கூறுகின்றது:

''நபியே இச்சமூகங்களின் சரித்திரத்தை நாம் உங்களுக்கு கூறுகின்றோம். அவர்களுக்கு அனுப்பப்பட்ட தூதர்கள் நிச்சயம் தெளிவான வசனங்களையே கொண்டு வந்தனர்''. *(7:101)*

''இது நீங்கள் அறியாத செய்திகளாகும். வஹி மூலமாகவே நாம் இவற்றை உங்களுக்கு அறிவிக்கின்றோம். இதற்கு முன்னர் நீங் களோ உங்கள் சமூகமோ இவற்றை அறிந்திருக்கவில்லை''. *(11:49)*

''உங்கள் உள்ளத்தை திடப்படுத்தவே நம் தூதர்களின் சரித்திரங் களில் இருந்து இவை அனைத்தையும் உங்களுக்கு கூறினோம். இவற்றில் உங்களுக்கு உண்மையும் நல்லுபதேசமும் நம்பிக்கை யாளர்களுக்கு நினைவூட்டுதலும் இருக்கின்றன''. *(11:120)*

''அறிவுடையவர்களுக்கு இவர்களுடைய சரித்திரங்களில் நல்ல தோர் படிப்பினை நிச்சயமாக இருக்கின்றது. (இது) பொய்யான கட்டுக் கதை அல்ல. கடந்து சென்ற சம்பவங்களின் விரிவான விளக்கமாக இருக்கின்றது. நம்பிக்கையாளர்களுக்கு நேரான வழியாகவும் ஓர் அருளாகவும் இருக்கின்றது''. *(12:111)*

''அவர்கள் பூமியில் சுற்றித்திரிந்து பார்க்கவில்லையா? அவ் வாறாயின், இவர்களுக்கு முன்னர் (விஷமம் செய்து கொண்டு) இருந்தவர்களின் முடிவு எவ்வாறாயிற்று என்பதை அவர்கள் கண்டு கொள்வார்கள்''. *(47:10)*

காலத்தையும் இடைவெளியையும் கொண்டு எந்த ஒரு சமூக மும் தனிமைப்படுத்தப்படவில்லை. வரலாறு என்பது தொட ரானது. அதில் நாம் எல்லோருமே ஓர் அங்கம். எமக்கு முன்னே உள்ள சமூகங்களின் செயற்பாடுகளும் முடிவுகளும் எமது சொந்த உலகக் கண்ணோட்டத்தை வடிவமைத்துக் கொள்வதில் மிக முக்கிய பங்காற்றி உள்ளன. அதேபோல் எமது செயற்பாடுகளும் நிச்சயம் அடுத்து வரும் தலைமுறைகளில் தாக்கத்தை ஏற்படுத் தும் என்பதில் சந்தேகம் இல்லை. கடந்த காலத்தை கற்பதன் மூலம் வரலாற்றின் சுழற்சி இயல்பை ஒருவர் நன்கு அவதா னிக்கலாம். அதன் மூலம் பாடங்களையும் கற்கலாம். எமக்கு முன்னைய சமூகங்களை உருவாக்கிய காரணிகள் அளப்பரியவை;

ஆக்கபூர்வமானவை. அதேபோல் வீழ்ச்சிகளையும் சிதைவுகளை யும் ஏற்படுத்திய காரணிகளும் உள்ளன. அவற்றையும் நாம் கவனமாக ஆராய வேண்டும். ‘கடந்த காலத்தின் மூலம் கற்றல்’ மற்றும்‘வரலாறு மீண்டும் திரும்பி வரும்’ஆகியகோட்பாடுகள் இஸ்லாமிய ஊடக மாதிரியில் வெறும் கருத்தியல்களாக மாத் திரம் கொள்ளப்பட முடியாது.

முன்னர் நாம் குறிப்பிட்டது போல், வரலாற்று உதாரணங்கள் மூலம் ஊடகத்தின் நோக்கம் எட்டப்பட முடியும். மனிதன் என்பவன் பிரபஞ்ச இருப்பின் இறுதி முடிவல்ல என்பதை வரலாற்றுச் சம்பவங்கள் நினைவுபடுத்துகின்றன. ஊடகம் அதன் பார்வையாளர்களுக்கு வரலாற்று நிகழ்வுகளின் ஓர் அங்கமான போராட்டங்கள் பற்றி அறிவூட்டுகின்றது. இது பார்வையாளர் களின் அடையாள உணர்வைப் பலப்படுத்துவதுடன் சமூகம் ஏற்றுக்கொண்ட பெறுமானங்களையும் மீள உறுதி செய்கின்றது. கடந்த காலத்தின் கவர்ச்சி மிக்க பிம்பங்கள் கூட வருங்கால தலைமுறையை உற்சாகப்படுத்தக் கூடியவைதான்.

வரலாற்றுக் கருப்பொருள்களை எந்தவொரு ஊடகத்தோடும் ஒருங்கிணைத்துக் கொள்ளலாம். இரசிகர்கள் மத்தியில் சாதகமான வகையில் பன்முகத்தன்மையை ஏற்படுத்தும் அளவுக்கு அவற்றை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தலாம். வரலாற்று நிலைமைகளை அடிப்படையாகக் கொண்ட திரைப்படங்கள் நாடகங்கள் என்பன வற்றையும் தற்கால நிலைமைகளை விளக்கும் வகையில் பயன் படுத்தலாம்.

## விழுமிய நெறிமுறைகள்:

அறிவியல் மறுமலர்ச்சியின் ஆரம்பம் தொட்டு மேற்குலகம் படிப்படியாக சமயத்தை பொது வாழ்விலிருந்து பிரித்து விட்டது என தொடர்பாடல் விழுமியங்கள் பற்றிய தனது கலந்துரை யாடலில் ஹமீத் மௌலானா குறிப்பிடுகிறார். இந்தப் பிரிவினை யின் காரணமாக ஒரு செயற்பாடு ஒழுக்கமானதா இல்லையா என்ற முடிவு தனிமனித மனச்சாட்சிக்கே அங்கு விடப்பட்டது.

எவ்வாறாயினும் இத்தகைய செயற்பாடுகள் அறநெறி தொடர்பான பொதுப் புத்தியில் குறுக்கீடு செய்யாத வரைக்குமே செல்லுபடியாகும். இஸ்லாத்தின் வரலாற்றைப் பொறுத்த வரையில் இத்தகைய பிரிவினை எங்குமே இடம்பெறவில்லை. இஸ்லாமிய சமூகத்தில் தனிமனிதனை முழுமையாக திசைப்படுத்துவது சமயம் தான். தனிநபரின் பொதுவான நடத்தைகள் இஸ்லாமிய சமய-சமூக விழுமியங்களால் ஒழுங்கமைக்கப்படுகின்றன. இந்த வகையில், இஸ்லாமிய விழுமியங்கள் ஏக காலத்தில் சமூகம் சார்ந்தவையாகவும் சமயம் சார்ந்தவையாகவும் உள்ளன. மதச்சார்பற்ற நெறிமுறைகளோஅடிப்படையில் சமூகத்தோடு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டவையாக உள்ளன.

முஸ்லிம்கள் மிக உயர்ந்த தரத்திலான நோக்கமும் விழுமியமும் கொண்டோராக இருக்க வேண்டும் என வேண்டப்பட்டுள்ளதால், அதற்கேற்ற நெறிமுறைகளைப் பேணுவது அவர்களது கடமை ஆகிறது. ஒவ்வொரு நபரிடமும் தனிப்பட்ட மட்டத்தில் அவரை வழிநடாத்தும் நோக்கங்கள் தொடர்பிலான ஆழ்ந்த இறை விசுவாசம் (தக்வா) காணப்படுவது அவசியம். அத்தகைய விசுவாசத்தில் இருந்தே ஓர் உயர்ந்த நோக்கத்தை செயலூக்கப்படுத்தக் கூடிய ஒழுக்கக் கோவை பிறக்கும்.

அல்-குர்ஆனும் ஸுன்னாவும் சகல தொழில் துறைகளுக்குமான பொதுவான நடத்தைக் கோவையை வழங்குகின்றன. அவற்றில் இருந்து ஊடகத்துறை சார்ந்தோருக்கான வழிகாட்டல்களும் ஆய்ந்தறியப்பட முடியும். பரந்துபட்ட குழுவொன்றினுள் இணக்கமாக தொழிற்படக் கூடிய தனிநபரை கட்டி எழுப்புவதே இவ்வழிகாட்டல்களின் நோக்கமாக இருக்கும்.

- **அறிவைத் தேடல்:**

ஒவ்வொரு தனிநபரும் அறிவைத் தேட வேண்டும் என்று இஸ்லாம் கட்டாய கட்டளையை இடுகின்றது. அறிவுக்கு அரபு மொழியில் 'இல்ம்' என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. அல்-குர்ஆனில் இச்சொல் 800 தடவைகளுக்கு மேல் இடம்

பெற்றுள்ளது. அல்-குர்ஆனின் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதி வசனங்கள் காரணங்களைக் கண்டறிதல், சிந்தித்தல், ஆராய்தல், அதற்காக பயணம் மேற்கொள்ளல் என்பவற்றைப் பாராட்டும் வகையிலேயே அமைந்துள்ளன. இந்த எல்லாவற்றையும் நாம் கடைசியாக ஏதோ ஒரு வகையில் ஊடக முன்வைப்புடன் தொடர்புபடுத்த முடியும். உண்மையில், நபி (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட ஆரம்ப வசனங்கள் கூட அறிவையும் வாசிப்பையும் பற்றியே பேசின:

''(அனைத்தையும்) படைத்த உமது இரட்சகனின் திருப் பெயரால் ஓதுவீராக''. *(96:1)*

''ஓதுவீராக! உமது இரட்சகன் மாபெரும் கொடையாளன். அவன்தான் எழுதுகோலைக் கொண்டு கற்றுக் கொடுத்தான். மனிதன் அறியாதவைகளை எல்லாம் அவனுக்கு கற்றுக் கொடுத்தான்''. *(96:3-5)*

ஒட்டுமொத்த மனித குலமும் அறிவுத் தேடலில் ஈடுபட வேண்டும் என அல்லாஹ் எதிர்ப்பார்ப்பதாகத்தான் முஸ்லிம்கள் இந்த வசனங்களுக்கு வியாக்கியானம் அளிக்கின்றனர். அப்போதுதான் அவர்களுடைய அடிப்படை நோக்கம் மிகச் சரியாக முழுமை பெறும். அறிவு தனிமனிதனை இறைவனோடு தொடர்புபடுத்துகின்றது.

''நிச்சயமாக அல்லாஹ்வுடைய அடியார்களில் அவனுக்கு பயப்படுபவர்கள் அறிஞர்களே''. *(35:28)*

அல்-குர்ஆன் அறிவுத் தேடலை பிந்திய வசனங்களிலும் தொடர்ந்து வலியுறுத்துகிறது. ஒரு மனிதன் எந்த ஒரு கட்டத்திலும் தான் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டதாக கூற முடியாது என நபியவர்களது ஹதீஸும் வலியுறுத்துகிறது.

'ஒரு மனிதன் நல்ல அறிவைத் தேடும் முயற்சியில் ஒருபோதும் திருப்தி அடைய முடியாது; அது சுவனத்தில் முடிவடையும் வரை'. (ஹதீஸ்)

'நற்போதனை புரிந்து மக்களுக்கு அறிவுறுத்துபவர்களுக்கு அல்லாஹ் அருள்பாலிக்கின்றான். மலக்குகளும், வானம் பூமியில் வாழும் அனைவரும் அவர்களுக்காக பிரார்த்திக்கின்றனர்'. (ஹதீஸ்)

அறிவுத் தேட்டம் என்பது பாராட்டுக்குரியதாக இருக்கின்ற அதேவேளை, மனிதனது புரிந்து கொள்ளும் ஆற்றல் வரையறைக் குட்பட்டது என்பதையும் அல்-குர்ஆனும் ஸுன்னாவும் வலி யுறுத்துகின்றன. சில விவகாரங்களுக்குப் பின்னாலுள்ள இறை நாட்டம், குறிப்பிட்ட சில சம்பவங்களுக்கான காரண காரியத் தொடர்பு, மறுமை வாழ்வு என்பன விசுவாசத்தின் அடிப்படை யில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவை. மனிதனுடைய பகுப்பாய்வு எல்லைக்குள் அவை அமைய வேண்டும் என்ற கட்டாயம் எதுவும் இல்லை. மனிதர்கள் என்ற வகையில் எமக்கு அப்பால் மிகப் பெரிய அறிவு ஒன்று இருக்கின்றது என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அது எமது சட்டங்களுக்கோ நியா யங்களுக்கோ புரிதலுக்கோ உட்பட்டதல்ல. அந்த அறிவைப் புரிந்துகொள்ளும் ஆற்றலும் எமக்கு இல்லை. அதைப் புரிந்து கொள்ளாமலும் கூட எம்மால் சிறப்பாகப் பணியாற்ற முடியும் என்பதையும், இறைவனை நோக்கிய பொறுப்புக்களை நிறை வேற்ற முடியும் என்பதையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இது விசுவாசத்தின் அடிப்படை அம்சமாகும்.

''(நபியே) நீங்கள் அறியாத எந்த விஷயத்தையும் பின் தொட ராதீர்கள்; ஏனெனில் நிச்சயமாக கண், காது, உள்ளம் ஆகிய ஒவ் வொன்றும் (அதன் செயலைப் பற்றி மறுமையில்) விசாரிக்கப் படும்''. (17:36)

'சட்ட ரீதியானது, சட்ட விரோதமானது ஆகிய இரண்டுமே மிகத் தெளிவாக உள்ளன. இவை இரண்டுக்கும் இடையில் -பெரும்பாலான மக்கள் அறியாத- சந்தேகத்துக்குரிய அம்சங் களும் உள்ளன. இந்நிலையில், சந்தேகத்துக்கு இடமானதிலிருந்து விலகி நடப்பவர் தனது விசுவாசத்தையும் கௌரவத்தையும் பாதுகாத்துக் கொள்வார்'. (ஹதீஸ்)

*‘உங்களுக்கு சந்தேகம் ஏற்படுத்துபவற்றை விட்டு விடுங்கள். எதில் உங்களுக்கு சந்தேகம் இல்லையோ அதை கடைப்பிடி யுங்கள். நன்மை மனதுக்கு ஆறுதலளிக்கும். தீமை சஞ்சலத்தை ஏற்படுத்தும்’. (ஹதீஸ்)*

*‘‘நம்பிக்கையாளர்களே! (நபியிடம் அவசியமின்றி) ஒவ்வொரு விடயத்தைப் பற்றியும் (துருவித் துருவி) கேட்டுக் கொண்டி ருக்காதீர்கள். (பல விடயங்கள்) உங்களுக்கு தெரிவிக்கப்பட்டால் (அவை) உங்களுக்கு வருத்தத்தையே ஏற்படுத்தும்’’. (5:101)*

*‘‘உங்களுக்கு முன்னிருந்த மக்களும் (அவர்களுடைய நபி யிடம் இத்தகைய) கேள்விகளையே கேட்டுக் கொண்டிருந்தனர். (அவை அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட) பின்னர் அவற்றை நிராகரிப்பவர்களாக மாறி விட்டனர்’’. (5:102)*

*‘இல்ம்’ என்ற சொல்லுக்கு எதிர்ப்பதம் ‘ளன்’ என்பதாகும். இது கருத்து, அனுமானம், எண்ணுதல், ஊகம் எனும் பொருள் களைக் கொண்டது. இத்தகைய ‘ளன்’ இல் தங்கியிருப்பது உண்மைக்கு இட்டுச் செல்லாது என அல்-குர்ஆன் கூறுகின்றது. உண்மையும் அறிவும் என்பவை ஏற்கனவே தெரிந்த அம்சங்களின் வரையறுத்த விவரக்குறிப்புகள் மட்டுமல்ல. ஒரு மனிதனால் புரிந்துகொள்ள முடியுமான அனைத்தையும் அவை உள்ளடக்கும். ஊடகத்தின் பயன்பாடுகள் குறித்து அக்கறை கொண்ட எந்த மனிதனும் அறிவு என்றால் என்ன என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அறிவின் மூலங்கள் எவை, அதன் வரையறைகள் எவை, இஸ்லாமிய உலக நோக்கில் எவ்வளவு முக்கியமான பாத்திரத்தை அறிவு வகிக்கிறது... என்பவற்றை அவர் புரிந்து கொள்ள வேண்டும். இந்தப் புரிதலின் மூலம்தான் அறிவு பரப்புவதை முழு முதல் நோக்கமாகக் கொண்ட தொழில்சார் நிபுணராக தன்னை அவர் கட்டமைத்துக் கொள்ள முடியும். தனது மக்களுக்கான கல்வி அரங்கமொன்றை உருவாக்கிக் கொள்வதும் அதன் மூலமே அவருக்கு சாத்தியமாகும்.*

## ஆளுமைப் பண்புகள்:

*மனிதப் படைப்புகள் எல்லாமே அவற்றைப் படைத்தவன் முன்னிலையில் சமமானவை என்பதைப் புரிந்து கொள்ளல் ஒரு முஸ்லிமின் அடிப்படைப் பண்பாகும். அல்-குர்ஆன் பால், இனம், வர்க்கம் ஆகிய எல்லாவற்றையும் 'அல்-நாஸ்' என்ற பதத்தைப் பயன்படுத்தி சமநிலைப் படுத்துகின்றது. மனித குலத்தை அப்படித்தான் அது குறிப்பிடுகின்றது. ஒருவருடைய இனம், பால், வாழ்வு நிலை என்பனவற்றை அது பொருட் படுத்தவில்லை. இறைபக்தி ஒன்றே ஒரு மனிதனை இன்னொரு மனிதனில் இருந்து வேறுபடுத்துகின்றது.*

*''உங்களில் எவர் இறை அச்சம் உடையவராக இருக்கின் றாரோ அவர்தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக கண்ணிய மானவர்''. (49:13)*

*இந்தக் கொள்கை காரணமாக முஸ்லிம்கள் ஆணவம் பிடித்த வர்களாகவும், திமிர் பிடித்தவர்களாகவும் இருப்பது பிரத்தியேக மாக தடுக்கப்பட்டுள்ளது. மற்றவர்களை அவர்கள் குறைத்து மதிப்பிட முடியாது. பிறர் எந்த நிலையில் இருந்தாலும் அவர் களுக்கு முஸ்லிம்கள் உரிய கௌரவம் கொடுத்தே ஆக வேண் டும். அல்-குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது:*

*''பூமியில் கர்வம் கொண்டு நடக்க வேண்டாம். ஏனென்றால் (பெருமையால்) நிச்சயமாக பூமியைப் பிளந்து விடவோ மலை யின் உச்சிக்கு உயர்ந்து விடவோ உங்களால் முடியாது''. (17:37)*

*''நம்பிக்கையாளர்களே! எந்த ஆண்களும் மற்றெந்த ஆண் களையும் பரிகாசம் செய்ய வேண்டாம். அவர்கள் (பரிகாசம் செய்யும்) இவர்களை விட மேலானவர்களாக இருக்கலாம். அவ் வாறே எந்தப் பெண்களும் மற்றெந்த பெண்களையும் பரிகாசம் செய்ய வேண்டாம்... உங்களில் ஒருவர் மற்றவரை இழிவாகக் கருதி குறை கூற வேண்டாம். உங்களில் ஒருவர் மற்றவருக்கு (தீய) பட்டப்பெயர் சூட்டவும் வேண்டாம். நம்பிக்கை கொண்டதன்*

பின்னர் அவ்வாறு பட்டப் பெயர் சூட்டுவது மகா கெட்டதாகும்''. *(49:11)*

'நான் மிக வெறுப்பது அதிகம் பேசுவோரையும்,கடும் தொனியில் பேசுவோரையும்,கர்வத்துடன் பேசுவோரையுமே'. (ஹதீஸ்)

நபி (ஸல்) அவர்கள் ஒரு போதும் பண்பற்ற விதத்தில் பேச மாட்டார். பண்பற்ற விதத்தில் பேசுவதை கேட்கவும் மாட்டார் (ஹதீஸ்).

இது போன்ற இன்னும் பல நபிமொழிகளும் உள்ளன.

ஒருவரின் நாகரிகமற்ற பேச்சு, சாபமிடல், கடும் தொனியில் பேசுதல் என்பன அவரது கௌரவத்தையும் சுய பெறுமதியையும் குறைத்து விடும். ஒரு நபர் எவ்வளவு பாராட்டுக்கும் பெருமைக்கும் உரியவராக வேண்டுமானாலும் இருக்கலாம். அவை இறைவனின் நாட்டத்தின் மூலமே அவருக்கு கிடைக்கின்றன. இறைவனே அவரை அந்த நிலைக்கு உயர்த்துகிறான். ஒரு முஸ்லிம் இந்த உண்மையை ஏற்றுக் கொள்வார். அதற்காக அவர் இறைவனுக்கு நன்றியும் கூறுவார். விஷேடமாக ஒருவர் அதிகாரத்திலும் செல்வாக்கான நிலையிலும் இருக்கின்ற போது அவர் இறைவனால் நியமிக்கப்பட்ட அறக்காவலர் என்ற நிலைக்கு வருகின்றார். அவர் கட்டாயம் அந்த நிலைக்கு பொறுப்புக் கூற வேண்டியவர். அவரின் அந்தப் பதவி நிலை சமூகத்துக்கு எந்தளவு நன்மை அளித்தது என்பதற்கு அவர் வகை கூற வேண்டும்.

''கல்வி அறிவு உடையவரும் கல்வி அறிவு இல்லாதவரும் சமமானவர்களா? நல்லுபதேசம் பெறுபவர்களே அறிவுடையவர்கள்''. *(39:9)*

முக்கியமான தகவல்களின் காவலாளிகள் என்ற வகையில் ஊடகத்துறை சார்ந்தவர்கள் உயர் ஒழுக்க விழுமியங்களைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தாம் செல்வாக்குச் செலுத்தும் மக்களுக்கு அவர்கள் முன்மாதிரியாகவும் இருக்க வேண்டும்.

தற்கால ஊடகத் துறையினர் செய்திகளை வெறும் செய்தி களாகத்தான் பார்க்கின்றனர். அதிலிருந்து விலகி நிற்கும் அலட் சிய நிலையே அவர்களிடம் காணப்படுகிறது. இதனால் அவர்கள் சமர்ப்பிக்கும் செய்தியின் இலக்கு மற்றும் விஞ்ஞான அணுகு முறை என்பன இரண்டாம் பட்சமாகி விடுகின்றன. ஊடகத் துறை வித்துவான்களாக தம்மை கருதிக் கொண்டிருப்பவர்கள் தமக்கே உரிய கண்ணோட்டத்தில் செய்திகளை வழங்குகின்ற போது அதில் ஆணவமும் தெரிகின்றது. இந்த நிபுணர்கள் மற்றவர்களது கருத்துக்களை குறைத்து மதிப்பிடும் பெருமையை தமக்குத் தாமே அளித்துக் கொள்கின்றனர். அதே மட்டத்தில் மற்றவர்களின் விளக்கங்களுக்கும் சம்பவங்களுக்கும் அவர்கள் இடமளிப்ப தில்லை. எவ்வாறாயினும், இஸ்லாத்தில் ஊடகத் துறை சார்ந்த வர்கள் மற்ற எல்லா நிலைகளுக்கும் அப்பால் சமூகத்தின் அங் கத்தவர்கள் ஆகின்றனர். அந்த வகையில் மற்றவர்கள் மீதான கடமைகள், கடப்பாடுகள், சமூகப் பொறுப்புக்கள் என்பன அவர் கள் மீதும் கடமையாகின்றன. இந்நிலை பின்வருமாறு நோக்கப் படுகின்றது:

'பேசுகின்ற போது தமது சொல்வண்ணத்தைக் கையாண்டு நாக்கை சுழற்றிச் சுழற்றி பேசுபவர்களை இறைவன் வெறுக் கின்றான்'. (ஹதீஸ்)

''(தூதராகிய) அவர் தன் இஷ்டப்படி எதையும் கூறுவதில்லை''. (53:3)

தமது சிந்தனைக்குப் படுவதையும், மிக முக்கியமானது அல் லது மிகப் பொருத்தமானது என்று தாம் கருதுவதையும் பேசு கின்ற 'விற்பன்னர்'களுக்கான வழிகாட்டலை மேற்குறித்த இறை வசனம் தருகின்றது. சரியான கவனமும் காரணமும் இன்றி அபிப்பிராயங்களை முன்வைக்க இஸ்லாம் எவரையும் அனு மதிப்பதில்லை. ஒருவர் தான் வெளியிடும் ஒவ்வொரு வார்த் தையையும் மதிப்பீடு செய்ய வேண்டும். ஏனெனில் அவ்வார்த் தைகள் பலரது சிந்தனையிலும் பல நிகழ்வுகளின் முடிவிலும்

தாக்கம் செலுத்த முடியும். நவீன ஊடகத்தில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் 'பண்டிதர்கள்' போட்டி போட்டுக் கொண்டு வார்த்தைகளோடும் சொற்றொடர்களோடும் விளையாடுகின்றனர். அவை ஏற்படுத்தும் விளைவுகளில் அவர்கள் கவனம் செலுத்து வதில்லை. விளைவுகளைப் பற்றி சிந்திக்காமல் கருத்துக்களை பரப்புவது குறித்து அல்-குர்ஆன் இப்படி எச்சரிக்கிறது:

*''அதனை நீங்கள் (ஒருவரிடமிருந்து ஒருவராக) நாவுகளால் நகர்த்துகிறீர்கள்; நீங்கள் அறியாததை உங்கள் வாய்களால் கூறித் திரிகிறீர்கள். இதனை நீங்கள் இலேசாக நினைக்கிறீர்கள். ஆனால் அல்லாஹ்விடமோ அது மிகப் பாரதூரமானது'' (24:15)*

செய்திகளையும் நிகழ்வுகளையும் வெளிக்கொண்டு வருவதை ஊடகவியலாளர்கள் -தாம் அவ்வாறு செய்ய வேண்டாம் என கேட்கப் படவில்லை- என்று கூறியே எப்போதும் நியாயப்படுத்து கின்றனர். நேர்காணல்கள் மேற்கொள்ளப்படும் போது நேர் காணப்படும் நபர்கள் ஊடகவியலாளர்களை மனிதர்களாகவே நோக்குவர். தங்களது கருத்துக்களை பரிமாறிக் கொள்ளக் கூடிய நபர்களாக பேட்டி காண்போரை அவர்கள் பார்ப்பர். அதேவேளை பேட்டி காண்பவர்களோ எப்போதும் தமது தொழில்முறை நிலைப்பாட்டைப் பாதுகாத்துக் கொள்ளவே நினைப்பர். 'நல்ல தொரு மேற்கோளை' பெற்றுக் கொள்வதே அவர்களது முதல் நிலை எதிர்ப்பார்ப்பாக இருக்கும். இந்நிலையில் மனித உணர்வு கள் பரிமாறிக் கொள்ளப் படவில்லையெனில் அங்கு ஒரு சம நிலையின்மையே உருவாகும். இந்த சமநிலையின்மை ஊடகவிய லாளர்கள் பற்றிய விகார நோக்கொன்று தோன்ற வழிவகுக்கும். ஊடகவியலாளர்கள் அடிப்படையில் மற்றவர்களை மனிதர் களாகப் பார்ப்பதில்லை; ஏதோ சில 'உண்மை'களை கண்டடை வதற்காக முடிவற்ற தேடலை நிகழ்த்துபவர்கள் அவர்கள்... என்ற பார்வை அங்கு உருவாகும்.

ஊடகத் தொழிலில் இருப்பவர்கள் அனேகமாக தாங்கள் அறிக் கையிடும் சோக நிகழ்வுகள் பற்றி உணர்ச்சியற்றவர்களாகவே

உள்ளனர். உணர்ச்சிகளை வெளியிட நேர்ந்து விட்டால் அவர்கள் பலவீனர்களாக அல்லது பக்கச்சார்பாக செயற்படுவோராக பார்க் கப்படுகின்றனர். ஊடகவியலாளர்கள் பச்சாதாப உணர்வு கொண் டோராகவும் தமது வழிமுறைகளில் அதிக மனிதாபிமானம் உள் ளோராகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் மேற்கொள் ளப்படும் செயற்பாடுகளதும் திரும்பத் திரும்ப கூறப்படும் கூற்று களதும் பின் விளைவுகளை அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்வர்.

*''நம்பிக்கையாளர்களே, நீங்கள் செய்யாததை ஏன் சொல்கின் றீர்கள்?''(61:2)*

*'நல்ல வார்த்தைகளை உதிர்ப்பது கூட தர்மமே' (ஹதீஸ்)*

*'அருளாளனின் அடியார்களாகிய அவர்கள் பூமியில் பணிவாக நடப்பார்கள்; மூடர்கள் அவர்களுடன் தர்க்கிக்க முற்பட்டால் 'சாந்தி உண்டாவதாக' என்று கூறி (விலகி) விடுவார்கள்''. (25:63)*

*''(நபியே) நீங்கள் மதிநுட்பத்துடனும் அழகான நல்லுப தேசத்தைக் கொண்டுமே உங்கள் இறைவனின் வழியின் பக்கம் அழைப்பீராக. அவர்களுடன் தர்க்கிக்க நேரிட்டால் அழகான முறையில் தர்க்கம் செய்யுங்கள்''. (16:125)*

*'வெட்கமும் தன்னடக்கமும் எப்போதும் சிறந்தவைதான். வெட்கமும் பணிவும் மொத்தத்தில் நல்லவைதான்'. (ஹதீஸ்)*

*'கோள்சொல்லித் திரியும் பழக்கத்துக்கு அடிமையானவர்கள் சொர்க்கம் நுழைய மாட்டார்கள்'. (ஹதீஸ்)*

ஊடகவியலாளர்கள் தாங்கள் மனித குலத்துக்கு அப்பாற் பட்டவர்களோ மேற்பட்டவர்களோ அல்ல என்பதைப் புரிந்து கொள்ளுகின்ற போது, ஏனைய மனிதர்களின் உணர்வுகளையும் கௌரவத்தையும் பாதிக்காமல் நடந்து கொள்வதற்கு அதிக முன் னெச்சரிக்கை எடுத்துக் கொள்வர். இஸ்லாமிய சமூகத்துக்குள் ஊடகவியலாளர்கள் தங்களையும் மதித்து மற்றவர்களையும் மதித்து நடக்கும் போது கண்ணியமானவர்களாகவும் கௌரவ

மானவர்களாகவும் கருதப்படுவர். அறிவார்ந்த நோக்கமாயினும் பொழுதுபோக்கு நோக்கமாயினும், ஏனைய தனி நபர்களையோ குழுக்களையோ பாதிக்கின்ற அல்லது கிண்டல் செய்கின்ற அல்லது தாக்குகின்ற வகையில் அவர்கள் நடந்து கொள்ளக் கூடாது. மற்றவரை விஞ்சும் அல்லது நகைப்புக்கிடமாக்கும் நோக்குடன் அர்த்தமற்ற கலந்துரையாடல்களில் அவர்கள் ஈடுபட வும் கூடாது. தனிநபர்களிடம் இருந்து அல்லது குழுக்களிடம் இருந்து வரும் கருத்துக்கள் உரிய முறையில் செவிசாய்க்கப்பட்டு மதிக்கப்பட வேண்டும். இணக்கப்பாடற்ற விடயங்களை வெளிப் படுத்த வேண்டுமானால் அதை கௌரவமான முறையில் செய்ய வேண்டும். தர்க்க நியாயங்கள் கண்ணியமாக விவாதிக்கப்பட்டு விடயங்கள் முன்வைக்கப்பட வேண்டும். இவ்வாறான செயற் பாடுகள் சமூகத்துக்குள் ஒருமைப்பாட்டை ஏற்படுத்த உதவும். ஓர் ஆரோக்கியமான, கௌரவமான கலந்துரையாடல் எல்லோரு டைய நம்பகத் தன்மையையும் மேம்படுத்தும். அது சமூகத்துக்கு சாதகமான பங்களிப்பையே வழங்கும்.

- **மிகக் கீழ் மட்ட நிலையை விட்டு உயர்ந்து நிற்றல்:**

''எவர்கள் நம்பிக்கையாளர்களுக்கிடையில் இத்தகைய மானக் கேடான வார்த்தைகளைப் பரப்ப விரும்புகின்றார்களோ அவர் களுக்கு நிச்சயமாக இம்மையிலும் மறுமையிலும் மிக்க துன் புறுத்தும் வேதனை உண்டு. அல்லாஹ்வே நன்கறிவான்; நீங்கள் அறிய மாட்டீர்கள்''. *(24:19)*

'நம்பிக்கையாளர்களே, அநேகமான சந்தேகங்களில் இருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்; ஏனென்றால் நிச்சயமாக சந்தே கங்களில் சில பாவமானவையே. நீங்கள் துருவித்துருவி விசாரித் துக் கொண்டிருக்க வேண்டாம். உங்களில் ஒருவர் மற்ற எவரை யும் புறம் பேசவும் வேண்டாம்''. *(49:12)*

'தீவிரப் பண்புடையோர் நாசமாகி விடுவர்'. (ஹதீஸ்)

''குறை கூறி புறம் பேசித் திரிபவர்களுக்கெல்லாம் கேடுதான்''. *(104:1)*

'மனதில் சந்தேகத்தை ஏற்படுத்தும் விடயங்களை விட்டு விடுங்கள்; மனதில் எவ்வித சந்தேகத்தையும் ஏற்படுத்தாத விட யங்களை எடுத்துக் கொள்ளுங்கள்'. (ஹதீஸ்)

முடியுமான வரை பிறரை அங்கீகரித்து அவர்களோடு சகிப்புத் தன்மையுடன் நடந்து கொள்வது தொடர்பான அல்-குர்ஆனின் கட்டளைகளை அனுசரிப்பதன் மூலமே முஸ்லிம் சமூகத்தில் ஐக்கியம் பேணப்பட முடியும். மற்றவர்கள் மீது எந்த வகையிலும் அவதூறு பேசக் கூடாது என்ற விடயமும் இந்த சகிப்புத் தன்மையோடு இணைந்ததே. இதை மீறுபவர்களுக்கு கடுமை யான தண்டனைகள் காத்திருக்கின்றன. சமூகத்தில் பிளவுகளை ஏற்படுத்தும் தகவல்களை அவசியமற்ற வகையில் பரப்புவதும் இவ்வாறானதே.

சந்தேகத்தையும் அவதூறையும் கிளப்புவது ஒரு முஸ்லிமின் அடிப்படை நோக்கத்திலிருந்து அவனை தூரமாக்கி விடும். கௌரவமற்ற, அற்பத்தனமான இச்செயல்கள் மனித இருப்பின் நோக்கத்தையே பாழ்படுத்துவது மட்டுமன்றி, சமூகத்தில் நம்பிக் கையீனத்தை உருவாக்கி, பெரும் குழப்பத்துக்குக் காரணமாகி விடும்.

இன்றைய பெரும்பாலான ஊடகங்கள் மிகக் கீழ் மட்ட நிலையை ஆதரிக்கும் அணுகுமுறையை கொண்டுள்ளன. இந்த அணுகுமுறையானது இரசிகர்களது மட்டரகமான, ஜனரஞ்சக ரச னைகளுக்கு தீனி போடும் இயல்பு கொண்டது. பாலியல் விவ காரங்களும், வன்முறையும்,பிற மனிதர்களது -கிளர்ச்சியூட்டும்- அந்தரங்க விவகாரங்களும் ஊடகங்களில் பெருமளவு இடம் பிடிக்க இதுவே காரணமாகும். இதனால்தான், செய்தித் தலைப்பு களின் பின்னணியிலுள்ள கதைகளை அடிப்படையாகக் கொண்ட 'யதார்த்த வாழ்வுச் சித்தரிப்பில்' தொலைக்காட்சி மினி தொடர் கள் அதிக ஆர்வம் காண்பிக்கின்றன. ஊடகங்கள் வழியாக ஒலிபரப்பாகும் இசையை எடுத்துக் கொண்டாலும் இதே போன்ற நிலைதான் காணப்படுகின்றது. அதன்பாடல் வரிகள் மிக மோச

மானவையாகவும் அர்த்தமற்றவையாகவும் காணப்படுகின்றன. பெண்களை இழிவுபடுத்தும் வகையிலும், சட்டத்தை அவமதிக்கும் வகையிலும், குற்றச் செயல்கள் பெருமளவு மக்களைக் கவரும் விடயம் என்ற வகையிலுமே இவற்றின் கருப்பொருள்கள் அமைந்துள்ளன. பல கலைஞர்களும் இவற்றையே நியாயப்படுத்துகின்றனர். மேலைத்தேச சமூகத்தில் வாழும் சிறுபான்மை மக்களை சூழ்ந்திருக்கும் யதார்த்தம் இதுவே என அவர்கள் கூறுகின்றனர்.

உரையாடல் நிகழ்ச்சிகள் மற்றும் சஞ்சிகைகளின் முக்கியமான பணி மக்கள் எதிர்நோக்கும் உண்மையான பிரச்சினைகள் பற்றி ஆராய்வதாக இருக்க வேண்டும். ஆனால் அவை பாலியல் முறைகேடுகள் பற்றி அல்லது பணக்காரர்களதும் பிரபல மனிதர்களதும் வாழ்வு முறை பற்றியே அதிக கவனம் செலுத்துகின்றன. இரசிகர்களைக் கவர்ந்து அவர்களது எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதற்காக, தடைசெய்யப்பட்ட அல்லது சர்ச்சைக்குரிய கருப்பொருள்களை அவை எடுத்தாள்கின்றன. இவ்வாறான நிகழ்ச்சிகளில் அதிதிகளிடம் கேட்கப்படும் கேள்விகள் கூட அவர்களை சங்கடத்துக்கு உள்ளாக்கும் வகையில் திட்டமிட்டே அமைக்கப்படுகின்றன. பல சந்தர்ப்பங்களில் தங்களது அந்தரங்கமான குடும்ப விடயங்களைக் கூட இலட்சக்கணக்கான பார்வையாளர் முன்னிலையில் பேச வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்படுகின்றது. இரகசியங்களை வெளிக் கொணர்வதற்கான ஒரு வகை 'சிகிச்சை முறை' என நிகழ்ச்சியை நடாத்துபவர்கள் இதனை நியாயப்படுத்தி ஊக்குவிக்கின்றனர்.

தர வரிசையில் இடம்பிடிக்கவும், விற்பனையை அதிகரிக்கவும் இவை நல்லவையாக இருக்கலாம். ஆனால் இரசிகர்களைச் சுற்றி உள்ள உலகை அவர்கள் புரிந்து கொள்ளவும் அனுபவிக்கவும் இது எந்த வகையிலும் பங்களிப்புச் செய்யாது. இஸ்லாமிய ஊடகத்தில், பொதுவான கீழ் மட்ட நிலை என ஒன்று இருந்த போதும் அது கவனமாக கையாளப்பட வேண்டுமே தவிர துஷ்பிரயோகம் செய்யப்படலாகாது.

மற்றவர்களது குறைகளையும் தவறுகளையும் வெளியிடுவது பரபரப்பை ஏற்படுத்தவும் கிசுகிசுக்களை பரப்பவுமான மற்றொரு வழிமுறையாக உள்ளது. இதுபற்றி அல்-குர்ஆனும் ஸுன்னாவும் என்பன இவ்வாறு கூறுகின்றன:

''நீங்கள் கடுகடுப்பானவராகவும் கடின உள்ளம் கொண்டவராகவும் இருந்திருப்பீர்களானால், உங்களிடம் இருந்து அவர்கள் வெருண்டோடி இருப்பார்கள். ஆகவே அவர்(களின் குற்றங்)களை நீங்கள் மன்னித்து, (இறைவனும்) அவர்களை மன்னிக்க பிரார்த்திப்பீர்களாக''. (3:159)

''ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமின் சகோதரர் ஆவார். அவருக்கு இவர் ஒருபோதும் துரோகம் செய்ய மாட்டார்; பொய் கூற மாட்டார்; அவரை இழிவுபடுத்தவோ அவமானப்படுத்தவோ மாட்டார்'. (ஹதீஸ்)

'இந்த உலகில் ஒருவர் மற்றவரின் குறைகளை மறைப்பாராயின், தீர்ப்பு நாளில் இறைவன் அவரின் குற்றங்களை மூடி மறைப்பான்'. (ஹதீஸ்)

'என்னைப் பின்பற்றுபவர்கள் எல்லோருக்குமே மன்னிப்பு உண்டு; மற்றவர்களின் குற்றங்களைப் பகிரங்கப்படுத்துபவர்களைத் தவிர'. (ஹதீஸ்)

'என்னைப் பின்பற்றும் எவரும் மற்றவர் பற்றிய குறைகளை என்னிடம் கூறக் கூடாது. நான் உங்களை சந்திக்கும் போது எனது உள்ளம் தூய்மையாக இருப்பதையே விரும்புகின்றேன்'. (ஹதீஸ்)

தவறுகளை மறைப்பதற்கு அப்பால், முஸ்லிம்கள் தமது தீர்ப்புக்களைசந்தேகம் மிகைத்து விடாதவாறு பார்த்துக் கொள்வதும் அவசியம். நம்பிக்கை மற்றும் பாதுகாப்பு ஆகிய இழைகளைக் கொண்டு சமூகம் என்ற துணி நெய்யப்படுவது மிக முக்கியமானதாகும்.

'சந்தேகம் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள்; சந்தேகம் என்பது மிகப் பெரிய பொய்யாகும். மற்றவர்களது தவறுகளை

தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டாதீர்கள்; மற்றவர்களை வேவு பார்க்காதீர்கள்'. (ஹதீஸ்)

''ஒரு மனிதன் தான் கேள்விப் படுகின்ற எல்லாவற்றையும் சரிபார்க்காமல் பரப்புகின்றபோது, அதுவே அவனை ஒரு பொய்ய னாக்கப் போதுமானதாகும்'. (ஹதீஸ்)

## முடிவுரை:

உண்மையில் இஸ்லாமிய ஊடகங்கள் கருணை, மனிதாபி மானம், இரக்கம் என்பனவற்றைக் கொண்ட நிறுவனங்களாகவே இருக்க முயலும். தாம் ஊக்குவிக்கும் அல்லது சேவகம் புரியும் மக்கள் மீது அவற்றுக்கு உண்மையான அன்பும் அக்கறையும் இருக்கும். அவ்வாறானதொரு இலக்கு இல்லையேல், ஊடகம் என்பது சுயநலம் கொண்டதாகிவிடும். தீய நோக்கம் கொண்ட நிறுவனமாக அப்போது அது மாறிவிடும். சுயநலம் கொண்ட ஊடகங்கள்தான் வேவுபார்த்தல், மஞ்சள் இதழியல் போன்ற மோசமான வழிமுறைகளை நியாயப்படுத்தும். ஆனால் சமூகத் தின் பார்வையில் இந்த வழிமுறைகள் அவற்றின் நம்பகத் தன்மையை அரித்துச் சென்று விடும். மற்றவர்களது அபிப்பிரா யம், மனிதப் பலவீனம், அந்தரங்க உரிமை முதலிய அடிப் படையான அம்சங்கள் மதிக்கப்படாத போது மனித வாழ்வு, தொழில், அபிலாஷை ஆகிய எல்லாமே கடைசியில் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டி வரும்.

பாரம்பரிய வழிகாட்டலை நோக்கிய தற்கால முஸ்லிம் உலகின் உணர்வார்ந்த முனைப்பு நாம் கவனம் செலுத்தத் தகுந்த தொரு மாற்றம் எனலாம். பின் காலனிய, பின் நவீனத்துவ இயக்கங்களால் உருவாக்கப்பட்ட மாதிரிகளை வெறுமனே ஊக்கு விப்பதிலிருந்து தூர விலகும் போராட்டத்தில் முஸ்லிம்கள் தற்போது ஈடுபட்டுள்ளனர். ஏனெனில் இந்த இயக்கங்கள் 'பிறரால்' உருவாக்கப்பட்ட அன்னிய விவகாரங்களைப் பற்றி மட்டுமே பேசுகின்றன.

இந்த ஆய்வானது மரபை நோக்கி திரும்பிச் சென்று ஊட

கங்களை மறுசீரமைப்பதை நோக்காகக் கொண்டது. அந்த வகையில் தற்போதுள்ள சமூகப் பிழைகளை சீரமைத்து, கடந்த காலத்தில் இஸ்லாமிய நாகரிகத்தை உன்னத நிலையில் வைத்திருந்த கொள்கைகளை நோக்கி மீளவும் திரும்புகின்ற மிகப் பெரிய முயற்சியின் ஒரு பகுதியாகவே இதுவும் அமைகிறது. இன்னொரு வகையில் சொல்வதாயின், ஏலவே நமக்குப் பரிச்சயமான, நிரூபிக்கப்பட்ட சித்தாந்த வழிகாட்டல்களுக்கு அமைவாக 'நமது சொந்த வீட்டை நாமே முறைப்படி ஒழுங்குபடுத்தும்' ஒரு செயற்பாடே இது எனலாம்.

ஆய்வின் இந்த அத்தியாயம் சமயக் கொள்கைகளிலும் தொடர்பாடல் ஊடகத்தோடு அவற்றுக்குள்ள உறவிலும் கூடிய கவனம் செலுத்தியது. விழுமியம் சார்ந்த ஊடகத்துக்கான வழிகாட்டல் என்பது இஸ்லாமியச் சட்டகத்துக்குள் இணக்கமாக அடங்குவதே என்பது இங்கு தெளிவுபடுத்தப்பட்டது. அடுத்து இக்கருத்தியல் கோட்பாடுகளை நடைமுறையில் சாத்தியப்படுத்தக் கூடிய கட்டமைப்பு மாற்றங்களையும் நிறுவன மாற்றங்களையும் எவ்வாறு வகுத்துக் கொள்ளலாம் என்ற கேள்விக்கு நாம் விடை காண வேண்டியுள்ளது. தொடர்ந்து வரும் அத்தியாயாத்தில், 'வெகுசன ஊடக தொடர்பாடலில் இஸ்லாமிய மாதிரி ஒன்றுக்கான செயற் கொள்கைகள்' என்ற தலைப்பில் இது பற்றி ஆராயப்படும்.

## அத்தியாயம் நான்கு:

# வெகுசன ஊடக தொடர்பாடலில் இஸ்லாமிய மாதிரி ஒன்றுக்கான செயற் கொள்கைகள்

### *அழகியலும் இஸ்லாமிய மாதிரியும்:*

இஸ்லாமிய கலைகளுக்கும் தவ்ஹீத் எனும் ஓரிறைக் கோட்பாட்டுக்கும் இடையில் பிரிக்க முடியாத உறவு இருப்பதை இந்த ஆய்வின் முந்திய பகுதியில் ஆராய்ந்தோம். எந்த கலைப் பாரம்பரியமும் கலாசார ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட உள்ளடக்கத்தினதும் வடிவத்தினதும் கலவையாகத்தான் இருக்கும். இஸ்லாமிய கலைகளைப் பொறுத்த வரை, இந்தக் கலவை ஓரிறைக் கோட்பாட்டின் ஒளி பாய்ச்சப்பட்டதாக இருக்க வேண்டும். அந்த வகையில், உள்ளடக்கம் மற்றும் வடிவம் தொடர்பாக அல்-குர்ஆனில் காணப்படும் ரசவாதப் பண்புகளுக்கு இசைவாக அவை அமைதல் அவசியம்.

ஆன்மீக நம்பிக்கைகள் ஒருவரின் விழுமியங்கள், அணுகுமுறைகள், நடத்தைகள் என்பனவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும்

என்பதை இஸ்லாமிய அகில நோக்கு ஏற்றுக் கொள்கின்றது. மட்டு மன்றி, தனிநபர்கள் அறிவார்ந்த நடத்தைத் தெரிவுகளை மேற் கொள்வதற்கு பொறுப்புணர்வையும் விவேகத்தையும் கொண்டி ருக்க வேண்டும் என அது வலியுறுத்துகின்றது. அல்-குர்ஆனின் கருத்துப்படி, அழகியல் தேவை என்பது மனிதனின் அடிப்படை யான ஆன்மீகத் தேவைகளில் ஒன்றாகும். அது பூரணத்துவத்தோடு அல்லது உண்மையோடு சமப்படுத்தப்படுகின்றது. இஸ்லாமிய கலாசாரத்தில் இந்தத் தேவையை ஹமீத் மௌலானா, புலவயப் பட்டதாக (Sensate) நோக்குவதிலும் பார்க்க கருத்துருவான தாகவே (Ideational) நோக்குகின்றார். ஆழமான கருத்தியல் கூறு களைக் கொண்ட ஒரு கலாசாரத்தில் தேவைகளும் நோக்கங்களும் அனேகமாக ஆன்மீக வயப்பட்டனவாகவே இருக்கும். யதார்த் தம் என்பது அங்கு ஸ்தூலமற்ற வகையில் நோக்கப்படுவதால், ஆன்மீக ஆழ்நிலை மீதே அதிக கவனம் குவிக்கப் பட்டிருக்கும். இந்த வகையில், கருத்து நிலைக் கலாசாரமானது பிரதானமாக குறியீட்டு முறையிலேயே அமைந்திருக்கும். அது அப்படித்தான் இருக்கவும் வேண்டும். தெய்வீகத்தின் நேர்த்தியையும் அழகை யும் பார்வையாளர்கள் உள்ளூர உணர வேண்டும் என்பதற்காக ஒரு முஸ்லிம் கலைஞன் (பார்வை மூலமான அனுபவத்தில் கிடைக்கும்) பௌதீக அழகைப் பயன்படுத்துவதை இதற்கு எடுத்துக் காட்டாக கூற முடியும்.

இதற்கு மறுகிடையாக, புலன் வழிக் கலையானது புலன்களால் கிட்டும் இன்பத்தைத் துலக்கும் குறிக்கோள் கொண்டது. இத னால் அது பரபரப்பும் கிளர்ச்சியும் ஊட்டுவதாகவே இருக்கும். பெரும்பாலும் அது சமய -விழுமியக் கூறுகளில் இருந்து விலகியே இருக்கும். வழமையாக இத்தகைய கலைகள் பொழுதுபோக்குத் தன்மை கொண்டதாகவும் சுவாரஷ்யம் ஊட்டுவதாகவும் புதுமை யானதாகவும் இயல்பானதாகவும் காட்சி மயமானதாகவும் இருக் கும். புலன்களுக்கு அப்பாற்பட்ட குறியீட்டு முறைச் சித்தரிப்பு (Supersensory Symbolism) அதில் இருக்காது.

மேற்குலகை எடுத்துக் கொண்டால், அங்கு முதலாளித்துவம், சோஷலிசம் ஆகிய இரண்டிலுமே புலவயக் கலாசாரத்தின் ஆதிக்க நெருக்கடியே காணப்படுகிறது. தனிமனித தேவைகளுக்கும் அபிலாஷைகளுக்கும் முரண்பாடான வகையில் அதிகரித்து வரும் தொழில்நுட்பங்கள், டிஜிட்டல் தகவல்கள், பொழுதுபோக்கு முறைகள் என்பவற்றுக்கு முன்னால் புதிய தொடர்பாடல் அமைப்புக்களையும் வடிவங்களையும் தேடுவதில் இந்த நெருக்கடி தொடர்கிறது.

முஸ்லிம் சமூகம் இந்த இரட்டை நிலையை எதிர் கொள்ளும் நோக்கில் இரு கலாசாரங்களையும் இணைக்க முயல்வது மட்டுமன்றி, புலன் வழிக் கலாசாரம் சமூகத்தின் மீது ஆதிக்கம் செலுத்தாதிருப்பதை உறுதி செய்யவும் பாடுபடும். ஏனெனில் இஸ்லாமிய பாரம்பரியத்தையும் வடிவத்தையும் பொறுத்த வரை, கருத்து நிலைக் (Ideational) கலாசார வகை ஏனையவற்றை விட மேலோங்கியதாக இருப்பது அவசியம்.

கருத்துருவாக்க சட்டகத்தினுள் கலையின் அழகும் முக்கியத்துவமும் முற்று முழுக்க மனிதப் பண்புகளதும் தனித்தன்மைகளதும் சித்தரிப்பன்று. அந்த வகையில் ஒரு கட்புலக் கலைஞன் -இக்கோட்பாட்டுடன் இயைந்து நின்றவாறு-தனிநபர் தன்மையற்ற அணுகுமுறை (Non-Individuational Approach) ஒன்றையே பயன்படுத்துவான். சமூக, சமய, கலாசார நல்லிணக்கம் அதிகளவில் எட்டப்பட வேண்டும் என்பதால் தனிநபர் பாத்திரங்களுக்கோ தனிப்பட்ட கூறுகளுக்கோ பெரிய முக்கியத்துவம் அங்கு இல்லை. சமூகத்தின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் மத்தியில் இணக்கமான சகவாழ்வு மேம்பட வேண்டும் என்பதனால் ஒட்டுமொத்த சமூகத்தின் மீதே அதிக கவனம் குவிந்திருக்கும். இஸ்லாமியக் கலையில் போட்டித் தன்மையை விட பரஸ்பர ஒத்துழைப்பே மகிழ்ச்சி கரமான அழகியல் சித்தரிப்பை வழிநடாத்தும்.

## இஸ்லாமிய ஊடக மாதிரியில் கருத்துச் சுதந்திரம்:

கருத்துச் சுதந்திரம் பற்றிய எண்ணக்கருவும் சித்தாந்தமும் இஸ்லாமிய மாதிரிக்கு இசைவானதாக இருப்பதை இஸ்லாமிய அகில நோக்கு வலியுறுத்துகின்றது. இதனை நாம் சகிப்புத் தன்மை பற்றிய முன்னைய அத்தியாயத்திலும் குறிப்பிட்டோம். ஆயினும் இஸ்லாமிய ஊடக மாதிரி ஒன்றின் சூழமைவினுள் வைத்து கருத்துச் சுதந்திரம் என்ற விவகாரத்தை கலந்துரையாடலுக்கு உட்படுத்த இத்தலைப்பில் நாம் முனைகிறோம்.

ஏலவே குறிப்பிடப்பட்டது போல், அறிவுச் சுதந்திரமோ கருத்துச் சுதந்திரமோ இஸ்லாமிய அரசை அல்லது இஸ்லாத்தின் கொள்கைகளை அல்லது அதன் குறிக்கோள்களை கண்டு எவ்வகையிலும் அஞ்சத் தேவையில்லை. கருத்துச் சுதந்திரம் என்பது சுதந்திரமான பார்வை, சமநிலை, ஸ்திரத்தன்மை, வளர்ச்சி என்பவற்றுக்கு வழியமைக்கின்றது. இஸ்லாத்தின் உண்மைகளைப் பரப்புபவர்கள் (வாயினாலோ செயலினாலோ) பிறரை கட்டாயப் படுத்துவதை இஸ்லாம் தடுக்கின்ற அதேவேளை, முஸ்லிம்களது சொந்த சுதந்திரத்தை மறுக்கக் கூடிய கருத்து வெளிப்பாட்டிலிருந்து அவர்களைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்கிறது.

## முஸ்லிம் உலகில் கருத்துச் சுதந்திரத்தின் நிலை:

கருத்துச் சுதந்திரம் மற்றும் கருத்துப் பரிமாறல் என்பனவற்றுக்கு இன்றைய முஸ்லிம் உலகில் மிகக் குறைந்த அளவிலேயே நிறுவன ரீதியான ஏற்பாடுகள் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இஸ்லாமியக் கொள்கைகளை நிலைநிறுத்துவதில் ஏற்பட்ட தோல்வி நிலையையே இது வெளிப்படுத்துகிறது. மட்டுமன்றி, வெகுசன ஊடகத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஆற்றலையும் இது தடுத்துள்ளது. இதனால் முஸ்லிம் வெகு மக்களுக்கு அவர்களைப் பற்றியும், உலகத்தைப் பற்றியுமான உண்மைகளை வழங்கும் வாய்ப்பும் மறுக்கப்பட்டுள்ளது. சில வெளியீடுகள் இந்தத் தேவையை பூர்த்தி செய்ய முயன்றுள்ளன. முஸ்லிம் அரசியல் உலகில் காணப்படுகின்ற பல ஊழல் அரசு

களோடு தொடர்பற்ற சட்டகங்களை உருவாக்கிக் கொண்டு அவை இப்பணியை மேற்கொண்டன.

ஆயினும், இச்சட்டகங்கள் அவை அறிக்கையிடும் அரசியல் உலகுக்கு அந்நியமாக இருந்ததாலும், அப்பழுக்கற்ற 'உண்மை'யை முன்வைக்க அவை அளவு கடந்த உத்வேகத்தை காட்டியதாலும் தமது முடிவை விரைவாகவும் நிரந்தரமாகவும் தழுவிக் கொண்டன.

முஸ்லிம் உலகின் எல்லாத் துறைகளிலும் புரையோடியுள்ள இன்னொரு பிரச்சினைதான் தெரிவுசெய்யப்பட்ட முஸ்லிம் தலைவர்களை உள்ளடக்கிய பொருத்தமான ஆலோசனை முறைமை (ஷூறா) ஒன்று மீளக் கட்டியெழுப்பப் படாமையாகும். கடந்த நூற்றாண்டு முழுவதும் பல முஸ்லிம் நாடுகள் உரிய மக்கள் பிரதிநிதித்துவம் இன்றி சர்வாதிகார முறையிலேயே ஆளப்பட்டு வந்துள்ளன. இந்த அடக்குமுறை ஆட்சி பல காலம் நீண்டு சென்றதால், கருத்துச் சுதந்திரம் என்றால் என்ன என்று இந்நாடுகளில் வாழும் முஸ்லிம்களுக்கு தெரியாமலே போய்விட்டது. தம்மை ஆள்பவர்கள் முன்னிலையில் எந்தக் கேள்வியும் இன்றி அடி பணிய அவர்கள் பழக்கப்பட்டு விட்டனர். தனிநபர்களது கருத்துக்களையும் சிந்தனைகளையும் தணிக்கை செய்வது பல தலைமுறைகளாகத் தொடர்ந்து வந்துள்ளது. தனிமனித எண்ணங்களும் கருத்துக்களும் அந்த சமூகங்களில் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன. அது அவர்களின் கலாசாரமாகவே வேரூன்றிவிட்டது.

## கருத்துச் சுதந்திரத்தின் வரைவிலக்கணமும் வரையறைகளும்:

ஷூறா அல்லது ஆலோசனை முறை என்பது நேரடியாக கருத்துச் சுதந்திரத்தோடும் கலந்துரையாடலோடும் தொடர்புடையது. இஸ்லாமிய சமூகத்தில் இது மைய முக்கியத்துவம் வகிக்கின்ற ஒரு விடயமாகும். சம்பந்தப்பட்ட பெருமளவு முஸ்லிம்கள் மத்தியில் உண்மையான கருத்துப் பரிமாறலும் கலந்துரையாடலும் இடம்பெறுகின்ற போதுதான் திருப்தியான தரத்தில்

இதை சாத்தியப்படுத்த முடியும். அந்த வகையில், தகவல்களையும் கருத்துக்களையும் ஆராய்ந்து, அபிப்பிராயங்களைக் கட்டமைத்து வெளியிடுவதற்கான தனிமனித சுதந்திரத்தை ஷரீஆவானது நிறு வன மயப்படுத்தி உள்ளது எனலாம். ஒரு முஸ்லிம் உண்மையை உறுதி செய்வதன் மீதான தனது கடப்பாட்டை நிறைவேற்று வதற்கு அல்லது அநீதிக்கு எதிராக குரல் கொடுப்பதற்கு அல்லது நல்லதை தீவிரமாக ஆதரித்து நிலை நிறுத்துவதற்கு இந்தச் சுதந் திரம் அவசியமானது.

ஆக- சுதந்திரம் என்பது ஓர் உரிமை மனப்பாங்கு. ஏனைய பொறுப்புகளைப் போலவே அதுவும் ஒரு பொறுப்பு. தனிமைப் படுத்தப்பட்ட நிலையிலோ ஒழுங்கீனங்களுக்கு மத்தியிலோ அதை செயற்படுத்த முடியாது. எல்லாவற்றுக்கும் மேலாக, சுதந் திரம் என்பது ஒழுங்குபடுத்தப்படுவது அவசியம். ஒரு மனிதனது வாழ்க்கையில் அது பெரும் தாக்கம் விளைவிக்கக் கூடியது என்பதாலும், அவனது இருப்பின் அர்த்தத்தோடு தொடர்பு கொண்டது என்பதாலும் இந்த ஒழுங்குபடுத்தல் அவசியமானது. நாட்ட சுதந்திரமும் கருத்துச் சுதந்திரமும் அதன் பொருளையும் தாக்கத்தையும் புரிந்து, தனது செயல்களுக்கான பொறுப்பை தானே ஏற்கும் நிலையிலுள்ள -'புத்தி சுவாதீனம்' கொண்ட- ஒவ் வொருவரதும் உரிமையாகும்.

முறையான கருத்துச் சுதந்திரம் என்பது சத்தியத் தேடலை அல்லது அறிவுத் தேடலை அடியாகக் கொண்டே பிறக்க வேண் டும் என இஸ்லாத்தின் வழிகாட்டல்கள் வரையறை செய்கின்றன. எனவே அழிவு, துஷ்பிரயோகம், சமூகத்தில் சிதைவை ஏற்படுத் துதல் என்பவற்றுக்கு அது காரணமாகி விடக் கூடாது. ஒரு நபர் தனது கருத்துச் சுதந்திரத்தை பாவிப்பதன் பின்னணியில் உள்ள நோக்கம் மிகவும் முக்கியமானது. உண்மையையும் பொய்யையும் சேர்த்துக் குழப்பி சந்தேகங்களை உருவாக்குவதுதான் ஒருவரின் நோக்கம் என்றால், அவ்வாறான கருத்துச் சுதந்திரத்துக்கு இஸ் லாத்தில் இடமில்லை. இது சமயம் சார்ந்த விடயங்களில் மட்டுமன்றி எல்லா அம்சங்களுக்கும் பொருந்தும்.

மிகத் தீவிரமான கருத்துச் சுதந்திரமானது சிலபோது தனிநபர் களது சிந்தித்து பகுத்தறியும் செயற்பாட்டுக்கு ஆபத்தாகவும் அமைய முடியும். பகுத்தறிவையும் பரஸ்பர புரிந்துணர்வையும் விட தனிப்பட்ட அபிப்பிராயத்தையும் அனுபவத்தையும் மேலோங்கச் செய்யும் நோக்குடன் கருத்துச் சுதந்திரம் தன்னிச்சையாக பாவிக்கப்படுமானால், சமூகத்தின் சுபீட்சம் அபாயத்துக்கு உள்ளாகி விடும். அவ்வாறே கருத்துச் சுதந்திரம் என்பது தீங்கு விளைவிக்கவும், கலகம் செய்யவும், ஆபாசத்தை தூண்டவும், சமயச் சுதந்திரத்தை மீறவும் பயன்படுமானால் அதையும் இஸ்லாம் தடைசெய்கிறது. பொதுவான நலன் மற்றும் சமூகப் பாதிப்பு என்பனவற்றைக் கருத்திற் கொண்டு இவை கட்டுப்படுத்தப்படுகின்றன. பாலியல் மற்றும் மோசமான உணர்வுகளைத் தூண்டும் விடயங்கள் பற்றி வெளிப்படையாகவும் விரும்பத்தகாத முறையிலும் பேசுவது, அதற்காக மோசமான வார்த்தைப் பிரயோகங்களைப் பாவிப்பது என்பனவும் இஸ்லாத்தில் தடுக்கப்பட்டவைகளாகும்.

மனிதர்களது அந்தரங்க உரிமை மற்றும் நியாயமான பாதுகாப்புக் காரணங்கள் (குறிப்பாக யுத்த காலங்களில்) என்பனவும் கருத்துச் சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாட்டுக்குள் அடங்கும் விடயங்களாகும்.

இஸ்லாமிய சட்டக் கொள்கைகளின் படி, ஒருவர் தனது விமர்சன உரிமையைப் பியோகிக்கின்றபோது, சாதாரண மனிதனை விமர்சிப்பதற்கும் பொதுப் பதவியில் இருக்கின்ற ஒருவரை விமர்சிப்பதற்குமான வித்தியாசத்தை நன்கு புரிந்து கொள்ளல் வேண்டும். பொதுப் பதவியில் இருக்கின்ற ஒருவரது பொதுச் செயற்பாடுகளும் தனிப்பட்ட வாழ்வும் வேறுபடுத்தியே அங்கு நோக்கப்பட வேண்டும். இஸ்லாத்தின் ஒழுக்க விதிகள் தனிநபர் உரிமைகளை பாதுகாக்கின்றன. அந்த உரிமைகள் எந்த வகையிலாவது மீறப்படுவதையோ வேவு பார்க்கப்படுவதையோ அவை அனுமதிக்கவில்லை. எனவே இந்த ஒழுக்க விதிகள் கண்டிப்பாக பேணப்பட வேண்டும். எந்த நியாயமோ அடிப்படையோ அற்ற

குற்றச்சாட்டுக்கள் எவ்வகையிலும் சகிக்க முடியாதவை. ஒருவர் மீது சேறு பூசுவதும் அவதூறு உரைப்பதும் கூட அனுமதிக்கப் படாதவை.

இறுதியாக, -பேராசிரியர் அபூ ஸுலைமான் கூறுவது போல்- சமூகத்தால் விதிக்கப்பட்ட ஒழுங்குகளை மீறுகின்ற எத்தகைய தனிநபர் செயற்பாடும் அதன் சட்டபூர்வத் தன்மையை இழந்து விடும். அவ்வாறே நம்பிக்கைக்கும் சிந்தனைக்குமான தனிமனித உரிமைகளை பாதுகாக்கும் வகையில் அந்த ஒழுங்குகள் வகுக்கப் படவில்லை எனில், அவையும் தமது சட்டபூர்வத் தன்மையை இழந்து விடும்.

## தனிநபர் பொறுப்புக்களும் அரச பொறுப்புக்களும்:

இந்த ஒழுங்குகளையும் கட்டுப்பாடுகளையும் இஸ்லாமிய அரசு ஒன்றுதான் வடிவமைத்து அமுல் படுத்த வேண்டும். இது தொடர்பில் இஸ்லாமிய அரசுக்கும் அதன் கீழ் வாழும் பிரஜை களுக்கும் பரஸ்பர கடப்பாடுகள் இருப்பதை இஸ்லாமிய கொள் கைகள் உறுதி செய்கின்றன. அதிகாரம் மிக்க பதவிகளில் இருப்ப வர்கள் மக்களை -தனிநபர்களாகவோ குழுக்களாகவோ- கருத்து வெளியிட அனுமதிப்பது மட்டுமன்றி, சிறந்த பொதுக் கருத்துக் களை முன்வைப்பதற்கான நிறுவன ரீதியான வசதிகளையும் ஸ்தா பிக்க வேண்டும். மக்களுக்கு சரியான தகவல்களை தொடர்ச்சி யாக வழங்குவதன் மூலம் இதனை அவர்கள் செய்யலாம்.குறித்த தொரு விடயம் தொடர்பான எல்லாச் சான்றுகளையும் உண்மை களையும் வெளியிட வேண்டிய கடப்பாடும் அவர்களுக்கு உள்ளது. இதை அவர்கள் தாமாக முன்வந்து செய்யவும் முடியும்; சம்பந் தப்பட்ட தரப்பினர் வேண்டுகோள் விடுக்கின்ற போது செய்யவும் முடியும்.

எந்த கருத்தியல் சித்தாந்தத்தைப் பின்பற்றுவது என்று தீர்மா னிப்பதற்கு மக்களுக்கு உரிமையுள்ளது. அந்த உரிமையைப் பாது காப்பது அரசின் இன்னொரு கடமையாகும். இந்த உரிமையை அரசு மதிக்க வேண்டும். இஸ்லாமிய நாட்டுக்கு வெளியில் வாழ்

பவர்களுக்கும் இந்த உரிமை உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். அரசியல் மற்றும் சமயத் தலைவர்கள் சாதாரண கருத்து வேறு பாடுகளுக்காக எதிர்த் தரப்புடன் மோதிக் கொள்ளக் கூடாது. எதிர்த் தரப்பு சமாதானத்தை மீறி வன்முறைகளில் ஈடுபட்டாலே ஒழிய அவர்களுடன் மோதலில் இறங்கக் கூடாது. எதிர்த் தரப்பி னருக்கு தமது கருத்துக்களை சமாதான வழிகளைக் கையாண்டு பிரசாரம் செய்யும் உரிமை உள்ளது. ஷரீஆவின் வரையறைக்குள் அவர்களும் தமது சுதந்திரத்தை அனுபவிக்கலாம்; விருப்பங்களை தெரிவிக்கலாம். இத்தகைய கருத்துக்களை நிராகரிக்கும் உரிமை சமூகத்துக்கும் உண்டு. இது சம்பந்தமான ஷரீஆ நியதிகளை வாய்மொழி மூலமாகவோ வேறு விதத்திலோ மீறும் தரப்பு (உதாரணமாக, மத நிந்தனையில் அல்லது அவதூறு பேசலில் ஈடு படல்) சட்டத்துக்கு அமைவாக தண்டிக்கப்பட முடியும்.

தெளிவான மாற்று நிலைப்பாடுகளை முன்வைக்காமல் அரசி யல் கலகத்தை மட்டுமே நோக்காகக் கொண்டு செயற்படுவது கருத்துச் சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்வதாகும். இத்தகைய முயற்சிகள் சட்டபூர்வமான ஓர் அரசின் பாதுகாப்பைக் கூட அச்சு றுத்தலுக்கு ஆளாக்கி விடும். குழப்பத்தை (ஃபித்னா) அல்லது கலகத்தை அல்லது துரோகத்தை நோக்காகக் கொண்டு வெளி யிடப்படும் சொற்களும் செயற்பாடுகளும் வெற்றி அளித்தாலோ அல்லது வெற்றி அளிப்பது போல் தென்பட்டாலோ அது சமூகத் தின் இயல்பு நிலைக்கு அச்சுறுத்தலாகவே அமையும். சட்ட பூர்வமான அரசுக்கு எதிராக கிளர்ச்சியைத் தூண்டாத தனிப்பட்ட எந்த அபிப்பிராயமும் 'குழப்பம்' (ஃபித்னா) என்ற நிலையை எட்டுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமிய சமூகம் என்பது அரசின் நிலைப்பாடுகளை எதிர்ப்பதில் புத்தாக்கத்துக்கு இடமளிக்கும் ஒரு கட்டமைப் பாகும். ஆயினும் விமர்சனமும் எதிர்ப்பும் சீர்திருத்தத்துக்கும் விழிப்புணர்வுக்குமான வினை ஊக்கியாகவே பாவிக்கப்பட வேண்டும். உட்பூசலுக்கும் கிளர்ச்சிக்கும் வழி வகுப்பதாய் அவை அமையக் கூடாது. முஸ்லிம் பிரஜைகள் செயலற்று அடங்கிப்

போகும் குடிமக்களாக இருக்க முடியாது என்பதும், முஸ்லிம் ஆட்சியாளர்கள் வரையறையற்ற அதிகாரங்களை அனுபவிப்ப வர்களாக இருக்க முடியாது என்பதும் இங்கு மனங்கொள்ளப்பட வேண்டும்.

## ஊடக தொழில் முறையாளர்களும் ஊடக ரசிகர்களும்:

இஸ்லாமிய அகில நோக்கை ஊடகம் முன்வைக்க வேண்டு மானால் அதை உருவாக்குபவரும் தயாரிப்பாளரும் மூன்று முக் கிய விடயங்கள் பற்றிய தெளிவை கொண்டிருக்க வேண்டும். முதலில் தாங்கள் யாருக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் என்ற விடயத்தில் தெளிவான கருத்து அவர்களுக்கு இருக்க வேண்டும். தாங்கள் முன்வைக்கவுள்ள விடயம் தொடர்பாக எத்தகைய அறிவு தேவை என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டியது இரண்டாவது அம்சமாகும். தாங்கள் யாரை பிரதி நிதித்துவம் செய்கின்றோம் என்ற தெளிவு மூன்றாவது விடய மாகும்.

இஸ்லாமிய உலக நோக்கில் இவ்வாறானதொரு அடிப்படைப் பயிற்சி ஊடகவியலாளர்கள் தாங்கள் சொல்வதற்கும் செய்வ தற்கும் தாங்களே பொறுப்பு என்பதை ஏற்றுக் கொள்வதோடு தொடங்குகின்றது. வழிமுறைகள் பற்றிய முன்னைய கலந்துரை யாடலில் விளக்கப்பட்ட இந்த பொறுப்புக் கூறல் அவர்களது ரசிகர்களை மட்டும் நோக்கியதாக அமையப் போவதில்லை. இந்தப் பொறுப்புக் கூறல் -எல்லாவற்றுக்கும் மேலாக- இறை வனை நோக்கியதாகும். இஸ்லாமியக் கருத்திலான இந்த பொறுப்புக் கூறலை இன்றைய ஊடக மாதிரிகள் பின்பற்றுவ தில்லை என்பதை இங்கு மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறோம். மட்டுமன்றி, ஊடக தொழில் முறையாளர்கள் வெளிப்படையாக யாருக்கும் ஒருபோதும் -முறையாகவோ முறைசாராமலோ- பொறுப்புக் கூறும் கடமைப்பாடற்றவர்கள் என்ற நிலைப் பாட்டை சில ஊடகத்துறை அறிஞர்கள் ஆதரிக்கின்றனர் என்ப தும் இங்கு கவனிக்கத்தக்கது.

ஒவ்வொருவரும் தனக்குத்தானே எஜமான். எனவே, மக்களது தேவைகளை பூர்த்தி செய்கின்ற அல்லது பூர்த்தி செய்யாத நிலைமைகள் எவை என்ற கேள்விக்கு அவர் தனது மனச்சாட்சிக்கு பதில் சொன்னால் போதுமானது என அவர்கள் வாதிக்கின்றனர். ஊடகவியலாளர்கள் வகைகூறலை விட தொழில்வாண்மைக்கே (professionalism) அதிக முக்கியத்துவம் வழங்குவர்; அவர்களுக்குத் தேவையானது தமது சகபாடிகளது அங்கீகாரம் மட்டுமே எனவும் அந்த வாதம் தொடர்கிறது.

இஸ்லாமிய அடிப்படையில் பொறுப்புக் கூறல் என்பது இஸ்லாத்தைப் பற்றிய போதிய அறிவிலும் தங்கியுள்ளது. ஓர் ஊடகவியலாளர் அல்-குர்ஆனை முறைப்படி மேற்கோள் காட்டக் கூடியவராக இருக்க வேண்டும். விவாதங்களின் போது தான் எடுக்கின்ற நிலைப்பாடுகள் மீது அல்-குர்ஆனிய மற்றும் இஸ்லாமிய சட்டங்களைப் பிரயோகிக்கக் கூடியவராக இருக்க வேண்டும். இந்த அடிப்படை அறிவுக்கு மேலதிகமாக இஸ்லாமிய வரலாறு பற்றிய நியாயமான பின்னணியும் அவருக்கு இருக்க வேண்டும். ஒரு முஸ்லிமின் வாழ்வு பற்றிய மிகச் சிறந்த கண்ணோட்டமொன்றை வகுத்துக் கொள்ளவும் அதை விருத்தி செய்யவும் இது உதவியாக இருக்கும். எழுத்தாளர்களும், பத்திரிகை ஆசிரியர்களும், இயக்குனர்களும் தமது ஆக்கங்களில் இஸ்லாமிய எண்ணக்கருக்களை வெளிக்கொண்டு வர வேண்டும். அதற்கு அவர்கள் முதலில் இஸ்லாமிய எண்ணக்கருக்களையும் சிந்தனைகளையும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஊடகவியலாளர்கள் தமது அன்றாட வாழ்வில் இஸ்லாமிய வாழ்வு நெறிகளை முடியுமானவரைக்கும் முழுமையாகவும் சரியாகவும்; பின்பற்ற வேண்டும். அப்போதுதான் அவர்கள் ஓர் உள்ளார்ந்த புரிந்துணர்வோடு பணியாற்ற முடியும்.

எத்தகைய நிறுவனங்களும் செயற்பாடுகளும் மதிக்கத்தக்கவை என்பதையும், ஊடக மாதிரியின் மூலமாக எவ்வாறு மிகச் சிறப்பாக அவற்றை அணுகலாம் என்பதையும் இனம்காண்பதற்கான ஆற்றலையும் மேற்சொன்ன புரிந்துணர்வு உள்ளடக்கும்.

சுதேச வழக்காறுகள் பற்றிய விழிப்புணர்வினூடாக ஓர் ஊடக வியலாளர் எத்தகைய காட்சிகளும் தொழிநுட்பங்களும் அணுகு முறைகளும் சுதேச மரபுகளுக்கு இணக்கமானவை என்பதை புரிந்துகொள்ள முடியும்.

ஊடகவியலாளர்கள் தம்மை 'மேலானவர்கள்' என்று கருது வார்களாயின், அல்லது துறவிகள் போன்று பிறரிலிருந்து விலகி வாழ்வார்களாயின், ஒருபோதும் அவர்களால் வெற்றி அடைய முடியாது. ஊடகவியலாளர் சமூகத்துடன் எப்போதும் தொடர் புள்ளவராக இருக்க வேண்டும். அப்போதுதான் எத்தகைய விவ காரங்கள் பொருத்தமும் முக்கியத்துவமும் உடையவை என்பதை யும், எவை பிரிவினைக்கு வழிவகுப்பவை என்பதையும் அவர் தெரிந்து கொள்வார். இன்றைய ஊடகவியலாளர்கள் பெரும் பாலும் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் நிலையிலிருந்து வெகு தூரத்திலேயே இருக்கின்றனர். இத்துறை சார்ந்தோர் சமயப் பற்று குறைந்தவர்களாகவும், தாராளப் போக்குள்ளவர்களாக வும், மத்திம நிலைச் சமூகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யாதவர் களாகவும் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

உதாரணமாக, அமெரிக்காவில் 50 வீதமான ஊடகவியலாளர் கள் எந்த ஒரு சமயத்தையும் சார்ந்திருப்தை நிராகரிப்பதாக ஆய்வொன்று தெரிவிக்கிறது. அதேவேளை, 70 வீதமான பொது மக்கள் ஏதோ ஒரு சமயக் குழுவை சார்ந்திருப்பதாகவும் அவ் வாய்வு கூறுகிறது.

ஊடக ரசிகர்களைப் பொறுத்தமட்டில், அவர்களது சொந்த மொழியில் அவர்களோடு பேசுதல் என்ற கோட்பாடு கடைப் பிடிக்கப்படுவது அவசியம். இது தொடர்பாக ஏலவே முறைமை தொடர்பான கலந்துரையாடலில் நாம் குறிப்பிட்டதை மீட்டிப் பார்ப்பது பிரயோசனமாக இருக்கும். இஸ்லாமிய மாதிரியில் ஊடகம் என்பது பிரத்தியேகமானதாக இருக்க முடியாது. ஆகக் கூடுதலான மனிதர்கள் அதன் நன்மைகளை அடைந்து கொள்ள வேண்டும் என்பதுதான் அதன் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

இஸ்லாமிய ஊடகத்தைப் பொறுத்தவரை, ரசிகர்கள் என்போர் வெறுமனே செலவழிக்கும் ஆற்றலைக் கொண்டு குரூரமாக வகைப்படுத்தப்பட்ட குடிசனப் பரம்பலில் ஒரு பகுதி இல்லை. எனவே, ஒரு குறிப்பிட்ட தரப்பு மக்களை குறிப்பிட்ட வகைப் பொருள்களை கொள்வனவு செய்யத் தூண்டுதல் போன்ற மறை முக நோக்கங்களுடன் ஊடக நிகழ்ச்சிகள் வடிவமைக்கப்படவோ வழங்கப்படவோ கூடாது. அத்தகைய அணுகுமுறை -கடைசி யில்- வறிய பார்வையாளர்களையே பாதிக்கும். ஏனெனில் அவர் களது சுவைக்கும் தேவைக்கும் ஏற்ற நிகழ்ச்சிகளை நியாயப் படுத்தக்கூடிய கொள்வனவுச் சக்தி அவர்களிடம் இருப்பதில்லை.

இஸ்லாமிய ஊடகத்தில் சொல்லப்படும் அல்லது காட்டப் படும் விடயங்கள் சமூகத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களால் புரிந்துகொள்ள முடியுமானவையாகவும் ஏற்றுக் கொள்ளத் தக்க வையாகவும் இருக்க வேண்டும். ஊடகத்தயாரிப்புகள் ஒரு குறிப் பிட்ட பணக்கார வர்க்கத்தினரை நோக்கியோ அத்தகையோரின் பிரத்தியேக வாழ்வை உற்சாகப் படுத்தும் வகையிலோ அமையு மாயின் அவை இஸ்லாமிய வழிக்கு மாற்றமானவை என்பதில் ஐயமில்லை. குறைந்த வாழ்க்கைத் தரம் கொண்ட மக்களின் பிரச் சினைகளையும் அவலங்களையும் ஊடகங்கள் அடையாளப் படுத்த வேண்டும். அதன் மூலமாகவே சமத்துவம் குறித்த இஸ் லாத்தின் சித்தாந்தம் நிலைநிறுத்தப்பட முடியும்.

சமத்துவம் பேணல் என்பது ஊடக நிகழ்ச்சிகள் வகைப்படுத் தப்படுவதை தடுப்பதாகாது. பெண்களுக்கான நிகழ்ச்சிகள், சிறு வர்களுக்கான நிகழ்ச்சிகள், விஷேட கல்வி நிகழ்ச்சிகள், அடிப் படை தொழில் திறன் விருத்தி நிகழ்ச்சிகள் என ஊடக நிகழ்ச்சி கள் நீண்ட கால திட்டமிடலின் கீழ் உபயோகமான முறையில் வகைப்படுத்தப் பட முடியும். இதனால் முழு சமூகமும் நன்மை அடையும்.

இஸ்லாமிய ஊடக மாதிரி முழுமையான சமத்துவத்தைப் பேண வேண்டுமானால், சிறுபான்மையினரைச் சென்றடையும்

நிகழ்ச்சிகளும் மிக முக்கியமானவை. அதேபோல் வெளிநாட்டு மொழிகள், கலாசாரங்கள், சமய விவகாரங்கள் தொடர்பான நிகழ்ச்சிகளும் ஊக்குவிக்கப்படலாம். இது சிறுபான்மையினர் தமது சுய அடையாளத்தை பேணிக் கொண்டே பெரும்பான்மை சமூகத்துக்குள் வாழ்வதற்கு வழி வகுக்கும். இவ்வாறு அவர்கள் தமது அடையாளத்தை பேணுவதையே இஸ்லாமும் ஊக்குவிக் கின்றது.

## இஸ்லாமிய ஊடக மாதிரியின் செயற்பாட்டுக் கூறுகள்

### பொதுவான வடிவம்:

இந்த ஆய்வின் மூன்றாம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டது போல், இஸ்லாம் சமூகத்துக்கு ஒரு தெளிவான நோக்கை வழங்குகின்றது. அந்த நோக்கத்தை அடைந்து கொள்ளக் கூடிய முறைகளையும் வழிகாட்டல்களையும் கூட அது வழங்குகின்றது. இஸ்லாமிய ஊடகத்தின் உள்ளடக்கமும் வழிமுறையும் (அது பொழுதுபோக்காக இருந்தாலும், கல்வியாக இருந்தாலும், செய்தி யாக இருந்தாலும்) இறைவனை நினைவுகூர்தல் என்ற அடிப் படை நோக்கோடு இயைந்து செல்வதாகவே இருக்க வேண்டும்.

- **உள்ளடக்கம்:**

பொதுவான விதியின் படி இஸ்லாமிய ஊடகம் 'பயனற்ற' (idle) ஒன்றாக இருக்க முடியாது. வெறுமனே பொழுது போக்கிற்காக அல்லது தெளிவற்ற அம்சங்களை வழங்குவதற்காக வடிவமைக் கப்பட்ட நிகழ்ச்சிகளும், தொடர்பற்ற தகவல்களை செய்திகளாக் கும் முயற்சியும் பெறுமதி மிக்க நேரத்தையும் வளங்களையும் வீணடிப்பவையாகவே அமையும். உள்ளடக்கம் என்பது தொடர்ச்சி யாக சிறந்த பெறுமானங்களையும் செயற்பாடுகளையும் வலியுறுத்த வேண்டும். சமூக அடையாளமும் பெருமிதமும் பரஸ்பர உதவியும் சமூகத்தைக் கட்டி எழுப்பவதற்கான ஒத்துழைப்பும் அதில் துலங்க வேண்டும். இத்தகைய தரம் மிக்க உள்ளடக்கத்துக்கு இயைபான தொனிப் பொருள்களாக பின்வருவன அமைய முடியும்:

1. இறைவனுடைய அருள், கருணை முதலிய பண்புகள் பற்றி கலந்துரையாடுதல் அல்லது எடுத்துக் காட்டுதல்.
2. இயற்கை உலகில் இறைவனின் அத்தாட்சிகள் பற்றிய சிந்தனை.
3. ஏனைய கலாசாரங்களையும் வாழ்வு முறைகளையும் புரிந்து அங்கீகரித்தல்.
4. நல்ல பெறுமானங்களை பொதுவாக ஊக்குவித்தல்; சமூகத் துக்குள் அழிவினை ஏற்படுத்தக் கூடிய பாதகமான பெறு மானங்களை கண்டித்தல்.
5. இஸ்லாமிய அகிலநோக்கிற்கு இயைபாக சமூகத்தின் செயற் பாடுகளையும் நெறிமுறைகளையும் சீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பிரஜைகளை பாராட்டி ஊக்குவித்தல்.
6. முஸ்லிம் அல்லாதவர்களுக்கு அல்லது இஸ்லாமிய விசுவாசம் பற்றிய அறிவற்ற முஸ்லிம்களுக்கு இஸ்லாத்தின் அடிப் படைக் கோட்பாடுகளை விளக்குதல். இது அல்-குர்ஆனையும் ஸுன்னாவையும் அன்றாட வாழ்வோடு தொடர்பு படுத்தி பல்வேறு மட்டங்களில் பகுப்பாய்வு செய்வதையும் உள்ளடக்கி இருக்கும்.
7. பார்வையாளர்களின் சமூக பொருளாதார நிலையை விருத்தி செய்யக்கூடிய பொதுவான கல்வி நிகழ்ச்சிகளை வழங்குதல்; உற்பத்தியை மேம்படுத்துவதற்குத் தேவையான ஆற்றல்களை அவர்களுக்குப் போதித்தல்.
8. இஸ்லாமிய கலாசாரத்தின் வரலாறு, பாரம்பரியம் மற்றும் நவீன உலக வரலாற்றில் ஊடுபாவி நிற்கும் அம்சங்கள் தொடர் பான கலந்துரையாடல்.

## • வழிமுறை:

மூன்றாம் அத்தியாயத்தில் விளக்கப்பட்டது போலவே, இஸ் லாமிய ஊடகத்தில் பின்பற்றப்படும் வழிமுறையும் அணுகு முறையும் சில கொள்கைகளுக்கு இயைபாக அமைய வேண்டியது

அவசியமாகும். பின்ருவனவற்றை இஸ்லாமிய ஊடகம் கவனித்துச் செயற்பட வேண்டிய சில அடிப்படை வழிகாட்டல்களாக குறிப்பிட முடியும்:

1. பாவிக்கப்படும் 'மொழி' எந்த கலாசாரத்தை நோக்கி குறித்த விடயம் முன்வைக்கப்படுகின்றதோ அந்த கலாசாரத்தின் மொழியாக இருக்க வேண்டும். இங்கு 'மொழி' என்னும் பதம் குறியீடுகள், மரபுகள், சைக்கினைகள், பேச்சு மற்றும் எழுத்து வடிவ தொடர்பாடல் முதலிய அனைத்தையும் உள்ளடக்கும்.

2. எல்லா நிலைகளிலும் சகிப்புத் தன்மையும் பக்கச்சார்பற்ற அணுகுமுறையும் பேணப்பட வேண்டும். இத்தகைய அணுகுமுறை உண்மைகளை முன்வைக்கும் போது மாத்திரம் தேவையான ஒன்றல்ல. பால், இனம், வகுப்பு, சமயம் என்பவை சார்ந்த சித்தரிப்புகளின் போதும்இதுஅவசியம்.

3. உண்மையை மட்டுமே ஆய்ந்தறிந்து முன்வைக்கும் பணியில் ஆழ்ந்த நுணுக்கம் பேணப்பட வேண்டும். இறுதியில், ஊடகங்கள் தாம் சொல்கின்ற, செய்கின்ற எல்லாவற்றுக்கும் பொறுப்புக் கூறும் கடமைப்பாடு கொண்டது.

4. இஸ்லாமிய ஊடகத்தின் உள்ளடக்கம், வடிவம் உட்பட எல்லா அம்சங்களிலும் இஸ்லாமிய ஒழுக்கங்களும் ஆசார விழுமியங்களும் பேணப்பட வேண்டும். உடை, மொழி, நடத்தை, இரு பாலர் கலப்பு, விரிந்த சமூகக் கலப்பு முதலிய எல்லாவற்றிலும் இது அவசியம்.

சமய அடிப்படையிலான மாதிரி ஒன்று குறித்து கலந்துரையாடுகின்ற போது உண்மையாகவே நம் அக்கறைக்கு வருவது தீவிரநிலை பற்றியதாகும். இத்தீவிரத்தின் ஓர் அங்கமாக குறித்த ஊடகமே நிறுத்தப்படும் நிலை தோன்றலாம். எல்லை மீறிய சமயச் சார்புடையதாக அந்த ஊடகம் மாறுவது தீவிரத்தின் மற்றோர் அங்கமாகும். இத்தகையதோர் அணுகுமுறை ஆக்கத் திறனின் குரல் வளையையே நெரித்து விடும். மட்டுமன்றி, குறித்த ஊடகத்தை அது ஓரங்கட்டி தாக்கமற்றதாகவும் ஆக்கிவிடும்.

வெளிப்படையான சமய நிகழ்ச்சிகள் மக்களுக்கு நினைவூட்ட வும் அறிவூட்டவும் அவசியமானவைதான். ஆயினும், அவை முழு ஊடகத்தையும் வியாபித்து விடாதபடி குறைந்த எல்லையிலேயே அமைந்திருக்க வேண்டும். ஆன்மீகமும் ஆன்மீக உள்ளடக்கமும் நிகழ்ச்சிகளுக்குள் ஊடுபாவி நிற்கலாம். எனினும், அதில் சமநிலை பேணப்படுவது அவசியம். அப்போதுதான் அன்றாட சமூகத்தில் நிலவும் ஆன்மீக மட்டத்தை உண்மையாக பிரதிபலிப்பதாக அது அமையும். உதாரணமாக, ஒரு நாடகக் காட்சியில் வரும் பாத்தி ரங்கள் சமூகத்தின் சராசரி அங்கத்தவரது சமயப் பேணுதல் மட்டத்தை விஞ்சும் வகையில் அமையக் கூடாது.

கருக்கலைப்பு, வட்டி, பெண்கள் முகத்தை மூடுதல், பிறை பார்த்தல் போன்ற சர்ச்சைக்குரிய சில விவகாரங்கள் மிக எளி தாகவே முழுமையான சமயப் பகுப்பாய்வுக்கும் வியாக்கியானங் களுக்கும் உட்படுத்தப்பட முடியும். ஆயினும் இவ்விவகாரங்கள் ஊடகங்களில் அத்தகையதொரு சர்ச்சைக்குரிய சூழமைவில் கலந் துரையாடப் படுவதானது தீவிரமயமாக்கல் நிலைக்கே அவ்வூட கங்களை இட்டுச் செல்லும். எனவே இங்கும் கூட மிதவாத அணுகுமுறை பின்பற்றப்பட வேண்டும். ஊடகத்தின் நம்பகத் தன்மையை பாதுகாக்கவும், துருவ மயப்படுத்தப்பட்ட சமூக மொன்று உருவாகாமல் தடுக்கவும் இது அவசியம். இவ்வாறான விடயங்கள் திறந்த விவாதத்துக்குப் பொருத்தமான பொது அமர்வுகள் வாயிலாகவே அணுகப்பட வேண்டும். மக்களது வாழ் வில் உண்மையான பிரச்சினைகளாக அமைகின்ற பாலியல், குடும்பக் கட்டுப்பாடு, ஆபாசம் முதலிய விவகாரங்கள் கூட பேசப் பட வேண்டியவைதான். ஆயினும் இஸ்லாமிய விழுமியங்களுக்கு உகந்த வகையில் இவை கையாளப்பட வேண்டும். இதன் போது வெளிப்படையான காட்சிகளோ உதாரணங்களோ முன்வைக்கப் படலாகாது.

## இறக்குமதிகள்:

முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தமட்டில் பல சந்தர்ப்பங்களில் தமது சொந்த நிகழ்ச்சிகளைத் தயாரிப்பது பொருளாதார ரீதியாக சாத்தியப்படாத ஒரு விடயமாகும். எனவே, பெரும் போராட்டத் தோடு மேற்கொள்ளப்பட்டு வரும் ஊடக முயற்சிகளுக்குத் தேவையான சில பகுதிகளையாவது குறைந்த செலவில் இறக்குதி செய்வதென்பது தவிர்க்க முடியாதது. இருந்தாலும் அந்நிகழ்ச்சி களை பாகுபாடின்றி அளவுக்கதிகம் பயன்படுத்துவதில் ஆபத்து இருக்கிறது. அளவுக்கதிகம் அவற்றில் தங்கியிருந்து விட்டால் பின்னர் அவற்றிலிருந்து விலகிவிட முடியாத நிலையும் ஏற்படும். வெளிநாட்டு இறக்குமதிகளில் ஒரேயடியாகத் தங்கி யிருப்பது, உள்நாட்டு விடயங்களில் ஆழ்ந்து கவனம் செலுத்தும் நிலையை யும் தடுக்கும். சுதேச மட்டத்தில் கவனிக்க வேண்டிய பயிற்சி, திறன் விருத்தி என்பவற்றையும் தடுக்கும். இவ்வாறான சூழ் நிலைகள் தோன்றுமாயின் நிதான நிலைக்குத் திரும்புவது அவசியம். முஸ்லிம் சமூகம் முழுமையான சுய தேவைப் பூர்த்தி என்ற இறுதி இலக்கை மனதில் கொண்டு, மிக அத்தியாவசிய மானதை மட்டுமே இறக்குமதி செய்ய வேண்டும்.

எவ்வாறாயினும், இறக்குமதி செய்யப்படும் அம்சங்கள் ஏற் கனவே உள்ளடக்கம் மற்றும் வழிமுறை தொடர்பான கலந்துரை யாடலில் நாம் குறிப்பிட்டுள்ள வழிகாட்டல்களுக்கு இணக்க மானவையாக இருக்க வேண்டும். இந்த நிபந்தனையானது தற் போது உலகச் சந்தையில் கிடைக்கும் கணிசமானளவு நிகழ்ச்சி களை புறம் தள்ளி விடும். ஆயினும் கணிசமானளவு வேறு நிகழ்ச்சி கள் தேவைக்கேற்ப சீராக்கம் செய்து அல்லது செய்யாமல் பயன் படுத்தக் கூடிய நிலையிலேயே இன்னும் உள்ளன. இயற்கை விஞ்ஞானம் சார்ந்த நிகழ்ச்சிகள், சிறுவர் கல்வி மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிகள், வளர்ந்தோருக்கான சில நாடகங்கள், செய்தி நிகழ்ச்சிகள் முதலியவற்றை இங்கு எடுத்துக்காட்டாக குறிப்பிட லாம். பொதுவாக இந்த நிகழ்ச்சிகள் இஸ்லாமியக் கண்ணோட் டத்துடன் ஓரளவு ஒத்துப் போகக் கூடிய நிலையிலேயே உள்ளன.

சவூதி அரோபியாவில் இறக்குமதி செய்யப்படும்சில நிகழ்ச்சி கள் சவூதி தொலைக்காட்சிக்கு ஏற்றவாறு இலகுவாகசீராக்கம் செய்யும் தன்மை கொண்டவை. அரபுத் தொலைக்காட்சி நிகழ்ச்சி களுக்கான முக்கிய சந்தையாக சவூதி அரேபியா உள்ளது. இதனால் பல எகிப்திய மற்றும் லெபனானிய நிகழ்ச்சிகள் சவூதி ஒழுங்கு களை கருத்தில் கொண்டே தயாரிக்கப்படுகின்றன.

முஸ்லிம் உலகில் பாரியளவிலான சந்தை வாய்ப்புக் காணப் படுவதால், சர்வதேச ஊடக தயாரிப்புக் கம்பனிகள் இஸ்லாமிய வழிகாட்டுதல்களுக்கு அமைவாக நிகழ்ச்சிகளைத் தயாரிக்க முடியும். முஸ்லிம் நாடுகளின் ஒத்துழைப்போடு இது மேற் கொள்ளப்படலாம். இஸ்லாமிய உணர்வுகளுக்கு ஏற்ப இலகு வாக சீராக்கம் செய்யும் வகையிலான ஊடக நிகழ்ச்சிகளைத் தயாரிப்பது இங்கு மற்றொரு தெரிவாக அமைய முடியும்.

## பொழுது போக்கு அம்சங்கள்:

பொழுது போக்கு அம்சங்களும் இஸ்லாமிய ஊடக மாதிரி யின் ஒரு பகுதிதான். பெறுமானங்களையும் தகவல்களையும் இதனூடாக மிக எளிமையாகவும் இலகுவாகவும் மக்களுக்கு கொண்டு செல்ல முடியும். ஏனைய எல்லா ஊடக முன்வைப்பு களையும் போலவே பொழுது போக்கு அம்சங்களுக்கும் ஒரு நோக்கமும் இயங்கு திசையும் இருக்க வேண்டும். நகைச்சுவை நிகழ்ச்சிகள், சாகச நிகழ்ச்சிகள், நாடகங்கள், மற்றும் பல பொழுது போக்கு நிகழ்ச்சிகள் ஆகிய எல்லாமே கல்விக்கும் உணர்வார்ந்த சமூகத்தைக் கட்டி எழுப்பும் பணிக்கும் பங்களிப்புச் செய்யும் வகையில் அமைவது அவசியம். முரட்டுத் தனத்தையும் உணர்ச் சிக் கொந்தளிப்பையும் காட்ட வேண்டும் என்பதற்காக வன் முறைச் சித்தரிப்புகள் அங்கு இடம்பெறலாகாது. செயல்களின் விளைவுகள் -மிகைப்படுத்தப்பட்டவையாயினும், நிஜ வாழ்வை பிரதிபலிப்பவையாயினும்- தெளிவாகவும், பல்வேறு பாத்திரங்க ளோடு தொடர்புபட்டவையாகவும் அமைதல் வேண்டும். கேலிச் சித்திரங்கள் கூட பொழுது போக்கு நிகழ்ச்சிகளாக அமையும்

அதேவேளை, வரலாறு, பிற கலாசாரங்கள், படைப்பின் அழகு, தார்மீகப் பிரச்சினைகள் என்பவை தொடர்பாக அறிவூட்டலாம்.

- ***நிஜ வாழ்வு மாந்தர்கள் பற்றிய சித்தரிப்பு:***

மேலைத்தேச ஊடகங்களில் மனிதர்கள் இயல்பிலேயே பல வீனர்களாகவும், தவறு செய்யக் கூடியோராகவும், சூழ்ச்சிக்காரர் களாகவும், தீங்கிழைக்கும் இயல்பு கொண்டோராகவும், தமது இச்சைகளுக்கு அடிமைப்பட்டோராகவும் சித்தரிக்கப்பட முடி யும். ஆனால் இஸ்லாமிய சிந்தனையை பிரதிபலிக்க வேண்டிய இஸ்லாமிய ஊடகத்தில் மனிதர்கள் என்போர் கௌரவம் மிக்க, அழகிய, பகுத்தறிவு கொண்ட ஒரு படைப்பு. இஸ்லாமியக் கண் ணோட்டத்தின் படி, மனிதர்கள் அடிப்படையில் நல்லவர்கள். அவர்கள் பாவம் செய்வது அல்லது வழிகேட்டில் செல்வது என் பது இந்த இயல்பான பண்புக்கு மாறுபட்ட நிலையாகும்.

மனிதர்கள் தமது விடாமுயற்சி, மனோ உறுதி என்பன மூலம் இச்சைகளையும் அவற்றைத் தூண்டும் சக்திகளையும் வெற்றி கொள்ள முடியும் என்பதையே அவர்களிடம் உள்ள இந்த அடிப் படையான நல்லியல்பு உணர்த்துகிறது. இஸ்லாமியக் கண் ணோட்டத்தில், ஒரு மனிதன் பிரக்ஞையிலோ செயற்பாட்டிலோ பலவீனமாக இருப்பதென்பது ஒரு தற்காலிகமான நிலைதான்.

மேலைத்தேச நிகழ்ச்சித் தயாரிப்புக்களும் எழுத்தாக்கங்களும் ஒரு கதாநாயகனின் பண்புகளை மையப்படுத்தியதாகவே இருக் கும். அவருடைய வீரதீரச் செயல்கள் மற்றவர்களைப் பாதுகாப் பது போலவே அமைக்கப்பட்டிருக்கும். தனிநபர் ஒருவரை இவ் வாறு தன்னிகரில்லாத் தலைவனாக சித்தரிக்கும் பாங்கு இஸ் லாமியக் கண்ணோட்டத்தில் இல்லை. சமூகக் கட்டமைப்புக் குள் நல்லதை ஊக்குவிக்கும் வகையில் இயங்கும் தனிமனிதக் கதாபாத்திரம் சமூகத்தின் பெறுமதி மிக்கதொரு சொத்தாகவே அங்குமதிக்கப்படும். ஒரு தனி மனிதனின் பால், இனம், பருமன், உடல்வாகு என எல்லாவற்றையும் தாண்டிய யதார்த்தம் இது. இதற்கு அப்பால் இளமைத் துடிப்பும் வசீகரமும் உறுதியும் மிக்க

தன்னிகரில்லா நாயகன் என்ற பிம்பம் எதுவும் அங்கு கிடையாது. தனது வீட்டு விடயங்களை ஒழுங்காக நிர்வகிக்கின்ற ஒரு பெண் கூட சமூகத்தின் நிலைபேற்றுக்கு முக்கியமானஒரு கூறாகவே அங்கு கருதப்படுகிறாள். தனது குடும்பத்தைக் காப்பாற்ற வயலில் இறங்கி சேற்றை மிதித்து நிலத்தை உழும் விவசாயி உட்பட தொழில் புரியும் எல்லோருமே சமூகத்தில் பெறுமதி மிக்க கூறுகளாகவே நோக்கப்படுகின்றனர். நல்ல தாக்கத்தை விளைவிக்கக் கூடிய எல்லோருமே கதாநாயகர்கள்தான். ஏனெனில் இந்த தனி நபர்கள் சமூகத்தின் கட்டமைப்பை பேணுவதற்காக அதற்குள் இருந்து கொண்டே பணியாற்றுபவர்கள். தேவை ஏற்படும் பட்சத்தில் அந்த சமூகத்தின் சீர்திருத்தப் பணிகளை மேற்கொள்பவர்களும் இவர்கள்தான். அந்த வகையில் சமூகத்தின் முழு அங்கத்தவர்களும் பாராட்டுக்கும் அங்கீகாரத்துக்கும் உரியவர்களே.

இவ்வாறு நாயகர்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதும், தனிநபர்களையும் குழுக்களையும் போற்றிப் புகழ்வதும் விளையாட்டுத் துறையிலும் கூட வியாபித்துள்ளது. மேலைத்தேச ஊடகம் விளையாட்டு நிகழ்வுகளில் தனிநபர்களை அளவுக்கு மிஞ்சி விளம்பரப் படுத்துகின்றது; குழு அடையாளத்தை முக்கியத்துவப்படுத்துகின்றது; அணிகளின் நாடுகளுக்கும் புவியியல் அமைவிடங்களுக்கும் அதீத அழுத்தம் வழங்குகிறது. அணிகளுக்கு இடையிலான போட்டித் தன்மை ஊடகங்கள் வாயிலாக முன்தள்ளப்பட்டு வலுவூட்டப்படுகின்றது. இது ஒரு வகையான பிரதேசவாதத்தையும் கோத்திரவாதத்தையும் உருவாக்கி, ‘வெறித்தனமான ரசிகர்கள்’ என்ற நோய்க்குறி தோன்ற வழியமைக்கிறது. பல சந்தர்ப்பங்களில் இது வன்முறைக்கும் காரணமாகி விடுகிறது.

இஸ்லாமிய ஊடகம் இவ்வாறான எதனையும் விளம்பரப் படுத்த முடியாது. இஸ்லாமிய ஊடகம் விளையாட்டுகள் பற்றிப் பேசுகின்ற போது அவற்றின் சிறப்பு, அவற்றினால் கிடைக்கக் கூடிய ஆரோக்கியப்பயன்கள் என்பன பற்றிக் குறிப்பிடலாம். ஒரு விளையாட்டுப் போட்டி பற்றி வெளிப்படுத்தப்படும் உணர்வு அதில் பங்கேற்கும் இரு தரப்பையும் பாராட்டுவதாக அமைய

வேண்டும். அதில் வெளிப்படுத்தப்படும் அபாரமான திறமையை கௌரவிப்பதாக அமைய வேண்டும். மற்றவர்களும் தமது வாழ்வில் அவ்வாறான ஆற்றல்களை வளர்த்துக் கொள்வதற்கான தூண்டுதலாக அது அமைய வேண்டும். தனி நபர்களை தொல்லைக்கு உட்படுத்துவதாகவோ, குழுக்களை பிரதேச ரீதியாகவும் வேறு வழிகளிலும் நெருக்குதலுக்கு ஆளாக்குவதாகவோ அது அமையக் கூடாது.

இறுதியாக, மக்களது மரியாதையும் கௌரவமும் பாதுகாக்கப்படும் வகையிலும், அவர்களது பொருளாதார நிலைமைகள் கவனத்தில் கொள்ளப்படும் வகையிலும் 'யதார்த்த வாழ்வு' பிரதிபலிக்கப்பட வேண்டும். அப்போதுதான் திரையில் காண்பதற்கும் தங்களது உண்மையான துயர வாழ்வுக்கும் இடையில் வித்தியாசம் இருப்பதாக அவர்கள் உணர மாட்டார்கள். எனவே, ஏழைகளை ஏழைகளாகவே காட்டலாம். பணக்காரர்களை தாழ்மையும் அடக்கமும் கௌரவமும் உள்ளவர்களாக காட்டலாம். எல்லாத் தயாரிப்புக்களும் ஆன்மீகத்தை பெருமைப்படுத்துவதாகவும் அதன் நன்மைகளை விளக்குவதாகவும் இருக்க வேண்டுமே தவிர லௌகீக ஆடம்பரங்களையும் உலக இன்பங்களையும் போற்றுவதாக அமையக் கூடாது. மேலும் இந்த ஊடகத் தயாரிப்புக்கள் மக்களுக்கு அவர்கள் மீதே நம்பிக்கை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும். தங்களது நிலை முற்றிலும் நம்பிக்கை அற்றதாகி விட்டதே என்ற உணர்வை அவை ஏற்படுத்தக் கூடாது.

- **வரையறைகள்:**

பொழுதுபோக்கு தயாரிப்புக்களில் இஸ்லாமிய விழுமியங்களை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம் இருக்கும் அதே வேளை, சில வரையறைகளும் உண்டு. நகைச்சுவை, கிண்டல், பகடி, கேலிச் சித்திரங்கள் ஆகிய எல்லாமே, உள்ளடக்கமும் நோக்கமும் இஸ்லாமிய விழுமியங்களுக்கு இசைவாக இருக்கும் வரைக்கும்,ஏற்றுக் கொள்ளக் கூடிய பொழுது போக்கு வடிவங்கள்தான். பொழுதுபோக்கு அம்சங்களில் எப்போதும் ஒரு செய்தி

யைச் சுமந்திருக்கும் உணர்வு அல்லது சமூக சீர்திருத்தத்தை மேற்கொள்வதற்கான முனைப்பு காணப்படுமாயின், ஊடக முன் வைப்புகள் வெறும் கவனக் கலைப்பான்களாக மாறுவது தடுக் கப்படும்.

எவ்வாறாயினும், திருமணம், முதியோரை மதித்தல், பொது நம்பிக்கை, கல்வி, தேவையுடையோருக்கு உதவுதல் முதலிய உன்னதமான அம்சங்களை பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மதிக்க வேண்டும். சமூகத்தில் நிறுவன மயப்படுத்தப்பட்டிருக்கும் இவ் வம்சங்களை மக்களும் ஊடகமும் சமூகத்தின் முதுகெலும்பாகவே பார்க்க வேண்டும். இவை எந்த வகையிலும் விட்டுக் கொடுக்கப் படவோ அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படவோ கூடாது. அதே போல் இஸ்லாத்தின் அடிப்படைக் கிரியைகளான தொழுகை, ஹஜ் (யாத்திரை), ஸகாத் (தர்மம்), றமழான் நோன்பு என்பன வும் மதிக்கப்பட வேண்டும். இவற்றிலும் எந்த விட்டுக் கொடுப் புக்கும் இடமில்லை. இச்செயற்பாடுகள் ஒட்டு மொத்த இஸ்லா மிய வாழ்வு முறையின் பிரிக்க முடியாத அம்சங்களாகும்.

அவ்வாறே இஸ்லாமிய ஊடகம் நபி (ஸல்) அவர்களையும், அன்னாரது தோழர்களையும், வானவர்களையும் எந்த வகை யிலும் மரியாதைக் குறைவாகவோ விரும்பத்தகாத விதத்திலோ சித்தரித்துக் காட்ட முடியாது. மேலும், பல இஸ்லாமிய அறிஞர் களது கருத்துப்படி இறைவனின் தூதர்களையோ, வானவர் களையோ, இறைத்தூதரின் தோழர்களையோ, நேர்வழி நடந்த கலீபாக்களையோ வரலாற்று நாடகங்களில் அல்லது கல்விப் பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் அல்லது சிறுவர் நிகழ்ச்சிகளில் அல்லது காட்டூன் தயாரிப்புகளில் பௌதீக உருவமைப்புடன் சித்தரித்தல் கூடாது. இஸ்லாமிய விசுவாசத்தின் முக்கிய கூறு களாக இருக்கின்ற இந்த விடயங்கள் பற்றி தவறான எண்ணங் களும் கற்பனைகளும் உருவகங்களும் மக்கள் மத்தியில் தோன்றி விடக் கூடாது என்பதுதான் இந்த தடையின் பகைப்புலக் காரணமாகும். இத்தகைய ஸ்தூலப் பிரதிமைகள் இன்றித்தான் நபிமார்களும் மதிப்புக்குரிய பிற சீர்திருத்தவாதிகளும் உலகில்

இவ்வளவு பெரிய தாக்கத்தை இதுவரை ஏற்படுத்தினர் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. உண்மையில் இவர்களுக்கு புவியியல் ரீதியான அல்லது கலாசார ரீதியான எந்தப் பின்னணியும் இருக்க வில்லை. தூதரை விட தூதே பிரதானமானதாகும்.

விளம்பர அனுசரணையின் கீழ் ஒளிபரப்பப்படும் சில தொடர் நாடகங்கள் தினசரி அல்லது வாராந்த ஒளிபரப்புக்களாக மாதக் கணக்கிலும் வருடக் கணக்கிலும் தொடர்கின்றன. இவற்றுள் பல தொடர்கள் இஸ்லாமியக் கொள்கைகளுக்குப் பொருத்தமற்றவை. இவை பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளாக அமைவதற்கும் அப்பால், ரசிகர்களை தமக்கு அடிமையாக்கி வைக்கவே பெரிதும் முயல் கின்றன. இதனால் மக்கள் இவற்றை பொழுதுபோக்காகப் பார்க் காமல் தமது வாழ்வின் அன்றாடக் கடமைகளில் ஒரு பகுதியாகக் கருதும் அவல நிலை ஏற்படுகின்றது. மக்கள் அந்த ஒளிபரப்பு நிகழ்ச்சி நிரலுக்கு அடிமையாகி விடுவதால், இஸ்லாம் வகுத்துக் கொடுத்துள்ள அன்றாடக் கடமைகளின் சமநிலையும் கட்டுக் கோப்பும் சீர்குலைகின்றன.

தற்கால ஊடக நடைமுறைகள் பற்றி முன்வைக்கப்படும் மற் றொரு விமர்சனம் கிசுகிசுக்களை ஊக்குவிப்பதும் அவற்றை ஒளிபரப்புவதும் ஊடகத் துறை சார்ந்த பிரபலங்களை மேன் மைப்படுத்துவதும் ஆகும். அந்த வகையில் ஆளுமை இதழியல், மஞ்சள் பத்திரிகை, கிசுகிசு வெளியீடுகள், தொலைக்காட்சி மற் றும் திரைப்பட நட்சத்திரங்கள் தொடர்பான சந்தைப்படுத்தல் நிகழ்ச்சிகள், அவர்களின் கவர்ச்சிப் படங்கள், அவர்களது காதல் விவகாரங்கள், அவர்கள் அடுத்து ஏற்கவுள்ள கதாபாத்திரங்கள் பற்றிய குறிப்பு முதலியவற்றுக்கு இஸ்லாமிய ஊடக மாதிரியில் எந்தப் பெறுமதியும் இல்லை. இங்கும் பொழுதுபோக்கு அம்சங் கள் முன்வைக்கின்ற செய்தியில்தான் கவனம் செலுத்தப்பட வேண்டுமே தவிர அவற்றைச் சுமந்து வரும் 'நபர்களில்' அல்ல.

## கல்வி சார் அம்சங்கள்:

இஸ்லாமிய ஊடக மாதிரியில் கல்வி சார் அம்சங்கள் மிக முக்கிய இடம் வகிக்கின்றன. முன்னர் குறிப்பிட்டது போல், ஊடக நிகழ்ச்சிகள் தமது நோக்கத்துக்கு இசைவான வகையில் மக்களது அடிப்படை அறிவை வளர்க்க வேண்டும். சமூகத்தை மேம்பாட டையச் செய்யும் விவாதங்களையும் உரைகளையும் அவை வழங்க வேண்டும். அந்த வகையில், இறை விசுவாசத்தின் அடிப்படை அம்சங்களே கல்வி சார் விடயங்களில் முதலில் கவனிக்கப்பட வேண்டியவை ஆகும். தொழுகை, நோன்பு, ஸகாத் போன்ற முக்கியமான கடமைகளை எவ்வாறு நிறைவேற்றுவது என விளக்கும் நிகழ்ச்சித் தொடர்களும் இவற்றுள் அடங்கும். இறை விசுவாசத்தின் அடிப்படைக் கோட்பாடுகளையும் அல்-குர்ஆனை யும் ஸுன்னாவையும் விளக்கும் வகையிலான நிகழ்ச்சிகளும் கலந்துரையாடல்களும் கூட இவற்றுள் அடங்கும். இவை அனைத்தையும் பிரதானமாக உள்ளடக்கிய வகையிலேயே கல்வி நிகழ்ச்சிகள் அமைய வேண்டும். ஹஜ் மற்றும் றமழான் போன்ற வருடாந்த விஷேட நிகழ்வுகளின் போது அவற்றின் ஆன்மீக, கலாசார, வரலாற்று முக்கியத்துவத்தை ஊடக நிகழ்ச்சிகள் பிரதி பலிக்க வேண்டும்.

இந்த அடிப்படைக் கல்வி நிகழ்ச்சிகளோடு சேர்த்து இஸ் லாத்தை தமது விசுவாசப் பிரமாணமாக மிக அண்மையில் ஏற்றுக் கொண்டவர்களைக் கவனத்திற் கொண்டு அவர்களுக்கு அறிவூட் டும் வகையிலான நிகழ்ச்சிகளும் வழங்கப்பட வேண்டும். இத் தகையோரது தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலான விஷேட பருவகால வெளியீடுகளும் காணொளிகளும் தயார் செய்யப்படு வது அவசியம்.

சிறுவர்களையும் அவர்களது அறிவுத் தேவையையும் கவனத் தில் கொள்வது கல்வி ஊடக நிகழ்ச்சிகளின் மற்றோர் அடிப் படையான அம்சமாகும். இது இறை நம்பிக்கையையும் சுதேச கலாசாரத்தையும் உள்ளடக்கி இருக்க வேண்டும். இதற்கென சில

பிரபலமான வெளிநாட்டு நிகழ்ச்சிகளைத் தழுவி சுதேச மொழி களில் நிகழ்ச்சிகளை உருவாக்கலாம். சிறுவர்களுக்கான வெளி நாட்டு நிகழ்ச்சிகள் பலவற்றை இஸ்லாமிய மாதிரிக்கு இசைவாக பயன்படுத்திக் கொள்ளவும் முடியும். மேலைத் தேசங்களில் ஒளிபரப்பாகும் பிரபலமான, பிரயோசனம் மிக்க, எமது கொள்கை களுடன் மாறுபடாத நிகழ்ச்சிகளைத் தருவித்து தேவைக்கேற்ப சீராக்கம் செய்தும் பயன்படுத்தலாம். ஏனைய கலாசாரங்களையும் வாழ்வு முறைகளையும் அறிமுகம் செய்யும் வகையிலும் இவற்றை பயன்படுத்த முடியும். இயற்கை மற்றும் அழகியல் தொடர்பான தயாரிப்புக்களை, எல்லாம் வல்ல இறைவனின் மாட்சிமையை எடுத்துக் காட்டும் வகையில் காண்பிப்பதும் ஏற்கத்தக்கதே.

கல்வி நிகழ்ச்சிகளின் மற்றொரு வடிவம் பொதுச் சேவை அறிவிப்பு நிகழ்ச்சிகளாகும். கல்வியறிவின்மையை நீக்கவும், உற் பத்தித் திறனை மேம்படுத்தவும், பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த வும் இவ்வாறான நிகழ்ச்சிகளைப் பயன்படுத்தலாம். பெற்றோர் தமது பருவவயதுப் பிள்ளைகளை சிறந்த முறையில்கையாள உதவும் வகையிலான குறு நிகழ்ச்சிகளும் தயாரித்து வழங்கப்பட முடியும்.

கல்விசார் நிகழ்ச்சிகள் வழங்கப்படுவது வெறுமனே அறிவை விரிவாக்குவதற்காக மட்டுமல்ல. ஆற்றலும் தகுதியும் வாய்ந்த சமுதாயமொன்றை உருவாக்கவே இத்தகைய அறிவு சார் நிகழ்ச்சி கள் வழங்கப்படுகின்றன என்பது இங்கு கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

## செய்திகளும் செய்திப் பகுப்பாய்வும்

### • அறிமுகமும் வழிமுறையும்:

செய்திகளும் இஸ்லாமிய ஊடகத்தின் மாதிரியும் குறித்த பல விடயங்களை ஏற்கனவே நாம் மூன்றாவது அத்தியாயத்தில் கலந் துரையாடி உள்ளோம். எஞ்சிய சில முக்கியமான விடயங்களை சுருக்கமாக எடுத்துக் காட்ட இங்கே முயல்கிறோம்.

தற்போதுள்ள செய்தி முகவராண்மைகளும் ஏனைய மாதிரிகளும் மேலைத்தேச பாணியிலேயே அமைந்திருப்பதால், தற்கால முஸ்லிம் செய்திச் சேவைகள் மாற்று மாதிரி ஒன்றை உருவாக்க முடியாத நிலையில் இருக்கின்றன. இது 'செய்தி முகவராண்மை' என்ற சொல்லுக்கு முன்னால் அல்லது செய்தி அறிக்கைக்கு முன்னால் 'முஸ்லிம்' என்ற சொல்லை சேர்த்துக் கொள்வதால் மட்டும் சாத்தியப்படும் விடயம் அல்ல. இஸ்லாமிய ஊடக மாதிரியில் ஒரு செய்தியை ஒருங்கிணைப்பதற்கு இதழியலின் வழிமுறைகளையும் செயற்பாடுகளையும் இஸ்லாமிய மயப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

இஸ்லாமிய செய்தி மாதிரியானது செய்திகளை அறிக்கை இடும் விடயத்தில் 'மதச்சார்பற்ற' நோக்கை கொண்டிருக்காது. அதேவேளை மேற்கத்திய மாதிரியில் இஸ்லாம், முஸ்லிம்கள், மற்றும் அவர்களது சமூகங்கள் பற்றிய சித்தரிப்பு மதச்சார்பற்ற நோக்கையே கொண்டிருக்கும். சமயச் சார்புக்கும் சமயச் சார்பின்மைக்கும் இடையிலான இவ்வேறுபாடு ஆய்வுகளின் போதும் வியாக்கியானங்களின் போதும் அனேகமாக காணாமல் போய் விடுகின்றது. இதனால் மக்களையும் அவர்கள் சம்பந்தப்பட்ட விடயங்களையும் பிழையாக சித்தரிக்கும் நிலையும் உருவாகின்றது. இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் பார்க்கப்பட வேண்டிய தொனிப்பொருள்களைக் கொண்ட பல கட்டுரைகளும் செய்தி அறிக்கைகளும் இந்தக் கண்ணோட்டத்தை தவறவிட்டவையாகவே காணப்படுகின்றன. வெளியிடப்படும் செய்திகள் ஏதோ ஒரு வகையில் இஸ்லாமிய அகில நோக்குடன் தொடர்புபட்டவையாக இருப்பதை உறுதிசெய்யும் பொறுப்பு இஸ்லாமிய செய்தி முகவராண்மைகளைச் சார்ந்ததாகும்.

இஸ்லாமிய செய்தி முகவராண்மை மாதிரி ஒன்றை உருவாக்கும்போது கவனம் செலுத்தப்பட வேண்டிய இன்னொரு முக்கிய விடயம் 'செய்தி' என்பதன் உள்ளடக்கம் என்ன என்ற அடிப்படைக் கேள்வியாகும். தற்கால ஊடக மாதிரிகளில் சமாதானம், இயல்பு நிலை, ஸ்திரத் தன்மை, தொடர் அபிவிருத்திகள் என்பன

செய்திகளாக முக்கியத்துவம் பெறாத நிலையே காணப்படுகிறது. மோதல்கள், முரண்பாடுகள், ஒழுங்கீனம் என்பனவே அங்கு செய்திகளாக பார்க்கப்படுகின்றன. பொறுப்புக் கூறலையும் தார் மீக ஒழுக்கத்தையும் அவை செய்தியாக்காமல், ஊழல் மோசடி களை செய்தியாக்குகின்றன. ஆனால் இஸ்லாத்தைப் பொறுத்த வரை, சமூகத்தைப் பாதிக்கும் எல்லாமே செய்திகள்தான். மோத லாக இருந்தாலும் சமாதானமாக இருந்தாலும் அனைத்தும் முக்கியமானவைதான். எவ்வாறாயினும் எதிர்மறையான சமூகப் போக்குகளுக்கு அளவு மீறிய அழுத்தம் வழங்கப்படாமல் பார்த் துக் கொள்வதும் முக்கியமானது.

தற்கால செய்தி ஊடகங்களில் பணியாற்றும் முஸ்லிம்களின் செயற்பாடுகள் விமர்சனத்துக்கு ஆளாகியுள்ளன. மதச்சார்பற்ற தன்மையை மீளக் கொண்டு வருவதற்கான பொறியில் அவர்கள் சிக்கியுள்ளனர் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பரந்த இஸ்லா மிய தோற்றப்பாட்டை இஸ்லாமிய அரசியல் தோற்றப்பாடாக மாத்திரம் குறுக்கும் மேலைத்தேச ஊடக முனைப்பையே அவர் கள் பிரதிபலிக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது. சமயத்துக்கு பொது வாழ்விலோ அரசியல் அரங்கிலோ எந்தப் பங்கும் இல்லை என்ற நிலையை ஸ்தாபிப்பதே மதச்சார்பற்ற போக்கின் நோக்க மாகும். சமயம் என்பது தனது பாரம்பரியமான பங்களிப்பைத் தாண்டி அரசியல் அரங்கிற்குள் ஊடுருவும் போது மட்டுமே அங்கு செய்தியாக பார்க்கப்படுகின்றது. அவ்வாறான ஒரு நிலையை சமயச் சார்பான செய்தியொன்று எட்டாத வரை மதச் சார்பற்ற நிருபர்கள் அதனை செய்தியாக அங்கீகரிப்பதில்லை. சமயமானது அரசியல் அரங்கில் மோதலுக்கு உள்ளாகின்ற போதுதான் அது செய்திக்கான பெறுமதியைப் பெறுகின்றது என்றே மதச்சார்பற்ற போக்குக் கொண்ட முஸ்லிம் ஊடகவியலாளர்களும் கருதுகின் றனர்.

இஸ்லாமிய ஊடகத்துறை கூட பல்வேறு இஸ்லாமிய அரசியல் இயக்கங்களுக்கு வழங்கிய (குறைந்த பட்ச) செய்தி முக்கியத்து வத்தையாவது சமகால முஸ்லிம் உலகின் வாழ்வியலுக்கும்

செயற்பாடுகளுக்கும் இன்று வரை வழங்கவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். முஸ்லிம் வெகுமக்களின் அன்றாட யதார்த்த வாழ்வில் முக்கியத்துவம் பெறாத அரசியல் முரண்பாடுகளிலும் கொந்தளிப்புக்களிலும் கூடிய கவனம் செலுத் தப்படும் நிலைக்கு இது இட்டுச் சென்றுள்ளது. இதனால் இஸ் லாம் அளவுக்கு அதிகமாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. மட்டுமன்றி, ஊடகவியலாளர்களும் கூட முஸ்லிம் உலகின் அர சியல் வாழ்வை மிக மேலோட்டமாக அறிக்கையிடும் நிலைக்கு -பாகுபாடின்றி- திசை திருப்பப்படுகிறார்கள். மதச்சார்பற்ற பத்தி ரிகைத் துறையின் இயல்பும் இதுதான் என்பது இங்கு குறிப் பிடத்தக்கது. இறுதியில், முஸ்லிம்களுக்கு அதிக முக்கியத்துவம் உடைய பல பொது அபிவிருத்திகள் குறித்து மிகக் குறைவாகவே அறிக்கையிடப்படும் சூழ்நிலை உருவாகின்றது.

இந்த நிலை மிகப் பாரதூரமானதாகும். ஏனெனில் இஸ்லாமிய செய்தி மாதிரி என்பது 'விரிந்த படம்' ஒன்றை பிரதிபலிக்க வேண்டிய ஒன்று. முழு மொத்தப் படத்தையும் சீர்தூக்கிப் பார்க் காமல் அங்கொன்றும் இங்கொன்றுமாக பகுப்பாய்வு செய்யப் பட்ட சிறு விடயங்களையும் நிகழ்வுகளையும் அடிப்படையாகக் கொண்டு தீர்ப்புகள் பெறப்படலாகாது. சமூகத்தின் ஒட்டுமொத்த நோக்கங்களோடும் செயற்பாடுகளோடும் தொடர்புபடுத்தியே விடயங்கள் பேசப்பட வேண்டும். பெரிய அளவிலான படத்தை எப்போதும் மனதில் வைத்திருப்பதானது முன்னுரிமைப்படுத்த வேண்டிய அம்சங்களில் கவனம் செலுத்தி பயனுள்ள வழியில் செயற்படக் கூடிய, முதிர்ச்சியும் தகவலறிவும் கொண்ட நேயர் களை உருவாக்க உதவும்.

செய்தி மாதிரி தொடர்பான விடயத்தில் மேலும் உள் நுழைய முன், கடந்த அத்தியாயத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து சுருக்கமாக சிந்திப்பது உதவியாக அமையும். செய்தி முறைமைகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அங்கு முன் வைக்கப்பட்டன:

*1. ஊடகங்கள் மனித குலத்தை விட உயர்ந்தவையோ மனித குலத்திலிருந்து விலகி நிற்பவையோ அல்ல. எனவே அவை சக மனிதர்களின் உணர்வுகளுக்கும் கௌரவத்துக்கும் தீங்கு விளை விக்காத வகையில் முன்னெச்சரிக்கையோடு நடந்து கொள்ள வேண்டும்.*

*2. ஊடகங்கள் உயிர்ப்பற்றவையாக இருக்க முடியாது. சமூக மேம்பாட்டில் ஆக்கபூர்வமான தார்மீகப் பங்களிப்பொன்று அவற் றுக்கு இருக்க வேண்டும். தாக்கம் மிக்க வகையில் அவை சமூகத்துக்காக குரல் கொடுக்க வேண்டும்.*

*3. சகிப்புத் தன்மை கொண்ட ஊடகங்கள் செய்திகளையும் அவற்றின் எல்லாப் பக்கங்களையும் அளவுக்கு அதிகமான வியாக்கியானங்கள் இன்றி உள்ளபடியே வெளியிடும். அவை ஒரு வியாக்கியானத்தை வழங்கும் போது கூட அனைத்துக் கோணங் களையும் நியாயமாக அலசி ஆராய்ந்த பிறகே வழங்கும். தெரிவு செய்யப்படும் வியாக்கியானம் ஊடகத்தின் குறிக்கோளுக்கு இயைபானதாக இருப்பதுஅவசியம்.*

*4. எல்லாவற்றுக்கும் மேலாக, ஊடகத்துறை சார்ந்தவர்கள் சமூகத்தின் அங்கத்தவர்கள். மற்றவர்கள் தொடர்பாக அவர்களுக் கும் சில கடமைகளும் பொறுப்புக்களும் உள்ளன.*

## • *செய்தி உள்ளடக்கம்:*

*இங்கும் -முன்னைய அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளபடி- செய்தி உள்ளடக்கம் சம்பந்தமாக பின்வரும் அம்சங்களில் கவனம் செலுத்துவது சிறந்தது:*

*1. பொருளாதார சுபீட்சம், சமாதான நல்லிணக்கம், குற்றச் செயல்களின் வீழ்ச்சி போன்ற நல்ல செய்திகளை வழங்கும் போது அவற்றுக்கு காரணம் அல்லாஹ்வும் அவனது கருணையுமே என இஸ்லாமிய ஊடகங்கள் கூறும்.*

*2. ஓர் இடர் நிலைகுறித்த செய்திகளை வழங்கும் போது கூட அந்த இடர் அகஸ்மாத்தானது என்றோ இயற்கையின்*

தன்னிச்சையான செயல் என்றோ காட்ட முயலாமல், அதுவும் இறைவனின் நாட்டப்படி ஏதோ ஒரு காரணத்துக்காகவே நிகழ் கிறது என விளக்க வேண்டும்.

*3.* எதிர்மறையான செய்திகளை விஞ்சும் வகையில் நேர் மறையான செய்திகளுக்கு ஊடகம் முக்கியத்துவம் அளிக்க வேண் டும். இது அடுத்தவர்களிடம் நல்ல தாக்கத்தையும் ஊக்கத்தையும் ஏற்படுத்தும்.

*4.* சகல முஸ்லிம்களுக்கும் அவர்களைப் பாதிக்கின்ற நிலை மைகள் பற்றி அறிவூட்ட வேண்டியது ஊடகங்களின் கடமை யாகும். அப்போதுதான் அவர்கள் தமது கடமைகளை நிறை வேற்றுவதுடன், பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் உதவும் நிலைக்கு வருவர்.

இவற்றுக்கு மேலாக, இஸ்லாமிய மாதிரியானது 'வன்செய்தி' அணுகுமுறையை விட (Hard News Approach) 'விவரணங்களோடு கூடியமென் செய்தி' அணுகுமுறையையே (Soft News Approach) மேலாகக் கருதும். 'வன் செய்தி' அணுகுமுறையை விட இந்த 'மென் செய்தி' அணுகுமுறையே இஸ்லாமிய உலகக் கண்ணோட் டத்துக்கு மிகவும் இசைவானதாகும். ஏனெனில் இது ஆராய்ச்சி யையும் சிந்தனையையும் வலியுறுத்துகின்றது; செய்திகள் அவற் றின் சமூக, வரலாற்று, அரசியல் சூழமைவுக்குள் சட்டகப்படுத்தி நோக்கப்பட வேண்டும் என்றும் வற்புறுத்துகின்றது. இறுதியில், இந்த அணுகுமுறையானது செய்தியின் மனிதாபிமானக் கோணத் தையே மக்களுக்கு கொண்டு வந்து சேர்க்கிறது. அதேவேளை 'வன் செய்தி' அணுகுமுறையானது தகவல்களை தயவு தாட் சண்யமின்றி உடனடியாகக் கொட்டி விட வேண்டும் என்ற ஆர்வம் கொண்டதாகையால், மேற்குறிப்பிடப்பட்ட கொள்கை களை அது ஆதரிப்பதில்லை.

ஊடக தொழில்நுட்பம் பாரிய அளவில் வளர்ச்சி கண்டுள்ள இன்றைய சூழலில், செய்திகளை துரித கதியில் வெளியிட வேண்டும் என்ற ஆர்வமும் மேலோங்கி நிற்கிறது. இவ்வாறு

வேகம் அதிகரிக்கும் போதெல்லாம், விமர்சன பூர்வமான புரித லுக்குரிய வரலாற்றுச் செயல்முறை முன்வைப்புகள் குறைவடை கின்றன; அவ்வப்போதைய நிகழ்வுகளோடு மாத்திரம் செய்திகள் குறுக்கப்படுகின்றன.

ஏராளமான நிகழ்வுகளுக்கான கண்கண்ட சாட்சிகளை வழங்கு வதில் தொழில்நுட்பத்தின் அகப் பெறுமானம் நன்கு உணரப் பட்டுள்ளது என்பது உண்மைதான். பல சந்தர்ப்பங்களில் அவை மிகவும் உணர்வுபூர்வமான தாக்கத்தை உண்டு பண்ணி விடு வதையும் மறுப்பதற்கில்லை. அதேவேளை பாரம்பரிய செய்திச் சேகரிப்புத் தர நிலைகளின் மீது நவீன தொழில்நுட்பம் கணிச மான பாதிப்பினை ஏற்படுத்தி இருப்பதையும் மறுப்பதற்கில்லை.

இந்த செய்மதி யுகத்தில் எல்லோருமே செய்தியை முதலில் வழங்கிவிட வேண்டும் என்பதில்தான் ஆர்வம் காட்டுகின்றனர். இதனால் நிகழ்வுகளை பகுப்பாய்வு செய்வதை விட உடனுக் குடன் அவற்றை செய்தி ஆக்குவதிலேயே கூடிய கவனம் செலுத் தப்படுகின்றது. அறிவார்ந்த முறையில் பகுப்பாய்வு செய்பவர் களை விட எந்த நேரத்திலும் எங்கும் செல்லக் கூடிய செய்தி அறிவிப்பாளர்களே முன்னிலைப் படுத்தப் படுகின்றனர். இவ் வாறு வேகத்தில் காட்டப்பபடும் தீவிர ஆர்வத்தினால் பலபோது தவறுகளும் இடம்பெறுகின்றன; ஒரு வதந்தி கூட ‘உண்மை’ யான செய்தியாக மாறி, தொடரான பல எதிர்வினைகள் தோன்று கின்றன.

இஸ்லாமிய ஊடகம் என்பது மக்களுக்கு சமூகத்தின் மீதும், ஒருவர் மீது மற்றவருக்கு இருக்கின்ற கடமைகள் குறித்தும் நினைவூட்ட வேண்டிய கடப்பாடு கொண்டது. அதன் ஓர் அங்க மாக, தேவையுடைய மக்களுக்கு உதவக் கூடிய அமைப்புக்கள் எவை, அவை எங்கு உள்ளன, அவற்றின் செயற்பாடுகள் என்ன என்பவை போன்ற செய்திகளை அது வழங்க வேண்டும். இதன் மூலம் சமூக அங்கத்தவர்கள் தங்களது ஸகாத்தை (கட்டாய தர்மத்தை) நிறைவேற்ற வழியேற்படும்.

## • வரையறைகள்:

மக்களுக்கு 'தெரிந்து கொள்ளும் உரிமை' உள்ளது என்பதும், 'எதுவுமே புனிதமானதல்ல' என்பதும் அடிப்படையிலேயே இஸ்லாத்துக்கு விரோதமான கருத்தாக்கங்கள். அவை மீள்பரிசீலிக்கப்பட வேண்டியவை. இஸ்லாமியப் பார்வையில், ஊடகம் என்பது அடிப்படையில் பொது மக்களுக்கு பதில் கூற வேண்டிய கடமைப்பாடு கொண்டதல்ல எனினும், அதற்கு வரையறைகள் உள்ளன. 'தெரிந்து கொள்ளும் உரிமை' என்பது ஒருவருடைய தனிப்பட்ட வாழ்வை ஊடுருவிப் பார்க்கும் நிலையையும் சேர்த்தே கொண்டு வருகின்றது. எனவே இங்கு கட்டுப்பாடுகள் பிரயோகிக்கப்படாத பட்சத்தில், கடந்த அத்தியாயத்தில் பேசப்பட்ட 'மிகக் கீழ் மட்ட நிலை' என்ற அம்சம் மேலெழுந்து விடும். மேலும், ஊடகம் என்பது வெறுமனே மக்களுடைய தனிப்பட்ட வாழ்வில் கவனம் செலுத்தும் ஒன்றாக இருக்கக் கூடாது. சமூகத்துக்குப் பொதுவான பரந்த விவகாரங்களிலேயே அது கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

செய்திப் பகுப்பாய்வு மற்றும் செய்திகளை சரி பார்த்து உறுதிப்படுத்தல் என்பவை தொடர்பான விவகாரங்களிலும் வரையறைகள் கவனிக்கப்பட வேண்டும். முன்னர் குறிப்பிட்டது போல், செய்திகளை ஊர்ஜிதம் செய்கின்ற போது அது தகுந்த ஆதாரங்களுடன் இடம்பெற வேண்டும். ஆவணங்கள், தடயங்கள், சாட்சியங்கள், செய்தியின் அகப் பெறுமானம், சூழமைவு, செய்தி மூலத்தின் பாரபட்சமின்மை ஆகிய எல்லா வழிகளிலும் அவை ஊர்ஜிதம் செய்யப்பட வேண்டும். நிகழ்வு பற்றிய அறிக்கையிடல் உண்மையாக இருப்பினும், சூழலுக்கும் நிலைமைக்கும் பொருந்தா விட்டால் அது பற்றிய செய்தி தவிர்க்கப்பட வேண்டும். நிகழ்வின் ஊர்ஜிதத் தன்மையை மட்டுமன்றி, அதற்குப் பின்புலமாக இருந்த சூழ்நிலையையும் ஒரு முஸ்லிம் அறிந்திருப்பது அவசியம். ஊடகங்கள் தகவல்களையும் உண்மைகளையும்தேடும் போது உன்னிப்பாகச் செயற்படுவது அவசியம்.

தவறுகளுக்கோ பாதிப்பேற்படுத்தும் அனுமானங்களுக்கோ அவை இடமளிக்கலாகாது. திட்டவட்டமான ஆதாரங்கள் இல்லை யேல், எதுவும் குறிப்பிடப்படவோ ஊகங்கள் வெளியிடப் படவோ கூடாது.

## தயாரிப்புக் கூறுகள்

ஊடகத்தின் உள்ளடக்கத்தோடு இணைந்ததாக சில தயாரிப்பு நுட்பங்களும் மரபுகளும் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். இஸ்லாமியக் கலாசாரம் மற்றும் இஸ்லாமிய உலக நோக்கு என் பனவற்றுக்கு இயைபாக அவை அமைவதற்கு இம்மதிப்பீடு அவசியம். அத்தகைய கூறுகளில் மிகப் பிரதானமானவற்றை இங்கு சுருக்கமாக கலந்துரையாடுவோம்:

### சமநிலை:

மேலைத்தேச ஊடக மரபானது படிப்படியாக வளர்ந்து செல் லும் கட்டமைப்பிலேயே காட்சிகளைப் பயன்படுத்துகிறது. இக் கட்டமைப்பில் உள்ளடங்கும் பாகங்கள் தொடர்பறாத சங்கிலியாய் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றிஒரு மையப்புள்ளியை நோக்கிச் சென்றடையும். ஆனால் இஸ்லாமிய மரபில், இணைப் பாகங்க ளை விட மொத்தக் கட்டமைப்பே அதிக முக்கியத்துவம் உடை யது என்பதால், ஒரு மையப்புள்ளி சட்டகத்துக்குள் இருக்கும் ஏனைய எல்லாக் கூறுகளின் மீதும் ஆதிக்கம் செலுத்த முடியாது. விடயதானம் எதுவாக இருப்பினும்,ஒரு தனி வடிவம் அல்லது பாத்திரம் மட்டும் பார்வையாளர்களின் முழுக் கவனத்தையும் ஈர்த்துக் கொள்ள முடியாது. மாறாக எல்லாப் பாத்திரங்களும் -அவை முன்னணிப் பாத்திரங்களாயினும் சரி பின்னணிப் பாத் திரங்களாயினும் சரி- முக்கியத்துவத்திலும் அளவிலும் சமமான வையே. எனவே காட்சிச் சட்டகத்தின் மத்தியில் ஒரு குறிப்பிட்ட பாத்திரத்துக்கோ பொருளுக்கோ மைய முக்கியம் அளிக்கப்பட லாகாது. அனைத்துக் கூறுகளும் சார்பியமற்ற மையமொன்றைச் சுற்றி கவனமாக ஒழுங்குபடுத்தப்பட்டு சமநிலை பேணப்பட வேண்டும். இம்முறைமை மூலம் பதற்ற நிலைமை குறையும்

இணக்கமும் அமைதியும் நிலவும்; தெய்வீக அருளும் கருணையும் பிரதிபலிக்கும்.

## • உருவமும் வடிவமும்:

இஸ்லாமிய கட்புலக் கலையானது (Visual Art) பாரம்பரிய மாகவே இயற்கைவாதக் கோட்பாட்டை (Naturalism) தவிர்க் கிறது என்ற வகையில், அதில் பயன்படுத்தப்படும் அடிப்படை உருவங்கள் வடிவவியல் (Geometric) சார்ந்தவை ஆகவும், கருத் துருவானவை (Abstract) ஆகவுமே இருக்கும். வட்டம் மற்றும் உருளை போன்ற இயற்கையாக உருவாகும் வடிவங்களை விட, சதுர, முக்கோண, அறுகோண, எண்கோண பிரதிமைக் கூறுகளே (Motifs) அங்கு கவனயீர்ப்பு பெறும். வடிவவியல் சார்ந்த இந்த சிக்கலான உருவங்களினூடாக கலைஞர்கள் இப்பிரபஞ்சத்தை இரட்சிக்கும் தெய்வீக சித்தத்தின் பின்னாலுள்ள ஆழத்தையும் சிக்கலையும் குறியீடுகளாக விளக்குகின்றனர். இஸ்லாமிய ஊட கத்தில் இவற்றை அரங்க வடிவமைப்புக்களின் போதும் மேடை அலங்காரங்களின் போதும் கூட பயன்படுத்தலாம்.

இஸ்லாமிய நோக்கிலிருந்து செயற்படும் ஊடகக் கலைஞர்கள் தங்களைச் சூழவுள்ள உலகில் வேறுபட்ட பல பிரதிமைக் கூறு களோடு இணக்கம் காண்பார்கள். அவர்கள் செய்ய வேண்டிய தெல்லாம், இக்கூறுகளை தமது குறிக்கோளுக்குப் பொருந்தும் வகையில் தகவமைத்துக் கொள்வதே. முஸ்லிம் கலைஞர்களது தனித்தன்மை மிகையாக வெளிப்படுவது அவர்கள் எத்தகைய பிரதிமைக் கூறுகளை தேர்வு செய்கிறார்கள் என்பதில் அல்ல. மாறாக, எவ்வாறு அவற்றை திருத்தம் செய்து தாம் சொல்ல வரும் செய்தியோடு பொருத்துகிறார்கள் என்பதில்தான் அது வெளிப் படுகிறது.

## • இடைவெளி:

அடைத்து வைக்கப்பட்ட நிலையை குறிப்பதற்கு மேலைத் தேச ஊடகத் தயாரிப்புக்களில் கூரைகள், மதில்கள் போன்றன

பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு செயற்பாடும் அங்கு ஒரு ஸ்தூல, பௌதீக அமைப்புடனேயே தொடர்புபடுத்தப் படுகின்றது. ஆனால் இஸ்லாமிய உணர்திறன் என்பது ஸ்தூலப் பரப்பையும் கடந்த நிலையாகும். நடைமுறைநோக்கம் அற்ற அலங்காரங்களுக்கோ உருவங்களுக்கோ அங்கு இடமில்லை. அரங்கம் என்பது அடர்த்தி அற்றதாகவும் குறைந்தபட்ச அளவு டையதாகவும் இருக்கும். சுவர்கள் வெறுமையாகவும் திறந்து விரிந்த வாயில்களைக் கொண்டதாகவும் இருக்கும்; அவற்றி னூடாக பார்வையாளர்கள் அப்பால் திறந்து கிடக்கும் பெரு வெளியோடு நேரடியாக தொடர்புபடுத்தப்பட்டிருப்பர். லௌகீ கத்தை விட ஆன் மீகத்தை வலியுறுத்தும் மனநிலை அங்கு உரு வாக்கப்பட்டிருக்கும். அனைத்தும் அறிந்த ஒரு படைப்பாள னுடன் சுதந்திரமாகத் தொடர்பாடும் சுதந்திரத்தையும் இயலுமை யையும் ஒருவரால் அங்கு உணர முடியும்.

இஸ்லாமியம் அற்றஊடகங்களின் பிரதான நோக்கு நிலை வழமையாக செங்குத்தாகவே காணப்படும். ஆனால் இஸ்லாமிய நோக்கில் அது கிடையாக அமைந்திருக்கும். செங்குத்து நிலை யானது மேல் நோக்கிச் சென்று தெய்வீக நிலைக்கு சவால் விடுக்கும் உணர்வை ஏற்படுத்த வல்லது என்பதால் இஸ்லாமிய நோக்கில் அதற்கு அழுத்தம் கொடுக்கப்படுவதில்லை.

- **காட்சிகள்:**

இஸ்லாம் தெளிவாகவே பன்மைத்துவப் பார்வை கொண்டது என்பதால் தனிநபர்வாதத்தை அது ஆதரிப்பதில்லை. தனித்த தொரு கதாபாத்திரம் அல்லது நட்சத்திரம் என்ற கருத்தாக்கம் அதற்கு அன்னியமானது. ஒரு வெற்றி ஈட்டப்படுவது ஒரு குழு வின் ஒட்டு மொத்தச் செயற்பாட்டினால்தான் என அது கருது கிறது. ஆகவே கதா பாத்திரங்களும் ஏனைய அம்சங்களும் மத்திய நிலைக் காட்சிகளாகவும்தொலை நிலைக் காட்சிகளாகவுமே அங்கு அமைக்கப்படும். ஒவ்வொரு கூறும் அதன் பங்களிப்பை தெளிவாக வழங்குவதன் மூலம் மொத்தமாக எல்லாம் சேர்ந்த

உழைப்பு என்ற உணர்வு நிலை இதனால் ஏற்படுத்தப்படுகின்றது. கிட்டிய நிலைக் காட்சிகளோ (Closeups) தனிநபரை மேன்மை படுத்தும் வகையிலானவை. தனிநபர்களிலும் அவர்களது தனிப் பண்புகளிலும் ஆளுமையிலும் மட்டுமே இத்தகைய காட்சிகள் கவனம் செலுத்துகின்றன.

மேலும், இறுக்கமான காட்சிச் சட்டகங்களை விட தளர்வான சட்டகங்கள் மீதே இங்கு அதிக கவனம் செலுத்தப்படும். முன்னர் குறிப்பிட்டதைப் போல் சுதந்திர உணர்வைப் பிரதிபலிக்க இது உதவும் என்பதை முன்னரும் குறிப்பிட்டோம்.

காட்சித் தெரிவுகள், சீராக்கம், காட்சிச் சட்டகங்கள், நகர்வுகள் என்பவற்றின் மூலமாக பார்வையாளர்கள் இயக்குனர்களால் கையாளப்படும் நிலையும் இங்கு மிகக் குறைந்த மட்டத்திலேயே இருக்கும். செயற்பாட்டுக்கான ஒரு நுழை வாயிலாகத்தான் இயக் குனர்கள் இருப்பர். நிகழ்வுகளை உள்ளவாறே பார்த்து வியாக்கி யானம் செய்து கொள்வது பார்வையாளர்களைப் பொறுத்தது.

- ***ஒளி:***

அல்-குர்ஆனில் இறைவன் ஒளியின் உருவகத்தினூடாக வர்ணிக் கப்பட்டுள்ளான். வானங்களினதும் பூமியினதும் ஒளியாக இறை வன் இருக்கிறான் என அதில் கூறப்படுகின்றது.

''அல்லாஹ் வானங்களினதும் பூமியினதும் பிரகாசமாக இருக் கின்றான். அவனுடைய பிரகாசத்திற்கு உதாரணம் விளக்கு இருக் கும் ஒரு மாடத்துக்கு ஒப்பாகும். அவ்விளக்கு ஒரு பளிங்கு கிண்ணத்தில் இருக்கிறது. அந்தக் கிண்ணமோ முத்தாலாகிய ஒரு நட்சத்திரத்தைப் போல் இருக்கின்றது. (அதில்) பாக்கியம் பெற்ற சைத்தூன் மரத்தின் எண்ணெய் எரிக்கப்படுகின்றது. அது கீழ் நாட்டில் உள்ளதும் அல்ல. மேல் நாட்டில் உள்ளதும் அல்ல. அந்த எண்ணெய் நெருப்புத் தொடாவிடினும் பிரகாசிக்கவே செய்கின் றது. அது பிரகாசத்துக்கு மேல் பிரகாசிக்கின்றது. அல்லாஹ் தான் நாடியவர்களை தன் பிரகாசத்தின் பக்கம் செலுத்துகிறான்...'' *(24:35)*

கண்ணாடிக் கிண்ணம் பிரகாசிப்பதில்லை. ஆனால் விளக்கு பிரகாசிக்கின்ற போது அந்தக் கிண்ணம் ஒரு நட்சத்திரம் போல் பிரகாசிக்கின்றது. இறைவனைச் சார்ந்த மனிதர்கள் இறைவனின் ஒளியால் பிரகாசம் பெறுகின்றார்கள். ஒளியூட்டும் ஊடகங்களாக அவர்கள் மாறுகிறார்கள். அவர்களிடமிருந்து படரும் ஒளி மனித வாழ்வுக்குள் ஊடுருவி அதனை பிரகாசிக்கச் செய்கிறது.

இஸ்லாமிய கட்புலக் கலையில், உண்மையை அல்லது நல்லதை அல்லது தெய்வீகத்தை உணர்த்தும் குறியீடாக ஒளி பயன்படுத்தப்படுகின்றது. நல்ல செயற்பாடுகளை அல்லது தார்மீகப் பண்புகளை சித்தரிக்கும் காட்சிகளும் சூழ்நிலைகளும் ஒளிமயமாக காண்பிக்கப்படுகின்றன. இத்தகைய நிலைமைகளில் இருளோ கருநிழலோ காட்டப்படுவதில்லை. ஏனெனில் அது அறியாமையின் அல்லது தீமையின் அல்லது ஒழுக்கவீனத்தின் குறியீடாகும். பயன்படுத்தப்படும் ஒளியானது தனிப்பட்ட பாத்திரமொன்றை அல்லது பிரதிமையை நோக்கி கவனயீர்ப்புச் செய்யாமல், காட்சியின் எல்லாப் பகுதிகளுக்கும் சரியாகப் பாய்ச்சப்படும்.

- ***நகர்வும் இயக்கமும்:***

இஸ்லாமிய ஊடக மாதிரியின் நகர்வுகள் மெதுவானவை; நிதானமானவை; ஒத்திசைவானவை. பிம்பத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மாத்திரம் கவனத்தை ஈர்க்கும் வகையிலான சம்பந்தமற்ற அல்லது கூர்மையான அல்லது அதிர்ச்சியளிக்கின்ற காட்சிகள் அங்கு மிகவும் குறைவு. இஸ்லாமியப் பார்வையில் நகர்வுகளுக்கு குறிக்கோளும் இயங்கு திசையும் இருக்கும். ஒவ்வொன்றும் ஏற்கனவே வகுக்கப்பட்ட தெய்வீகத் திட்டத்தின் பிரகாரம் தனது இறுதி முடிவை நோக்கி நகரும். குறிக்கோளற்ற அல்லது ஏடாகூடமான நகர்வுகள் 'இருத்தலியல்' (Existentialism) உணர்வையும், அகிலம் தழுவிய ஒருமைப்பாடின்மையையுமே எடுத்துக் காட்டும்.

மேலைத்தேச ஊடகங்களில் திசைகளும் நகர்வுகளும் பிரதானமாக இடமிருந்து வலமாகச் செல்பவை. இஸ்லாமிய கலாசாரத்தில்

அவை வலமிருந்து இடமாகச் செல்வதே மிக இயல்பானதும் இணக்கமானதும் ஆகும். அல்குர்ஆன் அருளப்பட்ட அரபு மொழி வலமிருந்து இடம் செல்லும் தன்மையைக் கொண்டிருப்பதே இதற்கான அடிப்படைக் காரணம் எனலாம்.

தற்கால ஊடகங்கள் -குறிப்பாக வீடியோக்களும் தொலைக் காட்சியும்- இயல்பாகவே ஆழ்ந்த சிந்தனைக்கு அல்லது தியான நிலைக்கு எதிரானவை. பாரம்பரியமாகவே இந்த ஊடகங்கள் தீவிரமான ஆன்மீகப் பரிசோதனைகளை முயன்று பார்த்ததே இல்லை. ஏனெனில், ஆழ்நிலைச் சிந்தனை அல்லது தியான நிலை என்பது இயல்பிலேயே அமைதியானது; அதிகளவு நகர்வு கள் அற்றது. உதாரணமாக, ஒரு நபர் தொழுவது போன்ற அல்லது அல்-குர்ஆனை ஓதுவது போன்ற காட்சிகள் இத்தகைய சாதனங் கள் மூலமாக போதியளவு ஆன்மீக உயிர்ப்புடன் வெளிப்படுத்தப் படுவதில்லை. இவ்வாறான செயற்பாடுகளை இறைவனின் மகத் துவத்தையும் பூரணத்துவத்தையும்புலப்படுத்தக் கூடிய இயற்கைச் சூழமைவில் எடுத்துக் காட்டுவது இதற்கான ஒரு தீர்வாக அமைய லாம்.

- ***நிகழ்ச்சி நிரலிடல்:***

ஐவேளை தொழுகை நேரங்கள் இஸ்லாமிய சமூகத்தைப் பொறுத்த வரை ஒரு நாளின் இயற்கையான இடைவேளைகளாக அமைந்துள்ளன. அன்றாட கட்டாயக் கடமையாகிய இந்த தொழுகையை நிறைவேற்றுவதற்கான நேரம் ஒருவரது அன் றாடச் செயற்பாட்டு நேரங்களிலிருந்தே ஒதுக்கிக் கொள்ளப்படு கிறது. அந்த வகையில், இந்த தொழுகை நேரங்களைச் சுற்றியே ஏற்றுக் கொள்ளத் தக்க, ஆக்கத் திறன் கொண்ட நிகழ்ச்சி நிரல் அமைக்கப்பட வேண்டும்.

உதாரணமாக, பகல்நேர தெழுகையான ளுஹர் மற்றும் பிற் பகல் தொழுகையான அஸர் என்பனவற்றுக்கு இடையில் இலகு வான கல்விசார் நிகழ்ச்சிகளை இணைத்துக் கொள்வதை இங்கு குறிப்பிடலாம். ஏனெனில், பாரம்பரியமாக இது முஸ்லிம்

சமூகத்தில் ஓய்வுக்குரிய நேரமாகும். அதேபோல், பிற்பகல் நேர அஸர் தொழுகை முதல் மாலைநேர மஃரிப் தொழுகை வரை யான நேரத்தில் சிறுவர்களுக்கான நிகழ்ச்சிகள் அமையலாம். அது பெரும்பாலும் அவர்கள் வீடு திரும்பி வீட்டில் இருக்கும் நேர மாகும். இரவு நேர இஷா தொழுகைக்குப் பின் பெரியோர்களுக் கான நிகழ்ச்சிகளை நிரலிடலாம். பகல் நேரத்தில் வீடுகளில் இருப்பவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் ஆக்கபூர்வமாக அடிப்படை ஆற்றல்களை கட்டியெழுப்பும் நிகழ்ச்சிகளையும் தரமான பொழுது போக்கு நிகழ்ச்சிகளை சேர்த்துக் கொள்ளல் சிறப்பானதாகும்.

மிகப் பிந்திய இரவு நிகழ்ச்சிகளை இங்கு வரவேற்க முடியாது. ஏனெனில், மக்கள் அவர்களது அடுத்தநாள் அதிகாலைத் தொழு கையை தவற விடக் கூடாது; அன்றாட தொழில் துறையிலும் தாமதமாகி விடக் கூடாது.

இந்த எளிமையான நிரலிடல் ஒரு தினத்தின் ஒவ்வொரு பகுதி யையும் சித்தரித்துக் காட்டுவதாக உள்ளது. இருப்பினும் இங்கு இன்னொரு விடயத்தையும் வலியுறுத்த வேண்டி உள்ளது. அதா வது, தொலைக்காட்சி என்பது யதார்த்தமான சமூக உறவாடல் களுக்கு ஒரு மாற்றீடாக வளர அனுமதிக்க முடியாது.

நிகழ்ச்சி நிரலிடலில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் (ஜும்ஆ) தொழுகையை நேரடியாக ஒளிபரப்புவதும் உள்வாங்கப்பட வேண்டும். இஸ்லாமிய சமூகத்தில் ஜும்ஆ தொழுகை என்பது சமூக மட்டத்தில் ஐக்கியத்தை வலியுறுத்த இடம்பெறும் தனிப் பெரும் நிகழ்வாகும். மேலும், ஜும்ஆ இடம்பெறும் நேரத்தில் வர்த்தகம், கல்வி, தொழில் என எல்லா அன்றாடக் கடமைகளும் நிறுத்தப்பட்டு, தொழுகையும் அதற்கு முந்திய பிரசங்கமும் பேணப்பட வேண்டும் என்பது ஒரு முன் நிபந்தனையாகும்.

இஸ்லாத்தில் அல்-குர்ஆனுக்கும் ஆன்மீகத்துக்கும் அதி உயர் அந்தஸ்து உள்ளது. எனவே அவை தொடர்பான சித்தரிப்புக்கள் வெறுமனே இரண்டு நிகழ்ச்சிகளுக்கு இடைப்பட்ட நேரத்தை

நிரப்பும் (Fillers) நிகழ்ச்சிகளாக இருந்து விடக் கூடாது. பார்வை யாளர்களது கவனத்தைக் கவராத நிகழ்ச்சிகளுக்கு இடையில் புகுத்தப்படும் அம்சங்களாகவும் அவை இருக்கக் கூடாது. முன்னர் அத்தியாயம் இரண்டில் குறிப்பிட்டது போல், ஏடா கூடமான விதத்தில் ஆன்மீக விடயங்களைப் புகுத்துவது விரும்பத் தகாத விளைவுகளை ஏற்படுத்தவும் கூடும்.

இஸ்லாத்தில் வேடிக்கை வினோதங்களுக்கு ஒரு நேரம் உண்டு. வினைமைப் பண்புக்கும் (Seriousness) ஒரு நேரம் உண்டு. கேளிக்கைகள் இரவு பகலாக தொடர முடியாது. சமூகம் தனது காலநேரத்தைப் பாவிப்பதில் சமநிலையைப் பேண ஊக்குவிக் கப்பட வேண்டும். ஒருவர் தனது திறனாற்றல் பாதிக்கப் படாம லும், தொழுகை போன்ற கட்டாயக் கடமைகள் பாதிக்கப்படாம லும் ஓய்வு நேரத்தை மகிழ்ச்சியாகக் கழிக்கலாம். திரைப்படங் களும் வேறு பெரிய நிகழ்ச்சிகளும் தொழுகை போன்ற முக்கிய கடமைகளுக்கான நேரத்தை அபகரித்துக் கொள்ளும் வகையில் நிரலிடப்படக் கூடாது.

- **திறமை:**

மேலைத் தேசத்தின் தயவு தாட்சண்யமற்ற 'நட்சத்திர' ஆரா தனை போலன்றி, நடிகர்கள் அவர்கள் செய்யும் நல்ல உழைப் புக்கு ஏற்றவாறு வெகுமதிகள் வழங்கி கௌரவிக்கப் படலாம். நட்சத்திர முறைமையானது ஒரு தனிநபரின் அந்தரங்கத்தையும் வாழ்வு முறையையும் அழித்து விடக் கூடியது. மட்டுமன்றி, ஆட்டத்தில் தொடர்ந்து தனது நிலையை தக்கவைத்துக் கொள் வதற்காக அவர் பல்வேறு தீவிர நெருக்குதல்களுக்கும் ஆளாக்கப் படுகின்றார். இவ்வாறான ஒழுங்கு முறையில், பிரபல்யம் குறைந்த பல நடிகர்கள் ஓரம் கட்டப்படுகின்றனர்; அல்லது வாய்ப்பு மறுக்கப்படுகின்றனர்.

இஸ்லாமிய உலகக் கண்ணோட்டத்தின் அடிப்படையில், ஊடகம் என்பது மக்கள் மயமானதாக இருக்க வேண்டும். அதில் பங்கேற்பவர்கள் அடிமட்டத்தில் இருந்து வரவேண்டும். அவர்கள்

சமூகத்துடன் தொடர்புபட்டிருக்க வேண்டும். நடிகர்கள் சமூகத்தின் உண்மையான கட்டமைப்பை பிரதிபலிக்க வேண்டும். அதற்காக அவர்கள் இளமையானவர்களாக, அழகானவர்களாக, ஒரு குறிப்பிட்ட இனம் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்ற அவசியம் எதுவும் இல்லை. சாதாரண சிறிய நடிகர்களைக் கூட தேவைக்கு ஏற்ப தாராளமாகப் பயன்படுத்தலாம். அர்த்தமற்ற முறையில் அவர்களை நட்சத்திரங்களாக்கும் முயற்சிகள் தவிர்க்கப்பட வேண்டும். அவ்வாறு உருவாக்கப்படுபவர்கள் பிற்காலத்தில் கர்வம் கொண்டவர்களாகவும் தொடர்பு கொள்ள முடியாதவர்களாகவும் மாறிவிடுவர். ஒரு தயாரிப்பின் பிரதான நடிகரை அவர்தான் எல்லாமே என்ற ரீதியில் முக்கியத்துவப்படுத்தக் கூடாது. மாறாக அவர் மூலம் முன்வைக்கப்படும் கருப்பொருளே முக்கியத்துவப்படுத்தப்பட வேண்டும். விளம்பர மற்றும் ஊக்குவிப்பு படங்களில் கூட சொல்லப்படும் கருப் பொருளுக்கு மேலதிகமாக அதைச் சொல்லும் நட்சத்திரம் முக்கியமானவராக காட்டப்படக் கூடாது. அதேபோல், அர்த்தமற்ற விதத்திலும் நியாயமற்ற விதத்திலும் இந்த நட்சத்திர நடிகர்களுக்கு அதிகமான சம்பளத் தொகை வழங்கப்படுவதும் தடுக்கப்பட வேண்டும். இவர்களுக்கு அதிக சம்பளம் வழங்கப்படுவதும் ஊடக நிறுவனங்களின் தயாரிப்புச் செலவுகள் அளவுக்கு மிஞ்சி செல்ல முக்கிய காரணமாகும். பெறுமதி அற்றதாக ஒதுக்கப்படும் சில வளங்கள் மீது கவனம் செலுத்தி அவற்றை உரிய முறையில் பயன்படுத்துவதன் மூலமாக தயாரிப்புச் செலவுகளை கணிசமாகக் குறைக்கலாம். தயாரிப்புக்களின் முக்கிய நோக்கம் சமூகத்துக்கு பயனுள்ளவற்றை வழங்குவதாகவே இருக்க வேண்டும்.

நடிப்புக் காட்சிகளை அமைக்கின்ற போது அன்னிய எதிர்ப்பாலினர் தனித்து நெருங்கியிருப்பது முக்கியமாக தவிர்க்கப்பட வேண்டும். இது இஸ்லாமிய மரபுகளுக்கு முற்றிலும் விரோதமானது. எதிர்ப்பால் கலைஞர்கள் இஸ்லாமிய ஆசார முறைகளைப் பின்பற்றி, அனுமதிக்கப்பட்ட ஆடை அமைப்புடன், ஒருவர் மற்றவரை மதிக்கும் வகையில் நடந்து கொள்வார்களாயின்,

அவர்கள் மேடையில் தோன்ற தடையில்லை. ஒழுக்கம்தான் இங்கு மிக முக்கியமாகப் பேணப்பட வேண்டிய விடயமாகும். சம்பந்தமே இல்லாத ஆண்களும் பெண்களும் ஏகாந்தமாக இணைந்திருப்பது போன்ற காட்சிகள் அறவே சித்தரிக்கப்படக் கூடாது.

## இஸ்லாமிய மாதிரியின் கட்டமைப்புக் கூறுகள்

ஊடகம் தொடர்பான அகில இஸ்லாமியக் கண்ணோட்டம் முதலாளித்துவ நுகர்வுப் போக்குடையதோ சோஷலிச சர்வாதிகாரப் போக்குடையதோ அல்ல என ஏலவே கலந்துரையாடினோம். ஊடகம் என்பது இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் பொது மக்கள் நலன் சார்ந்தது. வேறு எதற்கும் அங்கு முக்கியத்துவம் இல்லை. இத்தகைய உயரிய இலக்கு எட்டப்பட வேண்டுமாயின், ஊட கத்தில் அரசாங்கமோ வர்த்தக நிறுவனங்களோ அளவுக்கு மிஞ்சிய செல்வாக்குச் செலுத்த இடமளிக்கப் படலாகாது; அத்தகைய செல்வாக்கின் சுமை கடைசியில் சமூகத்தின் தலையிலேயே சுமத்தப்படும். ஆகவே இஸ்லாமியக் கட்டமைப்பில் ஊடக மாதிரியானது நலன்களுக்காகப் போட்டியிடும் விடயத்தில் தெளி வான சமநிலையைப் பேணுவதற்கான பொறிமுறையொன்று வகுக்கப்பட வேண்டும். அது பொருளாதார ரீதியாகச் சாத்திய மான ஒன்றாகவும் இருக்க வேண்டும். இந்த சிக்கலான விடயம் குறித்த சில முக்கியமான கேள்விகளை இங்கு முன் வைக்கின் றோம். மட்டுமன்றி, மேலதிக ஆய்வுக்காக சாத்தியமான சில மாற்றீடுகளையும் முன்வைக்கிறோம்.

### ஊடகங்களை நியமப்படுத்தல்:

பல முஸ்லிம் நாடுகளில் மக்கள் தமது ஊடகங்களில் நம்பிக்கை இழந்துள்ளனர். அரசாங்கத்தைப் பற்றியும், அதன் தலைவர்களைப் பற்றியும், அவர்கள் முன்னெடுக்கும் கொள்கைகளைப் பற்றியும் அளவுக்கு மிஞ்சிய வகையில் மேற்கொள்ளப்படும் பிரசாரம்தான் இதற்கு முக்கிய காரணம். இத்தகைய புகழ்ச்சிகளை நியாயப்

படுத்துவதற்கு எந்தக் காரணங்களும் இன்றியே இவை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. துரதிஷ்டவசமாக பல இலட்சியவாத ஊடகங்கள் கூட தமது தினசரி ஊடகப் பணிகளில் கணிசமான அளவை ஆளும் வர்க்கத்தின் புகழ்பாடுவதற்காக ஒதுக்க வேண்டி உள்ளது. அதை செய்ய மறுக்கும் பட்சத்தில் அரசாங்கத்தில் இருந்து வரும் எதிர்விளைவுகளுக்கு அவை முகம் கொடுக்க வேண்டியிருக்கும்.

இஸ்லாமிய மாதிரியில் ஊடகங்கள் தமது நம்பகத் தன்மையைப் பேணுவது அவசியம். தமது செயற்பாடுகளை ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்கு அவை மக்களுடைய நம்பிக்கையைப் பெற்றிருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட ஊடக நிறுவனத்தின் மீது அரசாங்கம் எந்தளவுக்கு நேரடியான அல்லது மறைமுகமான கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கலாம் என்ற வரையறையை நிர்ணயம் செய்ய இது வழியமைக்கும். ஊடக செயற்பாட்டில் அரசு ஏதாவது நேரடிக் கட்டுப்பாட்டை விதிப்பதாயின், சகல ஊடகக் குழுக்களினதும் நியாயமான உரிமைகள் பாதுகாக்கப்படுவது அங்கு உறுதி செய்யப்பட வேண்டும். மக்களைச் சென்றடைவதில் தங்கு தடையற்ற போட்டி நிலைக்கு அது வழியமைக்க வேண்டும். அத்தோடு இங்கு தனிநபர் அந்தரங்கமும் தனிநபர் உரிமைகளும் பாதுகாக்கப்படுவதற்கான உத்தரவாதமும் காணப்பட வேண்டும். தனிநபர் உரிமைகள் ஏதாவது ஊடகத்தால் மீறப்பட்டால் அதற்கெதிராக நடவடிக்கை எடுக்கும் அதிகாரமும் அரசைச் சார்ந்ததாக இருக்க வேண்டும்.

இவற்றுக்கு எல்லாம் அப்பால், ஊடகத்தின் எல்லா அம்சங்களும் சுயகட்டுப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். மக்களும் அதை கண்காணிக்க வேண்டும். இஸ்லாமிய அடிப்படையிலான கலந்தாலோசனை முறையைக் கருத்திற் கொண்டு, குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை தலைசிறந்த ஊடக நிபுணர்களைக் கொண்ட கண்காணிப்புச் சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட வேண்டும். இந்த சபையானது முற்று முழுக்க அரச சார்பற்றதாகவும் பக்கச் சார்பற்றதாகவும் அமைய வேண்டும். அந்தந்த

நாடுகளின் சட்டங்களைப் பின்பற்றி அந்தச் சபை செயற்படும். இந்த ஊடக கண்காணிப்புச் சபைக்கு எல்லா ஊடக செயற்பாடு களையும் கண்காணிக்கும் அதிகாரம் இருக்கும். இஸ்லாமிய வழிமுறைகளை அவை கண்டிப்பாகப் பின்பற்றும். இறக்குமதி செய்யப்படும் ஊடக தயாரிப்புக்களை மேற்பார்வை செய்யும் அதிகாரமும் இந்தச் சபைக்கு இருக்கும். மட்டுமன்றி, உள்ளூர் தயாரிப்புக்களையும் திறமைகளையும் மேலோங்கச் செய்வதற் கான ஊக்குவிப்புக்களையும் அது மேற்கொள்ளும்.

தொழில்துறைப் பிணக்குகள், முக்கியமான வளங்களின் விநி யோகம், கேபிள் விநியோக உரிமைகள் என்பன உட்பட தொழில் துறை சார்ந்த எல்லா சர்ச்சைகளையும் தலையிட்டுத் தீர்த்து வைக் கும் பொறுப்பும் இந்த சபைக்குரியதே. இந்த சபையைத் தெரிவு செய்வதற்கான நியாயமான தேர்தல் நடாத்தப்படுவதை அரசாங் கம் உறுதி செய்ய வேண்டும். தேவை ஏற்படின் அதன் முடிவு களை அமுல் செய்யும் உறுதியையும் அரசு வழங்க வேண்டும்.

இவற்றுக்கு மேலதிகமாக, ஊடக தொழில்துறை சார்ந்தவர் களைக் கொண்ட அமைப்புக்கள் ஒன்றிணைந்து அவற்றுக்கான தரங்களையும் தமது உறுப்பினர்களைக் கட்டுப்படுத்துவதற்கான நியமங்களையும் வகுத்துக் கொள்ளலாம். உடன்பாடு காணப் பட்ட சட்டதிட்டங்களை மீறும் உறுப்பினர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் சம்பந்தப்பட்ட அமைப்புக் களுக்கு வழங்கப்பட்டிருக்கும். இந்த நடவடிக்கைகள் கூட இஸ்லாமிய அடிப்படையிலான கலந்தாலோசனை முறையின் கீழேயே அமைய வேண்டும் என்பதையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். ஒரு தார்மீக சமூகம் எப்போதும் சுய கட்டுப்பாட்டுடன் செயற்படக் கூடியது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஊடகப் பொருளாதாரம்:

இஸ்லாமிய மாதிரி ஊடகம் பற்றி பேசுகின்ற போது மிக முக்கியமாக கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்களில் ஒன்று, அந்நிறுவனம் எவ்வாறு நிதியை பெற்றுக் கொள்வது

என்பதாகும். முன்னர் நாம் குறிப்பிட்டது போல், சோசலிஷ மாதிரி (அரசாங்கம் முழுமையாக ஊடகங்களுக்கு நிதி வழங்குவது), முதலாளித்துவ மாதிரி (ஊடகங்களின் இலக்கு விளம்பரதாரர் களுக்காக செயற்படுவது) ஆகிய இரண்டுமே இஸ்லாமிய அகில நோக்கிற்கு இணக்கப்பாடற்ற மாதிரிகளாகும்.

வர்த்தகத்தை ஊக்குவிக்கும் விளம்பரங்கள் மற்றும் மக்களுக்கு அத்தியாவசியமானபொருட்கள் மீது மக்களின் கவனத்தை ஈர்ப்பது என்பன முற்றாக நிராகரிக்கப்பட்ட செயற்பாடுகள் அல்ல. ஆனால் அப்பட்டமாகவும் வெளிப்படையாகவும் நிறுவனங்களுக்காக நுகர்வோரை உருவாக்கிக் கொடுக்கும் முயற்சிதான் தவிர்க்கப்பட வேண்டியதாகும். பல முதலாளித்துவ நாடுகளில் விளம்பரங்கள் மூலம் செயற்கையாக நுகர்வோரை உருவாக்கும் முயற்சிகளே இடம்பெற்று வருகின்றன. மக்களுக்கு எது தேவையோ அதை அவர்கள் நுகரலாம். எது தேவை இல்லையோ அதை அவர்கள் கைவிடலாம். புதிதாக அவர்களுக்கு எது தேவைப்படுகின்றதோ அதையும் அவர்களே முடிவு செய்யலாம். ஆனால் அதில் எந்த விதமான செயற்கைமுயற்சிகளும் தூண்டுதல்களும் இருக்க கூடாது என்பதுதான் இங்கே வலியுறுத்தப்படும் விடயமாகும்.

மூன்றாம் உலக நாடுகளில் இத்தகைய செயற்கையான முயற் சிகள் மேற்கொள்ளப்படுகின்ற போது, முற்றிலும் சுதேசிகளான நுகர்வோர் தங்களால் சமாளிக்க முடியாத ஒரு வாழ்க்கை முறையை நோக்கித் தள்ளப்படுகின்றார்கள். ஏனெனில், குறிப் பிட்ட சில பொருள்களை அடைந்தே தீர வேண்டும் என்ற ஒரு அபாயகரமான மாயை இத்தகைய விளம்பரங்கள் மூலம் ஏற் படுத்தப்படுகின்றது. இவ்வாறான நுகர்வோர் மயப்படுத்தல் இஸ் லாமியக் கண்ணோட்டத்துக்கு முற்றிலும் முரணானதாகும். இந்த விடயத்தில் இஸ்லாமியக் கண்ணோட்டம் நிதானத்தை வேண்டி நிற்கின்றது. வீண் விரயத்தையும் அவசியமற்ற நுகர்வையும் அது தடுக்கின்றது.

பல சந்தர்ப்பங்களில் விளம்பர வருமானத்தில் அளவுக்கு அதி கம் தங்கி இருப்பது ஊடக நிறுவனத்தின் நேர்மையை விட்டுக்

கொடுக்கவும் காரணமாகின்றது. அதற்காக ஊடக நிறுவனம் தனது தயாரிப்புக்களில் கூட விட்டுக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படலாம். ஊடக நிறுவனம் தரப்படுத்தலில் தனது நிலையை தக்க வைத்துக் கொள்வதற்காக இத்தகைய பல விட்டுக் கொடுப்புக்களை -விளம்பர வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு- மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஒவ்வொரு நிமிடமும் வர்த்தக விளம்பரக் குண்டுகளை போட வேண்டிய நிலை இருப்பதால், தரமான கல்விசார் நிகழ்ச்சிகளில் கூட அடிக்கடி குறுக்கீடு செய்ய வேண்டி இருக்கிறது. விளையாட்டுக்கள் தொடர்பான விளம்பரங்களைப் பெற்றுக் கொள்ளும் போது அதற்கான அனுசரணையாளரின் தேவைக்கு ஏற்ப பல விடயங்களை இவ்வாறு விட்டுக் கொடுக்க வேண்டி ஏற்படுகிறது.

சில பிரதான பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் விளம்பரங்களுக்காக தமது ஆசிரிய பீட கொள்கைகளைக் கூட அடிக்கடி மாற்றிக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுகின்றன. இவ்வாறு அடிக்கடி கொள்கைகளை மாற்றிய பிரபலமான சில பத்திரிகைகளும் சஞ்கிகைகளும் தமது நடுத்தர மற்றும் மாணவ வாசகர்களை பாரியளவில் இழந்திருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அவை -விளம்பரதாரரை திருப்திப்படுத்தும் வகையில்- சமூகத்தின் மேல் மட்டத்தினரை இலக்கு வைத்து விளம்பரங்களைப் பிரசுரித்தமையும், விலையை உயர்த்தியதுமே இதற்கு காரணமாகும்.

விளம்பரங்களை வழங்கும் பாரிய கூட்டாண்மை நிறுவனங்களின் உரிமையாளர்களை திருப்திப் படுத்தும் முயற்சியில் சில ஊடக நிறுவனங்கள் தமது சொந்த தயாரிப்புக்களை கூட மாற்ற வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது. விளம்பர வருமானத்தில் அதிகம் தங்கி இருப்பதால், இக்கூட்டாண்மை நிறுவனங்களிடம் காணப்படும் தார்மீக ரீதியான பல தவறுகள் ஊடகங்களால் மறைக்கப்படுகின்றன.

இவ்வாறு விளம்பர வருமான நிதிக் கட்டமைப்பின் ஆதிக்கத்துக்கு உள்ளாகி ஊடக நிறுவனங்கள் செயற்படுவது -நாம்

மூன்றாவது அத்தியாயத்தில் பேசிய- இஸ்லாமிய ஊடகம் ஒன்றுக்கான வழிமுறைகள் மற்றும் இலக்குகள் என்பனவற்றுக்கு முற்றிலும் முரணானதாகும்.

இஸ்லாமிய ஊடக மாதிரிக்கு இசைவான ஒரு நிதிக் கட்ட மைப்பு உருவாக்கப்பட வேண்டும். அது வர்த்தகத் துறை, அரசாங் கம், பொதுமக்கள் ஆகிய தரப்புகளின் கூட்டுப் பங்களிப்பைக் கொண்டதாக அமைய வேண்டும். ஏனைய எல்லா அம்சங்களை யும் விட பொதுமக்களின் அல்லது சமூகத்தின் நலனே பிரதான அக்கறை செலுத்தப்பட வேண்டிய விடயமாகும். இவ்வாறான ஒரு கட்டமைப்பில், குறிப்பிட்ட ஒரு பிரிவு இன்னொன்றின் மீது செல்வாக்கு செலுத்தும் வாய்ப்பு இருக்கக் கூடாது. கம்பிவட தொலைக்காட்சி (Cable TV) போன்ற செலவு கூடிய ஊடகச் செயற்பாடுகளுக்கான வருமானம் பின்வரும் மூன்று வழிகளில் பெறப்படலாம்:

1) வரையறுக்கப்பட்ட, அவசியமான, தரமான விளம்பரங்கள்.

2) அரசாங்கம் ஒரு சுதந்திரமான நிறுவனத்தின் ஊடாக நிதி உதவி வழங்கல். அமெரிக்காவில் செயற்படும் பொது ஒலிபரப்புக் களுக்கான கூட்டுத்தாபனத்தின் (CPB) செயற்பாட்டை இதற்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

3) மிகவும் வசதியான மக்கள் வாழும் நாடுகளில் வானொலி மற்றும் தொலைக்காட்சிகளை வைத்திருப்பவர்களிடம் இருந்து வருடாந்த அனுமதிப்பத்திர கட்டணத்தை வசூலித்தல். பல மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இது நடைமுறையில் உள்ளது.

பார்வையாளர்கள், நிகழ்ச்சிகளின் தரம், அவை தயாரிக்கப் பட்ட இடம் (உள்ளூர் அல்லது இறக்குமதி), நிகழ்ச்சிகளின் பன் முகத்தன்மை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்ட தரப் படுத்தல் முறையொன்று மேற்கொள்ளப் படலாம். இது ஒரு ஊடக நிறுவனத்தின் செயற்பாடுகள் ரசிகர்களை எந்தளவு சென்ற டைகின்றன என்பதை அனுமானிக்க உதவியாக இருக்கும். அச்சு

ஊடகத்தைப் பொறுத்த மட்டில் அரசாங்கத்தின் மறைமுகமான மானியங்கள் மூலம் விளம்பரங்களில் பெருமளவு தங்கி இருக்கும் நிலையை தவிர்த்துக் கொள்ளலாம் (உதாரணம்: வரிச் சலுகைகள், தபால் மற்றும் ஏனைய கட்டணச் சலுகைகள்). இதுவும் பல மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இன்றும் பின்பற்றப்பட்டு வரும் நடைமுறையாகும்.

ஊடகங்களில் வெளியாகும் பல்வேறு தரப்பட்ட விளம்பரங் கள் தொடர்பாக சில வழிகாட்டல்களை வழங்குவதும் பொருத்த மாக அமையும். இதில் அடிப்படையாக நாம் முன்னர் கலந்துரை யாடிய தரங்களுக்கு இசைவாக விளம்பரங்கள் அமைய வேண்டி யது அவசியமாகும். 'ஷூறா' என்னும் ஆலோசனைச் செயன் முறையின் மூலமாக இதற்கான நெறிமுறைகளை வகுத்துக் கொள்ள முடியும். இஸ்லாமியப் பெறுமானங்களுக்கு இசைவாக விளம்பரங்கள் அமைய வேண்டிய வரையறைகளை இதன் மூலம் வகுத்துக் கொள்ளலாம். தொழில் சார் நிபுணர்களைக் கொண்ட முஸ்லிம் விளம்பர முகவர் நிறுவனங்களை நிறுவி அதன் மூலம் இந்த விளம்பர நெறிமுறைகளை வகுத்துக் கொள்ள வும் முடியும். 'விளம்பர முகவர் நிறுவனங்களுக்கான அமெரிக்க கழகம்' மேலைத்தேச ஊடகங்களுக்கான ஆக்கபூர்வ விளம்பர வழிகாட்டிகளை வகுத்துள்ளமை இங்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.

இஸ்லாமிய மாதிரியில் நுகர்வோர் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும். எந்த விதமான சுரண்டல்களுக்கும் இட மளிக்காத வகையில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும். வெகுமக்களுக்கு அவசியமற்ற அல்லது அவர்களால் வாங்க முடியாத பொருட்களுக்கான எந்த ஊக்குவிப்பும் இடம்பெறக் கூடாது. அதேபோல், மக்களின் ஆராக்கியத்துக்கும் நலனுக்கும் கேடாக அமையக் கூடிய பொருள்களும் சேவைகளும் ஊக்கு விக்கப்படலாகாது (உதாரணம்: புகையிலை, மதுபான உற்பத்தி கள், சுரண்டல் தன்மை கொண்ட சட்ட நடைமுறைகள்). சிறுவர் கள் மற்றும் முதியவர்கள் போன்ற பலவீனமான சமூக அங் கத்தவர்களைப் பாதிக்கின்ற அம்சங்களுக்கும் இடமளிக்கப்படக்

கூடாது. இவ்விதிமுறைகள் நடைமுறையாவதை அவதானித்து, மீறல்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கத்தக்கதாக விளம்பரக் கட்டுப்பாட்டுச் சபையை அரசாங்கம் பலப்படுத்த வேண்டும்.

இஸ்லாமிய எண்ணக்கருவில் விளம்பரத்தின் நோக்கம் மக்களுக்கு அவசியமாகத் தேவைப்படும் பொருள்கள் பற்றியும் அவற்றைப் பெற்றுக் கொள்ளும் விதம் பற்றியும் அவசியமான தகவல்களை வழங்குவது மட்டுமே. அதுவன்றி, தேவைகளை செயற்கையாக உருவாக்குவதல்ல அதன் நோக்கம். அச்சு மற்றும் ஒலி-ஒளிபரப்பு ஊடகங்களில் முன்வைக்கப்படும் பிரதான கருப்பொருள்களில் குறுக்கீடு செய்யாத வகையில் விளம்பரங்களுக்கான நேரமும் இடமும் அமைக்கப்படுவதும் அவசியமாகும்.

**ஊடக உரிமைத்துவம்:**

கட்டமைப்பு பற்றி பேசுகின்ற போது ஊடக உரிமைத்துவம் பற்றியும் முக்கியமாக பேசப்பட வேண்டியுள்ளது. தொழில் துறையில் சுதந்திர செயற்பாட்டைக் கருத்திற் கொண்டு தனியார் உரிமைத்துவத்தை இஸ்லாம் அனுமதிக்கின்றது. ஊடகத் துறையும் இதில் அடங்கும். எனினும் அது ஒன்று திரண்ட ஏகபோக உரிமையாக இருக்க முடியாது. சமூகத்தின் சிந்தனைகளிலும் எண்ணங்களிலும் பாரிய செல்வாக்குச் செலுத்தும் வகையில் அது அமையவும் கூடாது. குறித்த தொழில்துறையில் மற்றவர்கள் போட்டியிடுவதை தடுப்பதாகவும் அமைந்து விடக் கூடாது.

வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்கள் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலானவை. கம்பிவட தொலைக்காட்சி சேவையும் ஒரு பிராந்தியத்துக்கு ஒரு கம்பனி மட்டுமே என வரையறுக்கப்படக் கூடியது. இந்நிலையில் இத்தகைய ஊடக நிறுவனங்களை நடாத்துவதற்கான சிறப்புரிமை பொது மக்களின் நம்பிக்கையை வென்றதாக இருப்பது அவசியம். இத்துறையின் போட்டியாளர்களை மதிப்பீடு செய்கின்ற போது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய பிரதான அளவுகோல் சமூகத்

துக்கு அதிகம் பயனளிப்பவர் யார் என்பதுதான். இத்தொழில் துறையில் ஈடுபட அனுமதிப் பத்திரம் கோருவோர் தாம் சமூகத்தின் தேவையை நிறைவேற்றக் கூடிய அனுபவமும் ஆற்றலும் மிக்கவர்கள்தான் என்பதை ஏலவே நிரூபித்திருக்க வேண்டும். பன்முகப்பட்ட உள்ளூர் நிகழ்ச்சிகளை அவர்கள் வழங்கியிருக்க வேண்டும். இஸ்லாமிய மாதிரியின் கொள்கைகளோடு இணங்கிச் செல்வதாக உறுதி அளித்திருக்கவும் வேண்டும். அதன் பின்பே இத்துறைக்கான அனுமதிப் பத்திரங்கள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். நியாயமான போட்டிக்கான வாய்ப்பு சம்பந்தப்பட்ட சகலருக்கும் வழங்கப்பட வேண்டும். ஏதாவது ஒரு தனிக் குழு உரிமை கொண்டிருக்கக் கூடிய தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்களுக்கான அனுமதிகளை மட்டுப்படுத்த வேண்டும். இந்த அனுமதிகள் குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை ஊடக சபையால் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். செயற்பாடற்ற நிறுவனங்களது அனுமதி ரத்துச் செய்யப்பட வேண்டும்.

ஒரு வானொலி நிலையத்தை அல்லது தொலைக்காட்சி நிலையத்தை சொந்தமாக ஆரம்பிக்கவோ நடாத்தவோ தனியார் துறையினர் அக்கறை காட்டாத மிக ஏழ்மையான முஸ்லிம் பிராந்தியங்களில் அரசாங்கத்தை விட பொதுமக்கள் முன்னெடுப்பு மாற்றுத் தீர்வாக அமைய முடியும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் BBC அல்லது ஜப்பான் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டை பின்பற்றலாம். இவை இரண்டுமே அரச சாசனத்தின் கீழ் செயற்படும் மக்கள் நிறுவனங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமிய கண்ணோட்டத்தில் ஊடக உரிமைத்துவம் முற்று முழுதாக சுதேச மயப்பட்டதாக இருக்க வேண்டும். அல்லது கட்டுப்படுத்தத் தக்க அளவிலாவது உள்ளூர் உரிமைத்துவம் அதில் இருக்க வேண்டும். ஊடகம் முற்றுமுழுதாக சமூக நன்மைகளை பேணும் வகையில் இருப்பதை இது உறுதிசெய்யும். இதன் மூலம் பார்வையாளர்களும் அவ்வப்போது தமது கருத்துக்

களை ஊடக உரிமையாளர்களுக்கு முன்வைக்க முடியும். வேறு நாடுகளின் தலைநகரங்களில் இருந்து கொண்டு பல்தேசிய நிறுவனங்கள் ரிமோட் கன்ட்ரோல் மூலம் ஊடக நிறுவனங்களை கட்டுப்படுத்துவது உள்ளூர் விடயங்களை பிரதி பலிப்பதாக அமையாது.

அதேபோல், உள்ளூர் ஊடக நிறுவனங்கள் தமக்குள் ஒன்றிணைந்து ஒரு வலையமைப்பை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் செலவுக் கட்டுப்பாட்டைப் பேணலாம். ஆனால் அந்த வலையமைப்புக்குள் வரும் ஒவ்வொரு நிறுவனமும் தமக்கிடையில் உள்ள தனித்துவத்தைப் பேணிக் கொள்ளும் சுதந்திரமும் இருக்க வேண்டும். அப்போதுதான் ஒவ்வொரு சமூகக் குழுக்களினதும் தேவைகளை வெவ்வேறு ஊடகங்கள் பிரதிபலிக்க முடியும். அமெரிக்காவின் தேசிய பொது வானொலி (NPR) மற்றும் பொது ஒலி பரப்புச் சேவை (PBS) என்பன இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

## அத்தியாயம் ஐந்து:

# முடிவுரையும் மேலதிக ஆய்வுக்கான பரிந்துரைகளும்

விஞ்ஞானம், தொழிநுட்பம், வர்த்தகம், கலை, தத்துவம், சமத்துவம் என எல்லாத் துறைகளிலும் மேலைத்தேச சமூகம் கண்ட உச்ச அடைவுகள் மூன்றாம் உலக நாடுகளெங்கும் விரவிக் கிடக்கின்றன. ஆனால் இங்கு மிக அரிதாக கவனத்தில் கொள்ளப்படுகின்ற விடயம், மேலைத்தேச சமூகம் இன்றைய இந்த நிலையை அடைந்து கொள்ள முன்னர் பல நூற்றாண்டு கால மாற்றங்களுக்கும், மோதல்களுக்கும், சோதனைகளுக்கும், தவறுகளுக்கும், சுயபரிசோதனைகளுக்கும், படிநிலை மாற்றங்களுக்கும் முகம் கொடுத்திருக்கிறது என்பதுதான். அவ்வாறு முகம் கொடுத்துத்தான் அது இன்றைய நிலையை அடைந்துள்ளது என்பதை மூன்றாம் உலகம் மறந்துவிட்டது. இவ்வாறான ஒரு நீண்ட கால அபிவிருத்திக்கும் போராட்டத்துக்கும் பின்னர்தான் மேலைத்தேச சமூகத்துக்கு அதன் இன்றைய கலாசாரத் தனித்துவத்தை அடைய முடிந்தது. ஆனால் இந்தக் கடினமான கால மாற்றத்தைப் பற்றி சிந்திக்காமல் மூன்றாம் உலக சமூகங்கள் மேலைத்தேசத்தின்

மாதிரிகளை அப்படியே பின்பற்ற நினைக்கின்றன. மேலைத்தேச சமூகம் முகம் கொடுத்த இந்த நிலைமைகளைச் சந்திக்காமல் அப்படியே அதனைப் பின்பற்ற நினைக்கும் மூன்றாம் உலக சமூகத்தின் நிலைமையும் அவ்வளவு ஆரோக்கியமானதாக இல்லை. இதன் விளைவாக, இறக்குமதி செய்யப்படும் பல மாதிரிகளில் இருந்து எதிர்ப்பார்க்கப்பட்ட நன்மைகளும் பலன் களும் கிடைக்கத் தவறியுள்ளன. மட்டுமன்றி,பல சந்தர்ப்பங் களில் இந்த இறக்குமதிகள் உள்ளூர் சமூகத்துக்கும் கலாசாரத் துக்கும் பாதகமான விளைவுகளையே கொண்டு வந்துள்ளன.

## இஸ்லாமிய மாற்றீடு:

மூன்றாம் உலக சமூகங்களின் பொருளாதாரம், சமத்துவ மின்மை, அரசியல் மற்றும் நீதித்துறை முறைகள், மக்களது சுய பிம்பம் என்பன கணிசமான மாற்றீடை வேண்டி நிற்கின்றன. மாற்றீடான அணுகுமுறைகளும் மாதிரிகளும் தேவைப்படுகின் றன. பல்வேறு மூலங்களில் இருந்தும் பரிசோதனைகளிலிருந் தும் இவை பெறப்பட வேண்டியுள்ளன. இந்த சமூகங்களுக்கான முதலாவது சாத்தியமான மாற்றீடாக அவை தமது வரலாற்றையும் கலாசாரத்தையும் சற்று பின்னோக்கிப் பார்க்க வேண்டும். தற்கால சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய தடயங்கள் ஏதும் அவற் றில் உண்டா என்று அவை தேடிப் பார்க்க வேண்டும். அப்போது தான் அவை தம்மிடையே உள்ள இடைவெளியை நிரப்ப வேறு மாதிரிகளில் உள்ள சில கூறுகளை எடுத்துக் கொள்வது தொடர் பாகவும், அவை தமது கலாசாரத்தோடு எந்தளவு இசைவடையும் என்பது தொடர்பாகவும் சீர்தூக்கிப் பார்க்க முடியும்.

மூன்றாம் உலகில் வாழும் முஸ்லிம் பிரிவினரின் முதன்மை யான தனித்துவம் பல நூற்றாண்டு காலமாக அவர்களது அன்றாட வாழ்வில் வேரூன்றிப் போயுள்ளது. மிக வெளிப்படையாக கூறினால் இஸ்லாமே அந்த தனித்துவம். எனவே முஸ்லிம் உலக அமைப்புகளுக்கு புத்துயிர் அளிக்க மேற்கொள்ளப்படும் எந்த முயற்சியும் முதலில் அந்தப் பிராந்தியங்களின் இஸ்லாமிய மூல

வேரை நோக்கியே செல்ல வேண்டும். வளர்ச்சியடைவதற்கான அளப்பரிய சாதகங்கள் முஸ்லிம் உலகில் காணப்படுகின்றன. உலக அரங்கில் செழுமை, ஆக்கத்திறன், ஆளுமை என்பனவற்றை நிரூபிப்பதற்கான பல சாத்திய வளங்கள் முஸ்லிம் உலகில் உள்ளன. ஆனால் இவற்றை எல்லாம் அடைந்து கொள்ள முஸ்லிம் சமூகம் முதலில் தனது சுயத்தை அல்லது தனித்துவத்தை நிலை நிறுத்த வேண்டும்; வரலாற்றையும் சுய பிம்பத்தையும் மீட்டிப் பார்க்க வேண்டும். இதுதான் இன்றைய முஸ்லிம் மறுமலர்ச்சி இயக்கங்களின் தலையாய இலக்கும் கடமையும் ஆகும்.

வெகுசன ஊடக நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் இந்த அணுகுமுறை மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் சமூகத்தின் உலகக் கண்ணோட்டத்தை வரையறை செய்வதிலும் தேசிய தனித்துவத்தை உருவாக்குவதிலும் ஊடகம் முக்கிய பங்களிப்புச் செலுத்துகிறது.

இந்த ஆய்வில் முன்வைக்கப்பட்டுள்ள எண்ணக்கருக்கள் எவ்வளவு முதிர்ச்சியற்ற நிலையிலும் ஆரம்ப கட்டத்திலும் இருந்தாலும், விரிவான வழிகாட்டல்களாகவே முன்வைக்கப்பட்டுள்ளன. இவை விவாதத்துக்கு உரியவை; இந்த வழியிலான தேடலுக்குரிய வாயில்களை திறந்து விடக் கூடியவை.

இங்கு முன்வைக்கப்பட்ட ஊடக மாதிரியானது முஸ்லிம் சமூகத்துக்கு முறையான கல்வியை அளிக்கக் கூடியது என நாம் நம்பலாம். அவர்கள் பெறும் பல்வேறு விதமான தகவல்களை பகுத்து ஆராய்ந்து பார்க்கக் கூடிய கருவிகளையும் அது வழங்கலாம்.

இவ்வாறு அவர்கள் செய்வதன் மூலம் காலனியத்தின் எஞ்சியுள்ள பிடியிலிருந்தும், ஊழல் மிக்க ஆட்சியிலிருந்தும் அவர்கள் தம்மை இறுதியாக விடுவித்துக் கொள்ள முடியும். சாதாரண முஸ்லிம்கள் கூட தம் முன்னே செய்யப்படும் பிரசாரங்கள் பற்றி தெளிவானதொரு விளக்கத்தை இதனால் பெற முடியும். கலாசாரத்துக்கு இயைபான விடயங்களையும், பெறுமானங்களை மீள உறுதி செய்யும் தகவல்களையும் மட்டுமன்றி, கலாசாரத்துக்குப்

பாதகமான விடயங்களையும் கூட மிகத் தெளிவாக அவர்களால் புரிந்துகொள்ள முடியும். இந்த மாதிரியானது தனக்கான மூலங்களாக அல்-குர்ஆனையும் ஸுன்னாவையும் எடுத்துக் கொள்வதால் முழுமையான, இணக்கபூர்வமான முறைமை ஒன்றையே முன்வைக்கிறது.

இவ்வாறானதொரு மாதிரியின் மூலமாக முஸ்லிம் நாடுகள் உலக அரங்கில் போட்டித் திறன் கொண்டவையாகவும் ஆக்கத் திறன் மிக்கவையாகவும் திகழ முடியும். தமது கலாசாரம், சுய அடையாளம், பெறுமானம் என்பனவற்றை முழுமையாக வெளிப் படுத்தக் கூடிய ஊடகம் அவர்களிடம் இருப்பதால் இந்த நிலைமைகளை அடைவது சாத்தியமே. இறக்குமதி செய்யப்பட்ட கலாசாரத்தாலும் நிகழ்ச்சிகளாலும் ஈர்க்கப்பட்டாமல், தங்களுக்கே உரித்தான ஒழுக்க விழுமியங்களை ஏனைய ஊடக முறைமைகளுக்கும் அவர்களால் ஏற்றுமதி செய்ய முடியும்.

இங்கு குறிப்பிடப்பட வேண்டிய இன்னொரு முக்கியமான விடயமும் உள்ளது. இஸ்லாமிய மாதிரி ஒன்று பற்றி நாம் பேசும் போது ஊடகத் துறையில் மேற்குலகு இதுவரை கண்டுள்ள எல்லா அடைவுகளையும் நாம் நிராகரிக்கின்றோம் என்பது அதன் அர்த்தமன்று. மாறாக, மேற்கின் பல அம்சங்களை நாம் பயன்படுத்தலாம்; சில அம்சங்களை முற்றாகத் தவிர்க்கலாம். அவற்றுக்குப் பதிலாக இஸ்லாமிய உணர்வை எடுத்துரைக்கும் விடயங்களைப் புகுத்தலாம். இது மேற்குலகத்தின் மீதான அல்லது அவர்களின் கருத்தியல் மீதான ஒரு தாக்குதல் அல்ல. மாறாக, முஸ்லிம் உலகம் மிக வித்தியாசமான சில அனுபவங்களையும் சோதனைகளையும் கடந்து வந்துள்ளதால், தனது பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெறத்தக்க தனித்துவமான அடையாளமொன்றை அது கொண்டுள்ளது என்பதை வெளிப்படுத்தும் யத்தனமே இது. மேலைத்தேச மாதிரிகள் மேலைத்தேச சமூகங்களுக்கே ஏற்புடையவை. ஏனெனில், அவை தமக்குள் பொதுவான உலகக் கண்ணோட்டம் ஒன்றை கொண்டுள்ளன. முஸ்லிம் உலகம் தொடர்பாக நாம் கூறுவதும் இதனைத்தான்.

## இஸ்லாமிய ஊடக மாதிரியின் பரப்பு:

இந்த உத்தேச மாதிரியானது தத்துவார்த்த ரீதியானதாகவும் அறிவுபூர்வமானதாகவும் அமைந்திருப்பது அவசியம். அது தனி யாகப் பரிசோதிக்கப்படவோ செம்மைப்படுத்தப்படவோ முடி யாது. தனியாக நின்று அதுதனது இலக்குகளில் எதனையும் சாதித் துக் கொள்ளவும் முடியாது. ஒட்டுமொத்தமான முஸ்லிம் ஆட்சி அமைப்பொன்றினுள் இருந்துதான் அது செயற்பட வேண்டும். அதாவது சமூகத்தில் உள்ள அரசியல், பொருளாதார, சமூக நிறுவனங்கள் அனைத்தும் ஒட்டு மொத்தமாக இஸ்லாமிய மயப்படுத்தப்பட வேண்டும். அங்கு முழுமையான இஸ்லாமிய முறைமை இருக்க வேண்டும். அந்த நிலையில் மட்டும்தான் இஸ்லாமிய ஊடகத்தை ஆக்கபூர்வமாக பங்களிக்கச் செய்யும் வகையில் செயற்பட வைக்க முடியும். எனவே இந்த உத்தேச இஸ்லாமிய ஊடக மாதிரியானது அதற்கான முன் நிபந்தனைகள் சரியாக நிறைவேற்றப்படும் வரை தத்துவார்த்த ரீதியானதாகவே இருக்க முடியும். இதன் எந்த ஓர் அலகும் செயற்படுவதற்கு முன் அது தேவைப்படும் ஒரு சமூகம் இருக்க வேண்டும். அதற் கான ஆதரவும் அதனை அமுல் செய்யக் கூடிய ஆட்சி முறையும் அங்கு இருக்க வேண்டும்.

மட்டுமன்றி, இந்த மாதிரியின் சில அம்சங்களை சமகால சுதந் திர ஊடகங்களின் பாவனைக்காகவும் பயன்படுத்தலாம். தயாரிப் பாளர்கள் தமது பொழுதுபோக்கு, கல்வி, செய்தி நிகழ்ச்சித் தயா ரிப்புக்களில் சில இஸ்லாமியக் கூறுகளை இணைத்துக் கொள்ள லாம். தற்போதுள்ள சில தயாரிப்புக் கூறுகளை அதிக செலவின்றி இந்த முறைமைக்கு அமைய வடிகட்டிப் பாவிக்கவும் முடியும்.

## எதிர்கால ஆய்வுக்கான ஆலோசனைகள்:

இந்த ஆய்வானது எதிர்காலத்தில் மாற்று ஊடக மாதிரி ஒன் றின் தேவை பற்றி இன்னும் ஆழமாகவும் தீவிரமாகவும் ஆரா யப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் திறவுகோலா

கும். இன்னும் ஆராயப்பட வேண்டிய பரிபூரணமான இஸ்லாமிய ஊடக மாதிரி ஒன்றின் பகுதிகள் பற்றியும் இதில் தேவையான இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெகுசன ஊடகம், அச்சு ஊடகம், திரைப்படங்கள், வெளியீட்டகங்கள் மற்றும் நிகழ்ச்சி ஒலி-ஒளிப்பதிவு நிலையங்கள் என பல பரப்புக்கள் இந்தப் பிரிவில் மேலதிக ஆய்வை வேண்டி நிற்கின்றன. இவை எல்லாமே இங்கு நாம் குறிப்பிட்டுள்ள பொதுவான மாதிரியின் கீழ்தான் வர வேண்டுமா அல்லது அவற்றுக்குத் தனியான வழிகாட்டுதல்கள் அவசியமா என்ற கேள்விக்கும் விடை காணப்பட வேண்டும். அதேபோல் ஊடக கட்டமைப்பு, ஒழுங்கமைப்பு, கட்டுப்பாடு என்பன பற்றியும் மிக ஆழமான முறையில் எதிர்கால ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். வெகுசன ஊடகங்களுக்கு எவ்வாறு நிதியைப் பெற்றுக் கொள்வது, அவற்றின் செயற்பாடுகளில் இடப்பட வேண்டிய வரையறைகள் என்ன என்பவையும் மேலதிகமாக கவனம் செலுத்தப்பட வேண்டியவை.

மேலதிக ஆய்வுக்கு உட்பட வேண்டிய இன்னொரு முக்கிய பரப்பு, ஊடகங்கள் மீதான மறைமுக வரையறைகளுக்கு காரணமாக இருக்கின்ற ஊடக விமர்சனமாகும். ஏனைய எல்லா நிறுவனங்களையும் போலவே ஊடகமும் கவனிக்காது விடப்பட்டால், போட்டி அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும். இந்நிலையில், தவிர்க்க முடியாத படி அது ஒன்றுமேயற்ற சாதாரண நிலைக்குத் தள்ளப்பட்டு விடும். எனவே பின்னூட்டங்களின் அடிப்படையில் இஸ்லாமிய ஒழுக்க விதிமுறைகளில் கவனம் செலுத்தக் கூடிய பொதுவான வடிவம் ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பாகவும் மேலதிக ஆய்வுகள் நடாத்தப்பட வேண்டும். பிரபலமான அறிவியல் விமர்சனங்களும், உள்ளக மற்றும் வெளியக விமர்சனங்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது அவசியம். ஒரு குறைகேள் அதிகாரியின் தேவை ஏற்படுமா, அவரால் எவ்வாறான பங்களிப்பை வழங்க முடியும் என்ற கேள்விகளிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இந்த ஆய்வில் ஆராயப்படாத ஒரு விடயம் உத்தேச ஊடக மாதிரி மீதான இரசிகர்களின் எதிர்வினையாகும். முஸ்லிம் ரசிகர்கள் மிக வேறுபட்ட கலாசாரங்களைக் கொண்டவர்கள் என்ற வகையிலும், அன்றாட வாழ்க்கையில் இஸ்லாம் தொடர்பான அவர்களது வியாக்கியானம் பன்முகப்பட்டவை என்ற வகையிலும், அவர்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கு இன்னும் ஆழமான ஆய்வுகளும் களப் பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இரசிகர்களது பன்முகத் தன்மையானது ஊடக மாதிரிக்குள்ளேயான பன்மைத்துவம் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் அவசியத்தையும் வேண்டி நிற்கின்றது. முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளில் வாழும் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பொறிமுறைகள் என்ன? இந்த ஊடக மாதிரிக்குள் சிறுபான்மையினரின் மொழிகளையும் கலாசாரத்தையும் எந்தளவுக்கு நியாயமான முறையில் பிரதிபலிக்கச் செய்யலாம்? என்ற கேள்விகளுக்கும் விடை காணப்பட வேண்டும்.

இப்புதிய அணுகுமுறை பற்றிய கல்வியும், முஸ்லிம் நாடுகளின் கல்வி நிறுவனங்களில் நடைமுறையிலுள்ள ஊடகப் பாட விதானங்கள் பற்றிய மீளாய்வும் மேலதிக ஆய்வுக்கான மற்றோர் அம்சமாக உள்ளதெனலாம். முஸ்லிம் ஊடக மாதிரி ஒன்றுடன் இணைந்த வகையிலும் இது மேற்கொள்ளப்படலாம். ஊடக நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள், வர்ணனையாளர்கள், நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள் என பல்வேறு தரப்பினருக்கு இஸ்லாத்தை ஆழமாகப் புரிந்து கொள்ளச் செய்யும் வகையிலும், அதன் அடிப்படையில் தமது தொழில்சார் நெறிகளை வகுத்துக் கொள்ளச் செய்யும் வகையிலும் விஷேட கல்விக் கருத்தரங்குகள் நடாத்தப்படலாம். இதனால் அவர்கள் தமது பெரும்பாலான ரசிகர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் ஈடு கொடுக்கக் கூடியோராக மாறமுடியும்.

ஊடகத் துறை மீது இளைய முஸ்லிம் தலைமுறைக்கு ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும், அதனை அவர்கள் கற்றுக்

கொள்ள வழிவகுக்கும் வகையிலும் கூட இவ்வாறான முயற்சி கள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆக்கத் திறன் கொண்ட முஸ் லிம் இயக்குனர்கள், தயாரிப்பாளர்கள், எழுத்தாளர்கள் முதலி யோருக்கான தேவை இன்றுமிக அதிகமாக இருப்பது குறிப் பிடத்தக்கது. இஸ்லாமிய மாதிரிக்குள் பயிற்றப்பட்டவர்கள் ஊடக அமைப்புக்களும் சங்கங்களும் உருவாக்கப்படுவதனூடாக மேலும் பலப்படுத்தப்பட முடியும். இத்தகைய அமைப்புக்கள் இஸ்லாமிய ஊடகத்தை இன்னும் ஊக்குவிப்பதோடு, இத்துறை சார் நிபுணர்களை உருவாக்கவும் உதவும். மட்டுமன்றி, இவை சர்வதேச மாநாடுகளை ஒழுங்கு செய்து, முஸ்லிம் உலகத்தின் சினிமா, தொலைக்காட்சி, வானொலி, நாடகம் போன்ற துறை கள் குறித்து கலந்துரையாடவும் அவற்றை விருத்தி செய்யவும் பங்களிப்புச் செய்யும். இறுதியில் இந்த இஸ்லாமிய ஊடக மாதிரி பாரியளவில் அறியப்பட்டு, தொலைக்காட்சி மற்றும் சினிமாத் துறைத் தயாரிப்புகளுக்கான முதலீடுகளை மேற்கொள்ளவும் அதற் கான கம்பனிகளை நிறுவவும் முதலீட்டாளர்களைத் தூண்டும்.

இஸ்லாம் இயல்பாகவே சட்டமும் ஒழுங்கும் கொண்ட மார்க்க மாகும். சமூகத்தின் நிறுவனங்கள் தொடர்பாக அது கொண்டுள்ள பொதுவான அணுகு முறையில் இது துலங்குகிறது. அத்தகைய தொரு சமநிலையான ஒழுங்கினூடாக சமூகத்திலும் வீட்டிலும் தனிமனித மனச்சாட்சியிலும் இஸ்லாம் அமைதியையும் சமாதா னத்தையும் நிலைநாட்ட விழைகிறது. ஆயினும், சட்டம் ஒழுங்கு மீதான இந்த அழுத்தம் தீவிரமடையும் போது, அது சட்டத்தை யும் ஒழுங்கையும் திடப்படுத்துவதற்குப் பதிலாக அனைத்து ஆக்கபூர்வ முன்னெடுப்புகளையும் செயலிழக்கச் செய்யும் காரணி யாக மாறி விடும்.

இன்றைய காலகட்டத்தில் ஒரு சமூகத்தின் இருப்புக்கும் நிலை பேற்றுக்கும் வெகுசன ஊடகம் மிகவும் முக்கியமானதாக இருப் பினும், அது சில விதிமுறைகளுக்கும் நியமங்களுக்கும் கட்டுப் பட வேண்டி உள்ளது. அந்த விதிமுறைகளும் நியமங்களும்

மீளாய்வு செய்யப்படும் முறைமை எப்போதும் சமூகத்துக்கு இலகுவில் கையாளத் தக்கதாக இருக்க வேண்டும்.

இஸ்லாமிய மூல வசனங்களை தற்கால ஊடகச் செயற் பாட்டுக்கான வழிகாட்டல்களாக மொழிமாற்றம் செய்யும் இம் முயற்சியின் போது, சில தனிப்பட்ட புதிய பொருள்கோடல்களை நான் முன்வைக்க வேண்டி இருந்தது. எவ்வாறாயினும், மூல வசனங்கள் எப்போதுமே வித்தியாசமான புதிய விளக்கங்களை ஏற்கக்கூடிய திறந்த நிலை கொண்டவை. அந்த வகையில், எனது இப்பணியை எவரும் முடிந்த முடிவாகப் பார்க்க வேண்டிய தில்லை. அவ்வாறு நிறைவுற்ற பணியாக உரிமை கோருவதானது இப்பணியை சாத்தியமாக்கிய காரணிகளையே நிராகரிப்பதாகி விடும்.

மட்டுமன்றி, இந்த வகையிலான நெகிழ்வுப் போக்கே இஸ் லாமிய ஊடக மாதிரியை தொடர்ச்சியாக மீளாய்வுக்கு உட்படுத் தும் பணியையும் உத்தரவாதப்படுத்தும். தொடர்ச்சியாக மாற்றம் கண்டு வரும் சமூக, தொழிநுட்ப சூழமைவுக்கு ஏற்ப அந்த இஸ் லாமிய ஊடக மாதிரி நின்று பிடிப்பதும் இதன் மூலமே சாத்திய மாகும். முஸ்லிம் சமூகம் இந்த நெகிழ்வுப் போக்கை கைக் கொள்ளுமா? அதனூடாக தனக்கே உரிய உயிர்ப்பு மிக்க ஊடக மாதிரியொன்றை விருத்தி செய்யுமா? அல்லது பழைய அணுகு முறைகளிலும் மரபுகளிலும் மூழ்கி, தனக்குப் பொருத்தமற்ற -இறக்குமதி செய்யப்பட்ட- ஊடக மாதிரிகளுக்குள் கட்டுண்டு கிடக்குமா? இதுதான் இப்போது நம்முன் உள்ள சவால் மிக்க கேள்வி.

# பிற்சேர்க்கை

*1994 ஜனவரியில் முஸ்லிம் உலகிலுள்ள பல நாடுகளுக்கு விஜயம் செய்து, இஸ்லாமிய அகிலநோக்கின் அடிப்படையில் ஊடகத் தயாரிப்புகளை மேற்கொள்வதற்கான சாத்தியங்கள் குறித்து ஆராயும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அந்த வகையில், பல முஸ்லிம் இயக்குனர்களையும் தயாரிப்பாளர்களையும் ஊடக துறைசார் நிபுணர்களையும் சந்தித்து கலந்தாலோசித்தேன். இஸ் லாமிய ஊடகமொன்றின் வடிவமும் செயற்பாடும் அமைந்திருக்க வேண்டிய முறை பற்றிய அவர்களின் புரிதலை வெளிக்கொண்டு வருவதே எனது நோக்கமாக இருந்தது. நான் விஜயம் செய்த நாடுகளில் நியாயமான அளவுக்கு சுதந்திர ஊடகங்கள் காணப் படுகின்றன. நிகழ்ச்சிகளை வடிவமைப்பதில் தயாரிப்பாளர் களுக்கு கணிசமானளவு சுதந்திரம் அங்கு வழங்கப்பட்டுள்ளது.*

*ஈரானையும் துருக்கியையும் பொறுத்த மட்டில் இரண்டு நாடு களும் 1960கள் முதலே நிறுவனமயப்பட்ட, கௌரவமான, மதச் சார்பற்ற திரைப்படத் துறையை கொண்டிருப்பவை. அங்குள்ள திறமை மிக்க இயக்குனர்களும் தயாரிப்பாளர்களும் தற்காலத்தில்*

அதிகரித்து வரும் இஸ்லாமியத் தயாரிப்புகளுக்கான தேவையை ஈடுகட்டுவதில் தங்களது ஆற்றல்களை மீள் குவித்து வருகின்றனர். ஈரானிய சட்டம் -புரட்சியைத் தொடர்ந்து- தொலைக்காட்சிக்கும் திரைப்படத்துக்குமான சில நெறிமுறைகளை கட்டாயமாக்கியது. அந்தச் சட்டத்தின் விளைவாக ஆரம்பத்தில் (குறிப்பாக ஈராக்குடனான எட்டு வருட யுத்தக் காலப் பகுதியில்) புரட்சிப் பாங்கும், சித்தாந்தச் சாய்வும், ஜிஹாதிய நோக்கும் கொண்ட திரைப்படங்கள் அபரிமிதமாக தயாரிக்கப்பட்டன. எனினும், நாடு இயல்பு நிலைக்குத் திரும்பிய பிறகு அதன் திரைப்படங்கள் அன்றாட வாழ்வுப் பிரச்சினைகள் பற்றி பேசத் தொடங்கின.

இன்று ஈரானில் உள்ள இஸ்லாமிய இயக்குனர்கள் -புரட்சிக்கு முன்னர் இருந்த நிலையைப் போலவே- தமது திரைப்படங்களுக்கான சர்வதேச அங்கீகாரத்தை பல வழிகளிலும் பெறத் தொடங்கி விட்டனர். மிக அண்மையில் துருக்கியிலும் மலேஷியாவிலும் (இரு நாடுகளும் வெகுமக்கள் சார்ந்த,நிறுவனமயப்பட்ட எழுச்சியொன்றை கண்டு வருபவை என்ற வகையில்) இஸ்லாமிய நிகழ்ச்சிகளுக்கான கேள்வி கணிசமாக அதிகரித்துள்ளது. இதனால் இஸ்லாமிய நிகழ்ச்சித் தயாரிப்பு நிறுவனங்களின் எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்துள்ளது. இப்போட்டி நிலையானது தயாரிப்புத் தர நிலைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளதோடு தரமான ரசிகர்களையும் உருவாக்கி உள்ளது.

முஸ்லிம் உலகம் முழுவதும் தொலைக்காட்சி மற்றும் திரைப்படத் தயாரிப்புத் துறைகளில் கணிசமானஆற்றல்களும் வகைகளும் காணப்படுகின்றன. திறமை மிக்க முஸ்லிம் தயாரிப்பாளர்களும் இயக்குனர்களும் பிரதி எழுத்தாளர்களும் ஏனைய ஊடகத் துறை நிபுணர்களும் தாராளமாக உள்ளனர். எனினும் இவர்கள் ஒருவரில் இருந்து மற்றவர் தனிமைப்பட்டே நிற்கின்றனர். இதனால் வளங்கள் விரயமாகின்றன. எல்லா தயாரிப்பு முயற்சிகளும் தவிர்க்க முடியாத படி ஒரே வகையான தடைகளுக்கும் சவால்களுக்கும் கடுமையான நிதிப் பற்றாக்குறைக்குமே முகம் கொடுக்கின்றன. இதன் விளைவாக, தனிநபர்கள் திறமை

மிக்கவர்களாக இருந்த போதிலும், தயாரிப்புக்கள் நிதிவளம் அற்றவையாகவும் நடுத்தரமானவையாகவுமே காணப்படுகின்றன. சில இஸ்லாமிய எண்ணக்கருக்களை திரையில் கொண்டு வருவதற்காக ஒரு இயக்குனர் விருத்தி செய்துள்ள நுட்பங்கள் உலகில் உள்ள அதே விதமான காரியத்தை செய்ய நினைக்கும் ஏனைய இயக்குனர்களால் கண்டு கொள்ளாமல் விடப்படுகின்றன. ஏறக்குறைய ஒரே விதமான நிகழ்ச்சிகளையே உருவாக்கும் முனைப்பில் ஏராளமான முயற்சிகள் வீணடிக்கப்படுகின்றன. (ஹஜ், தொழுகை, அல்-குர்ஆன், இஸ்லாமிய வரலாறு போன்றவை தொடர்பான நிகழ்ச்சிகளை இங்கு எடுத்துக் காட்டாக குறிப்பிடலாம்.) இதைவிட ஒவ்வொரு இயக்குனரும் அல்லது பிராந்தியமும் மற்ற இயக்குனர்களால் அல்லது பிராந்தியங்களால் மேற்கொள்ளப்படும் தயாரிப்புகளுக்கு இணக்கமான வகையில் வெவ்வேறான தயாரிப்புகளில் ஈடுபடலாம்.

அநேகமான இஸ்லாமிய நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டதும், அவை தயாரிக்கப்பட்ட நாட்டுக்கு வெளியே விநியோகிக்கப்படுவது அல்லது காட்டப்படுவது மிகவும் அரிதாக உள்ளது. இதனால் அந்த நிகழ்ச்சிகள் கணிசமாக வருமானம் அற்றுப்போய் முதலீட்டுக் கவர்ச்சியையும் இழந்து விடுகின்றன. பல இஸ்லாமிய நாடுகள் தமக்கிடையில் நிகழ்ச்சிகளைப் பரிமாறி ஒத்துழைப்பு வழங்குவதற்குப் பதிலாக தமக்கான நிகழ்ச்சிகளை அமெரிக்காவில் இருந்தும் ஏனைய மேலைத்தேச நாடுகளில் இருந்தும் தருவிக்கின்றன.

பல்வேறு முயற்சிகளுக்கிடையிலான இத்தொடர்பற்ற நிலையினால், இஸ்லாமிய ஊடகம் ஒன்று எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பான வித்தியாசமான கருத்துக்கள் தோன்றியுள்ளன. இஸ்லாமிய ஊடகத் தயாரிப்புக்கள் இஸ்லாமிய விடயங்களை மட்டும் கையாள்பவையாக இருக்க வேண்டும் என சில இயக்குனர்கள் கருதுகின்றனர். இஸ்லாமிய வரலாறு, போதனை, விசுவாசம் போன்ற விடயங்கள் மட்டும்தான் அங்கு உள்ளடக்கப்பட வேண்டும் என அவர்கள் எண்ணுகின்றனர். இதனால்தான்

அவர்கள் தயாரிக்கும் இஸ்லாமிய சிறுவர் நிகழ்ச்சிகள் தொழுகை, நோன்பு, ஹஜ் என்பனவற்றோடு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட வையாக உள்ளன. வாழ்க்கைக்குத் தேவையான ஏனைய யதார்த்த மான அம்சங்கள் பற்றி அவற்றில் எதுவும் சொல்லப்படுவதில்லை.

ஏனைய சில இயக்குனர்கள் சில விடயங்களை இஸ்லாமாகக் காட்ட முனைகின்ற போது, மிக இறுக்கமான முறைசார் அணுகு முறையையே பின்பற்றுகின்றனர். இவர்களது 'இஸ்லாமிய' நாட கங்களில் வரும் கதாநாயகர்கள் யதார்த்தத்துக்குப் புறம்பான வகையில் மிகத் தீவிரமான சமயப் பற்று உள்ளோராகவும்,மிக உயர்ந்த பக்திமான்களாகவும் சித்தரிக்கப்படுகின்றனர். இந்த கதாபாத்திரங்களின் நடையும் பேச்சும் கூட மிகவும் வித்தியாச மான விதத்திலேயே காட்டப்படுகின்றன. இவ்வாறான கதை களில் வரும் வில்லன்களும் வழமைக்கு மாறான மிக மோசமான தீய பழக்கங்களும் நடவடிக்கைகளும் உள்ளவர்களாகக் காட்டப் படுகின்றனர். சில சந்தர்ப்பங்களில் இவர்கள் கோமாளிகளாக வும் சித்தரிக்கப்படுகின்றனர். காட்சி அமைப்புக்களில் கூட இவ் வாறான நிலைமைகளே வெளிப்படுத்தப்படுகின்றன. இத்தகைய முயற்சிகள் குறிப்பிட்ட நாடகங்களில் இருந்து மனிதாபிமானத் தின் எல்லாக் கூறுகளையும் துடைத்து எறிந்து விடுகின்றன. பார்வையாளர்கள் மத்தியிலும் இவை எடுபடுவதில்லை.

மற்றொரு தீவிர முனையில், அன்றாட வாழ்வை (தமது பிராந் தியத்தில் அனுசரிக்கப்படும்) இயல்பான அமைப்பில் காட்டும் இயக்குனர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் சில பொதுவான பெறுமானங்களையும் கலாசாரக் கூறுகளையும் சமயத் தலைப்புக் களின் கீழ் முன்வைக்கின்றனர். இதில் சில பாத்திரப் படைப்புக் கள் காதல் உறவுக்காகப் போராடுவது போலவும், பல்வேறு சதி களுக்கிடையில் சிக்கிக் கொள்வது போலவும் சித்தரிக்கப்படு கின்றன. கடைசியில் நல்லவர்களும் நாணயமானவர்களும் சந் தோஷமாக வாழ்வது போல் கதைகள் முடிக்கப்படுகின்றன. இத்கைய கதைகளில் பாரம்பரியமான முறைகளில் பெண்களுக்கு ஆடைகளை அணிவித்து அதுதான் இஸ்லாமிய ஆடை என்றும்

காட்டப்படுகின்றது. ஆனால் பெருவழக்கான இஸ்லாமிய உணர்வு நிலையில் நின்று பார்க்கும் போது, இத்தகைய ஆடைகளை இஸ்லாமிய ஆடைகள் என்று கூறிவிட முடியாது.

இருக்கும் தயாரிப்பு வழிமுறைகளை உள்ளபடியே வைத்துக் கொண்டு, மதச்சார்பற்ற உள்ளடக்கத்துக்குப் பதிலாக இஸ்லாமிய உள்ளடக்கத்தை மாற்றீடு செய்வதுதான் இஸ்லாமிய ஊடகம் என்று பெரும்பாலான ஊடகத் துறையினர் எண்ணுகின்றனர். அவ்வாறே, தீர்க்கப்படாத பல சர்ச்சைகள் ஏறக்குறைய எல்லா முஸ்லிம் இயக்குனர்களதும் சிந்தனையில் இன்றும் உள்ளன. துறை சார்ந்த (முஸ்லிம் அல்லாத) கலைஞர்களைப் பயன்படுத்துவதா அல்லது முஸ்லிம் கலைஞர்களைப் பயன்படுத்துவதா? ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான உணர்ச்சி வெளிப்பாட்டை எப்படி அமைப்பது? பெண்களை அவர்களது சொந்த வீடுகளுக்குள்ளும் ஹிஜாப் அணிந்து கொண்டிருப்பது போல் காட்டுவதா அல்லது இயல்பாக இருப்பது போன்று காட்டுவதா? இசை போன்ற அம்சங்களை பயன்படுத்துவதா இல்லையா?.. முதலிய விடயங்களை இத்தகைய சர்ச்சைகளுக்கான எடுத்துக் காட்டாக கூறலாம்.

இஸ்லாமிய ஊடகத் துறை சார்ந்தோரை ஒன்றாக இணைக்கக் கூடிய அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டிய அவசியத்தை நான் சந்தித்த பெரும்பாலான நபர்கள் வலியுறுத்தினர். மைய நீரோட்ட மாற்று ஊடகமாக இஸ்லாமிய ஊடகம் முதிர்ச்சி அடைய வேண்டுமாயின், அது குறித்து பல கருத்தரங்குகளும் மாநாடுகளும் நடாத்தப்பட வேண்டும். இஸ்லாமிய ஊடகம் பற்றிய பொதுவான புரிந்துணர்வை ஆழப்படுத்தவும், அதன் அணுகுமுறைகள், வரையறைகள், தத்துவங்கள், நுட்பங்கள் என்பன பற்றி தெளிவாகப் புரிந்து கொள்ளப்படவும் இத்தகைய செயற்பாடுகள் அவசியமாகின்றன. மட்டுமன்றி, ஊடகத்துறை சார்ந்தோர் ஒருவரின் திறமையை மற்றவர் புரிந்து கொள்ளவும், விரிவான முறையில் ஒத்துழைக்கவும், தங்களிடம் உள்ள சொற்பமான வளங்களைக் கொண்டு தயாரிப்பை விருத்தி செய்யும்

அனுபவத்தைப் பெறவும் இச்செயற்பாடுகள் வழிவகுக்கும். முஸ்லிம் உலகின் பல்வேறு பகுதிகளிலும் தயாரிக்கப்பட்ட வற்றை தமக்கிடையில் பரவலாகப் பகிர்ந்து கொள்ளவும் கூட இவை வாய்ப்பாக அமையும்.

இறுதியாக, ஊடகத் தயாரிப்பினுள் புத்துணர்வைப் பாய்ச்சக் கூடிய மிகச் சிறந்த எடுத்துக் காட்டுகளுள் ஒன்றை சுருக்க விவ ரணமாக கீழே தருகிறேன். இஸ்லாமிய ஊடகச் செயற்பாட்டு முன்னரங்கில் துணிகரமாக இறங்க விரும்புவோருக்கு இத்தகைய முயற்சிகள் சிறந்த முன்மாதிரியாக அமையக் கூடும். எமது சரி யான முயற்சிகளுக்கு எல்லாம் வல்ல அல்லாஹ் வழிகாட்டி அருள்புரிய வேண்டும் என பிராத்திக்கின்றேன்.

## பிரைம் டைம் (Primetime):

'பிரைம் டைம்' அலுவலகம் மலேஷியத் தலைநகர் கோலா லம்பூரில் அமைந்துள்ளது. சகோதரர் முஹம்மத் சாலிஹ் காஸிம் அதன் நிறைவேற்றுத் தலைவராகப் பணியாற்றுகின்றார். இஸ் லாமிய பெறுமானங்களை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சி களைத் தயாரிப்பதன் அவசியத்தை அவர் வலியுறுத்துகின்றார். பிரைம் டைம் என்ற அவரது நிறுவனம் சுதந்திரமாகச் செயற் படும் ஒரு தயாரிப்புக் கம்பனியாகும். பல்வேறு தொலைக் காட்சி நிலையங்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் அது நிகழ்ச்சி களை வழங்குகின்றது. தற்போது பிரைம் டைம் நிறுவனம் நடப்பு விவகாரங்கள் தொடர்பான இரண்டு பிரதான நிகழ்ச்சிகளை TV3 தொலைக்காட்சி சேவைக்கு வழங்கி வருகின்றது. இது மலே ஷியாவில் உள்ள ஒரு தனியார் ஒளிபரப்பு நிலையமாகும். மலேஷியாவில் இயங்கும் சுமார் 200 முதல் 300 வரையான தயாரிப்புக் கம்பனிகளில், நடப்பு விவகாரங்கள் பற்றிய நிகழ்ச்சி களைத் தயாரிக்கும் ஒரே நிறுவனம் தனது பிரைம் டைம் நிறு வனம்தான் என சகோதரர் காஸிம் கூறுகின்றார். ரேடியோ-டெலிவிஷன் மலேஷியா (RTM) நிலையத்துக்கும் கூட அது நிகழ்ச்சிகளை வழங்குகின்றது.

அவற்றுள் ஒரு நிகழ்ச்சி வெள்ளிக்கிழமைகளில் மலாய் மொழியில் 22 நிமிடங்கள் ஒளிபரப்பாகின்றது. பொருளாதாரத் தைப் பொதுவாகப் புரிந்து கொள்ளல், இஸ்லாமிய வங்கியியல் போன்ற இஸ்லாமிய எண்ணக்கருக்களைப் புரிந்து கொள்ளல், வக்ப் மற்றும் ஸகாத் என்பன பற்றி தெளிவுபடுத்தல் முதலிய வற்றை இந்நிகழ்ச்சி உள்ளடக்கி உள்ளது. பல்வேறு துறை சார் நிபுணர்களுடனான நேர்காணல்கள், வர்த்தகத்துறைசார் ஜாம்ப வான்களுடனான சந்திப்புக்கள் என்பனவற்றையும் இந்நிகழ்ச்சி உள்ளடக்கி உள்ளது.

மற்ற நிகழ்ச்சி சமய மற்றும் ஒழுக்க விடயங்கள் பற்றி மக்க ளுக்கு அறிவூட்டும் வகையில் அமைந்துள்ளது. அதுவும் மலாய் மொழியில் 22 நிமிடங்களுக்கு வெள்ளிக்கிழமை முற்பகல் வேளையில் ஒளிபரப்பாகின்றது. வாரத்துக்கான பேசுபொருள், அதை இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் மதிப்பீடு செய்தல், பார்வையாளர்களின் இஸ்லாமிய அறிவையும் கல்வியையும் மேம்படுத்தும் வகையில் கேள்வி-பதில் பாணியில் நிகழ்ச்சியின் ஒரு பகுதி அமைதல் என்பன இந்நிகழ்ச்சியின் சிறப்பம்சங் களாகும். இதிலும் தகுதி வாய்ந்த பல்கலைக்கழகப் பேராசிரி யர்கள், உலமாக்கள், கல்விமான்கள், துறைசார் நிபுணர்கள் முதலியோரின் கருத்துக்கள் பரிமாறப்படுகின்றன. இந்நிகழ்ச்சி யின் இன்னொரு அம்சமாக அன்றாட வாழ்வில் பேணப்பட வேண்டிய கலாசார அம்சங்கள் பற்றிய விளக்கங்களும் வழங்கப் படுகின்றன. அயலவர்களோடு பழக வேண்டிய விதம், தொழில் செய்யும் இடங்களில் நடந்து கொள்ள வேண்டிய விதம், புகைப் பிடித்தலின் தீமைகள் என்பன உட்பட ஒழுக்க விழுமியங்க ளுடன் தொடர்புடைய பல விடயங்கள் இதில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியின் போது, குறுநாடகப் பாணியிலும் பல விட யங்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்த நிகழ்ச்சி மலாய் மொழி மூலம் ஒளிபரப்பாகும் மிகவும் பிரபலமான நிகழ்ச்சியாக அமைந்துள்ளது. ஆனால் இது வெள்ளிக்கிழமை முற்பகல்

வேளைகளில் காட்டப்படுவதால், இதன் பார்வையாளர்கள் பெரும்பாலும் இல்லத்தரசிகளே. வெள்ளிக்கிழமை ஜும்ஆ நேரத்துக்கு அண்மிய நேரத்தில் இது ஒளிபரப்பாவதால் பல ஆண்களால் பார்வையிட முடிவதில்லை. இந்த நேர ஒதுக்கீடை மாற்ற TV3 நிறுவனம் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது.

இந்த நிகழ்ச்சிகளைத் தயாரிக்க பிரைம்டைம் நிறுவனம் பிரத்தியேகமான தயாரிப்புக் குழு ஒன்றை நியமித்துள்ளது. இதில் அதன் சொந்த ஆய்வாளர்களும் தயாரிப்பாளர்களும் உள்ளடங்குவர். ஆனால் தொழிநுட்பப் பிரிவு, கலையகம், சீராக்கல் வசதிகள் என்பன TV3 க்கு உரியவை. இரண்டு வருடங்களுக்கு இதன் முழு உரிமையையும் TV3 கொண்டிருக்கும். இந்த நிகழ்ச்சி முற்று முழுக்க இஸ்லாமியக் கோணத்தில் தயாரிக்கப்பட்டாலும், முஸ்லிம் அல்லாதவர்களையும் கவரும் வகையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இஸ்லாமிய தயாரிப்பு நிறுவனத்துக்கான மிகச் சிறந்த உதாரணமாக பிரைம் டைம் தற்போதைக்கு செயற்படுகின்றது.

# உசாத்துணை நூல்கள்


AbuSulayman, AbdulHamid A. 1981. *Islamic Entertainment* (in Arabic). Jeddah, Saudi Arabia: King Abdul-Aziz University.

———. 1993. *Crisis in the Muslim Mind.* Translated from Arabic by Yusuf T. DeLorenzo. Herndon, Va.: International Institute of Islamic Thought.

El-Affendi, Abdelwahab. 1993. *An Age of Darkness: Media Failure in the Muslim World.* Herndon, Va.: International Institute of Islamic Thought.

Agee, Warren K., Phillip H. Ault and Edwin Emery. 1988. *Introduction to Mass Communications*. New York: Harper & Row.

Ahmad, Khurshid. 1980. "Islam: Basic Principles and Characteristics." In *Islam, Its Meaning and Message*, edited by Khurshid Ahmad. London: The Islamic Foundation.

Ali, Abdullah Yusuf. 1992. *The Meaning of the Holy Qur'an.* Brentwood, Md.: Amana Corp.

Arnheim, Rudolf. 1974. *Art and Visual Perception, A Psychology of the Creative Eye*. Berkeley, Ca.: University of California Press.

Biagi, Shirley. 1988. *Media/Impact: An Introduction to Mass Media.* Belmont, Ca.: Wadsworth Publishing Company.

Bourgault, Louise M. 1986. *Participant Observation and the Study of African Broadcast Organizations*. Vol. 4, *Communication and Culture, Language, Performance, Technology, and Media*, edited by Sari Thomas and William A. Evans. Norwood, N.J.: Ablex Publishing Corp.

Boyd, Douglas A. 1993. *Broadcasting in the Arab World, A Survey of the Electronic Media in the Middle East.* Ames, Iowa: Iowa State University Press.

Brower, Sue. 1986. *Inside Stories: Gossip and Television Audiences.* Vol. 4, *Communication and Culture, Language, Performance, Technology, and Media,* edited by Sari Thomas and William A. Evans. Norwood, N.J.: Ablex Publishing Corp.

Cantor, Muriel G. and Joel M. Cantor. 1986. *The Internationalization of TV Entertainment.* Vol. 4, *Communication and Culture, Language, Performance, Technology, and Media,* edited by Sari Thomas and William A. Evans. Norwood, N.J.: Ablex Publishing Corp.

Dominick, Joseph R. 1987. *The Dynamics of Mass Communication.* New York: Random House.

Al-Faruqi, Ismail R., and Lamya al-Faruqi. 1986. *The Cultural Atlas of Islam.* New York: Macmillan.

Al-Faruqi, Lamya. 1985. *Islam and Art.* Islamabad, Pakistan: National Hijra Council.

———. 1989. "Islamizing The Arts Disciplines." In *Toward Islamization of Disciplines.* Herndon, Va.: International Institute of Islamic Thought.

Giannetti, Louis. 1990. *Understanding Movies.* Englewood Cliffs, N.J.: Prentice Hall.

Haji-Adnan, Mohd Hamdan. 1991. "Development and Anti-development Messages in Film, Television and Advertising." *Media Asia* 18, no. 2: 63–72.

Hiebert, Ray E. 1985. *Mass Media IV, An Introduction to Modern Communication.* New York: Longman.

Islamic Texts Society. 1989. *Understanding Islam and Muslims.* Washington, DC: Embassy of Saudi Arabia.

Jefkins, Frank and Frank Ugboajah. 1986. *Communication in Industrialising Countries.* Hong Kong: Macmillan.

Kamali, Mohammad H. 1993. "Freedom of Expression in Islam: An Analysis of Fitnah." *The American Journal of Islamic Social Sciences* 10, no. 2: 178–200.

Karthigesu, Ranggasamy. 1991. "US Television Programmes and Malaysian Audiences." *Media Asia* 18, no. 2: 103–108.

Kuhnel, Ernst. 1966. *Islamic Art and Architecture*. London: G. Bell and Sons.

Lent, John A. 1979. "Mass Communications in the Third World: Some Ethical Considerations." In *Third World Mass Media: Issues, Theory and Research*, edited by J. Lent. Williamsburg, Va.: Dept. of Anthropology, College of William and Mary.

Malik, Rex. 1990. "An Evening with World TV, Wednesday, October 18, 1989." *Intermedia* 18, no. 2: 8–53.

Merrill, John C. 1979. "The Free Flow of News and Western Communication Imperialism: Divergent Views on Ethical Issues." In *Third World Mass Media: Issues, Theory and Research*, edited by J. Lent. Williamsburg, Va.: Dept. of Anthropology, College of William and Mary.

Moore, Albert C. 1977. *Iconography of Religions, An Introduction*. Philadelphia, Pa.: Fortress Press.

Moustafa, Yahya B. 1990. *Islamic Alternatives for Contemporary Modes of Entertainment* (in Arabic). Alexandria, Egypt: Dar al-Ma'arifah al-Jamiyyah.

Mowlana, Hamid. 1983. "Mass Media and Culture, Toward an Integrated Theory." In *Intercultural Communication Theory, Current Perspectives*, edited by William Gudykunst. Beverly Hills, Ca.: Sage Publications.

———. 1986. *Global Information and World Communication, New Frontiers in International Relations*. New York: Longman.

———. 1989a. *Communication and Cultural Development: A Report from Iran*. Washington, D.C.: The American University.

———. 1989b. "Communication, Ethics, and the Islamic Tradition." In *Communication Ethics and Global Change*. Edited by Thomas W. Cooper. White Plains, N.Y.: Longman Inc.

———. 1989c. "The Islamization of Iranian Television." *Intermedia* 17, no. 5: 35–39.

———. 1993. "The New Global Order and Cultural Ecology." *Media, Culture and Society* 15, no. 1: 9–27.

Muhammad, Aminah S. 1989. "Islamization of the Visual Arts." In *Toward Islamization of Disciplines*. Herndon, Va.: International Institute of Islamic Thought, 1989.

Mujahid, Sharif Al. 1991. "Press System in Pakistan." *Media Asia* 18, no. 3: 123–131.

An-Nawawi, Yahya bin Sharaf. 1992. *Riyadh-Us-Saleheen*. Translated from Arabic by S. M. Madni Abbasi. Riyadh, Saudi Arabia: International Islamic Publishing House.

Nelson, Nancy L. 1986. *Metaphor and the Media*. Vol. 4, *Communication and Culture, Language, Performance, Technology, and Media*, edited by Sari Thomas and William A. Evans. Norwood, NJ: Ablex Publishing Corp.

Olson, Walter. 1993. "Exposing the 'Experts' Behind the Sexy Exposes." *The Washington Post* February 28: C2.

Osman, Fathi. 1989. *Muslim World: Issues and Challenges*. Los Angeles, CA: Islamic Center of Southern California.

Parker, Elliot. 1980. The Malaysian Elections of 1974: "An Analysis of Newspaper Coverage." In *Case Studies of Mass Media in the Third World*, edited by J. Lent. Williamsburg, VA: Dept. of Anthropology, College of William and Mary.

Pasha, Syed H. 1993. "Towards a Cultural Theory of Political Ideology and Mass Media in the Muslim world." *Media, Culture and Society* 15, no. 1: 61–79.

Petersen, Neville. 1992. "Asian News Values, Changes and Challenges." *Media Asia* 19, no. 4: 183–190.

Powell, Jody. 1993. "Frenzy Over Foster." *The Washington Post* August 15, 1993: C7.

Rahman, Mushtaqur. 1987. "Muslim World and Geographic Systems." In *Muslim World, Geography and Development*, edited by M. Rahman. New York: University Press of America.

Rosengren, Karl Erik and Reimer, Bo. 1986. *The Cultivation of Values by Media*. Vol. 4, *Communication and Culture, Language, Performance, Technology, and Media*, edited by Sari Thomas and William A. Evans. Norwood, N.J.: Ablex Publishing Corp.

Sajjad, Waseem. 1993. "Political Comments on Islam and Communication." *Media, Culture and Society* 15 no. 1: 81–86.

Sardar, Ziauddin. 1993. Paper, "Printing and Compact Disks: The Making and Unmaking of Islamic Culture." *Media, Culture and Society* 15 no. 1: 43–59.

Schleifer, S. Abdullah. 1986. "Islam and Information: Need, Feasibility and Limitations of an Independent Islamic News Agency." *The American Journal of Islamic Social Sciences* 3 no. 1: 109–124.

Al-Seini, Sayeed. 1986. "The Islamic Concept of News." *The American Journal of Islamic Social Sciences* 3 no. 2: 277–289.

Sennitt, Andrew. 1990. "A Global View." *Intermedia* 18 no. 2: 13–14.

Shaheen, Jack G. 1980. "Television Programming in Selected Middle East Nations: Lebanon, Bahrain and Qatar." In *Case Studies of Mass Media in the Third World,* edited by J. Lent. Williamsburg, VA: Dept. of Anthropology, College of William and Mary.

Al-Shanqiti, Sayyid M. 1986. *Guidelines and Foundations of Islamic Media, An Analytic Study of News Content in the Chapter of An'am in the Holy Qur'an* (in Arabic). Riyadh, Saudi Arabia: Dar Alam AlKutub.

Siddiqui, D. and al-Khafaji, A. 1992. *The Gulf War: Implications for Global Business and Media.* Apollo, PA: Closon Press.

Traudt, Paul J. 1986. *Ethnic Diversity and Mass-Mediated Experience.* Vol. 4, *Communication and Culture, Language, Performance, Technology, and Media,* edited by Sari Thomas and William A. Evans. Norwood, NJ: Ablex Publishing Corp.

Ugboajah, Frank and Sobowale, Idowu. 1980. "The Press in West Africa: A Comparative Analysis of Mass Media Trends." In *Case Studies of Mass Media in the Third World,* edited by J. Lent. Williamsburg, VA: Dept. of Anthropology, College of William and Mary.

UNESCO. 1975. *World Communications: A 200-Country Survey of Press, Radio, Television and Film.* Great Britain: The Unesco press.

Williams, Robert H. 1993. "My Truth, Their Consequences." *The Washington Post* August 15: C5.

Zuberi, Nisar Ahmad. 1991. "Development and Anti-development Messages in Pakistan TV, Entertainment, Advertising and Films." *Media Asia* 18 no. 2: 78–83.



இராக்கின் பக்தாத் நகரில் பிறந்த ஸுஹைப் ஜமால் அல் பர்ஸின்ஜி மேரிலேன்ட் பல்கலைக்கழகத்தில் பொருளியல் வங்கியியல் ஆகிய துறைகளில் பட்டம் பெற்று அதே பல்கலைக்கழகத்தில் தொலைக்காட்சி, சினிமா துறையில் முதுமானிப் பட்டத்தை ஈட்டிக் கொண்டார். வட அமெரிக்காவின் முஸ்லிம் வாலிப இயக்கம், முஸ்லிம் வாலிப இயக்கங்களின் சம்மேளனம் ஆகியவற்றின் ஸ்தாபக உறுப்பினர் இவர். அவற்றை நிறுவுவதிலும் வளர்த்தெடுப்பதிலும் இவர் ஆற்றிய பணிகள் அபாரம். அதி உயர் தர இஸ்லாமிய ஊடகத் தயாரிப்புகளில் பெரும் பங்களித்து வரும் Astrolabe Pictures நிறுவனத்தை ஸ்தாபித்து நடாத்தி வருகின்றார் ஸுஹைப் ஜமால் அல் பர்ஸின்ஜி





Published by
**Fuzin Texts**
23/3 Market Road, Dharga Town 12090
Sri-Lanka.

ISBN 978-955-8398-52-4